# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## இளங்கலைத் தமிழ் - பி.லிட்.,

## முதலாமாண்டு - முதற்பருவம்

## தாள் 10714 - சிற்றிலக்கியம்

**Author:**
**Dr.J. BRINDHASRI,** *Assitant Professor in Tamil*
*Rajah Serfoji Govt College , Thanjavur – 613005*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr. V.Thiruveni,** *Assistant Professor in Tamil & Research Supervisor, PPR- Coordinator- All Tamil Programmes- DDE Directorate of Distance Education, Alagappa University- Karaikudi-630003, Tamilnadu.India.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE1-484/Preparation and Printing of Course Materials/2019 Dated 08.07.2019 Copies 1000**

# இளங்கலைத்தமிழ்-(பிலிட்)
## முதலாமாண்டு-முதற்பருவம்
## தாள் 10714 - சிற்றிலக்கியம்

கல்லாடம் - கலம்பகம், பரணி இலக்கியம், உல,பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களை விளக்குதல்.

**பிரிவு - 1 : கல்லாடம், கலம்பகம்**

கூறு 1: கல்லாடர் - கல்லாடம் -
முதல் இரு கடவுள் வாழ்த்துப் பாடல்கள் மற்றும்
அமுதமும் தருவும் என்ற முதல்பாடல்

கூறு 2: பூமணியானை - பகையுடன் கிடந்த எனத் தொடங்கும
இரண்டு பாட்டுகள் மட்டும்

.

கூறு 3: நந்திக் கலம்பகம் -முதல் பாதி

**பிரிவு - 2 : பாசுரங்கள்**

கூறு 4: நந்திக் கலம்பகம் -அடுத்தபாதி

கூறு 5: பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு

கூறு 6: வண்ணமாடங்கள்- பெரியாழ்வார் திருமொழி

கூறு 7: மாணிக்கங்கட்டி - பெரியாழ்வார் திருமொழி

**பிரிவு - 3 : பரணி**

கூறு 8: சீதக்கடல் -பெரியாழ்வார் திருமொழி

கூறு 9 : தன்முகத்து - பெரியாழ்வார் திருமொழி

கூறு 10: செயங்கொண்டார் - கலிங்கத்துப்பரணி - முதல் பாதி

கூறு 11: செயங்கொண்டார் - கலிங்கத்துப்பரணி - அடுத்த பாதி

**பிரிவு - 4 : உலா - பிள்ளைத்தமிழ்**

கூறு 12: ஒட்டக்கூத்தர் - குலோத்துங்க சோழனுலா - முதல் பாதி

கூறு 13: ஒட்டக்கூத்தர் - குலோத்துங்க சோழனுலா- அடுத்தபாதி

கூறு 14: குமரகுருபரர் - மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் முழுவதும்

.

# இளங்கலைத்தமிழ் - (பிலிட்)

## முதலாமாண்டு - முதற்பருவம்

## தாள் 10714 - சிற்றிலக்கியம்



### சிற்றிலக்கியம்

இலக்கியம் என்பது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பது அறிஞர் கருத்து. இத்தகைய இலக்கியம் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருட்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. அறம் பொருள் இன்பம் எனும் உறுதிப்பொருள்களைக் கொண்டது சங்க இலக்கியம். பின்வந்த காவியங்கள் வீடு பேற்றையும் சேர்த்துகொண்டன. இவை பேரிலக்கியங்கள் ஆகும். உறுதிப்பொருள்களுள் ஒன்றோ இரண்டோ குறைவுபட்டால் அது சிற்றிலக்கியம் என்று வழங்கப்படுகிறது. சிற்றிலக்கியம் பிரபந்தம் என்றும் அழைக்கப்பெறுகின்றது.

யாப்பு எனப்படுவது யாக்கப்படுவது. பிணைக்கப்படுவது என்றும் பொருள் உடையது. செய்யுள் என்னும் சொல்லின் பொருளும் அதுவே. சிற்றிலக்கியத்தை வடமொழியில் பிரபந்தம் என்பர். பிரபந்தம் என்பதற்கு நன்கு கட்டப்பட்டது எனும் பொருள் உடையது.

இவற்றுள் கலம்பகம், தூது உலா, பரணி, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, பள்ளு ஆகியவை மக்களால் பெரிதும் அறியப்பட்டன. ஒவ்வொரு வகைச் சிற்றிலக்கியங்கள் பற்றி மக்களிடையே வழங்கிவரும் பழமொழிகளே இக்கருத்துக்கு அரண் ஆகும்.

'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது'

'நந்திக்கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்'.

நாயக்கர் காலம் பலவகையான சிற்றிலக்கியங்கள் தோன்றிய காலம் ஆதலால் இதனைச் சிற்றிலக்கிய காலம் என்று குறித்தனர். சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை ஆகிய நூல்கள் கூறுகின்றன. 96 வகை சிற்றிலக்கியங்கள் பற்றித் தொன்னூல் விளக்கம் குறிப்பிடுகின்றது. பல்சுவை நிரம்ப பெற்ற இவ்வகையான சிற்றிலக்கியங்களைத் தமிழ் இலக்கியம் கற்கும் மாணவர்கள் கற்றுணர்தல் இன்றியமையாத ஒன்றாகும்.

குறிப்புகள்

# பிரிவு-1:

## கூறு - 1

## கல்லாடர் - கல்லாடம்

(முதல் இரு கடவுள் வாழ்த்துப் பாடல்கள் மற்றும் அமுதமும் தருவும் என்ற முதல்பாடல்)

### 1. 1 கல்லாடம் - அறிமுகம்

கல்லாடம் பழந்தமிழ் நூல்களுள் ஒன்று. இது கல்லாடர் என்ற புலவரால் இயற்றப்பெற்றதால் இப்பெயர் பெற்றது. அகப்பொருள் செய்திகள் அடங்கிய இந்நூல் திருக்கோவையாரின் துறையடைவுகளை உட்கொண்டு அவற்றின் நூறு துறைகளைக் கொண்டு அகவற்பாக்களால் எழுதப்பெற்றது என்பர். அவ்வாறாயின் இந்நூல் திருக்கோவையாருக்குப் பிற்பட்டது ஆகும். கல்லாடம் கற்றவரோடு சொல்லாடாதே; கல்லாடம் கற்றவரோடு மல்லாடாதே என்னும் தொடர்கள் இந்நூலின் சிறப்பை உணர்த்தும்.

இந்நூலின் நூறு பாடல்களைக் கேட்டு மதுரை சோமசுந்தரக் கடவுள் மகிழ்ந்து தலையசைத்து அருள் செய்தார் என்பதைப் பின்வரும் தனிப்பாடல்கள் உணர்த்தும்.

கல்லாடர் செய்பனுவல் கல்லாடம் நூறுநூல்

வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச் - சொல்லாயும்

மாமதுரை ஈசர் மனமுவந்து கேட்டுமுடி

தாமசைத்தார் நூறு தரம்

வடிவெடுத்து வேதம் அன்பில் பாடுகினும்

அறிந்தறியா வண்ணம் வைகும்

பொடியணியும் திருமேனிப் புனிதன் மது

ரைக்கிறைவன் புகழ் இன் பாடல்

நெடிய கவிக் கல்லாடர் பொருட்டுறையை

நிகழ்த்துதொறும் நிலவு சூடும்

முடியசைத்து நன்று நன்று ஈது என மகிழும்

எனின் நிகராய் மொழிவது யாதே

*Self -Instructional Material*

நூறு பாடல்கள் என்று குறித்தாலும் சில பிரதிகளில் 102 பாடல்கள் வரை இடம்பெற்றுள்ளன. மேலும் கூற்றாக இடம்பெற்ற தலைப்புகளும் பாடல் வைப்புமுறையும் சிறிது இடம் மாறியுள்ளன.

சமயக் கணக்கர் மதிவழி கூறாது

உலகியல் கூறி பொருளிது என்ற

வள்ளுவன் தனக்கு வளர்கவிப் புலவர்முன்

என்று திருக்குறள் பற்றியும் 'கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறி' என்று இறையனாரின் குறுந்தொகைப் பாடல் பற்றியும் 'அன்பின் ஐந்திணை என்று அறுபது சூத்திரம்' என்று இறையனார் அகப்பொருள் பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கின்றது,

## 1.2 கல்லாடர் - ஆசிரியர்

கல்லாடர் எனும் பெயரில் குறுந்தொகை, அகநானூறு, புறநானூற்றுப் பாடல்களைப் பாடிய சங்க காலப் புலவர், திருவள்ளுவமாலையில் ஒரு பாடலைப் பாடியவர், 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து 11ஆம் திருமுறையில் இடம்பெற்ற கண்ணப்பதேவர் திருமறத்தைப் பாடிய புலவர், தொல்காப்பிய உரையாசிரியர், பாட்டியல் புலவர் எனப் புலவர் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்களினின்று வேறானவர் இந்நூலாசிரியர் கல்லாடர்.

மதுரை நகரம், பாண்டி நாட்டுத் திருத்தலங்கள், சோமசுந்தரக் கடவுளின் பெருமை, அருளாடல் ஆகியனவற்றை இந்நூலாசிரியர் கல்லாடர் குறிப்பதால் இவர் பாண்டி நாட்டினர் என்பதும் சைவ சமயத்தார் என்பதும் உணரலாம். கல்லாடம் என்பது பாண்டி நாட்டுத் திருத்தலம். இதனை, மாணிக்கவாசகர் பாடிய 'கல்லாடத்து கலந்து இனிதிருந்து' எனும் பாடலடியால் உணரலாம். இந்நூலாசிரியர் அவ்வூரில் வாழ்ந்தவராக இருக்கலாம்.

## 1.3 சிறப்பு

அகப்பொருட் செய்திகளையும் சிவபெருமானின் அருளாடல் சிறப்புக்களையும் ஒருங்கிணைத்துத் திருக்கோவையாருக்கு விளக்கமாக இந்நூல் அமைந்துள்ளது. பொருளிலக்கணத்தின் ஒரு கூறாகிய அகப்பொருளின் செறிவை உணர்வதற்கு இந்நூல் பெரிதும் துணைசெய்யவல்லது. எளிமையும் பொருட்செறிவும் பக்தியும் ஒருங்கமைந்த நூலைக் கற்பதன்மூலம் தமிழரின் பொருள் இலக்கணக் கொள்கையை உணரலாம்.



குறிப்புகள்

## 1.4 பாயிரம் - கடவுள் வாழ்த்து - வேழமுகக் கடவுள் வணக்கம்

கல்லாடத்தின் முதற்பகுதி பாயிரமாக அமைந்துள்ளது. இதில் கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடல்கள் இரண்டு உள்ளன. வேழமுகக் கடவுளாகிய கணபதியைத் தொழும் பாடல் முதலாவதாக அமைந்துள்ளது. இப்பாடல் கணபதியின் திருத்தோற்றம், அருளாடல் ஆகியவற்றைக் கூறி நூலினிது முடிய வேண்டுவதாக அமைந்துள்ளது.

### 1.4.1 கணபதியின் திருத்தோற்றம்

திங்கள் முடிபொறுத்த பொன்மலை அருவி
கருமணி கொழித்த தோற்றம் போல
இருகவுள் கவிழ்த்த மதநதி உவட்டின்
வண்டினம் புரளும் வயங்கு புகர்முகத்த
செங்கதிர்த் திரள்எழு கருங்கடல் போல
முக்கண்மேல் பொங்கும் வெள்ளம் எறிகடத்த
பெருமலைச் சென்னியில் சிறுமதி கிடந்தென
கண்அருள் நிறைந்த கவின்பெரும் எயிற்ற (1 - 8)

முழு நிலவைத் தாங்கிய மேருமலையிலிருந்து வீழும் அருவி கரிய மணிகளைக் கொழிக்கின்றது போல இரு கன்னங்களிலிருந்து வடியும் மதநீர்ப் பெருக்கத்தில் வண்டுகள் வந்து புரளும்படி விளங்கித் தோன்றும் யானை முகத்தினனே என்று கணபதியின் திருமுகத் தோற்றம் பாராட்டப்படுகின்றது. மேலும் சிவந்த கதிர்கள் எழுகின்ற கரிய கடல் போல முக்கண்கள் மேலே பொங்கிப் பெருகிச் சிந்துகின்ற மதநீரினை உடையவனே! பெரிய மலையின் உச்சியில் பிறை நிலவு தங்கியதுபோல அருள்நிறைந்த திருமுகத்தில் அழகுடைய தந்தங்களை உடையவனே என்றும் ஆசிரியர் பாராட்டுகின்றார்.

ஆறிரண்டு அருக்கர் அவிர்கதிர்க் கனலும்
வெள்ளை மதிமுடித்த செஞ்சடை ஒருத்தன் (10)
உலகுயிர் ஆட ஆடுறும் அனலமும்
தென்கீழ்த் திசையோன் தெறுதரு தீயும்
ஊழித்தீப் படர்ந்து உடற்றுபு சிகையும்
பாசக் கரகம் விதியுடை முக்கோல்
முறிக்கலைச் சுருக்குக் கரம்பெறு முனிவர்
விழிபடும் எரியும் சாபவாய் நெருப்பும்

நிலைவிட்டுப் படராது காணியில் நிலைக்கச்

சிறுகாற்று உழலும் அசைகுழைச் செவிய (9 - 18)

பன்னிரு ஞாயிற்றுத் திரளிடம் எழும் ஒளித்தீயும்(9), வெண்மதியை உடையவரும் செஞ்சடையை உடையவருமான சிவபெருமான் உலக உயிர்கள் அஞ்சி நடுங்க ஆடுவதற்கு இடமாகிய ஊழித் தீயும்(10-11), தென்கிழக்குத் திசைக் கடவுள் அக்கினி பகவான் எரிக்கின்ற பெருந்தீயும் (12) ஊழிக்காலத்தில் பெருகும் சுவாலையுடன் வருத்துகின்ற ஊழித்தீயும்(13) உறியில் அமைந்த கமண்டலமும் முனிவர்க்கு உரிய விதிகளின்படி தாங்கும் முக்கோலும் கத்தரிக்கப்பட்ட துணியின் சுருக்கமும் கையில் ஏந்திய முனிவர்களின் கண்களில் தோன்றும் நெருப்பும், அவர்களிடமிருந்து பெருகும் சாபமாகிய வாய்த்தீயும்(14-16), தத்தம் நிலையிலிருந்து நீங்கிப் பரவாமல் தத்தம் இடங்களிலேயே பொருந்துமாறு சிறுகாற்றை வீசுகின்றதாகக் குண்டலம் அணிந்த செவியை உடையவனே! என்று கணபதியின் திருச்செவியைப் போற்றுகின்றார். பல்வேறு வகைப்பட்ட தீயினால் உலகம் அழிந்துவிடாமல் அவற்றை அவ்வவ்விடங்களில் நிலைபெறச் செய்தவர் கணபதி என்று பாராட்டுகின்றார்.

ஆம்பல் முகஅரக்கன் கிளையொடு மறியப்

பெருங்காற்று விடுத்த நெடும்புழைக் கரத்த

கருமிடற்றுக் கடவுளை செங்கனி வேண்டி

இடம் கொள் ஞாலத்து வலம்கொளும் பதத்த (19- 22)

யானை முகத்து அரக்கன் தன் சுற்றத்தாருடன் அழியுமாறு பெருங்காற்றைச் செலுத்திய துதிக்கையை உடையவனே! நீலமணி மிடற்றுக் கடவுளாகிய சிவபெருமானைப் பழத்திற்காக இடமகன்ற உலகமாகக் கருதி வலம்வந்த திருப்பதம் உடையவனே! என்று திருக்கரங்களையும் பாதத்தையும் குறித்துத் திருத்தோற்றத்தைச் சிறப்பிக்கின்றார்

### 1.4.2. உலகியல் துன்பம்

குண்டுநீர் உடுத்த நெடும்பார் எண்ணமும்

எண்ணா இலக்கமொடு நண்ணிடு துயரமும்

அளந்துகொடு முடித்தல் நின்கடன் ஆதலின்

வரிவுடல் சூழக் குடம்பைநூல் தெற்றிய

போக்குவழி படையாது உள்உயிர் விடுத்தலின்

அறிவு புறம்போய உலண்டது போல

கடல்திரை சிறுக மலக்குதுயர் காட்டும்

உடல்எனும் வாயில் சிறைநடுவு புக்கு



குறிப்புகள்

போகாது அணங்குறும் வெள்ளறி வேமும்

ஆரணம் போற்றும்நின் காலுற வணங்குதும் (23- 32)

ஆழ்ந்த கடலை ஆடையாகக்கொண்ட இந்த உலகின் உள்ளவர்களின் மனக்கருத்தையும் எண்ணற்றவாகிய பெருந்துன்பங்களையும் அளவிட்டு உயிர்களிடம் சேர்த்தல் நின்கடமை அன்றோ!

வரிகளை உடைய தன் உடலை நூலாலே சூழக் கூட்டை உருவாக்கித் தான் வெளிச்செல்லும் கூட்டை உருவாக்கிக்கொள்ளாத புழுவைப்போலக் கடலலைகளும் சிறியன எனும்படி வருத்தத்திற்குக் காரணமான உடற்சிறையில் அகப்பட்டு மீளாது வருந்துகின்ற அறிவற்றவர்களான நாங்கள் வேதங்களால் தொழப்படும் நின் திருவடிகளை வணங்கிப் போற்றுகின்றோம் என்று வணங்கித் தன் வேண்டுதலைத் தொடர்ந்து கல்லாடர் கூறுகின்றார்.

### 1.4.3. வேண்டி மொழிதல்

கால்முகம் ஏற்ற துளைகொள் வாய்க்கறங்கும்

விசைத்த நடைபோகும் சகடக் காலும்

நீட்டிவலி தள்ளிய நெடுங்கயிற் றூசலும்

அலமரு காலும் அலகைத் தேரும்

குறைதரு பிறவியின் நிறைதரு கலக்கமும்

என்மனத் தெழுந்த புன்மொழித் தொடையும்

அருள்பொழி கடைக்கண் தாக்கி

தெருளுற ஐய! முடிப்பைஇன் றெனவே. (33 - 40)

காற்றைத் தன்னிடம் ஏற்கும்படி துளையுடைய வாயமைந்த காற்றாடியும் விரைந்து திரிந்து செல்லும் வண்டியின் ஆரக்காலும் நீண்டு செலுத்தித் தள்ளப்பெற்ற நெடிய கயிற்றில் அமைந்த ஊஞ்சலும் சுழல்கின்ற காற்றும் கானல் நீரும் போன்று விளங்கும் எங்கள் பிறவிக் கலக்கத்தைத் தீர்த்தருள்க. அதனோடு என் மனத்து எழுந்த புன்சொற்களால் ஆன இப்பிரபந்தத்தையும் அருள் பொழிகின்ற கடைக்கண்ணைச் செலுத்தித் தெளிவாக இன்றே நன்று முடித்து அருள்வீராக என்று நூல் இனிதாக நிறைவேறக் கணபதியைக் கல்லாடர் தொழுது முடிக்கின்றார்.

## 1.5 பாயிரம் - கடவுள் வாழ்த்து - வேலன் வணக்கம்

வேழமுகனைத் தொடர்ந்து தமிழ்க் கடவுளாகிய முருகவேளை நினைந்து போற்றுகின்றார். முருகவேளின் அவதாரச் செய்திகளை எடுத்துப் போற்றி அவருடைய திருக்காட்சியை வேண்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

### 1.5.1 சூர் தடிந்த வேலையுடையவன்

பாய்திரை உடுத்த ஞால முடிவென்ன
முடங்குளை முகத்துப் பல்தோள் அவுணனொடு
மிடைஉடு உதிர செங்களம் பொருது
ஞாட்பினுள் மறைந்து நடுவறு வரத்தால்
வடவை நெடுநாக்கின் கிளைகள் விரிந்தென்ன
செந்துகிர் படரும் திரைக்கடல் புக்கு
கிடந்தெரி வடவையின் தளிர்முகம் ஈன்று
திரைஎறி மலைகளின் கவடுபல போக்கி
கல்செறி பாசியின் சினைக்குழை பொதுளி
அகல்திரைப் பரப்பின் சடைஅலைந்து அலையாது
கீழ்இணர் நின்ற மேற்பகை மாவின்
ஒருடல் இரண்டு கூறுபட விடுத்த
அழியாப் பேரளி உமைகண் நின்று
தன்பெயர் புணர்த்திக் கற்பினொடு கொடுத்த
அமையா வென்றி அரத்தநெடு வேலோய்!

பரந்த அலைகளுடைய கடலை ஆடையாக உடைய இவ்வுலத்தின் மக்கள் உலகத்தின் முடிவு இதுதான் என்னும்படி பல தோள்களுடைய சிங்கமுகாசுரனுடன் வானின் நட்சத்திரங்கள் உதிருமாறு சிவந்த போர்க்களத்தில் போர்செய்தனை; நடுவுநிலை தவறிப் போர்க்களத்திலிருந்து மறைந்துகொண்டு ஊழித்தீயின் நீண்ட நாவுகள் பரந்தெழுந்தது போலச் செம்பவழக் கொடிகள் படரும் அலைகளையுடைய கடலில் புகுந்தாய்;

அக்கடலில் ஊழித் தீயின் இளஞ்சுவாலைகள்போலத் தளிர்விட்டும் கடலலைகள் வீசும் பெரிய மலைகளைப் போலக் கிளைகளை விட்டும் கல்லில் படர்ந்த பாசியைப்போல அக்கிளைகளில் இலை தழைத்தும் வேரசையினும் பூங்கொத்துக்கள் அசையாதபடி நடுவே பெரும்பகையாகிய மாமரம் விளங்கிற்று. அந்த மாமரத்தின் ஒரு வடிவை இரு கூறாக்கிய வேலேந்தியவனே; குறையாத இரக்கத்தை உடைய உமையவள் தன் பெயராகிய சக்தி என்பதைக் கற்பித்துச் சக்திவேலாக வழங்கிடக் குறையாத வெற்றியினை உடைய நீண்ட சிவந்தவேற்படையை உடையவனே!

**1.5.2 மயில் வாகனன்**

கீழ்மேல் நின்றஅக் கொடுந்தொழிற் கொக்கின்
கூறிரண் டாய ஒருபங்கு எழுந்து
மாயாப் பெருவரத்து ஒருமயில் ஆகி
புடவிவைத்து ஆற்றிய பல்தலைப் பாந்தள்
மண்சிறுக விரித்த மணிப்படம் தூக்கி
விழுங்கிய பல்கதிர் வாய்தொறும் உமிழ்ந்தென
மணிநிரை சிந்தி மண்புக அலைப்ப
கார் விரிந்து ஓங்கிய மலைத்தலைக் கதிர்என
ஓ அறப் போகிய சிறைவிரி முதுகில்
புவனம் காணப் பொருளொடு பொலிந்தோய் (15 - 25)

தலைகீழாக நின்ற அந்த மாமரத்தினது இரு கூறாகியவற்றுள் ஒரு கூறு எழுந்து பெரிய வரத்தால் ஒரு மயிலுருவானது. அது பூமியினும் பெரிய பல தலைகளுடன் உலகைத் தாங்கும் ஆதிசேடனின் படம் விரித்த தலையைத் தன் அலகால் கொத்தும். அவ்வாறு கொத்தித் தூக்கும்போது ஆதிசேடனின் பல தலைகளிலிருந்தும் சூரியமண்டிலத்தை உமிழ்ந்தாற்போல பல மணி வரிசையை மண்ணில் சிதறுமாறு வருத்தும்., நீண்ட சிறகுகள் இருபுறமும் விரித்த அம்மயிலின் மேல் மேகம் பரவிய உயர்ந்த மலையின் உச்சியில் தோன்றும் சூரிய மண்டிலம் போலே எழுந்தருளி உலகத்தார் காண வெற்றிப் புகழோடு விளங்கியோய்!

**1.5.3 சேவற்கொடியோன்**

போழ்படக் கிடந்த ஒருபங்கு எழுந்து
மின்னின் மாண்ட கவிர்அலர் பூத்த
சென்னி வாரணக் கொடும்பகை ஆகி
தேவர்மெய் பனிப்புற வான்மிடை உடுத்திரள்
பொரியின் கொறிப்பப் புரிந்த பொருள் நாடித்
தாமரை பழித்த கைமருங்கு அமைத்தோய்! (26 -31)

பிளவுபட்ட மாமரத்தின் எஞ்சிக்கிடந்த மற்றொரு கூறு எழுந்து முருக்கம் பூப்போன்று பொலிவுடைய உச்சிச் சூட்டினையுடையதாய்க் கொடிய பகைப் பண்பினையுடைய கோழிச் சேவலாகியது. தேவர்கள் உடல் நடுங்க, வானத்தின்கண் செறிந்துள்ள விண்மீன் கூட்டங்களைப் பொரிகளைக்

கொறிக்குமாறு போலத் தன் அலகாற் கொத்திக் கொறித்தது. அச்சேவற் கோழி விரும்பிய செயலை உணர்ந்து அதனால் உலகிற்குத் துன்பமுண்டாகாதபடி செந்தாமரை மலரைப் பழிக்கின்ற நின் திருக்கையில் அச்சேவலைப் பற்றிக் கொடியாக அமைத்துக் கொண்டோய்!

குறிப்புகள்

### 1.5.4. தெய்வயானை, வள்ளி மணாளன்

ஒருமையுள் ஒருங்கி இருகை நெய்வார்த்து
நாரதன் ஓம்பிய செந்தீக் கொடுத்த
திருகுபுரி கோட்டுத் தகர்வரு மதியோய்!
முலைஎன இரண்டு முரண்குவடு மரீஇக்
குழற்காடு சுமந்த யானைமகள் புணர்ந்தோய்
செங்கண் குறவர் கருங்காட்டு வளர்த்த
பைங்கொடி வள்ளி படர்ந்தபுய மலையோய் (32 -38)

நாரதமுனிவன் புலனடக்கத்துடன் ஒன்றிய சிந்தையில் இருந்து, தன் இருகைகளாலும் நெய் வார்த்துச் சிவந்த வேள்வித் தீயிலிருந்து வெளிப்பட்டதும் திருகிய முறுக்கோடு கூடின கொம்புகளையுடையதுமான ஆட்டுக்கிடாயின்மேல் எழுந்தருளி வருகின்ற புலவனே!

மாறுபாட்டுடைய இரு குன்றுகள் எனும்படி இரு முலைகளையும் கூந்தலாகிய காட்டினையும் கொண்ட தெய்வயானையைச் சேர்ந்தோய்!

சிவந்த கண்களையுடைய குன்றக் குறவர்களால் கரிய காட்டில் அன்புடன் வளர்க்கப்பெற்ற வள்ளியாகிய பசிய பூங்கொடியைப் படரவிட்ட மலைபோலும் தோளுடையாய்.

### 1.5.5 மறைமொழி அறிவித்தவன்

இமயம் பூத்த சுனைமாண் தொட்டில்
அறிவின் தங்கி அறுதாய் முலையுண்டு
உழல்மதில் சுட்ட தழல்நகைப் பெருமான்
வணங்கிநின் றேத்த குருமொழி வைத்தோய்!
ஓம் எனும் எழுத்தின் பிரமம் பேசிய
நான்மறை விதியை நடுங்குசிறை வைத்து
படைப்புமுதல் மாய வான்முதல் கூடித்
தாதையும் இரப்ப தளைஅது விடுத்தோய்

இமயமலையில் சுனையின்கண் மலர்ந்த மாட்சியுடைய தாமரை மலராகிய தொட்டிலில் மெய்யறிவினோடு தங்கிக், கார்த்திகை மகளிராகிய தாயர் அறுவருடைய முலைப்பாலை உண்டருளினாய். விண்ணில் திரிந்த முப்புரத்தைச் சுட்டெரித்த நெருப்பினையுடைய சிரிப்பையுடைய சிவபெருமான் நின்னைத் தொழுது நின்று வாழ்த்த, அப்பெருமானுக்கு ஆசிரியனாய், பிரணவப் பொருள் ஆகிய மறைமொழி அறிவித்தோய்!

தானே பிரமம் என்று ஆணவத்துடன் திரிந்த நால்வேதமுடைய படைப்புக் கடவுளாகிய நான்முகனிடம் ஓம் என்னும் பிரணவத்திற்குப் பொருள் வினவி அவன் கூறாததால் நடுங்கும் சிறையில் இட்டாய். பின் படைத்தல் முதலியன தொழில்கள் நடவாமையால் தேவர்கள் நின்தந்தையாகிய சிவபெருமானுடன் வந்து நின்னை இரந்து வேண்டிமையால் அந்த நான்முகனைச் சிறையிலிருந்து விடுவித்த பெருமானே!

**1.5.6 அருந்தமிழ்ப் புலவன்**

கூடம் சுமந்த நெடுமுடி நேரி

விண்தடை யாது மண்புகப் புதைத்த

குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்

ஆறுதிரு எழுத்தும் கூறுநிலை கண்டு

நின்தாள் புகழுநர் கண்ணுள் பொலிந்தோய்

மணிக்கால் அறிஞர் பெருங்குடித் தோன்றி

இறையோன் பொருட்குப் பரணர் முதல்கேட்ப

பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவனும்

பாய்பார் அறிய நீயே ….

ஆகாயம் தாங்கி நின்ற நீண்ட உச்சியினையுடைய நேரிமலை ஆகாயத்தை அடைத்துத் தடை செய்தபோது அதனை நீக்க, நிலத்திற் புகும்படி அழுத்திய அகத்திய முனிவன் மெய்ப் பொருளை அறியும்படி மறைப் பொருளை அறிவுறுத்திய பெருமானே!

உனக்குரிய ‘சரவணபவ’ எனும் ஆறு திருவெழுத்துக்களையும் ஓதும் முறையினை யுணர்ந்து நின்னுடைய திருவடிகளைப் புகழ்ந்து பாடும் அன்பர்களுடைய அகக் கண்ணினூடே அருளுருவோடு பொலிவுறத் திகழ்ந்தோய்.

நவமணிகளின் பிறப்பிடத்தை அறியும் மணிவணிகரது பெரிய குடியில் உப்பூரிக் குடிக்கிழாருக்கு உருத்திர சன்மர் எனும் மூங்கைப் பிள்ளையாய்ப் பிறந்து இறையனார் அருளிச் செய்த அகப்பொருள் இலக்கணத்திற்குப் பரணர் முதலிய சங்கப்புலவர் கேட்கப் பெரிய தமிழில் பரந்த உலகோர்

அறியும்படி நக்கீரர் விரித்த பொருளை உணர்த்திய தமிழ்ப் புலமையுடையோனும் நீயே

### 1.5.7. திருக்காட்சி வேண்டுதல்

வெட்சிமலர் சூழ்ந்த நின்இரு கழற்கால்
குழந்தை அன்பினொடு சென்னிதலை கொள்ளுதும்
அறிவுநிலை கூடாச் சில்மொழி கொண்டு
கடவுள் கூறா உலவா அருத்தியும்
சனனப் பீழையும் தள்ளாக் காமமும் (60)
அதன்படு துயரமும் அடைவுகெட் டிறத்தலும்
தென்புலக் கோமகன் தீத்தெறு தண்டமும்
நரகொடு துறக்கத்து உழல்வரு பீழையும்
நீளாது இம்பரின் முடித்து
மீளாக் காட்சி தருதிஇன் றெனவே. (65)

ஆதலின், மெய்யறிவற்ற எம்முடைய இப்புன்மொழிகளைத் திருச்செவியில் ஏற்று இதுகாறும் இறைவனாகிய உன்னைப் புகழாமைக்குக் காரணமான அழியாத ஆசையையும் இப்பிறவிப் பிணியையும் நீங்காத காம நுகர்வையும் தன்னாலுண்டாகிய துன்பங்களையும் அறத்திலிருந்து தப்பிய ஒழுக்கத்தையும் கூற்றுவன் நெருப்புப் போன்று வருத்துகிற துன்பங்களையும் நரகத்தினும் துறக்கத்தினும் மாறி மாறிச் சென்று சென்று உழலுதலால் வருகின்ற துன்பங்களையும் இன்னும் பல பிறவிகளில் நீளவிடாமல் இப்பிறவியிலேயே ஒழித்து மீண்டும் பிறவாமைக்குக் காரணமான மெய்க்காட்சியினை இப்பொழுதே அளித்தருள்வாயாக! என வேண்டியவர்களாய் வெட்சி மாலை அணிந்த உன் வீரக்கழலணிந்த இருதிருவடிகளையும் சிறு குழந்தை தந்தையிடம் காட்டும் இயற்கையான அன்பைப் போல எம்முடைய தலையில் ஏந்திக்கொள்வோம்.

## 1.6 கல்லாடம் பாடல் 1 தமர் நினைவுரைத்து வரைவு கடாதல்.

கைகோள்: களவு

கூற்று: தோழிகூற்று

திணை: குறிஞ்சி

துறை: தமர் நினைவுரைத்து வரைவு கடாதல்.

இப்பாடலில் முருகப் பெருமானின் தாரகனை அழித்த பெருமையும் பரங்குன்றின் சிறப்பும் சிவபெருமான் தருமிக்காகப் பாடலைத் தந்து தமிழாய்ந்த திறமும் பேசப்படுகின்றன.

குறிப்புகள்

### 1.6.1 துறை விளக்கம்

'களனும் பொழுதும் வரை நிலை விலக்கி

காதல் மிகுதி உளப்படப் பிறவும்

நாடும் ஊரும் இல்லும் குடியும்

பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி

அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ

அனை நிலை வகையான் வரைதல் வேண்டினும்'

என்ற தொல்காப்பிய விதிப்படி இல்லோர் இயல்புரைத்துத் தலைவனிடம் தலைவியை விரைந்து மணம் புரிந்துகொள்ள வேண்டுதல் தமர் நினைவுரைத்து வரைவு கடாதல் என்னும் துறையாகும்.

தலைவி தலைவனுடனான சந்திப்பால் தனித்த வனப்புற்று மேனி வேறுபடுகின்றாள். இதனைக் கண்ட தமர் ஐயுற்றுப் பலபடப் பேசுகின்றனர். அவர்கள் தலைவியை இற்செறிக்கவும் செய்வர். தமரின் இந்த உள்ளத்தைத் தலைவனிடம் தோழி உரைத்து வரைவு கடாவுகின்றாள்.

### 1.6.2. முருகப் பெருமானின் பரங்குன்று

அமுதமும் தருவும் பணிவரப் படைத்த

உடலக்கண்ணன் உலகு கவர்ந்து உண்ட

களவுடை நெடுஞ்சூர் கிளை களம்விட்டு ஒளித்த

அருள்நிறைந்து அமைந்த கல்வியர் உளமெனத்

தேக்கிய தேனுடன் இறால்மதி கிடக்கும் (5)

எழுமலை பொடித்த கதிர்இலை நெடுவேல்

வள்ளி துணைக்கேள்வன் புள்ளுடன் மகிழ்ந்த

கறங்கு கால்அருவிப் பரங்குன்று (1-8)

வஞ்சகமுடைய நெடிய சூரன், அமிழ்தும் கற்பகத்தருவும் சிறப்பாகப் பெற்றுள்ள இந்திரன் தனக்குப் பணிந்துநிற்க அவனுடைய வானுலகத்தின் வளங்களையெல்லாம் தன் ஆற்றலால் கவர்ந்து கொண்டான். அந்தச் சூரனின் தம்பி தாரகன் முருகனுடனான போரில் களத்தினை விட்டு ஓடி மலையுள் ஒளிந்துகொண்டான்.

அருளால் நிரம்பி அமைதிகொண்ட மெய்யறிவு பெற்ற சான்றோருடைய உள்ளம் போல நிரம்பிய தேனோடு கூடிய இறாலும் முழுத் திங்களும் தங்கிக் கிடக்கும் உயர்ந்தெழுந்த மலை. அதில் தாரகன் ஒளிந்து கொண்டதால் அதனைப் பொடியாக்கிய ஒளியுடைய இலைவடிவ நெடிய வேற்படையினை ஏந்தியவன் முருகன்.

வள்ளி நாதனாகிய அந்த முருகவேள் தன்னுடைய ஊர்தியாகிய மயிலோடும் கொடியாகிய சேவலோடும் மகிழ்ந்து இருப்பதற்குரிய இடம் ஒலிக்கின்ற அருவிகளையுடைய திருப்பரங்குன்றம்.

### 1.6.3 தருமிக்கு அருளிய சிவபெருமான்

........பரங்குன்று உடுத்த<br>
பொன்னகர்க் கூடல் சென்னியம் பிறையோன்<br>
பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினை<br>
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறி,<br>
பொற்குவை தருமிக்கு அற்புடன் உதவி<br>
என்உளம் குடிகொண்டு இரும்பயன் அளிக்கும்<br>
கள்அவிழ் குழல்சேர் கருணைஎம் பெருமான்<br>
மலர்ப்பதம் நீங்கா உளப்பெருஞ் சிலம்ப! (8-15)

அக்குன்றத்தை ஒரு பக்கத்தே கொண்டுள்ள நான்மாடக்கூடலாகிய மதுரையின்கண் எழுந்தருளிய சோம சுந்தரக் கடவுள் பொதியமலைக்குரிய பாண்டிய மன்னன் தன் உள்ளத்தே நினைத்த அந்தக் கருத்தினைத் தெரிவிக்க வேண்டிக் ‘கொங்குதேர் வாழ்க்கை’ எனத் தொடங்கும் செந்தமிழ்ப் பாவினை இயற்றித் தருமிக்குக் கொடுத்தான். அதன்மூலம் அப்பாட்டிற்குப் பரிசிலாகிய பொற்குவியலைத் தருமிக்கு அன்புடன் வழங்கச் செய்தான். அவனே எளியவனாகிய என் நெஞ்சிலே இருந்து பெரிய பயன்களை வழங்குகின்றவனாய்த் தேன்மலர் மாலையணிந்த உமாதேவியைத் தன்னுடலின் ஒரு பங்காகச் சேர்த்த அருள் சோதியாகிய எம்பெருமான்.

எம்பெருமானின் செந்தாமரைமலர் போன்ற திருவடிகளை நீங்காத நெஞ்சினை உடைய பெரிய மலைநாட்டுத் தலைவனே!

### 1.6.4 தலைவியின் மேனி வனப்பு

கல்லாக் கயவர்க்கு அருநூல் கிளைமறை<br>
சொல்லினர் தோம்என துணைமுலை யருத்தன<br>
பலஉடம்பு அழிக்கும் பழிஊன் உணவினர்

தவம்எனத் தேய்ந்தது துடிஎனும் நுசுப்பே
கடவுள் கூறார் உளம்எனக் குழலும்
கொன்றை புறவுஅகற்றி நின்றஇருள் காட்டின
சுரும்பு படிந்துண்ணும் கழுநீர் போல
கறுத்துச் சிவந்தன கண்இணை மலரே (16 - 23)

குறிப்புகள்

தலைவியின் தனங்கள் இரண்டும் நன்னெறியைக் கற்காத கீழ்மக்களுக்கு உணர்தற்கரியதும் பல பிரிவுகளுடையதுமான வேதத்தின் மறைகளின் பொருளை அறிவுறுத்திய ஆசிரியரிடம் உண்டாகிய குற்றம் பெருகியதுபோல பெருத்தன.

உடுக்கை என்று உவமிக்கப்படும் அவளது சிற்றிடை பல உயிரினங்களின் உடல்களை அழிக்கின்றதும் சான்றோராற் பழிக்கப்பட்டதுமான ஊன் உணவினை உண்ட கீழ் மக்கள் மேற்கொண்ட தவம் தேய்ந்தாற்போலத் தேய்ந்தது.

நிறத்தால் கரிய கொன்றையின் பழங்களைத் தோற்கடித்து அவற்றை முல்லை நிலத்திலிருந்து அகற்றிய தலைவியின் கருங்கூந்தல் இறைவனை வாழ்த்தாதவர் உள்ளத்தின் அறியாமை இருள் போல நிலைத்த இருளைக் காட்டியது. கண்களாகிய இருமலர்களும் வண்டு மொய்த்துத் தேன் பருகும் ஆம்பல் மலர் போன்று கறுத்துச் சிவப்பெய்தின.

### 1.6.5 தமரின் நினைவுரைத்தல்

ஈங்கிவை நிற்க சீறூர் பெருந்தமர்
இல்லில் செறிக்கும் சொல்லுடன் சில்மொழி
விள்ளும் தமியில் கூறினர்
உள்ளம் கறுத்துக் கண்சிவந்து உருத்தே. (24 - 27)

ஈங்கு இவ்வாறு தலைவியின் மேனி தனித்த வனப்புற்றது. தலைவியின் இம்மாறுபாடுகள் ஒருபுறமிருக்க இவளை ஈன்ற தாயும் தந்தையுமாகிய பெற்றோர் இம்மாறுபாட்டினைக் கண்டு ஐயுற்றுத் தனித்து உள்ளம் சினங்கொள்ளக் கண்கள் சிவந்து வெகுண்டு இற்செறிப்பதற்குரிய மொழிகளுடன் வேறுபிறவும் பேசலாயினர். அதுவேயுமன்றி இச்சீறூரில் அயலாரும் அவளிடத்துச் சில சொற்களைப் பேசுவர். எனவே நீ விரைந்துவந்து தலைவியை வரைந்தருளவேண்டும்.

தலைவனுடன் கொண்ட புணர்ச்சியால் மேனி தனி வனப்புடன் மாறுபாடு அடைந்தது. இவ்வாறு தலைவியின் மேனி வேறுபாடு கூறித் தலைவனிடம் தோழி வரைவு கடாவினாள்.

பெற்றோர் இற்செறிக்கும் சொல்லுடன் கூறினர் என்பதால், தமர் நினைவுரைத்து வரைவு கடாவினாள் என்பது ஆகும். அயலார் பேச்சைக் கூறியமையால் அலரறிவுறுத்து வரைவு கடாவியது என்றும் அமையும்.

## 1.7 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

குறிப்புகள்

**இரு மதிப்பெண் வினா விடைகள்**

1. கல்லாடம் குறித்த பழமொழிகள்யாவை?

   கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே, கல்லாடம் கற்றவரோடு மல்லாடாதே

2. எந்நூலின் பாடலுக்கு நூறுமுறை தலையசைத்தார்?

   கல்லாடம்

3. எந்நூலுக்கு விளக்கமாகக் கல்லாடம் விளங்குகின்றது?

   திருக்கோவையார்

4. பிறவிக் கலக்கத்திற்குக் கல்லாடர் கூறும் உவமைகள் யாவை?

   காற்றாடி, வண்டி ஆரக்கால், ஊசல், காற்று, கானல் நீர்

5. சூரன் எவ்வுருவில் கடலில் நின்றான்?

   மாமரம்

6. வேலால் பிளக்கப்பட்ட நிலையாது?

   இரு கூறு மயிலாகவும் மறுகூறு சேவற்கொடியாகவும்

7. நாரதனின் வேள்வித்தீயில் தோன்றியது யாது?

   ஆட்டுக்கிடாய்

8. முருகன் யாரைச் சிறையிட்டான்?

   பிரமன்

9. உடலக்கண்ணன் எனப்பட்டவன் யார்?

   இந்திரன்

10. இறைவன் பொருட்கு உரையறித்தவன் யார்?

    உருத்திரசன்மராக வந்த முருகவேள்

11. கொங்குதேர் எனும் பாடலை எவ்விறைவன் பாடியதாகக் கல்லாடர் கூறுகின்றார்?

சிவபெருமான்

12. சிவபெருமான் பாடலால் பயன்பெற்றவர் யார்?

தருமி

13. தலைவியின் இடை யாருடைய தவம் போல் தேய்ந்தது?



பழி ஊன் உணவினர் தவம்போல

14. தலைவியின் கூந்தல் நிறத்திற்கான உவமை யாது?

கடவுளைச் சிந்தியாதார் உள்ளம்

**குறுவினாக்கள்**

15. கல்லாடத்தின் சிறப்புக்களை எழுதுக.

கல்லாடம் அறிமுகம் என்ற தலைப்பின் கீழமைந்த செய்திகள்

16. கணபதியின் திருவடிவை விளக்கியுரைக்க.

கணபதியின் திருத்தோற்றம் என்ற தலைப்பில் அமைந்தவை

17. கல்லாடர் கணபதியிடம் கூறும் உலகியல் துன்பங்கள் யாவை?

உலகியல் துன்பம் எனும் தலைப்பில் அமைந்தவை

18. முருகப்பெருமான் சூரனை அழித்தமையை விளக்குக,

சூர் தடிந்த வேலன், மயில்வாகனன், சேவற்கொடியோன் ஆகிய தலைப்புக்களில் அமைந்தவை

19. முருகன் வேதமும் தமிழும் அறிவித்த திறத்தை விளக்குக.

மறைமொழி அறிவித்தவன், அருந்தமிழ்ப் புலவன் என்ற தலைப்புக்களில் அமைந்தவை

20. முருகனிடம் கல்லாடர் திருக்காட்சி வேண்டிய திறத்தை விளக்குக.

திருக்காட்சி வேண்டுதல் என்னும் தலைப்பில் அமைந்த செய்திகள்

21. அமுதமும் தருவும் என்ற பாடலில் முருகனைக் கல்லாடர் எவ்வாறு போற்றுகின்றார்?

முருகனின் பரங்குன்று என்ற தலைப்பில் அமைந்தவை

22. தருமிக்குச் சிவபெருமான் பொற்குவையைப் பெற்றுத் தந்தமையை எழுதுக.



தருமிக்கு அருளிய சிவபெருமான் என்ற தலைப்பில் அமைந்தவை

23. புணர்ச்சியால் தலைவிக்கு ஏற்பட்ட உடற்பொலிவை எழுதுக.

தலைவியின் மேனி வனப்பு என்ற தலைப்பில் அமைந்தவை



**பெருவினாக்கள்**

24. வேழமுகக் கடவுளைக் கல்லாடர் போற்றும் திறத்தை விளக்குக.

    கணபதியின் திருத்தோற்றம், உலகியல் துன்பம், வேண்டிமொழிதல் எனும்தலைப்புக்களில் அமைந்த செய்திகள்

25. வேலன்வணக்கம் என்ற பொருண்மையில் கல்லாடர் முருகனைப் போற்றும் திறத்தைக் கட்டுரைக்க.

    சூர் தடிந்த வேலன், மயில் வாகனன், சேவற்கொடியோன், வள்ளி மணாளன், மறைமொழி அறிவித்தவன், அருந்தமிழ்ப் புலவன் திருக்காட்சி வேண்டுதல் என்றதலைப்பில் அமைந்த செய்திகள்

26. தமர் நினைவுரைத்துதோழி வரைவு கடாதலைக் கல்லாடம்வழி விளக்குக.

    தமர் நினைவுரைத்துதோழி வரைவு கடாதல் என்னும் தலைப்பில் அமைந்தவை (1.6 முழுவதும்)

# கூறு - 2 கல்லாடம் - பூமணியானை - பகையுடன் கிடந்த எனத் தொடங்கும் இரண்டு பாட்டுகள்

## 2.1 அறிமுகம்

கல்லாடம் அகப்பொருட் சிறப்புடன் இறைவனின் பெருமைகளை ஒருங்கே கொண்டு அக இலக்கண மரபு வழுவாதபடி அமைந்துள்ளாது. அவ்வகையில் பூமணி யானை என்ற பாடல் வரைவு கடாவுதலாகவும் பகையுடன்கிடந்த என்ற பாடல் அலர் அஞ்சி அறிவுறுத்துதலாகவும் அமைகின்றன

## 2.2 பூமணியானை

இப்பாடலில் வையை நதி காப்பியப் புனைவுடன் சிலேடை நயம்படப் போற்றப்பெறுகின்றது. சிவபெருமான் சோமசுந்தரத் திருப்பேருடன் மதுரையை அரசாண்ட திறமும் பாராட்டப்பெறுகின்றது.

நள்ளிரவில் தலைவன் வந்து சென்றமையைத் தேரின் சுவட்டால் அன்னை அறிந்துகொண்டாள் என்பதைத் தலைவிக்குத் தோழி கூறி இனி வரைவு கடாவ வேண்டியமையை அறிவித்தாள்.

சிற்றிலக்கியம்

குறிப்புகள்

Self -Instructional Material

**2.2.1. அறிமுகம் : கல்லாடம் பாடல் 2 பூமணியானை-**

கைகோள்: களவு

கூற்று: தோழிகூற்று

திணை: நெய்தல்

துறை : தாய் அறிவு கூறி வரைவு கடாதல்

முன் சுட்டிய பாடலைப் போலவே இப்பகுதியும் வரைதல் வேண்டும் பொருளில் உரைக்கப்பட்டது. தலைவி, தலைவனுடன் கொண்ட காதலைத் தாய் அறிந்துகொண்டாள். அதனைச் சுட்டி வரைவு கடாவ வேண்டியமையைத் தோழி தலைவிக்கு உணர்த்தினாள்.

**2.3.2. காப்பியம் போல் செழித்த வையை**

கூறுஆம் மதியத் திருநுதற் கொடியே (25)

பிறை போன்ற அழகிய நெற்றியையுடைய பூங்கொடி போன்ற தலைவியே கேள்.

பூமணி யானை பொன்என எடுத்து
திங்களும் புயலும் பரிதியும் சுமந்த
மலைவரும் காட்சிக்கு உரிய ஆகலின்
நிறையுடைக் கல்வி பெறுமதி மாந்தர்
ஈன்ற செங்கவி எனத்தோன்றி நனிபரந்து
பாரிடை இன்பம், நீளிடைப் பயக்கும்
பெருநீர் வையை வளைநீர்க் கூடல்
உடலுயிர் என்ன உறைதரு நாயகன் (1- 8)

மலர்களையும் மணிகளையும் யானைகளையும் பொன்னையும் சுமந்தபடி திங்களையும் முகில்களையும் ஞாயிற்று மண்டிலத்தையும் தம் உச்சியில் தாங்கிய மலையினின்றும் வருங்காட்சிக்கு உரியது வையை நதி.

இவ்வையைஅறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கும் நிறைந்த கல்வியைப் பெற்று மதிநுட்பமுடைய நல்லிசைப் புலவர்கள் பூ மணி யானை பொன் முதலிய மங்கலமொழிகளாலே தொடங்கி இயற்றிய நிலவு, மேகக்கூட்டம், ஞாயிறு ஆகியவற்றை வருணனை வாயிலாகத் தம்பாற் சுமந்த சிறந்த காட்சியை உடைய குற்றமற்ற அழகான சிறந்த பெருங்காப்பியம் போல் காணப்படும் தன்மையது.

நீண்டதூரம் பூமியில் பரவி உலகோருக்குப் பேரின்பத்தை வழங்குகின்றதும் மிக்க நீரையுடையதுமான வையையாறு சூழ்ந்த நகரம் நான்மாடக்கூடல் என்னும் மதுரைமாநகரம். அந்த மதுரை உடலாகவும் தான் அதற்கு உயிராகவும் சிவபெருமான் எழுந்தருளி இருக்கின்றான்.

பூமணி யானை பொன்என எடுத்து

திங்களும் புயலும் பரிதியும் சுமந்த

மலைவரும் காட்சிக்கு உரிய

என்னும் அடிகள் மலர், மணி யானை ஆகியவற்றைப் புரட்டித் திங்கள் மேகம், ஞாயிறு தாங்கிய மலையிலிருந்து வரும் வையைக்கும்

பூ, மணி, யானை என மங்கல மொழிகளால் தொடங்கி நிலவு, மேகம், ஞாயிற்று வருணனைகளைத் தாங்கிய காப்பியத்திற்கும் இயைபுபடச் சிலேடையில் அமைந்துள்ளன.

**2.3.3. சிவபெருமானின் அரசக் கோலமும் அருளும்**

கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி

ஐவாய்க் காப்புவிட்டு அணிபூண் அணிந்து

விரிசடை மறைத்து மணிமுடி கவித்து

விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி எடுத்து

வழுதி ஆகி முழுதுலகு அளிக்கும்

பேரருள் நாயகன் சீரருள் போல

மணத்துடன் விரிந்த கைதைஅம் கானல்

சிவபெருமான் மீனாட்சியம்மையை மணக்கவந்து தான் பாண்டியன் போலும் அரசுரிமை பூண்டான். இதனை இப்பகுதி விளக்கி நிற்கும்.

சிவபெருமான் தனக்குரிய கொன்றை மலரைச் சூடிக்கொள்ளாமல் பாண்டியனுக்குரிய வேப்பமலர்மாலையை அணிந்துகொண்டான். ஐந்தலைப் பாம்பாகிய கங்கணத்தை நீக்கி விட்டு பொன், மணியால் செய்யப்பட்ட அரச அணிகலன்களை அணிந்துகொண்டான். தனது விரித்த சடையினை மறைத்து மணிமுடியை புனைந்துகொண்டான். தனக்குரிய காளைக்கொடியை அகற்றிவிட்டுப் பாண்டியருக்குரிய மீன் கொடியை உயர்த்தினான். இவ்வாறு பாண்டிய மன்னனாகிச் சிவபெருமான் உலகம் முழுவதும் செங்கோன்மை செலுத்திப் பாதுகாக்கின்றான்.

அத்தகைய சிவபெருமானின் மிகுதியானதும் மிக்க புகழையுடையதுமான அருள் கடவுள் மணத்துடன் உலகமுழுவதும் பரவியதைப் போன்று நறுமணத்தோடே மலர்ந்த தாழைகளையுடைய கடற்கரைச் சோலை விளங்கியது.

### 2.3.4. அன்னை அறிந்தனள்

... ... கானல்

நலத்தொடர் வென்றிப் பொலம்பூண் குரிசில்

சின்னம் கிடந்த கொடிஞ்சி மான்தேர்

நொச்சிப் பூவுதிர் நள்இருள் நடுநாள்

விண்ணம் சுமந்து தோற்றம் செய்தென

தன்கண் போலும் எண்கண் நோக்கி

கள்வரைக் காணும் உள்ளம் போலச்

செம்மனம் திருகி உள்ளம் துடித்து

புறன்வழங் காது நெஞ்சொடு கொதித்தனள்

மாறாக் கற்பின் அன்னை

கூறுஆம் மதியத் திருநுதற் கொடியே!(15 - 25)

அச்சோலையில் நொச்சியினது மலர் உதிரும் செறிந்த இருளையுடைய இடையாமத்தில் போரின்கண் புறங்கொடுத்து ஓடாத வெற்றியினையும் பொன்னால் ஆகிய அணிகலன்களையும் உடையவன் நம் தலைவன். அவன் வருகையால் மேகத்தைத் தன்னுச்சியிற் சுமந்த கொடிஞ்சியினையும் குதிரைகளையுமுடைய தேர் ஊர்ந்தமைக்கான சுவடுகள் காணப்பட்டன.

மாறாத கற்பொழுக்கத்தையுடையவளும் தன்னுடைய கண்ணைப் போன்று என்னையும் கருதும் இயல்புடையவளுமான நம் அன்னை அச்சுவட்டைக் கண்டுகொண்டாள். கள்வரைக் கண்டோரின் மனம் வேறுபட்டதுபோலத் தன் செம்மாந்த மனம் மாறி உள்ளம் துடித்தாள். எனினும் தன் கருத்தைப் புறத்தாருக்கு வெளிப்படுத்திக் கூறாது தனக்குள்ளே நினைத்து மனம் புழுங்கினாள், ஆதலால் அவள் இக்களவொழுக்கத்தை அறிந்தனள் போலும்.

இதுவரை தோழியைத் தன்கண்போலப் போற்றுபவள் இன்று நோக்கிக் கொதித்தனள் என்பதால் தலைவனின் தேர் நள்ளிருளில் நடுநாளில் கடற்கரைச் சோலையில் வந்த சுவட்டை அறிந்துகொண்ட தாய் மனம் வேறுபட்டாள் என்பது உணரலாம்.

## 2.4 பகையுடன் கிடந்த - பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்

### 2.4.1 அறிமுகம்

கைகோள்: களவு

குறிப்புகள்

கூற்று: தோழிகூற்று

திணை: பாலை

துறை: வழியொழுகி வற்புறுத்தல் (பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்)

தலைவன் பொருளுக்காகப் பிரிந்து சென்றதை ஆற்றாமல் துயறுற்றுப் புலம்பிய தலைவியைத் தோழி கடிந்துரைத்தல் வழியொழுகி வற்புறுத்துதல் என்னும் துறையாகும். தலைவன் திருமணத்திற்காகப் பொருள் தேடிப் பிரிந்த காலத்துத் தலைவியை ஆற்றி இருக்குமாறு அலர் அஞ்சித் தோழி அறிவுறுத்துகின்றாள்.

**2.4.2 தலைவன் பிரிந்தான் (அறிவற்ற அமைச்சன் செயல்)**

துகிர்கிளைக் கொடியே! (25)

கிளையினையுடைய பவளக்கொடியை ஒத்த பெண்ணே!

பகையுடன் கிடந்த நிலைபிரி வழக்கினைப்
பொருத்தலும் பிரித்தலும் பொருபகை காட்டலும்
உட்பகை அமைத்தலும் உணர்ந்துசொல் பொருத்தலும்
ஒருதொழிற்கு இருபகை தீராது வளர்த்தலும்
செய்யா அமைச்சுடன் சேரா அரசன் (5)
நாடு கரிந்தன்ன காடுகடந்து இயங்கி
இடும்பை நிரப்பினர்க்கு ஈதலின் இறந்தோர்க்கு
இதழ்நிறை மதுவம் தாமரை துளித்தென
விழிசொரி நீருடன் பழங்கண் கொண்டால் (1-9)

அ) பல நாளாக இருக்கும் பழம்பகை உறவாகாது என்று எண்ணாமல் பகையோடு கூடிய வழக்கினைத் தன்னாட்சி நீங்கும் வகையில் மீளவும் உறவாகி ஒருவாறு தீர்த்து அப்பகைவரோடு கூடுதலும்

ஆ) தனக்குத் துணையாவாரைத் தன்னிடத்திலிருந்து நீக்குதலும்

இ) வலிமை காலம் சூழல் அறிந்திராமல் போர் செய்தற்குரிய வலிய பகையை உண்டாக்கிவிடுதலும்

ஈ) புறப் பகைக்கு இடனாக்கியமை போல அவர் பகைவர் வெல்லும்வரை உட்பகையை உண்டாக்கிவைத்தலும்

உ) பகைவர் நல்ல வார்த்தைகள் போல் வஞ்சகமாகச் சொல்லும் சொல்லின் பயன் தெரியாது ஏற்றுக்கோடலும்

ஊ) ஆட்சிக்கு இருபகை வந்தபோது ஒன்றை உறவாக்கி மற்றொன்றைக் கெடுக்காமல் இரு பகையையும் வளர்த்தலும்

ஆகிய இக்குற்றங்களைச் செய்துவைத்த அமைச்சுடன் சேர்கின்ற அறிவிலியாகிய ஒரு மன்னவனுடைய ஆட்சியில் நாடானது தன் வளமெலாம் அழிந்து பாழாகும். அத்தகைய நாட்டைப்போலக் கதிரவனால் பாழ்பட்டுக் கரிந்து கிடக்கும் காட்டினைக் கடந்து சென்ற தலைவர் வறுமையால் துன்புற்ற மாந்தர்க்கு ஈவதற்காக நம்மை விட்டுச் சென்றார். நம்மைப் பிரிந்த அந்தத் தலைவருக்கு அழகிய செந்தாமரை மலர் தன் இதழ்கள் நிறையத் தேனைச் சொரிந்தது போல உன் விழிகள் சிந்துகின்ற கண்ணீருடன் பெரிதும் துன்பம் கொண்டு வருந்தினாய்.

### 2.4.3. அகப்பொருள் ஆசிரியன் சிவபெருமான்

உலகியல் நிறுத்தும் பொருள்மரபு ஒடுங்க

மாறனும் புலவரும் மயங்குறு காலை

முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கால்

'அன்பின் ஐந்திணை' என்று அறுபது சூத்திரம்

கடல்அமுது எடுத்துக் கரையில் வைத்ததுபோல்

பரப்பின் தமிழ்ச்சுவை திரட்டி மற்றவர்க்குத்

தெளிதரக் கொடுத்த தென்தமிழ்க் கடவுள் (10-16)

தென் தமிழின் நூலாசிரியனாகிய இறைவன் சிவபெருமான், உலகியலை உணர்த்தும் பொருளிலக்கண மரபு ஒடுங்கிய போது திருப்பாற் கடலைக் கடைந்து அதன் அமிழ்தத்தைத் திரட்டி எடுத்துத் தேவர்கள் எளிதில் உண்ணுமாறு கரையில் வைத்தது போல எல்லா நூலுக்கும் முந்திய வேதங்கள் தோன்றுகின்ற அருளுடைய மொழியால் பரப்பும் இனிமையும்கொண்ட தமிழாகிய கடலிலிருந்து அன்பினைந்திணை என்று தொடங்கி அகப்பொருளாகிய அமிழ்தத்தை அறுபது சூத்திரமாகத் தொகுத்துப் பாண்டிய மன்னனுக்கும் சங்கப் புலவர்களுக்கும் பொருளியலை நன்கு தெளிந்துணரும்படி வழங்கியருளினான்.

இறைவன் அகப்பொருள் இலக்கணம் செய்தருளினான் என்ற தொன்மச்செய்தியைக் களவியலுரை, "மதுரை ஆலவாயில் அழல் நிறக்கடவுள் சிந்திப்பான்: என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று அதுதானும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்கற் பாலம் என்று இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழிட்டான்□ என உரைக்கும்.

### 2.4.4 தலைவியின் வருத்தம்

தென்தமிழ்க் கடவுள்
தழற்கண் தரக்கின் சரும ஆடையன்
கூடல்அம் பெரும்பதி கூறார் கிளை என (16-18)

இவ்வாறு அகப்பொருளைத் தந்தவனும் தீயைப் போலும் கண்ணுடைய புலியின் தோலை ஆடையாக உடையவனுமான சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளியுள்ள -நான்மாடக் கூடலாகிய பெரிய அழகிய மதுரை மாநகரைப் புகழ்ந்து வாழ்த்தாத அறிவீனருடைய சுற்றத்தார் வருந்துதல் போன்று நீயும் வருந்துகின்றாய். .

### 2.4.5. அயலவர் செயல்

நிறைநீர்க் கயத்துள் ஒருதாள் நின்று
தாமரை தவஞ்செய்து அளியுடன் பெற்ற
திருமகட்கு அடுத்ததுஎன் என்று
ஒருமை காண்குவர் துகிர்கிளைக் கொடியே! (19- 22)

நீர் நிறைந்த குளத்தில் செந்தாமரையானது ஒரு காலில் நீண்ட காலம் நின்று தவம் செய்து அன்போடு திருமகளை அடையப்பெற்றது. அத்திருமகளை ஒத்த இவள் (இவ்வாறு மதுரையை வாழ்த்தாதவர் சுற்றம் வருந்துவதுபோல) வருந்துவதற்கு இப்பொழுது நேர்ந்தது ஏதோ என்று அயலார் யாவரும் கூடி ஐயுற்று ஆராய்வர். ஆகவே அதனால் நீ ஆற்றி இருத்தல் வேண்டும்.

## 2.5 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

**இரு மதிப்பெண் வினா விடைகள்**

1. பாடல் புனையத் தொடங்கும் மங்கலச் சொற்கள் எவை?

   பூ, மணி யானை, பொன்

2. வையை நதி எதனைப் போல் கிடந்தது?

   புலவர் பாடிய காப்பியம்

3. கூடல் மாநகரின் உயிரொத்தவன் யார்?

   சோமசுந்தரக் கடவுள்

4. சிவபெருமான் சூடாத மாலை எது? சூடிய மாலை எது

   சூடாதது கொன்றைமாலை. சூடியது வேப்பமாலை

5. அன்னை எதனைக் கண்டுணர்ந்தாள்?

   நடுநாள் இரவில் தலைவன் வந்த தேரின் சுவடு

6. தலைவன் எதன்பொருட்டுப் பிரிந்தான்?

   துயருற்றோருக்கு ஈதலின் பொருட்டு

7. காடு எதனைப் போலக் கரிந்து கிடந்தது?

   அறிவற்ற அமைச்சனுடன் சேர்ந்த அரசன் நாடு போல்

8. 'அன்பின் ஐந்திணை என்று அறுபது சூத்திரம்' - இத்தொடர் உணர்த்தும் நூல் எது?

   இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள்

## குறுவினா

9. வையை நதியைக் கல்லாடர் எவ்வாறு போற்றுகின்றார்?

   காப்பியம் போல் செழித்த வையை என்ற தலைப்பில் அமைந்த செய்திகள்

10. சிவபெருமான் பாண்டிய அரசனாகிய திறத்தை எழுதுக.

    சிவபெருமானின் அரசக் கோலமும் அருளும் என்னும் தலைப்பில் அமைந்தவை

11. தலைவன் வரவுணர்ந்த தாயின் நிலையை எழுதுக.

    அன்னை அறிந்தனள் என்னும் தலைப்பில் அமைந்தவை

12. அறிவற்ற அமைசன் செயல்களாகக் கல்லாடர் கூறுவன யாவை?

    தலைவன் பிரிந்தான் எனும் தலைப்பில் உள்ளவை

13. சிவபெருமான் அகப்பொருள் அருளிய திறத்தை எழுதுக.

    அகப்பொருள் ஆசிரியன் சிவபெருமான் என்னும் தலைப்பில் அமைந்தவை

## பெருவினா

14. தாய் அறிந்தமை கூறித் தோழி வரைவு கடாவிய திறத்தைக் கட்டுரைக்க,

    பூ மணி யானை என்ற பாடல் அறிமுகம், காப்பியம் போல் செழித்த வையை, சிவபெருமானின் அரசக் கோலமும் அருளும், அன்னை அறிந்தனள் என்னும்தலைப்புகளில் உள்ளவை

15. பாங்கி அலரஞ்சித் தலைவியை அஞ்சுறுத்திய திறத்தை விவரிக்க.

தலைவன் பிரிந்தான், அகப்பொருள் ஆசிரியன் சிவபெருமான், தலைவி வருத்தம், அயலவர் செயல் என்னும் தலைப்புகளில் உள்ளவை



# கூறு - 3
# நந்திக் கலம்பகம் முதற் பாதி

## 3.1 கலம்பகம்

தமிழின் புகழ்சான்ற இலக்கிய வகையுள் ஒன்று கலம்பகம். விருந்தெனும் வனப்பிற்குப் 'புதிதாகத் தொடக்கப்படும் தொடர்நிலை மேற்று' என்றுரை வரைந்த பேராசிரியர் 'கலம்பகம் முதலாயினவும் சொல்லுப' என்று கலம்பகத்தைத் தமிழின் புதுவரவாகச் சுட்டியுரைக்கின்றார். 'கலப்பு ~ அகம்', மெலித்தல் விகாரமாய்க் கலம்பகம் எனப்பெற்றது. அகமும் புறமும் எனப் பல்வேறு கூறுகள் விரவிக் கலந்தமையால் இப்பெயர் பெற்றது. தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய திருப்பள்ளியெழுச்சியுள் 'கலம்பகம் புனைந்த அலங்கலந் தொடையல்' என்ற அடி பலவகையான மலர்களை நிரல்படத் தொடுத்த மாலையைக் குறித்தமையும், 'பல்பூ மிடைந்த மிடலைக் கண்ணி' என்னும் பெரும்பாணாற்றுப்படை அடிக்கு நச்சினார்க்கினியர் 'பல பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலை' என்று உரைவரைந்தமையும் கலம்பகப் பெயர்க் காரணத்தை உறுதி செய்யும் துணைச் சான்றுகளாம்.

வெண்பாப்பாட்டியல், புயம், தவம், வண்டு, அம்மானை, பாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம் தழை, இரங்கல், சம்பிரதம், தூது என்னும் 18 உறுப்புகளைக் கலம்பகத்திற்குரியவாகக் கூறும். பின்னைய இலக்கணங்கள் குறம், அலர் முதலியவற்றையும் பின்னைய கலம்பகங்கள் பள்ளு, மடல், கொற்றியார், வலைச்சியார், பிச்சியார் முதலியவற்றையும் கலம்பகத்திற்குரிய புதிய உறுப்புகளாகக் காட்டும். கலம்பகத்தில் முதற்பாடல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாகவும் அடுத்த இரண்டும் முறையே வெண்பாவாகவும் கட்டளைக் கலித்துறையாகவும் அமைந்து ஏனைய பாக்களும் பாவினங்களும் விரவிவரும். கலம்பக நூல் அந்தாதித் தொடையுடன் அமையும்.

கலம்பக நூல்களுள் நந்திக்கலம்பகம் காலத்தால் முந்தையது. நம்பியாண்டார் நம்பியின் ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம், பிள்ளைபெருமாள் ஐயங்காரின் திருவரங்கக் கலம்பகம், இரட்டைப் புலவர்களின் கச்சிக்கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், குமரகுருபரின் காசிக்கலம்பகம், மதுரைக்கலம்பகம், சைவ எல்லப்பரின் திருவருணைக் கலம்பகம், சிவப்பிரகாசரின் வெங்கைக்கலம்பகம், வீரமாமுனிவரின் திருக்காவலூர்க் கலம்பகம், கந்தசுவாமி

சுவாமிகளின் திருப்பேரூர்க்கலம்பகம் எனக் கலம்பக நூல்கள் 70க்கும் மேற்பட்டுத் தோன்றியுள்ளன.

## 3.2 நந்திக் கலம்பகம்

குறிப்புகள்

ஒவ்வொரு இலக்கியத்தின் தோற்றத்திற்கும் ஒவ்வொரு பின்னணி இருக்கும். அதைப் போன்று இந்த நக்திக்கலம்பத்திற்கும் உண்டு. தெள்ளாறெறிந்த நந்திவர்மன் எனப் போற்றப்படும் நந்திவர்மன் எனும் மன்னனின் சிறப்புகளை எடுத்துக் கூறும் வண்ணம் இவ்விலக்கியம் இயற்றப்பட்டுள்ளது. சிறந்த உவமைகள் நிறைந்த இவ்விலக்கியத்தைப் படைத்த ஆசிரியர் பெயர் தெரியவில்லை. எனினும் இந்நூல் தோன்றிய பின்னணி பற்றி வரலாறு கலந்த கதைகள் பல மக்களிடையே நிலவி வருகின்றன.

பொதுவாகக் கலம்பகத்தின் 18 உறுப்புகள் காணப்படும் நந்திக் கலம்பகத்தில் 17 உறுப்புகள் காணப்படுகின்றன. பாடலின் பல்வேறு யாப்புகளால் நிறைந்து விளங்குகின்றன. மேலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை அதன் துறைகள் மற்றும் வெட்சி, கரந்தை, வாகை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை முதலிய புறத்திணைகளும் துறைகளும் நிரம்பிக் காணப்படுகின்றன.

## 3.3 நந்திக் கலம்பகம் குறித்த தொன்மக் கதை

தந்திவர்மன் எனும் பல்லவமன்னனின் மகனான நந்திவர்மன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவ நாட்டை ஆண்டு வந்தவன். தந்திவர்மனுக்குப் பல்வேறு மனைவியர்க்குப் பிறந்த புதல்வர்கள் நால்வர் இருந்தனர். நந்திவர்மனைப் போரில் வென்று ஆட்சியைப்பெற அவர்கள் முயன்றனர். ஆனால் முடியவில்லை, எனவே அவனைச் சூழ்ச்சியால் வெல்ல எண்ணுகின்றனர்.

நந்திவர்மனின் தம்பியருள் ஒருவன் மந்திர வித்தைகளையும், மற்றொருவன் சூழ்ச்சித் திறனையும், மற்ற இருவரில் ஒருவன் தமிழிலக்கியம் படைக்கும் திறனும், இறுதியில் உள்ள வாள்போர் திறனையும் பெற்றிருந்தனர். சூழ்ச்சியால் நந்திவர்மனைக் கொல்ல எண்ணியதால் பிறந்ததே ‘நந்திக்கலம்பகம்’ என்னும் இச்சிறந்த நூலாகும்.

கலம்பக இலக்கியம் பாடிய நந்தியின் சகோதரன் சமணத் துறவியானான். கலம்பகம் பாடிய பின்பு நிலைமையை உணர்ந்து தான் இயற்றிய கலம்பகப் பாடல்களைப் பாடிய வண்ணம் காஞ்சிபுரத் தெருக்களில் பிச்சை எடுத்துக்கொண்டு திரிந்தான். அப்போது ஓர் கணிகையின் வீட்டில் பிச்சை எடுத்தபோது, இசை அறிவு நிரம்பப்பெற்ற அவள் அப்பாடல்களை நன்கு கேட்டு பின்னர் தன் இல்லத்தில் யாழ் மீட்டிக் கொண்டு அப்பாடல்களைப் பாடுகிறாள்.

அப்பாடல்களுள் ‘வானுறு மதியை அடைந்ததுன் வதனம்’ எனத்தொடங்கும் பாடலைக் கணிகை பாட நந்தியின் காவலர்கள் அதனைக் கேட்டு நந்தியின் இறப்பைக் கூறுவதுபோல் உள்ளதாகக் கருதி அரசனிடம் தெரிவித்தனர் பின்னர் அரசன் கணிகையை விசாரிக்க கணிகை அத்துறவி குறித்து உரைக்கின்றாள். காவலர்கள் அவள் குறிப்பிட்ட சமணத் துறவியைத் தேடி ஓய்ந்தனர்.

பின்னர் ஒருநாள் சமணத்துறவி சிவனடியார் வேடம் பூண்டு நந்திவர்மன் அரண்மனையை அடைகிறான். அவனை நந்திவர்மன் பாடல்களைப் பாடுமாறு வேண்டுகிறான். எனினும் சகோதர பாசத்தால் அத்துறவி மறுக்க நந்திவர்மனோ வற்புறுத்த அவன் விதிவசத்தால் அப்பாடல்களைப் பாட இசைந்த துறவி சில நிபந்தனைகளை நந்திக்கு விதித்தப் பின் அதனைப் பாடுகிறான். பச்சை ஓலைகள் நூறு பந்தல்கள் அமைக்க வேண்டும், ஒவ்வொரு பந்தலிலும் அலங்காரக் கோலத்தோடு நீ அமர்ந்து பாடல்களைக் கேட்க வேண்டும், ஒரு பாடல் முடிந்ததும் பந்தல் எரிந்துவிடும். அடுத்த பந்தலுக்குச் செல்ல வேண்டும் இறுதிப் பாடலில் நீ இறுதிச்சடங்குகள் புனைந்து சவம் போலப் படுக்கவேண்டும். இறுதிப்பாடலின் போது விறகில் தீப்பற்றும் நீ எரிந்து போவாய் சம்மதமா? என்று நந்தியைத் துறவி வினவுகிறான்.

நந்திவர்மன் ஒப்புக்கொண்டு அவ்வண்ணமே செய்கிறான். பாடல் முடிந்து அவனது உடல் நெருப்பில் எரிந்து சாம்பலானது. நந்திக் கலம்பகத்தால் நந்திவர்மன் மாண்டான். இக்கருத்தைச் சோமேசர் முதுமொழி வெண்பா

‘நந்திக் கலம்பத்தால் மாண்டகதை நாடறியும்’ என்றும்,

பொன்னா நுழைவழி போயத்தலை நீட்டும் புலவர் முன்சொல்

கள்ளாரும் செம்சொல் கலம்பகமே கொண்டு காணம் விட்ட

தெள்ளாறை நந்தியெனுந் தொண்டை மானால் தீர்ப்பதற்கு

வள்வார் முரசம் அதித்தாண்ட துந்தொண்டை மண்டலமே

என்று தொண்டை மண்டல சதகமும் சான்று தருகின்றன.

## 3.4 நந்திவர்மன் - அறிமுகம்

நந்திவர்மன் சிறந்த சிவ பக்தனாக விளங்கினான் என்றும் அவனுக்கு அவனி நாராயணன், மல்லையர் கோன், கச்சி வளநாடன், தமிழாகரன், உறந்தையர் கோன், உக்ரமகோபன், அரசர் கோமான் கங்கை நாடான், கச்சி நாட்டோன், கங்கை மணாளன், சந்திரகுலப் பிரகாசன், குவலய மார்த்தாண்டன் எனும் பல பெயர்கள் உள்ளதாக இலக்கியத்தால் அறிய முடிகிறது.

நந்திவர்மன் செய்த குருக்கோட்டை, தெள்ளாறு, கடம்பூர், பழையாறு, வெள்ளாறு, வெறியலூர்ப் போர்கள் பற்றியும் காஞ்சிபுரம், மாமல்லபுரம், வேங்கடம்,

கலிங்க நாடு, தென்னாடு, சோழநாடு ஆகிய நாடு நகரங்கள் பற்றியும் நந்திக்கலம்பகத்தால் உணரமுடிகிறது.

அகம், புறம் ஆகிய இரு சுவைகளும் நிரம்பிய இனிய இலக்கியமாக நந்திக்கலம்பகம் திகழ்கிறது

குறிப்புகள்

## 3.5.நூல் அமைப்பு

இந்நூலில் முதலில் கடவுள் வாழ்த்தாக விநாயகர், திருமால் கலைமகள் ஆகிய தெய்வங்களைப் போற்றும் வண்ணம் அமைந்துள்ளது. தொடர்ந்து நூலிறுதியாக 113 பாடல்கள் அமைந்துள்ளன. இந்நூல் தொடக்கத்தில் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா அமைந்து அதனை அடுத்து இரண்டாம் பாடலாக நேரிசைவெண்பா அமைந்தது மூன்றாவதாக கட்டளைக் கலித்துறை அமையுமாறு தொடர்கிறது ஏனைய செய்யுள் வடிவங்களில் பல பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது - இம்மரபு பிற்கால கலம்பகங்களிலிம் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அகம், புறம் ஆகியன விரவி ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் தாழிசை நேரிசை வெண்பா வஞ்சித்துறை போன்ற பல்வேறு பா; பாவினங்களை கொண்டது. முதல் பாடல் தொடங்கி 90 ஆம் பாடல் வரை அந்தாதி நடையில் அமைந்துள்ளது. நந்திவர்மன் வீரம், கொடை, சிறப்பான வெற்றிகளையும் இக்கலம்பகம் தெளிவாக எடுத்தியம்புகிறது.

கடவுள் வாழ்த்தில் முதன்மையாக விநாயகர் கடவுள் போற்றப்படுகிறார். மூவுலகையும் பெற்ற உமையன்னையிடம் சிவபெருமான் முத்தம் தருக எனக் கேட்க அவ்விடத்தில் இருந்து சிறிது அகன்று நின்று சிவன் - உமையம்மை முத்தமிட்டுக் கொள்வதைப் பார்த்து புன்னகை புரிகின்ற விநாயகரின் சிவந்த பாதங்களைத் தலைமேல் அணிவோம் என வணங்குகிறார் ஆசிரியர்.

தொடர்ந்து திருமாலை கஜேந்திரன் என்னும் யானை முதலையால் துன்பப்பட்ட போது ஆதிமூலமே என அழைக்க முன்தோன்றித் துன்பம் தீர்த்த திருமாலின் பாதங்களை வணங்குபவர்கள் எல்லா நன்மைகளையும் அடைவர் என வணங்குகிறார் ஆசிரியர்.

பின்னர் கலைமகள் தொடங்கி பல்வேறு தெய்வங்களையும் ஒரே பாடலில் வணங்குகிறார் நாவலாசிரியர். அப்பாடலில் கல்விக்குரிய கலைமகளையும், தென்திசைக் கடவுள் தட்சிணாமூர்த்தியையும், பொதியமலையில் அருளும் அகத்தியரையும், ஐந்து கரத்தோனான கணபதியையும், முப்புரமெரித்த சிவனையும், சூரனை வதம் செய்த முருகப் பெருமானையும், உமையம்மையையும் மனதில் துதிப்பவர் பிறவிப் பிணி நீங்குவர் என்கிறார்.

## 3.6 நந்திக்கலம்பகம்





### 1. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

சிவபெருமானை 'உன் திருவுருவம் நிலமாக, நீராக, காற்றாக, வானாக, தீயாக விளங்குபவை எனச் சொல்லப்படுகின்றது. அவ்வுருவங்கள் மை போலக் கருமையோ? சங்கினை போல் வெண்மையோ? மரகதத்தை போல் பச்சை நிறமானதோ? பொன்னின் செந்நிற வடிவமோ? சொல்ல வேண்டும்' என இறைவன் திருவடிவைச் சுட்டித் தொழுகின்றார் ஆசிரியர். இதனை

மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய்

ஒண்சுடராய் ஒளிஎன்னும் ஒருருவ மென்றுருவம்

மைவடிவோ வளைவடிவோ மரகதத்தின் திகழ்வடிவோ

செவ்வடிவோ பொன்வடிவோ சிவனே நின் திருமேனி

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

மேலும் மேருமலையை வில்லாக நெருப்பை உமிழும் அம்பினைத் தேர்ந்தெடுத்து அசுரர்களின் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று கோட்டைகளை அழித்த தூயவன். கங்கை ஆற்றினைச் சடையில் தாங்கியவன். இத்தகைய சிவபெருமானுக்கு முத்தினை ஒத்த பற்களை உடைய உமையம்மை ஒரு பாகமாகக் கொண்டதால் மேனியின் சமபாகம் பெண்ணுரு கொண்டது.

ஒளி பொருந்திய இலைவடிவ சூலாயுதம் கொண்ட சிவபெருமானே! கயிலைமலை, வேதங்கள், குளிர்நிலவு, ஆகாயம் இவற்றை வெற்றிடமாக்கிவிட்டு, பூ உலகை ஆளும் திருமால் போன்ற நந்திவர்மனின் திருமுறையையும், மனத்தையும் உன் இருப்பிடமாகக் கொண்டாய் என்று சிவனின் அருளை விளக்குகின்றார்.

அதன்பின்னர் சிவபெருமானைப் போற்றும்போது இமயமலை மன்னன் மகளான உமையம்மையின் தலையினால் அழுத்தியதால் உடலின் செந்நிறம் மறைந்து தோன்ற மலை போன்ற மார்பில் திருநீற்றை அணிந்தவனே, மதம் பொருந்திய கழுத்தில் கயிறணிந்து பெரிய மதயானைகளை உடைய பல்லவர்களின் அரசனான நந்திவர்மன் உன் சிவந்த அடிகளை வணங்குவதால் அவனுக்குச் செல்வம் பெருகும்படி அருள வேண்டும் என்று வேண்டுகிறார்

மணம் பொருந்திய மலர் அம்புகளை ஏவிய மன்மதனை எரித்த நெற்றிக் கண் பெற்றவனே செருக்கினால் கயிலைமலையை எடுக்க விழைந்த இராவணனின் பத்து தலைகளையும் நொறுங்கும்படியாகக் கால் விரல்களுள் ஒன்றால் ஊன்றினை என்று சிவனின் அருளாற்றலை விளக்குகின்றார். இதனை,

'செழுமலர் துதைதரு தெரிகணை மதனன

தெழிலுடல் பொடிபட வெரிதரு நுதலினை

அருவரை அடிஎழு முடுகிய அவுணனது

ஒருவது முடியிற ஒருவிரல் நிறுவினை'

என்னும் பாடலடிகளில் காணலாம்



மேலும் சிவனின் தோற்றம் பற்றிக் கூறும்போது சிவனே! உன் சடை முடியில் கொன்றை மலர்களையும், வெள்ளெருக்கு மலர்களையும் கலந்து கட்டி மாலையாகச் சூடி அதன் இடையே மூன்றாம் பிறையாம் இளமதியையும் வைத்தாய். பாயும் புலியைக் கொன்று புள்ளிகள் உடைய தோலை ஆடையாக உடுத்திக் கொண்டாய். தீயொத்த விஷம் கக்கும் கரிய பாம்பை இடையில் அணிந்து கொண்டாய் நீர்ப்பெருக்கு ஒத்த குருதி பெருக யானையைக் கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்தவனே. என்கிறார்.

மேலும் சிவபெருமானே! தேவரும் அசுரரும் பாற்கடல் கடைய வெளிப்பட்ட ஆலகால நஞ்சினை நீ உண்டாய். அவ்விஷமானது எண்திசைகளும் அதிர்ந்து நடுங்கத் தோன்றியது. அன்று மார்க்கண்டேயனுக்காக நீ ஒரு உதைத்த கூற்றுவன் உயிர்கள் எல்லாம் அஞ்சத் தோன்றினான் என்கிறார்.

எல்லாமாக சிவபெருமான் இருத்தலை

அனைத்துலகிற் பிறப்புநீ, அனைத்துலகி லிறப்புநீ,

யனைத்துலகிற் றுன்பமுநீ, அனைத்துலகி லின்பமுநீ,

வானோர்க்குத் தாதையுநீ, வந்தோர்க்குத் தந்தையுநீ,

யேனோர்குத் தலைவனுநீ, யெவ்வுயிர்க்கு மிறைவனுநீ.

என்னும் அடிகளில் சிவனே, உலக உயிர் தோன்றக் காரணனாக இருப்பவனும் நீ, ஊழிக்காலத்தில் அவற்றின் நன்மை தீமைக்கேற்ப அழிவைத் தருபவனும் நீ, உலக உயிர்களுக்குத் துன்பங்களையும் இன்பங்களையும் கொடுப்பவன் நீ, தேவர்களைப் படைத்தவனும், தன்னை அடைக்கலமாக வந்தவர்களைக் கைவிடாது தந்தைபோல் காப்பவன் நீ உலகோர்க்குத் தலைவன் நீ, உயிர்களுக்கு இறைவன் நீ என விளக்குவார்.

உலகின் இறுதிக்காலமான ஊழிக்காலமாகவும், அனைத்து உலகங்களாகவும், உருவமுள்ள பொருட்கள் எல்லாமாகவும் உருவமற்ற தன்மையனாகவும், கட்டாயமாகவும் அமுதமாகவும், அறமாகவும், வீரமாகவும் விளங்கும் தன்மை பெற்றவன் சிவபெருமான்.

ஒப்புயர்வற்ற தனிப்பெருங்கடவுள் சிவபெருமான் எங்கள் அரசன், மாமல்லபுர அரசன் மயிலையைக் காப்பவன், பல்லவர் குலத்தோன்றல், பசுமையான மாலை அணிந்தவன் என்றெல்லாம் போற்றப்படும் நந்தி வர்மன் வடக்கே இமயமும் தெற்கே பொதியமலை வரையும் ஒரே வெண் கொற்றக் குடையின் கீழ் இருந்து ஆள்வதற்கு இடபக்கொடியோடு பல வெற்றிகளைப்

பெற அருள் செய்ய வேண்டுமெனச் சிவனை வணங்குவோம் என ஆசிரியர் இறைவனைப் பராவுகின்றார். இதனை

ஒருபெருங் கடவுணிற் பரவுது மெங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி
வடவரை யளவுந் தென்பொதி யளவும்
விடையுடன் மங்கல விசயமு நடப்ப
வொருபெருந் தனிக்குடை நீழல்
அரசு வீற்றிருக்க வருளுக வெனவே.

என்னும் அடிகளால் உணரலாம்

**2.தன் மெலிவு கண்டு தலைவி இரங்குதல்:**

பா- நேரிசை வெண்பா, கூற்று - தலைவி

கூற்று விளக்கம்: தலைவி தன்னுடைய மெலிவைக் கண்டு இரங்கிக் கூறுதல்:

எனதே கைவளையும் என்னதே மன்னர்
சினவேறு செந்தனிக்கோ னந்தி - யினவேழங்
கோமறுகிற் சீறிக் குருக்கோட்டை வென்றாடும்
பூமருகிற் போகாப் பொழுது.

சிறந்த செங்கோல் கொண்ட நந்திவர்மன் மன்னர்களுள் ஆண்சிங்கம் ஒத்தவன். அவனுடைய களிறுகள் பகை மன்னர்களின் வீதிகளில் சினத்தோடு சென்று குருக்கோட்டையை வென்றன. அவ்வெற்றியைக் கொண்டாடும் தெருக்களில் நான் செல்லாதவரை என் உடைகளும் வளையல்களும் எனக்கு உடமைகளாக இருந்தன. ஆனால் அவனைக் கண்ட பின்பு அவை என்னிடமிருந்து நீங்கின.

**3.குருகினைத் தூதனுப்பல்**

தலைவி கூற்று, கலம்பக உறுப்பு - தூது

உறுப்பு விளக்கம்: தலைவனின் பிரிவால் வாடும் தலைவி தன் துயரங்களைத் தலைவனிடம் தெரிவிக்க அஃறிணைப் பொருள்களைத் தூதனுப்பல்

நாரையைக் கண்டு தலைவி, “நாரையே மாலைப் பொழுதின் வரைவைக் கண்டு அன்னை ஏசுகின்றாள். பழமையான நூல்களைக் கற்றுச் சிறந்த நந்திவர்மனின் மாமல்லைக் கடற்கரைத் தலைவனுக்கு உண்டான குற்றத்தை நீ அறிந்தாய். அதனால் அவனிடம் சென்று நான் அவனையே நினைத்து

வணங்குகின்றேன் என்று சொல்வாயாக. இவ்வாறு இருத்தல் தலைவனின் தகுதிக்கு இழுக்கு என்றும் சொல்" என்கிறாள்.

**4. தோழி தலைவிக்கு அருளுமாறு தலைவனிடம் வேண்டல்**



மதங்கொண்ட போர் யானைகளையும் செங்கோலையும் உடைய நந்திவர்மனே! பகைநாடான பாண்டிய நாடு சென்று வாட்போரில் பகைவரைச் சிதைத்து, கண்களால் நோக்கிய வீரமுடைய தொண்டைநாட்டு மன்னனே! பனிக்காலத்தில் நாரைகள் அஞ்சும் இரவில் பனித்துளிகளைத் தழுவி வரும் வாடைக்காற்றுக்கு அஞ்சும் தலைவியைப் பார்த்து அஞ்சாதே என்று கூறினால், அதனால் பழிச்சொல் உண்டாகுமோ சொல்வாயாக.

**5 கடுவாய்ப்பறை நந்திபுகழ் சாற்றுதல்**

தொண்டை நாட்டு உரிமையும் சோழநாட்டு உரிமையும் கொண்ட நந்திவர்மன் (ஆற்று நீர், ஊற்று நீர், மழைநீர்) முந்நீர் உடைய வற்றாத கடலை உடையவன். அவனிடம் தோற்ற மன்னர்களே! இழந்த நாட்டையும் செல்வங்களையும் இரவலாராகிப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று நிலைபெற்ற புகழை உடைய கடுவாய்ப்பறை கூறும். இதனை

'தொண்டை வேந்தன் சோணாடன்
தொல்நீர் அலங்கல் முந்நீரும்
கொண்ட வேந்தர் கோனந்தி
கொற்ற வாயில் முற்றத்தே
விண்ட வேந்தர் தம்நாடும்
வீரத் திருவும் எம்கோனைக்
கண்ட வேந்தர் கொண்மின்கள்
என்னும் கன்னிக் கடுவாயே'

என்ற பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன

**6 செவிலி தலைவிக்குக் கூறியது**

திணை - அகம் புறம்

செவிலி நந்திவர்மன் உலா வரும் நேரமாதலால் தன் மகளை இல்லத்தின் உள்ளே அழைக்கின்றாள். அவள் தன் மகளை நோக்கி, 'மகளே! கடுவாய் என்றும் பறை ஒலிக்க, சங்குகள் முழங்க, மன்னர்கள் வணங்கி நிற்க நந்திவர்மன் அயிராவதம் ஒத்த யானை மீதில் உலா வருவான். எனவே உன்மேல் ஐயம் கொண்டு சிரிக்கும் வேலொத்த கண்களை உடைய பெண்கள் இருக்கும் இவ்விடத்தில் ஊசலில் அமர்ந்து விளையாடுவதைத் தவிர்த்து விடுவாயாக' என்கிறாள்.

**7 தலைவன் தோள் புகழ்தல்**

கலம்பக உறுப்பு: புயவகுப்பு

பாட்டுடைத் தலைவனின் தோளைப் புகழ்ந்து பாடுதல் புயவகுப்பு எனும் கலம்பக உறுப்பாகும்.

அழகு நிறைந்தவனே நறுமணம் மிக்க மலர்களை மணிமுடியணிந்த தன்மை உடையன உன் இரு தோள்கள். அவை வீரத்தையும் மதத்தையும் கொண்ட யானைகளைத் திசைதோறும் நிறுத்தியது போன்றன. முத்துப் பற்கள் கொண்ட மகளிரது மனத்தை மகிழச் செய்வன, மயங்க செய்வன வலிமை உடைய மன்னர்களை அச்சுறுத்துவன. மனம் நிறை மலர்களும் மகளிரின் தழுவக் கூடியன. வலிமை நிறைந்தன மிக்க ஒளியையும் பாக்களால் புகழப்பெறும் நிறைந்த புகழையும் உடையன.

மறமத கரிதிசை நிறுவின மணிநகை யவர்மன நகுவன

விறலர சர்கண்மன நெகிழ்வன விரைமலர் களிமுலை பொருவன

திறலுடை யன்தொடை புகழ்வன திகழொளி யனபுகழ் ததைவன

நறுமல ரணியணி முடியன நயபர நினதிரு புயமதே.

**8 பிரிவில் தலைவி வாடை காற்றினால் வருந்துதல்**

**உறுப்பு - இரங்கல்**

மென்மை வளர் கொங்கைகளின் இன்பம் பெறும் நந்திவர்மனின் தோள்கள். அவனுடைய நகரான காஞ்சிபுரத்தைச் சூழ்ந்துள்ள குளங்களில் மலர்ந்திருக்கும் மலர்களின் மகரந்தத் துகள்களைக் கவர்ந்து கொண்டது வாடைக்காற்று. அக்காற்று காதலர்கள் அஞ்சும் வண்ணம் ஊருக்குள் புகுந்தது.

**9 தலைவி அலரையும் ஊரையும் பழித்தல்**

**திணை கைக்கிளை (பெண்பால் கைக்கிளை)**

**கலம்பக உறுப்பு - அலர்**

‘வாடை நோக வீச மால்அம் மாரன் வாளி தூவுமால்

ஆடல் ஓதம் ஆர்க்கு மால்என் ஆவிகாக்க வல்லனோ

ஏடு லாவு மாலை சேர் ராசன் மல்லை நந்திதோள்

கூடினால் அவர் வராது கொங்கு விம்மு கோதையே’

என்ற பாடல் வாயிலாகத் தலைவி, "தோழியே வாடைக் காற்று வீசித் துன்பத்தை அதிகரிக்கின்றது. மன்மதன் மலரம்புகளை எம்மேல் வீசுகிறான். கடலானது தன் அலையை வீசி நினைவலைகளை எழுப்புகிறது மணமிகுந்த மலரணிந்த நந்திவர்மனின் தோள்களை நான் தழுவினால் பழிச்சொல் உண்டாகாது. அவன் மேல் கொண்ட காதலால் துயர்படும் என் உயிரைக் காப்பானா?" என்கிறாள்.



**10 தலைவன் நெஞ்சுக்கு உரைத்தல்**

தலைவன் தன் நெஞ்சினைக் கண்டு, 'அறியாமை உடைய என் நெஞ்சே! பகைவரைக் கொல்லும் சிறந்த வேல்படையை உடைய நந்திவர்மனின் காஞ்சிபுரம் என்னும் வளம் நிறைந்த நாட்டில் உள்ள மங்கையோடு சேர்கின்றாய். அதனால் அவளது மாலை வாடினால் நீயும் வாடுவாயாக. அவளின் கொங்கைகள் மகிழ்ச்சியில் பூரித்தால் நீயும் பூரிப்பாயாக. அவள் புன்னகை ஒளி குன்றி வெறுத்தால் வெறுத்துத் தோன்றுவாயாக. அவளின் இடை மெலிந்தாள் நீயும் மெலிவாயாக' என்கிறான்.

**11 தோழி தலைவிக்காக மகளை வேண்டுதல்**

உறுப்பு - கைக்கிளை

உறுப்பு விளக்கம் தலைவி தலைவன் மேல் கொண்ட ஒரு தலைக் காதல்

திணை - பாடாண் திணைக் கைக்கிளை

காவிரி பாய்ந்து வளம் தரும் வயல்களும், வறுமை மக்களை அணுகாவண்ணம் நல்லாட்சி செய்யும் வெண்கொற்றக் குடையும், இடபக்குறியை மண் முத்திரையிட்டு ஓலைகளை அனுப்பும் விடேல் விடுகு என்றும் சிறப்புப் பெயர் பெற்ற நந்திவர்மனே, தீயைப்போல் நிலவொளி வருத்தலும் துன்பத்தால் மனம் வாடவும் உறக்கமில்லா கண்களோடும் வருந்தும் தலைவிக்கு நீ தொண்டை மாலையை அருளாது உள்ளாயே என்று தோழி தலைவிக்காகத் தலைவனிடம் மாலையை வேண்டுகிறாள்.

**12 படைவீரன் நந்திவர்மன் வீரச் சிறப்பு கூறல்**

நந்திவர்மனை எதிர்த்துப் போரிடக் கருதும் மன்னர்களைக் கண்டு படைவீரன், 'படையினை உடைய மன்னர்களே! எங்கள் அரசனிடம் சினம் கொண்டெதிர்த்தால் தோற்று விடுவீர்கள். அதனால் நீவிர் உம் நாட்டை இழப்பீர்களோ அல்லது திறைப் பொருள் பணிந்து கொடுவீர்களோ, காட்டுத்தீயில் உயிரை விடுவீர்களோ அல்லது ஐராவதம் போன்ற நந்திவர்மனின் யானையிடம் இறப்பீர்களோ இவற்றுள் உங்களின் எண்ணம் என்னவோ?' என்று எச்சரிக்கை விடுக்கின்றான்.



விடுதிர்கொல் லோவள நாடுடை வீரரசற்கு முன்னின்று

இடுதிர்கொல் லோபண் டிறுக்குந் தீறையெரி கானத் தும்மை

அடுதிர்கொல் லோதிற னந்தியங் கோனயி ராவதத்திற்

படுதிர்கொல் லோபடை மன்னீரென் னாமுங்கள் பாவனையே.

**13 தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி ஆறுதல் கூறல்**

கூற்று - தோழி கூற்று

கலம்பகஉறுப்பு - கார்(காலம்)

உறுப்பு - விளக்கம் தலைவன் பொருள் தேடச் சென்று மீண்டு வருவதாகச் சொன்ன காலம் வந்ததும் அவன் வராமையால் வருந்தும் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுதல். தோழி தலைவியை நோக்கி, 'விடேல் விடுகு என அழைக்கப்படும் நந்திவர்மனின் முரசு முழங்குவதைப் போன்று கார்கால இடி முழங்குகின்றது. இனி உன் கூந்தல் சடை விழாத வண்ணம் பொலிவுறும், கண்ணீரால் உன் ஆடை நனையாது, எனவே கலங்காதே தலைவன் விரைவில் வந்து விடுவான்' என்கிறாள். இதனை,

'வனைவார் கழல் வேணியும் வாடைகணீர்

நனைவார் துகிலும் இவை நாளும் இரா'

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன.

**14 யானை மறம் புகழுதல்**

கூற்று - கண்டோர்,

திணை - தும்பை

துறை - யானை மறம்

அதிர்கின்ற ஒலியினை உடைய மணிகள் கட்டப்பெற்ற திருமாலுக்கு நிகரான நந்திவர்மனின் யானையின் தந்தங்களில் வயிரப்பூண் போர் செய்வதற்காக அணிவிக்கப்பட்டு விட்டது. அதனால் மாளிகைகள் இடிந்து அழியப்போவது மதுரையோ? சோழனின் நகரமோ? எந்த ஊரோ அறிய முடியவில்லை.

அதிர்குரல மணிநெடுந்தே ரவனிநா ரணன்களிற்றில்

கதிரொளிய வெண்மருப்புக் கனவயிரஞ் செறிந்ததான்

மதுரைகொலோ வடுபுலிக்கோ னகரிகொலோ மாளிகை சாய்ந்

தெதிரெதிரே கெடநின்ற தெவ்வூர்கோ லறியோமால்.

**15. நந்திவர்மனின் பாதச் சிறப்பு:**

மிகுதியான எண்ணிக்கையில் யானைகளை உடையவன் பல்லவ மன்னன் நந்திவர்மன். அவனுடைய பாதங்களின் கீழே நந்திவர்மன் பாதம்பட்ட அரச வீதிகளில் ஒளி பொருந்திய பொன்னால் செய்யப்பட்ட வீரக்கழல் அணிந்த அரசர்கள் தன் முடியில் சூடிக் கொள்ளும் தாளிப்புல் என்னும் அருகம்புல்லைச் சென்று காணலாம் .

'ஓம மறைவாண ரொண்பொற் கழல்வேந்தர்
தாம முடிக்கணிந்த தாளிப்புற் - கோமறுகிற்
பாவடிக்கீழ்ப் பல்யானைப் பல்லவர்கோ னந்திதன்
சேவடிக்கீழ்ச் காணலாஞ் சென்று.'

என்ற பாடல் இதனை உணர்த்தும்

**16. யானையின் வீரச் சிறப்பு**

கூற்று - கண்டோர் கூற்று,

திணை - தும்பை

துறை யானை மறம் (கொற்றவள்ளை)

நந்திவர்மன் திருவஞ்சைக் களத்தின் மீது படையெடுத்துச் சென்றான். அவனுடைய போர் யானைகளின் கண்கள் சினத்தால் சிவந்தன. பகைவர் செய்வதறியாது திகைத்தனர். நந்திவர்மன் பகைவரை எளிதாக அழித்தான். இப்போது அவன் பார்வை குருக்கோட்டை மீது செல்கின்றது. எனவே திருவஞ்சைக்களம் அடைந்த நிலையைக் குருக்கோட்டையும் அடையும்.

**17.நந்திவர்மனின் பெருமைகள்**

திணை - பாடாண்

மேகங்கள் பொழியும் மணிகளையும், மூங்கில்கள் தந்த முத்துக்களையும், நெற்கதிர்களையும் கொண்டு ஊர்கள் எல்லாம் வளம் பெறும் வண்ணம் காவிரி பாயும் நாட்டை உடையவன் நந்திவர்மன். நிலமகள் மற்றும் திருமகள் உரிமைகளைப் பிறர்க்கன்றித் தானே பெற்றவன். அவன் பாதம் பணியாதவர்கள் பின்னர் வானுலகை ஆள்வர்கள் ஆவர் என ஆசிரியர் நந்தி வர்மனைப் புகழ்கின்றார். இதனை

பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு காவிரி வளநாடா
நிதிதரு கவிகையு நிலமக ளுரிமையு மிவையிவை யுடைநந்தி
மதியிலி யரசர்நின் மலரடி பணிகிலர் வானக மாள் வாரே.

என்னும் பாடலால் அறியலாம்

**18. தலைவன் மடல் ஏறத் துணிதல்**

கலம்பக உறுப்பு - மடல்

உறுப்பு விளக்கம் - தலைவி பிரிவில் வருந்தி தலைவன் மடலேறத் துணிதல்

தலைவன், 'மிகுந்த படைவீரர்களை உடைய நந்திவர்மனின் தோளில் தவழும் தேன் நிறைந்த மலர்களை உடைய கோவையின் சிவந்த கனி போன்ற வாயினை உடைய மகளிர், வாள் போன்ற கண்களால் மயக்கிய காதல் நோயிலிருந்து இருந்து மீள்வதற்கு, பனைமடலில் ஆன தேரில் ஏறினால் தான் முடியும்' என்கிறான்.

**19 நந்திவர்மனின் மாலைக்காகக் காத்திருத்தலின் துன்பம்:**

கூற்று - தோழி கூற்று

தம்மேல் பகை கொண்ட அரசர்கள் அனைவரும் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகை அடையும் வண்ணம் வெள்ளாற்றில் போர்புரிந்து வெற்றிபெற்ற நந்திவர்மனின் தொண்டை மாலைக்கு எல்லா வழியிலும் முயல்கின்ற மகளிர் பலராவார். காதல் நோயால் வாடைக் காற்றால் துன்புறுபவர்கள் பலராவர். பகைவரை வருத்தித் துன்பத்தைக் கொடுக்கும் நந்திவர்மனின் செங்கோல் நடுநிலையானது என்று கூறுகின்றனர். ஆனால் அச்செங்கோல் நமக்குத் துன்பத்தைத் தருகிறது. அதனால் நாம் தொண்டை மாலையை எதிர்நோக்கி இருத்தல் நல்லதாகும். இதனை,

விரவாத மன்னரெல்லாம் விண்ணேற
வெள்ளாற்று வெகுண்டோன் தொண்டைக்கு
இரவாத பரிசெல்லாம் இரந்தேற்றும்
பாவைமா ரெல்லீர் வாடை
வரவாதை உற்றிருந்து வருந்துவார்
பலரென்னும் வாழி வாழி
பரவாதை நந்திசெங்கோல் அதுவாகில்
அதுபார்க்கும் பரிசு நன்றே (பா-19)

என்ற பாடல் உணர்த்துகிறது

**20.தலைவனின் பிரிவுத் துயர் :-**

கூற்று - தலைவன், பொருள் - தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவன் தென்றல், நிலா இவற்றின் தன்மையால் துயரம் கொளல்.

இரவு நெடியதாக இருக்கிறது. தென்றல் காற்று துன்பம் தருவதாக இருக்கிறது. நிலவின் ஒளி தீயெனச் சுடுகிறது. பேதையாகிய நான் என்ன செய்வேன். ஏழு உலகங்களையும் திருமால் தன் பாதங்களால் அளந்தான். அவனைப் போல் உள்ளவனும் அடல் உக்ரம கோபனாகிய நந்திவர்மனின் பகைவர்கள் தங்கள் மனைவியைப் பிரிந்து வருத்தம் கொண்டு இரவுப்பொழுதில் இருப்பதைப்போல நானும் உறங்காமல் தவிக்கின்றேன். என் மனைவியின்

மார்பில் உறங்குவதை விட்டு எவ்வாறு நான் தூங்க இயலும் என்று தலைவன் துயருற்றுப் புலம்புகிறான்.

**21. மன்னனின் வெண்கொற்றக் குடையைப் புகழ்தல் :-**

திணை - பாடாண், துறை - குடைமங்கலம்



ஏழைகளுக்குத் துணையாக விளங்கும் நந்திவர்மனின் குளிர்ந்த நிழலைத் தரும் வெண்கொற்றக் குடையானது என்றும் இவ்வுலகம் உள்ளவரை நிலைபெற்று விளங்குவதாகுக என்னும் இக்கருத்தை,

□ஏழை மார்துணை வாழி நந்திதண்

நிழல் வெண்குடை ஊழி நிற்கவே□

என்னும் பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன.

**22. தலைவி துயர்கண்டு செவிலி வருந்துதல்:-**

கூற்று - செவிலி

நந்திவர்மன், பகைவர்கள் பணிந்துநிற்க வெண்கொற்றக் குடையோடு நெருங்கி நிற்கக் கூடிய பெரிய வாயில்கள் உடைய அரண்மனையைக் கொண்டவன், காஞ்சிபுரத்தை ஆள்பவன் அழகிய புருவங்கள்கொண்ட பெண்கள் விரும்பித் தழுவும் தோள்கள் உடையவன். அவனி நாராயணன் என்று புகழப்படுபவன். அத்தகைய தலைவனிடம் என் மகளுக்கு அவன் தொண்டைமாலையால் உண்டான துயரத்தைக் கூறினால் அவளுக்கு இவ்வுலகத்தை கொடுப்பானோ? என்கிறாள் செவிலி.

**23.கண்டோர் பாணன் பெற்ற பேறுகளைக் கூறல்:**

பாணன் முன்பு நைந்துபோன ஆடையில் ஏற்பட்ட கிழிசலால் கால்கள் தெரியும்படி வாயில்கள் பல சென்று பொருள் கேட்டு அலைந்தான். ஆனால் இப்போது நந்திவர்மனைக் கண்டு தன் குறைகளைக் கூறியதால் மலர்கள் நிறைந்து பொலிவுடன் விளங்கும் கொன்றை மரம் போலப் பொலிவுடன் விளங்குகின்றான். அவன் பல்லவ மன்னன் நந்திவர்மனின் புகழைப் பாடினானோ? எனக் கண்டோர் பாணன் நிலை குறித்துக் கூறினர்.

**24. தலைவன் பாங்கனிடம் தலைவியின் அழகும் இடமும் கூறல்**

துறை - இயலிடங் கூறல்

நந்திவர்மன் மக்களுக்கு உணவு வழங்கும் அன்ன மடங்கள் நிறைந்த மயிலாப்பூரை ஆள்கின்றவன். மதயானைகளை உடையவன். வறியோர் கேட்ட பொருளை வழங்குபவன் இத்தகைய பெருமை மிக்க நந்திவர்மனின் நீர்வளம்மிக்க தொண்டை நாட்டில், அன்னநடை உடைய தலைவியின் சாயலுக்கு மயிலே ஒப்பானதாகும்.

**25 தலைவன் செலவழுங்கல்**

துறை - செலவழுங்கல்

கலம்பக உறுப்பு - மடக்கு,

உறுப்பு விளக்கம் - சொல்லோ சீரோ மீண்டும் மீண்டும் வந்து வேறு பொருள் தருதல்

'மனமே, பகையரசர்களின் உயர்ந்த மதிலைக் கைப்பற்றியவனும், மாமல்லபுர தலைவனும், கடம்பூர் போரில் பகைவரை வானுலகு அனுப்பியவனும் நந்திவர்மனே ஆவான். அவனது நாட்டில் உள்ள அன்ன நடைகொண்ட தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்ட எண்ணினேன். அவ்வாறு நான் பொருளீட்ட சென்றால், அங்கு மயிலை அவள் சாயல் கருதியும் மானைக் கண்டால் அவள் கண்கள் நினைத்தும், குயிலைக் கண்டால் அவள் குரலை எண்ணியும் வருத்தம் கொள்ள நேரிடும். எனவே பொருள் தேடும் நினைவைக் கை விடுவாயாக' என்கிறான் தலைவன். இதனை

மயில்கண்டால் மயிலுக்கே வருந்தி ஆங்கே
மான்கண்டால் மானுக்கே வாடி மாதர்
குயில்கண்டால் குயிலுக்கே குழைதி ஆகில்
நெஞ்சுரம் போக் கொழிநெஞ்சே கூடா மன்னர்
எயில் கொண்டான் மல்லையங்கோ னந்திவேந்தன்
இகல்கொண்டா ரிருங்கடம்பூர் விசும்புக்கேற்றி
அயில் கொண்டான் காவிரிநாட் டன்னப் பேடை
அதிசயிக்கும் நடையாளை அகல நூற்றேன்.

என்ற பாடல் உணர்த்துகின்றது.

**26 நந்திவர்மனின் வீரம்**

திணை - பாடாண்

வேல் தாங்கிய பகைமன்னர்களின் கடல் போல் பெருகிய படைகளானது, ஆழ்ந்த புலமை பெற்ற நான்கு கடல்களுக்கும் தலைவனான நந்திவர்மனின் கடைப்புருவம் கோபத்தால் துடிக்கும் அளவில் தாக்குப்பிடிக்குமோ என நந்திவர்மன் வீரமும் ஆற்றலும் புகழப்பெறுகிறது

**27. நந்திவர்மனின் வீரமும் கொடையும்**

திணை - பாடாண்

வீரத்தில் சிறந்தவனும் வெற்றி தரும் கவசம் அணிந்தவனுமாகிய நந்திவர்மன், வெறியலூரை வெற்றி கொண்டவன். உள்ளத்தில் அன்பு கொண்டவர்களை நட்பாகக் கொண்டவன் பரந்த அரண்மனை நுழைவாயிலில் காத்துநின்ற சேரர், சோழர், பாண்டியர், வட நாட்டு மன்னர்கள் ஆகியோர் பணிந்து திறைப்பொருட்களாக யானைகள், குதிரைகள் ஆகியவற்றை அளித்தனர். இவற்றை இரவலர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

**28 செவிலி தலைவி உடன்போக்கிற்காக வருந்துதல்**

செவிலி, 'நெல்வயல்களும் சோலைகளும் சூழ்ந்த வளமிகு காவிரி நாட்டை உடையவன். குமரி ஆற்றுக்குத் தலைவன், கங்கை நதியின் கணவன், வீரக்கழல் அணிந்தவன் நந்திவர்மன். அவன் தெள்ளாற்றில் செய்த போருக்கு அஞ்சி அவன் பகைவர்கள் ஓடி ஒளியும் காட்டும் வழியில் அழகிய பற்களைக் கொண்ட என் மகள் தான் காதலித்த ஆண்மகனோடு எவ்வாறு சென்றாளோ? என வருந்தி உரைக்கின்றாள்.

**29 நந்திவர்மன் வீரச்சிறப்பு பாடி ஊசலாடுதல்**

உறுப்பு - ஊசல்

செவ்வரி ஓடும் அகன்ற கண்களை உடைய பெண்களே, பட்டு மேலாடை அசையவும், அணிகலன் ஆடவும் மலர்கள் அணிந்த கூந்தல் அவிழவும் ஊசல் ஆடுவோமா? தெள்ளாற்றில் தன்னை எதிர்த்தோரை வானுலகிற்கு அனுப்பியவனும், நிறைந்த படைவலிமை உடையவனும், சூரியனை ஒத்த புகழுடையவனும் காடவர் கோனுக்குச் சகோதரனும் ஆகிய நந்திவர்மனின் கையிலுள்ள வேலினையும் அவனது காஞ்சிமா நகரத்தையும் புகழ்ந்து பாடிக்கொண்டு ஊசல் ஆடுவோமா? என்று அவன் புகழ் பரவப்படுகிறது. இவ்வூசல் பொருண்மையில் அமைந்த பாடல் வருமாறு:

ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ வூசல்

உத்தரியப் பட்டாட வாடாமோ வூசல்

ஆடகப்பூண் மின்னாட வாடாமோ வூசல்

அம்மென்மலர் குழல்சரிய வாடாமோ வூசல்

கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த

கோமுற்றப் படைநந்தி குவலயமார்த் தாண்டன்

காடவற்கு முன்தோன்றல் கைவேலைப் பாடிக்

காஞ்சிபுர மும்பாடி ஆடாமோ வூசல்.

**30 செவிலி தலைவியின் காதல் மிகுதி கூறல்**

செவிலி, நந்திவர்மனே, போரில் வெற்றிபெறும் இலைவடிவவேல் ஏந்தியவனே! என் மகள் மென்மையானவள் ஆவாள். ஊசல் ஆடுவதைக் கூட மறந்து விடுவாள், கழங்கு, அம்மானை ஆடுதலைக் கூட மறந்து விடுவாள். ஆனால் உன் தொண்டைமாலையைப் பாடுவதை மட்டும் மறவாள் என்று உரைக்கின்றாள்.

**31 நந்திவர்மன் அரண்மனைச் சிறப்பு**

'பாடிய நாவலரோ வேந்தரோ பல்புரவிப்

பீடியல் மாகளிற்றார் பிச்சத்தார் - கூடார்

படையாறு சாயப் பழையாறு வென்றான்

கடையாறு போந்தார் கலந்து'

என்னும் பாடல் நந்திவர்மனின் அரண்மனைச் சிறப்பை எடுத்தியம்புகிறது. நந்திவர்மன் பகை மன்னர்களின் படைகள் வழியிலேயே அழியுமாறு பழையாற்றில் நடைபெற்ற போரில் வெற்றி கொண்டான். அவனது அகன்ற அரண்மனை வாயிலின் வழியே குதிரைகளிலும் யானைகளிலும் மயில் இறகால் ஆன குடைகளோடு வந்து நிரம்பியவர்கள் அவனைப் போற்றிப் பாடிய புலவர்களோ? அன்றி அரசர்களோ? என வியந்து உரைக்கப்படுகின்றது.

**32 தலைவன் தலைவியின் நலம் புனைந்துரைத்தல்**

காஞ்சியை உரிமையாகக் கொண்ட பல கலங்களை உடைய மலர் மாலைகளை அணிந்து வேல் தாங்கியுள்ள நந்திவர்மனின் கழல் அணிந்த பாதத்தை வணங்கியவர்கள் அறிவுடையவர்கள். அவன் புகழ் கூறுபவர் பொன்மாலையினைப் பெறுவர். ஆனால் மின்னலை ஒத்த இவள் தலைசாய்த்து நின்று நாணத்துடன் பார்க்கும் பார்வையை விட நல்வினை உடைய எனக்கு மேலும் பெறவேண்டியது வேறொன்றுமில்லை.

**33 தோழி இற்செறிப்பு குறித்து தலைவனுக்கு உரைத்தல்**

தெள்ளாறு என்னும் இடத்தில் தன்னை எதிர்த்த பகைவர்களை அழியும்படியாகப் போர் புரிந்த நந்திவர்மனின் மலை உச்சியில் தேனீக்கள் தேன் கூடு கட்டும்படியான வடவேங்கட மலை உள்ளது. அம்மலையில் உள்ள குளிர்ந்த மலைப் பகுதியில் உள்ள நீண்ட தினைப்புனத்தில் தினை விளைந்தது. இனி தினைப்புனம் காக்கத் தலைவி வரமுடியாததால் தலைவனும் தலைவியும் சந்திக்க இயலாமல் துன்புற நேரும். இதனை,

'வினையின் சிலம்பன் பரிவும் இவள் தன் மெலிவும் மென்பூந்

தினையும் விளைந்தது வாழிதன் மீறுதெள் ளாற்று நள்ளார்

முனையும் அன்றுஏக முனிந்தபி ரான்முனை யிற்பெருந்தேன்

வனையும் வடவேங் கடத்தார் தன் சாரலின் வார்புனமே'

என்ற பாடல் உணர்த்தும்.

**34 தோழி உடன்போக்கின் பின் செவிலிக்கு அறத்தொடு நிற்றல்**

கூற்று - தோழி



துறை - செவிலிக்கு அறத்தொடு நிற்றல்

நந்திவர்மனின் மாமல்லபுர நகர மக்கள் பேரொலி செய்கிறார்கள். அவ்வொலி தினைப்புனத்தில் நின்ற வேங்கை மரத்தின் மேல் அன்று கோபம் கொண்ட யானையை போக்கிய வில்லேந்திய வீரனின் வீரத்தைப்பற்றி எழுந்ததோ? அல்லது நந்திவர்மனின் பட்டத்து யானை சங்கிலியை அறுத்துக் கொண்டு காட்டுக்குள் ஓடியதால் அதனைப் பிடிக்க முயன்ற வீரர்கள் எழுப்பிய ஒலியோ?

தலைவியை அழைத்துச் சென்ற தலைவனின் வீரத்தைப் போற்றும் ஆரவாரத்தை நந்திவர்மனின் வீரர்கள் செய்யும் ஆரவாரத்துடன் இயைத்துச் சொன்னதன்மூலம் தலைவனைப் பற்றிச் செவிலிக்குத் தோழி உணர்த்துகின்றாள். களிறு தரு புணர்ச்சியில் தலைவன் தலைவியை மணந்தான் என்பதை யானையை அடக்கிய வீரர் தீரமோ என்பதால் கூறுகின்றாள்.

**35. தலைவி பிரிவுத்துயர் கூறுதல்**

கூற்று - தலைவி

கலம்பக உறுப்பு - இரங்கல்

உறுப்பு விளக்கம் - பிரிவுத் துயர் தாங்காது தலைவி கடல், தென்றல் நிலவுக் கண்டு துயரடைதல்

குருக்கோட்டை எனுமிடத்தில் நந்திவர்மன் போர் புரிந்தபோது, பகையரசர்களின் முகத்தில் புள்ளிபெற்ற யானைகளின் முகத்தில் அம்புகள் தைத்தன. அந்த அம்புகள் பூமியில் விழுந்த போது அம்புகளின் நுனியைப் பகைவர்களின் ரத்தமானது கழுவும்படியான வில்வீரனாக நந்திவர்மன் திகழ்கிறான். பசியமாலை அணிந்து உலகிற்குச் சிறந்த நீதியை வழங்கும் நந்திவர்மனின் அருளை நாம் பெற்றால் நாம் இன்பம் பெறலாம். இப்போது அவ்வாறின்றி ஒலிக்கும் கடல் ஒலியும், தென்றலும், நிலவொளியும் வருத்துகின்றன என்கிறாள் தலைவி.

**36 தலைவி இற்செறிக்கப்படுவாள் எனத் தோழி கூறல்**

மலையிலிருந்து விழும் வெண்மையான அருவியே, தினைத்தாள்களே! பொன்போல் உயர்ந்த தலைவன் வந்தானென்றால் அத்தலைவனிடம் சூரிய சந்திரனாக விளங்கும் நந்திவர்மனின் மலையில் வேங்கை மரம் முன் அறிவிப்பாக மலர்ந்து சோதிடனாக விளங்கும் சூழ்ச்சித் திறத்தைக் கூறுவீர்களாக என்கிறாள் தோழி. இதனை,

'ஞான்றவெள்ளருவி இருவி எங்கள் பொன்
தோன்றல் வந்திடில் சொல்லுமின் ஒண்சுடர்
போன்ற மன்னவன் நந்திதன் பூதரத்து
ஈன்ற வேங்கை இருங்கணிச் சூழ்ச்சியே'

என்ற பாடல் எடுத்தியம்பும். வேங்கை மலருங் காலம் தினை அறுவடைக் காலம். அறுவடை முடிந்தபின் தலைவி தினைப்புனம் வராது இற்செறிக்கப்படுவாள் என்பதை வேங்கை மலர்ந்து சோதிடர் போலக் காட்டிற்று எனத் தோழி உணர்த்துகின்றாள்

**37. தலைவி நந்திவர்மனைத் திருமால் நிகரெனல்**

கூற்று - தலைவி

துறை - பூவைநிலை

தலைவி, 'ஆணைச்சக்கரம் உடைய பல்லவர் குலத்தவனே நந்தி மன்னனே! உன் காலில் மதயானைகளின் பிடர்களால் ஏற்பட்ட தழும்புகள் காணப்படுகின்றன, அத்தழும்புகளோடு பகை மன்னர்கள் தினந்தோறும் உன் பாதம் பணிந்ததால் ஏற்பட்ட தழும்புகளும் கண்டோம். ஆனால் திருமாலை ஒத்தவனே ஆய்ச்சியர்களும் உன் அன்னையர்களும் கயிற்றினால் உன் தோளில் அடித்த வடுவைக் காணவில்லையே என்ன காரணமென உரைப்பாய்' எனத் தலைவன் நந்திவர்மனிடம் வினவுகிறாள்.

**38.**

திணை - பாடாண்

கூற்று - தோழி

துறை - பூவை நிலை

'தெள்ளாற்றில் நடைபெற்ற போரில் பகைவரின் யானைகள் இறந்தொழியுமாறு கண்கள் சிவந்தவனே! பாண்டிய மன்னனின் தொண்டிநகரைக் கைப்பற்றியவனே! நந்தி என்ற பெயருடையவனே! அரசர்கள் வணங்கும் சிறந்த மன்னனே! முந்நீர் கொண்ட பாற்கடலைக் கடைந்த திருமால் என்று உன்னைக் கூறுவர்' எனத் தோழி நந்திவர்மனைப் புகழ்கிறாள்.

**39. நந்திவர்மன்மேல் காதல்கொள் மகளிர் கூற்று**

கூற்று - மகளிர்

திணை - அகப்புறத் திணை (அகமும் புறமும் கலந்துவரப் பாடுதல்)

'தொண்டை நாட்டிற்குத் தலைவனும், இம்மன்னனும் வேல்படை கொண்ட மன்னர்களுக்கெல்லாம் மன்னனாக இருப்பவனும் அங்க நாட்டுக்கு உரிமை

உடையவனும் சந்திர குலத்திற்கு ஒளியாக இருப்பவனும் நந்திவர்மன். அவன் வெண்கொற்றக்குடை சந்திரன் போலக் குளிர்ச்சி உடையது என்பார்கள். ஆனால் அவன் நிலையில் எங்கள் கையிலணிந்த வளையல்கள் நிற்காமல் நழுவுகின்றன. ஏனிந்த மாறுபாடு? இது அவன் செங்கோலுக்கு ஏற்புடையதா? என மகளிர் வினவுகின்றனர்.



### 40. தோழி தலைவிநிலை கண்டு தன்னுள் கூறுதல்

பல்வேறு வெற்றிகளைக் குவிப்பதற்காகப் பகைவரைக் கொன்றழிக்கும் போர் செய்து, பருந்துகள் சுற்றும் போர்க்களத்தில் யானைமேல் ஏறி வரும் பல்லவர் தலைவன் நந்திவர்மனின் மாமல்லபுரம் பற்றி மட்டுமே தலைவியானவள் பேசுவாள். இவள் கொங்கைகளிலும் மற்றும் உடலிலும் தொண்டைமாலையின் மணம் மட்டுமே வீசும். இதனைக் கூற இவள் ஏன் நாணுகிறாள்' எனத் தோழி தன் மனத்தினுள் கூறிக்கொள்கிறாள்

### 41. தோழி தலைவிக்காக தலைவனிடம் மாலை வேண்டல்

தோழி, பகைவர்களின் வாழ்நாளைக் கோபமுடன் அழிக்கின்ற மதம் கொண்ட யானைப்படை உடையவனே, பகைவர் குலத்திற்கு எமனாக விளங்குபவனே, கொங்கு நாட்டை ஆள்பவனே, உன் வீரக்கழல் அணிந்த பாதங்களை வணங்கும் மங்கையர் பலர்; அவர்களுள் எம் தலைவி அணிகலன் அணிந்த மார்பில் தேமல் படருமாறு உன் தொண்டைமாலை பிற மகளிருக்கு முன்னர் நீ நாணாமல் அவளுக்கு அளிக்க வேண்டும். இல்லாவிடில் உன் செங்கோல் நீதி வழுவாதா? கூறுவாயாக. என்கிறாள்.

### 42. தோழி தலைவிக்கு மாலை வேண்டுதல்

நீதிநெறியில்லாத சேர, சோழ, பாண்டியர்கள் மீது போர் தொடுத்து அவர்களின் நாடுகளைச் சீர்பெறச் செய்தவனே. சினம் பொருந்திய நந்திவர்மனே, இளம் பெண்ணான இவள் துயர்படும்படியும் பிற மகளிர் அனைவரும் உன் மேல் கொண்ட காதலால் தங்கள் கை வளையல்களை இழக்கவும் நீ அரசாள்வது என்ன முறை? எனத் தோழி நந்திவர்மனிடம் தலைவிக்கு மாலை வேண்டுகிறாள். இதனை

செங்கோல் வளைக்கை யிவளுந் துவண்டு
செறி மாமை வாட வெழிலார்
அங்கோல் வளைக்கை யிளையா ரிழப்ப
அரசாள்வ தென்ன வகையோ
தங்கோல் வளைத்த திகழ்சேரர் சோழர்
தமிழ் மன்னர் நின்ற நிலமேல்
வெங்கோ னிமிர்த்த வரையுஞ் சிவந்த

விறனந்தி மேன்மொ ழிவையே.

என்ற பாடலால் அறியலாம்.

**43. தலைவன் தேர்ப்பாகனிடம் கூறுதல்**

ஆர்ப்பரிக்கின்ற கடல் சூழ்ந்த உலகில் சிறந்த பண்புடைய மேகமே, அருளும் கொடையும் நிறைந்த நந்திவர்மனின் நாடு வரை நீ செல்கிறாயா, அல்லது இடைவெளியில் நின்று விடுவாயா, உன்னைக் கண்டால் கார்காலம் வந்ததென நினைத்துத் தலைவி துன்புற்று மெலிவாள் என்கின்றான். இதன்மூலம் பாகனுக்குத் தேரை மிக வேகமாகச் செலுத்த வேண்டும் எனக் குறிப்பாக உணர்த்துகின்றான். இதனை,

'மொழியார் தொண்டைப் பன்மலா் முற்றும் தெருவந்து
விழியாள் என்றும் மேனி வெளுத்துற மெலிவாளே
ஒழியா வண்கைத் தண்ணருள் நந்திதன் ஊர்மட்டோ
வழியாம் தமரக் கடல்வட் டத்தொரு வண்கோவே'

எனும் பாடல் உரைக்கின்றது.

**44. நிலவை வெறுத்த தலைவி**

ஒருகோமக னந்தி யுறந்தையர்கோன்
உயர்நீள்வலயத்து உயர் வாளைவளை
குருகோடு வயற்படர் காவிரியிற்
குலவும்புயல் கண்டு புகார்மணலிற்
பெருகோடு நெடுங்கழி சூழ்மயிலைப்
பெருமானது பேரணி நீண்முடிமேல்
தருகோதை நினைந்து அயர்வேன்மெலியத்
தழல் வீசுவதோ குளிர் மாமதியே.

தலைவி, பரந்த இந்த உலகில் வயல்களை வாளை மீனும், சங்கும், நீர் பறவைகளும் என நிறைக்கும் காவிரியைக் கடக்கின்ற மேகமே! ஒப்புயா்வற்ற அரசனும் உறையூர்க்குத் தலைவனுமானவன் நந்திவர்மன். உப்பங்கழிகள் நிறைந்த மயிலாப்பூரை ஆளும் நந்திவர்மன் திருமுடியில் சூடியுள்ள தொண்டைமாலை நினைத்து நான் வருந்தும் வண்ணம் நிலவே, நீயும் தீயை வாரி இறைக்கின்றாய்' என்கிறாள்.

**45. கார்காலம் கண்டதோழி தன்நெஞ்சுக்குக் கூறல்**

தலைவி கார்காலம் கண்டு துயர்ப்படுவதைப் பார்த்து, நிலவானது தீயைப் பொழியும் காலம் மாலைக் காலமாகும், அதையொத்த மயக்கம் தரும் இரவுக்காலம் விடியாமல் இருக்கும். இத்தகைய பொழுதில் வண்டுகள் காந்தாரப்பண் பாடி ஆரவாரித்து மகிழும் காலம். நந்திவர்மனின் தொண்டை மலர்மாலையைப் பெறாமல் மகளிர் வருந்தியுள்ளனர். அவர்களின் அந்நிலையை அம்மகளிரின் ஊழ்வினை என்று சொல்லி எதுவும் செய்யாமல் பார்ப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்' என்று தோழி தன் நெஞ்சிற்கு உரைக்கின்றாள்.

மதிய மெரிசொரியு மாலையம் மாலை
மறந்தும் புலராது கங்குலாங் கங்குல்
கதிர்செய் யணிவண்டு காந்தாரம் பாடக்
களிவண்டு புகுந்துலவுங் காலமாங் காலம்
பதியின் வளர்ந்தநறுந் தொண்டையங்கோ னந்தி
பல்லவர்க்கு நேராத பாவையர்தம் பாவை
விதியின் விளைவுகண் டியாமிருப்ப தல்லால்
வினைமற்று முண்டோநம் மெல்லோதி மாட்டே.

**46. தலைவி தோழியிடம் துன்பம் கூறுதல்**

கலம்பக உறுப்பு - வெறிவிலக்கல்

தலைவியின் மெலிவு கண்டு தாயர் வெறியாட்டைச் செய்யக் கருதுவர். அப்போது அதனால் பயன் எதுவும் இல்லை என்று வெறி நீக்குதலாகும்.

தலைவி தோழியை நோக்கி, 'இவ்வளவு நாட்களாக என்னை நந்திவர்மனோடு சேர விடாமலும் அவனது மலை போன்ற தோள்களைப் பாடாமலும், மாமல்லபுர மன்னனான அவனுடைய குதிரை, யானை, ஆகியவற்றின் கால்சுவடுகளைக் காட்டாமலும், தாழை மரங்கள் நிறைந்த சோலையைத் தழுவும் காவிரியில் என்னை நீராட்டாமலும் இருந்தீர்கள். (இவை அனைத்தையும் செய்து இருந்தால் அதுவே காதல் நோய்க்கு மருந்தாக இருந்திருக்கும். இந்த வெறியாட்டால் பயனில்லை) என்று உரைக்கின்றாள்.

**47. பாங்கன் தன் நெஞ்சிற்கு உரைத்தல்**

மதம் கொண்ட யானைகளை உடைய நந்திவர்மனின் காஞ்சி மாநகரத்தில் வாழும் தலைவியின் வாய் சிவந்த நிறமுடையது, கண்கள் கருமையானவை, கொங்கைகளின் பாரத்தால் ஒடியும் தன்மை உடைய மெல்லிய இடையை உடையவள், மேகலை அணிந்த அல்குலை உடையவள். கார்மேகம்

ஒத்த தேன்மலர் அணிந்த கூந்தல உடையவள். இவையனைத்தும் அனைவராலும் விரும்பத்தக்கது. இவளைப் பார்த்தபின்னும் இவளை விட்டுப் பிரிந்து வந்த தலைவன் சிறந்தவன், கைகூப்பித் தொழத்தக்கவன். இவனிடம் நாம் கொண்ட நட்பு மிக உயர்ந்தது எனத் தன் நெஞ்சிற்கு உரைக்கின்றான்.





**48. தலைவன் தலைவி இயல்பைப் பாங்கனுக்கு உரைத்தல்**

அரசர்கள் பலரும் வியந்து புகழும் அரண்மனையைக் கொண்டவனும், தோன்றும்போதே புகழுடன் தோன்றியவனுமான நந்திவர்மனின் நாட்டில், முல்லை நிறம் கொண்ட வெண்ணிற பற்களால் தலைவி என் உள்ளம் கவர்ந்தாள். அவளுடைய கண்கள் உள்ளங் கைகளை விடப் பெரியன ஆகும்.

**49. நந்திவர்மன் புகழ் கூறுதல்**

மரபையும், குடிவாழ்க்கையினையும், பெரும்படையினையும் பற்றிச் சிறிதும் எண்ணிப் பாராத பகைமன்னர்கள் அழியும்படி தெள்ளாற்றில் போர் செய்து வென்றவனே! சிறந்த செங்கோலை உடையவனே! மண்ணுலகில் வெற்றிக்கு எல்லாம் சாட்சியாக உள்ளவனே! தொண்டை நாட்டின் தலைவனே! புகழ் அனைத்தும் உன்னைத் தவிர வேறு யாருக்கும் உரியன அல்ல.

**50. தோழி வரைவு கடாவுதல்**

தோழியானவள், ‘நீண்ட தொண்டைமாலையை முடியில் கூடியவனே! காஞ்சிநகருக்கு உரிய நீதி தவறாத மன்னனே! நாங்கள் மாலையைத் தொடுத்து அணிவது இல்லை. அழகான தலைவி உன்னையே நினைத்து வருந்துகிறாள் மாலைக்காலத்தையும் நிலவையும் கண்டு வருந்தி அழும் அவளுடைய துயரத்தை தீர்க்கும் வழி எனக்குத் தெரியவில்லை. எனவே உன் தொண்டைமாலையைக் கொடுத்து அவளுடைய உயிரைக் காப்பாயாக’ எனத் தலைவனிடம் (தலைவியை மணமுடிக்கச் சொல்லி மறைமுகமாக) வேண்டுகிறாள். இதனை,

‘கோவே மாலை மாலையாக கோவே வண்டு நீலவொண்கண்
கோவே மாலை மாலையாகக் கொண்டால் கூறு மாறறியேன்
கோவே மாலை நின் முடியார்கொற்ற நந்தி கச்சியுள்ளார்
கோவே மாலை யுள்ளும் எங்கள் கோவே கொம்ப ரானாரே

என்ற பாடல் விளக்குகின்றது.

**51. தலைவியின் அழகு அழிதலைத் தோழி உரைத்தல்**

கொடியைப் போன்ற தலைவி இனி வாழ்வதற்கு வழியே இல்லை. எனவே பசலை அவள் உடலில் படரட்டும். நிறமாறுபாடு ஏற்பட்டு உடலின் அழகானது கெடட்டும். ஊரார் அனைவரும் அலர் (பழிச்சொல்) சொல்லட்டும். உடல் மெலிவினால் கை வளைகள் கழன்று விழட்டும், ஊரார்கள் பொய்

உரைக்கட்டும், கடற்கரையில் மோதும் அலைகளையும் சங்குகளையும் உடைய உப்பங்கழிகள் நிறைந்த மயிலாப்பூரை ஆள்பவனும், நீதியிற் சிறந்தவனும் ஆகிய நந்திவர்மன் எங்களுக்கு மட்டும் கொடியவனாக இருக்கிறான் என்று கூறித் தோழி தலைவியின் மெலிவிற்கு வருந்தி உரைக்கின்றாள்.



**52. தலைவன் தலைவி நலம் பாராட்டல்**

தலைவன், 'மனமே வேல் போன்ற ஒளியுடைய அழகிய கண்களை உடையவளும், தெள்ளாறு என்னுமிடத்தில் பகைவரை வென்ற நந்திவர்மனின் மயிலாப்பூரைப் போன்ற அழகான இவளுக்குப் பூங்கொடியைப் போன்ற மெல்லிய இடை உண்டு. இல்லையெனில் இளமைத் தன்மை உடைய வளர் கொங்கைகள் எவ்வாறு இருக்கும்' என்று தன் நெஞ்சுக்குள் உரைக்கின்றான். இதனை,

'உளமே கொடிமருங்கு உண்டுஇல்லை என்னில்
இளமுலைகள் எவ்வாறு இருக்கும் - கிளர் ஒளிய
தென்னிலை வேற் கண்ணினாள் தெள்ளாற்றில் - வென்றகோன்
தன்மயிலை அன்னாள் தனக்கு

எனும் பாடல் வாயிலாக அறியலாம்.

## 3.7 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

1. கலம்பகத்தில் பொதுவாக அமைந்த உறுப்புக்களின் எண்ணிக்கை யாது?

   18

2. தமிழில் தோன்றிய முதற் கலம்பக நூல் எது

   நந்திக் கலம்பகம்

3. நந்திவர்மன் எந்த இறைவனுடன் ஒப்பிடப்பெறுகின்றான்?

   திருமால்

4. நந்திக் கலம்பகத்தில் இடம்பெற்ற அகத்துறை உறுப்புக்களுக்குச் சான்று தருக.

   தென்றல், தூது, கார்,

5. நந்திக் கலம்பகத்தில் இடம்பெற்ற புறத்துறை உறுப்புக்களுக்குச் சான்று தருக.

   களி, மறம், புயம்

6. நந்திவர்மன் நிகழ்த்திய போர்கள் எவை?

குருக்கோட்டை, தெள்ளாறு, கடம்பூர், பழையாறு, வெள்ளாறு, வெறியலூர்ப் போர்கள் நந்திவர்மன் வேறுபெயர்கள் எவை?

அவனி நாராயணன், மல்லையர் கோன், கச்சி வளநாடன், தமிழாகரன், உறந்தையர் கோன், உக்ரமகோபன், அரசர் கோமான் கங்கை நாடான், கச்சி நாட்டோன், கங்கை மணாளன், சந்திரகுலப் பிரகாசன், குவலய மார்த்தாண்டன்

7. நந்தி வர்மன் அணிந்த மாலை எது?

தொண்டை மாலை

8. நந்திவர்மனின் பறையின் பெயர் யாது?

கடுவாய்ப்பறை

**குறுவினாக்கள்**

9. நந்தியின் யானை வீரமாகக் கலம்பகம் கூறுவது யாது?

14, 16 என்னும் எண்ணிடப்பெற்ற பாடல்களின் செய்திகள்

10. கடுவாய்ப்பறை நந்தி புகழ் சாற்றுதலை விளக்குக.

கடுவாய்ப்பறை நந்தி புகழ் சாற்றுதல் எனும் தலைப்பில் அமைந்த கருத்து

11. தூது என்னும் உறுப்பில் அமைந்த செய்திகள் யாவை?

3 எண்ணிடப்பெற்ற பாடல்களின் செய்திகள்

12. தலைவன் தன் நெஞ்சோடு கிளத்தலை விவரிக்க

10, 25 எண்ணிடப்பெற்ற பாடல்களின் செய்திகள்

13. புய வகுப்பு எனும் துறையில் நந்தி வர்மன் பெருமை பேசப்படுதலை விவரிக்க.

7 எண்ணிடப்பெற்ற பாடல்களின் செய்திகள்

14. கைக்கிளை எனும் துறையில் அமைந்த செய்தியை விளக்குக.

9, 11 எண்ணிடப்பெற்ற பாடல்களின் செய்திகள்

15. நந்தி வர்மனின் வீரம் குறித்து எழுதுக.

26, 27 எண்ணிடப்பெற்ற பாடல்களின் செய்திகள்

16. தோழி வரைவு கடாவுதலைக் கலம்பகம் வழி எழுதுக

50 எண்ணிடப்பெற்ற பத்திச் செய்திகள்

**பெருவினாக்கள்**

17. நந்திவர்மனைக் காக்குமாறு சிவபெருமானை ஆசிரியர் எவ்வாறு வேண்டுகின்றார்?

    1 என்ற எண்ணிடப்பெற்ற பாடலின் செய்தி

18. நந்திக் கலம்பகத்தில் தோழி கூற்றில் அமைந்த பாடல்களை விவரிக்க.

    10, 11, 19, 33, 36 எண்ணிடப்பெற்ற பாடல்களின் செய்திகள்

19. நந்தி வர்மனின் வீரமும் கொடையும் குறித்துக் கட்டுரைக்க.

    5, 7, 12, 17, 26, 27 எண்ணிடப்பெற்ற பாடல்களின் செய்திகள்

# பிரிவு-2:

## கூறு 4.

## நந்திக்கலம்பகம் - பிற்பகுதி

குறிப்புகள்

### 4.1 அறிமுகம்

நந்திக் கலம்பகம் பல்வேறு சிறப்புக்களை உடையது. இதன் பிற்பகுதி நிறைந்த அக மரபுகளை உள்ளடக்கியது. பல்வேறு நகரங்களுடன் தலைவியின் எழில் ஒப்பிடப்பெறும். கலம்பகத்திற்குரிய சிறப்பான சம்பிரதம், மதங்கு, மறம், மேகம், காலம், கார் போன்ற உறுப்புக்களை உடையது.

### 4.2 நூற்பகுதி

(முற்பகுதியுடன் தொடர்புற அறிந்து கொள்ள ஏதுவாகப் பாடல் தொடர் எண் தரப்படுகின்றது.)

**53. தலைவி தலைவன் ஒழுக்கத்தைத் தோழிக்கு உரைத்தல்**

பகை உணர்வுடன் நட்பு பாராட்டாத வேல் தாங்கிய படைகளை உடைய மன்னர்களைத் தெள்ளாறு என்னுமிடத்தில் அவர்களின் யானைகளும் குதிரைகளும் இறக்குமாறு போர் செய்தவன் நந்திவர்மன். அவனுக்கு உரியதான என் கொங்கைகளைத் தான் பெற்ற மகனுக்கு உரிமையாகச் செய்து, தன் மார்பை ஊரிலுள்ள என் தங்கையருக்கு (பரத்தையர்) உரிமையாக்கினான். உலக மக்களின் மனதுக்கு இனியவனான பல்லவனின் நீதி எப்படி நேர்மை உடையதாக இருக்கும்?

**54. தோழி வரைவு கடாதல்**

தோழி தலைவனைக் கண்டு, போர் புரியும் வில்லையும் வாளையும் பிடித்த, கடற்கரையிலுள்ள மாமல்லபுரத்தில் வாழ்கின்ற மன்னனே. உலகில் சிறந்த மதங்கொண்ட யானைப் படையை உடையவனே! பல்லவர்களுள் ஆண் சிங்கத்தை ஒத்தவனே. கழுத்தில் வட்டத்தை உடைய அழகான கிளியை ஒத்த மொழி பேசும், உன் நினைவால் சோர்ந்துள்ள இவளுக்கு மட்டும் உன்னுடைய குளிர்ந்த வெண் கொற்றக்குடை துன்பம் தருவதாக உள்ளது. இது உனக்குக் குற்றம் தருவதாகும் என்று கூறி வரைவுகடாவுகிறாள்.

**55. தோழி தலைவியின் துயர் கூறியது**

தோழி, 'நந்திவர்மன் தன் வலப்பக்கத்தில் வலிமையான காளை வாகனக் கொடியை உடையவன். பகைவர்களை வெல்லும் சினம் உடையவனும் பகைவர்கள் மடலேறுமாறு வெற்றிமாலை கூடியவனும், வடவேங்கட நாட்டை உரிமையாக உடையவனுமான நந்திவர்மன். அவன் பறவைகள் வாழும்

உயிரினங்கள் சூழ்ந்த மயிலாப்பூரை ஆள்பவன். அவனுடைய முடியில் அணிந்துள்ள வெற்றி பொருந்திய தொண்டைமாலையை நினைத்து வருந்தும் இவள் மேலும் வருந்தும்படி நிலவானது தீயைப் போல் தன் ஒளியை உமிழும் (காதல் துயர் வருத்தும்)' என்று தலைவியின் பிரிவுத்துயரை உரைக்கின்றாள்.



**56. இளவேனிற் பருவம் கண்டு தலைவி துயர் கொண்டது**

தலைவி, 'மலர்களில் வண்டுகள் அமர்ந்து இசை எழுப்பும் காலம், குயில்கள் இசை எழுப்பியவண்ணம் மாந்தளிர்களைத் தம் அலகினால் கோதுகின்ற காலம், இனிய தென்றல் பிரிந்திருப்போருக்குத் துன்பத்தையும் இணைந்திருப்போருக்கு இன்பத்தையும் தரும் காலம். காதலால் வாடும் ஊழ்வினை உடைய எனக்கோ தென்றல் காற்று அனலாய் வீசுகின்ற காலம். நந்திவர்மனின் காஞ்சிபுரத்தில் உள்ள மகளிர் முத்துக்களை எறிந்து விளையாடும் காலம். மன்மதன் தன் ஐந்து மலரம்புகளை (மா, அசோகு, முல்லை, தாமரை, குவளை) எய்கின்ற காலம். காதலர் நம்மைக் கைவிட்ட காலம்' என்று பலவாறாகப் புலம்புகிறாள். இதனைப் பின்வரும் பாடலால் உணரலாம்.

மலர்ச்சூழல் அமர்ந்தினிய வண்டார்க்குங் காலம்
வரிக்குயில்கள் மாவில் இளந் தளிர்கோதுங் காலம்
சிலர்க்கெல்லாஞ் செழுந்தென்றல் அமுதளிக்குங் காலம்
தீவினையேற்கு அத்தென்றல் தீவீசுங் காலம்
பலர்க்கெல்லாங் கோனந்தி பன்மாடக் கச்சிப்
பனிக்கண்ணார் பருமுத்தம் பார்த்தாடுங் காலம்
அலர்க்கெல்லாம் ஐங்கணைவேள் அலர்தூற்றுங் காலம்
அகன்று போனவர் நம்மை அயர்த்துவிட்ட காலம்.

**57. தோழி வரைவு கடாதல்**

'உழவர்கள் காலமறிந்து வேளாண்மை செய்யும் காவிரிபாயும் நாட்டை உடைய, உலகை ஒப்புயர்வற்ற செங்கோல் ஆள்கின்ற நந்திவர்மனே! உன்னுடைய அன்பைப் பெறவில்லை என்றால் மயிலொத்த சாயல் உடைய தலைவியின் வளையல்கள் கழன்று துன்புறுதல் கூடும். அது மன்னனான உனக்குப் புகழ் தரும் செயல் அல்ல' என்பதால் தோழி வரைவு முடித்தலே தக்கது என உணர்த்தினாள்.

**58. தலைவன் தலைவிக்கு மலர் அளித்தல்**



மயிலின் சாயலை உடைய நந்திவர்மனின் நாட்டுப் பெண்களே! குரா மலர்கள் நிரம்பிய உங்கள் சோலையில் உள்ள மரங்களில் இரவில் மலரும் மலர்கள் இல்லாவிட்டால் என்ன? உலகில் வேறு எங்கும் இல்லையா? நான் உங்களுக்கு இரவில் மலரும் மலரைக் கொண்டு வந்து தருவேன் என்று

தலைவன் உரைக்கின்றான். இதனால் தலைவன் தான் இனி இரவுக்குறி விரும்பி வருதலை உணர்த்துகின்றான்.

**59. தலைவி மாலை பெறாது துன்புறுதல்**

கொடைத் தன்மை நிறைந்தவன், நால்வகை நிலத் தலைவன், மன்மதனை ஒத்த அழகுடையவன், குளிர்ச்சி நிறைந்த முத்துக்கள் பதிக்கப்பட்ட வெண்கொற்றக் குடையை உடையவன். வலிமை வாய்ந்த ஆண் சிங்கம் போன்ற பல்லவ மன்னன் நந்திவர்மன் தன் வலிமையான தோளில் அணிந்த தொண்டைமாலையைக் கொடுத்தருளவில்லை. காளைகளின் கழுத்து மணிகள் ஓசை எழுப்ப இரவும் நிலவும் துயர் தருகின்றன. நான் இனியும் பிழைக்கும் வழியை அறியவில்லை.

**60. தலைவன் பாங்கனிடம் கூறுதல்**

அறம் வளர்க்கும் செங்கோல் உடைய நந்தியின் மாலைக்குரிய தொண்டையின் கனிபோல மங்கையின் பவளவாய் முகத்தில் விளங்குகின்றது. அவர்கள் கொடி போல் இடையும் முத்துப் போன்ற பற்களையும் உடையவர்கள். கூந்தல் அடர்ந்த கருமை நிறைந்தது. கண்கள் குவளை மலர் போலவும் தோள்கள் மூங்கிலை ஒத்தும் காணப்படுகின்றன. கொங்கைகள் அழகாக அமைந்து விரும்பத்தக்கன. புருவம் வில் போன்றது. இத்தன்மையை உடைய தலைவி அவளையே எப்போதும் நினைக்க வைத்து காதல் நோய் தந்தாள்.

**61. மன்னனின் சிறப்பும் பகையின் அழிவும்**

திணை - வஞ்சி,

துறை - கொற்றவள்ளை

பொன் அணிகளை அணிந்த பல்லவ மன்னனே! திருமகள் செல்வமும் நிலமகள் உரிமையும் தான் மட்டுமே கொண்டவனே! தோள்களின் வலிமையால் தெள்ளாற்றில் வென்றவனே! நந்திவர்மன் என்னும் பெயர் உடையவனே! உன் கண்கள் சிவந்தால் பகை நாடுகள் தீயினால் சிவக்கும். உன் புருவம் துடித்தால் உன்னை வணங்காத பகைவருக்கு அது தீய நிமித்தமாய் மாறி இடக்கண் துடிக்கும். உன் வாள் உறையிலிருந்து எடுக்கப்பட்டால் பகை மன்னவர்களின் மனைவியர் மங்கல அணியை இழப்பர். கடுவாய் போன்ற உன் சங்கினை முழங்கினால் பகைமன்னர் மனம் அஞ்சும். உன் மதயானை அலங்கரிக்கப்பட்டால் பகை மன்னர்களின் உடலில் ரத்தம் பெருகும் என நந்தியின் வீரத்தை ஆசிரியர் புகழ்கின்றார். இதனை,

திருவின் செம்மையு நிலமக ளுரிமையும்
பொதுவின்றி யாண்ட பொலம்பூட் பல்லவ
தோள்துணை யாக மாவெள் ளாற்று
மேவலர்க் கடந்த வண்ணால் நந்திநின்

திருவரு நெடுங்கண் சிவக்கு மாகிற்
செருநர் சேரும் பதிசிவக் கும்மே
நிறங்கிளர் புருவந் துடிக்கி னின்கழல்
இறைஞ்சா மன்னர்க் கிடந்துடிக் கும்மே
மையில் வாளுறை கழிக்கு மாகில்
அடங்கார் பெண்டிர்
பூண்முலை முத்தப் பூண்கழிக்கும்மே
கடுவாய் போல்வளை அதிர நின்னொடு
மருவா மன்னர் மனந்துடிக் கும்மே
மாமத யானை பண்ணின்
உதிர மன்னுநின் னெதிர்மலைந் தோர்க்கே

என்னும் பாடலால் உணரலாம்

**62. செவிலி மகளது இளமை கூறி மறுத்தல்**

செவிலி, 'நந்திவர்மன் தன் தோள் வலிமையால் பகைவர் கைப்பற்றிய நிலப்பரப்பை மீட்டவன் ஆவான். அப்போது அவனுக்கு ஏற்பட்ட சோர்வை அறியாமல் என் மகள் தலைவனைக் காதலால் வருத்தினாள் என்று சொல்கிறீர்கள். எனினும் தொண்டைமாலை மீது ஆசை வைக்கும் பருவம் என் மகளுக்கு இன்னும் வரவில்லை' என்று தன் மகளின் இளமைக் கூறி மறுக்கிறாள். இதனை,

'ஓராதே என்மகளைச் சொன்னீரே தொண்டைமேல்
பேராசை வைக்கும் பிராயமோ - நேராதார்
ஆள்வலியால் கொண்ட அகன்ஞாலம் அத்தனையும்
தோள்வலியால் கொண்ட துயக்கு'

எனும் பாடல் தெரிவிக்கின்றது.

**63. தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்**

தோழி செவிலியை நோக்கி, 'நந்திவர்மன் இவளைத் தூங்கவிடாமல் சோர்வடையச் செய்தான். காலத்தில் தூங்கச் செய்தான், மயங்க வைத்தான், இவள் மனதை தன்வசமாக்கினான், மலர்ச் சோலையில் இவளுடன் கூடினான். அவன் தந்த ஆடையை வாங்கச் செய்தான், இதனை நான் உறுதியாகக் கூறுவேன். (இவள் காதல் நோய்க்குக் காரணம் நந்திவர்மன் தான்) என்று கூறி அறத்தொடு நின்றாள்.

### 64. மாயவித்தை செய்வோரைப் புகழ்தல்

கலம்பக உறுப்பு - சம்பிரதம்

உறுப்பு விளக்கம் - இந்திரசாலம் (மாயவித்தை) செய்வோரின் திறமையைப் புகழ்தல்

வட்டன்றே நீரிதனை மிகவுங் காண்மின்
மற்றைக்கை கொட்டினேன் மாவின்வித்தொன்
றிட்டன்றே பழம்பழுப்பித் துண்ணக் காண்மின்
இவையல்ல சம்பிரத மிகலிற் றெள்ளாற்
றட்டன்றே பொன்றும்வகை முனிந்த நந்தி
யவனிநா ராயணன்பா ராளுங் கோமான்
குட்டன்றே மழைநீரைக் குடங்கை கொண்டு
குரைகடலைக் குடிக்கிறேன் குடிக்கின்றேனே.

மாய வித்தை செய்யும் ஒருவன், நீங்கள் இதனைக் காண்பீர்; ஒரு கையிலிருக்கும் வட்டினை மறுகையில் காட்டுவேன். மாமரத்தின் விதையொன்றை நட்டு இப்போதே பழம் பழுக்கச்செய்து உண்ணத் தருவேன். இவையெல்லாம் பெரிய மாயச் செயலல்ல. தெள்ளாற்றுப்போரில் பகைவரைக்கொன்று அன்றே அழியும்படி செய்த அவனிநாராயணன் ஆகிய நாடாளும் நந்திவர்மனின் நாட்டுக் குளங்கள் மட்டுமல்லாது மழை நீரையும் கடல்நீரையும் உள்ளங்கையில் வைத்துக் குடிப்பேன் எனத் தன் ஆற்றல் தோன்றுமாறு கூறுகின்றான். இங்கு ஒரேநாளில் பகையை அழித்து முற்றுவித்த நந்திவர்மனின் வீரத்தினும் தன் செயல் பெரிதன்று என்பதை மாயவித்தைக்காரன் உணர்த்துகின்றான்.

### 3.6.65. தோழி தலைவியின் துயருரைத்தல்

‘நான்கு திசை நாடுகளையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டவன். நந்தி மனோதயன் என்னும் பெயர் கொண்டவன் உலகமெல்லாம் தன் வெண்கொற்றக்குடை நிழலில் வாழும் படி செய்தவன் நந்திவர்மன். அவனோடு உறவுடைய மகளிர் அல்லாத மற்றவரை நிலவொளி சுடாது; (உறவுடைய மகளிர் பிரிவால் வருந்தும்போது நிலவு சுடுகின்றது) எனத் தோழி தலைவி நிலையை உணர்த்துவாள்

### 66. தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்

நந்திவர்மன் கயிலையில் வீற்றிருக்கும் சிவனின் பாதங்களைத் தலையில் தாங்கியவன், மண்ணுலகத் திருமால் (அவனி நாராயணன்) என்னும் பெயரை உடையவன், தேன் மிக்க தொண்டைமாலை அணிந்தவன். தொண்டைமாலை அணிந்தவன். அவனுடைய தொண்டைமாலையைப் பார்த்தபின் அம்மாலை

இவளுக்குக் கைவளையினையும் உயிரையும் கொடுத்தன. (காதல் துயர் தீர்ந்தது) என்கிறாள் தோழி.

**67. தோழி வரைவு கடாதல்**

தோழியானவள், ‘காவல்புரிந்த தினைப் பயிர்கள் கதிரை ஈன்றன. எனவே காவல் காலம் முடிந்து ஊர் செல்லும் காலம் வந்துவிட்டது. நிலைத்த புகழை உடைய நந்திவர்மனின் நாட்டின் வட திசையில் உள்ள வேங்கட மலையில் உடல் மெலியும் வடிவோடு நம்மை தேடும் தலைவரின் நிலை என்னவாகும்? என்ன செய்வதென்று தோன்றவில்லை’ என்று கூறித் தலைவி இற்செறிக்கப்படுவாள் எனவே அவளைத் தலைவன் விரைந்து மணக்க வேண்டும் என்று உணர்த்துகிறாள்.

**68. நந்திவர்மன் சிறப்பினை ஆராய்ந்து கூறுதல்**

திணை - பாடாண்

பகை மன்னர்களே! நீங்கள் நந்திவர்மனுக்குரிய திறைப்பொருளைக் கொடுத்து விடுங்கள் அல்லது போர் புரிவதை விட்டுவிடுங்கள். போர் முரசும் ஒலிப்பதை நிறுத்திவிட்டு உங்களை அழிவிலிருந்து காத்துக்கொள்ளுங்கள். அவன் ஆட்சி உலகமெங்கும் நடப்பதனால் அவனைப் பணிந்து வாழ்வது அன்றிப் பிழைப்பதற்கு வேறு வழியொன்றும் இல்லை.

**69. தலைவன் தலைவியின் நலம் புனைந்துரைத்தல்**

தலைவன், ‘தாயானவள் சுருண்ட அழகிய கூந்தலை உடைய தலைவியின் செவ்வரி ஓடிய கண்களுக்கு மைதீட்டி வீதிகளில் செல்லவிட்டாள். நந்திவர்மன் ஆள்கின்ற மயிலாப்பூரில் வாழும் தலைவியின் தாய்க்கு உலகத்தாரோடு பகை ஏதேனும் உண்டோ? (தலைவியை அனுப்பிக் காதலால் அனைவரையும் துன்புற வைக்கிறாளே). என்கின்றான்.

**70. நந்தியின் புகழ்பாடி மதங்கி வாள் சுழற்றுதல்**

கலம்பக உறுப்பு - மதங்கு

உறுப்பு விளக்கம் - மதங்கி வாளேந்திச் சுழன்றாட அவளை ஒருவன் புகழ்வதாக அமைவது.

பகைவர் எவரும் இன்றி உலகை காக்கும் செங்கோல் உடையவன் நந்திவர்மன். அவனது வாள்போர் சிறப்பையும் செங்கோல் சிறப்பையும் பாடலாகக் கூறி ஆடுகின்ற மதங்கிக்கு நுண்ணிய இடையும் பருத்த கொங்கைகளும் உள்ளன. கொங்கைகளின் பாரம் தாங்காமல் அவளது இடை ஒடியும் முன்னர் அவள் ஆடுவதைத் தடுக்க வேண்டும்.

**71. செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்**

செவிலி, ‘பெண்ணே! தெள்ளாற்றுப் போரிலே தோற்ற பகைவர்கள் தெள்ளாற்றிலே மூழ்கி ஓட நந்திவர்மன் தன் சினம் தணிந்தான். ஆயினும்

அவனுக்குத் தலைவியிடத்து என்னகோபம்? இன்னும் அருளாததால் தன் வெண்சங்கு வளையலை இழந்தாள். பகைவர் நினைத்து அஞ்சும் வேந்தர் பிரானிடம் இவள் அன்பு கொண்டாள் என்றால் பழியாமோ? அ.ஂ.தில்லையே' என்று நற்றாயிடம் கூறுகிறாள்.

**72. தலைவன் பிரிவால் தலைவி இரங்குதல்**



வெண்சங்குகள் தூங்கும் முற்றத்தையும், அழகான வளையல்கள் அணிந்த பெண்கள் விளையாடும் மாமல்லபுரத்தின் தலைவனான நந்திவர்மனின் ஒப்பற்ற வெண்கொற்றக்குடையின் கீழ் வாழாத பகைவர்களை போல நானும் கண்மூடி உறங்காத நோயை அடையும் சூழலுக்கு ஆளானேன்' என்று தலைவி இரங்கிக் கூறுகிறாள்.

**73.**

'மேலும் கடல்காற்று வீசும் உப்பங்கழிகளில் உள்ள பனைமரத்தின் மடல்களில் நாரைகள் தங்கி வாழும் மாமல்லபுரத்தில், இரவின் வருத்தத்தில் பேச்சுத் துணை இல்லாமல் பரத்தையர்களின் அவப்பேச்சுக்கு ஆளான எனக்கு உயிர் பிழைக்க வழி உள்ளதா இல்லை, எனப் பலவாறாகத் தலைவி புலம்புகிறாள்.

**74. தோழி நந்திவர்மனை வினவுதல்**

'இனிய தென்றல்காற்று குளங்களையும், கழுநீர் மலர்களையும் தழுவி, சோலையின் சண்பக மலர்களைத் தழுவி கமுக மரத்தின் பாளையை மோதி வரும் குளிர்ந்த சோழ நாட்டை உடைய நந்திவர்மனே! வானுயர் வேங்கடமலை வரை உன் வீரத்தை செலுத்தும் விடேல்விடுகு என்னும் பெயர் உடையவனே! தெருக்களில் வலிமைமிக்க யானையில் வலம் வரும் உன்னை வணங்கும் மகளிருக்கு நீதியுடன் இருக்க வேண்டாமா? (காதலால் வருத்தமுறச் செய்யலாமா?) என தோழி வினவுகிறாள்.

**75. தலைவி நலன் எழுத இயலாதது**

தோழி, தெள்ளாற்றில் நடைபெற்ற போரில் வில்லில் நாணைப் பூட்டி பகை மன்னர்களின் முடியோடு அவர்களின் மனைவியரின் மங்கல அணியையும் போக்கியவன் நந்திவர்மன். அவன் ஆளும் மயிலாப்பூரில் வாழும் தலைவியின் கூந்தலும், கண்களும், புன்னகையும், நெற்றித்திலகமும், இளம் கொங்கைகள் தரும் இன்பமும் எழுதிக்காட்ட இயலாதவையாகும். (அவளது அழகைக் கூறி விளக்க இயலாதபடி மிக அழகு வாய்ந்தவள்)

**76. பாடல் முழுதாகக் கிடைக்கவில்லை:**

**77. தூதுவனை இகழ்ந்து தன்நாட்டுப் புகழ்கூறல்:**

கலம்பக உறுப்பு – மறம், உறுப்புவிளக்கம்: பெண்கேட்டு வந்த தூதுவனின் நாட்டு மன்னனை இகழ்ந்து தன்நாட்டுப் பெருமை கூறல்.

'தூதாக வந்தவனே, என் கையில் அம்பு மட்டுமே இருக்கிறது. வில் உடைந்துவிட்டது, கயிறு அறுந்தது, எனக்கும் வயதாகிவிட்டது. அதனால் சோர்வாக இருக்கின்றேன் என்று நினைத்தா உன் மன்னர் எம் பெண்ணை மணம்பேச அனுப்பினார். எங்கள் குடிசையில் இருக்கும் சிறிய கால்களும் நீண்ட வளைமரங்களும் பொன்னால் இயன்ற மணிகள் பதிக்கப் பெற்ற மாடங்கள் உடைய நந்திவர்மனின் சிவந்த பாதங்களை வணங்காத பகைநாட்டு மன்னர்களின் யானைகளுடைய கொம்புகளே; அவற்றைக் குனிந்து காண்பாயாக'.

**78. செவிலி தன்னுள் அழுங்கல்:**

செவிலி, பெண்கள் விரும்பி அணியும் குளிர்ந்த மலர்கள் மலரும் திருச்செந்தூர் முருகப் பெருமானை ஒத்தவன் நந்திவர்மன். அவனுடைய காவல் நின்ற காஞ்சிபுரம் போன்றவள் என்மகள். அவள் அன்போடு வளர்த்து வந்த மைனாவையும், பந்தினையும் என்னிடம் கொடுத்துவிட்டு என்னைத் தழுவிக் கொண்டாள். நேற்று நடந்த நிகழ்வினை அறிவற்ற நான் புரிந்து கொள்ளவில்லை. விலங்குகள் வாழும் கொடிய காட்டில் அவள் சென்றதை (தலைவனோடு) நான் அறியவில்லை. அவள் மிகுந்த மனவலிமை உடையவள். (எவ்வாறு சென்றாளோ)

(பிரிதற்கு முன் உணர்த்தலாக மைனாவைக் கொடுத்துத் தழுவினாள்)

**79. தோழி வரைவு கடாதல்:**

யானையில் வந்த நந்திவர்மனே! தெள்ளாற்றுப் போரில் பகைவர்களின் யானைகளையும் குதிரைகளையும் தனது கரங்களில் வெற்றிகொண்டவன் நீ; தொண்டை நாட்டின் தலைவனே! இரவுப்பொழுது தலைவிக்கே காதல் துயராய் நெடிதாகியது. எங்கும் பரந்து வீசும் வாடைக் காற்றும் சந்திரனும் அவளுக்குத் துயரம் தருவதால் நீ அவளைக் கூடுவாயாக. உனது தொண்டைமாலையினையும் கொடுத்தருள்வாயாக என்று தோழி தலைவனிடம் விரைந்து தலைவியை மணம் செய்துகொள்ளக் கூறுகிறாள். இதனை,

'நீண்டதாம் கங்குல் எங்கும் நிறைந்ததாம் வாடை பொங்கி
மூண்டதாம் மதியி னோடே முயங்குதார் வழங்கு தெள்ளாற்று
ஈண்டினார் பரியும் தேரும் இருகையென்று ஒருகை வேழம்
தூண்டினான் நந்தி இந்தத் தொண்டை நாடுடைய கோவே'

**80. நற்றாய் தலைவியின் காதலைக் கண்டித்தல்:**

நற்றாய் தலைவியை நோக்கி, நான் பெற்ற மகளே பூங்கொடி போன்றவளே! தெள்ளாற்றில் வெற்றிகொண்ட பெருமையோடு பகைவர்கள் துயரடையத் தோன்றியவன் நந்திவர்மன். தேன் நிறைந்து வழியும் வண்ணம் வயலில் மலர்ந்திருக்கும் குவளைமலர்கள் பெண்களின் கண்களை ஒத்திருக்கும்

காஞ்சிபுரத்தில், வெண்கொற்றக் குடையின் கீழ் தங்கிய உலகவர்க்கு அவனிடம் நீ கொண்ட காதல் ஒப்புமோ (குடைநிழல் நாடு எனும் பொருள்தர நின்றது.

**81. தோழி வரைவு கடாதல்:**

தோழி, 'கொம்புகளை உடைய யானைகளின் முன்பு நின்ற நந்திவர்மன் பகைவர்கள் அழியவும், அவன் தோற்கவேண்டும் என எண்ணிய தம்பியரின் எண்ணம் பொய்யாகவும் அவர்களை வென்ற பெருமை உடையவன். சோர, சோழ, பாண்டியரை வென்றவன். கொடையில் பாரியை ஒத்தவன். அத்தகைய நந்திவர்மன் தன் தலையில் சூடியிருக்கும் தொண்டை மாலையைக் கண்ட இளம் பெண்களின் வளையல்களைக் கழன்று விழச் செய்தல் முறையாகுமா' என்று சொல்லித் தலைவனிடம் வரைவு கடாவுகின்றான்.

**82 நந்திவர்மனைத் திருமாலாகக் கூறியது:-**

திணை— பாடாண்,

துறை- பூவைநிலை

நந்திவர்மனே! திருமாலின் வலக்கையில் சக்கரமும் இடக்கையில் சங்கும் பெற்றாய், மேலும் மயிலின் சாயலை உடைய மின்னலை ஒத்த மனைவியையும் பெற்று கரிய உருவம் கொண்டு திருமாலுக்கு ஒப்பாகும் பேற்றினை நீ பெற்றாய்' என நந்திவர்மன் திருமாலுக்கு இணையாகப் புகழ் பாடுகிறார் ஆசிரியர். இதனை,

'வலம்வரு திகிரியும் இடம்வரு பணிலமும்
மழைதவழ் கொடி போலக்
குலமயில் பாவையும் எரிகடல் வடிவமும்
இவையிவை கொண்டாயே,

எனும் பாடல் வருணிக்கிறது.

**83. தோழி வரைவு கடாதல்:-**

மலர் வனங்களில் மேகங்கள் தவழும். கடலின் அலைகளானது அவ்வனங்களில் வண்டுகளையும், முத்துக்களையும், சேற்றையும் வாரியடிக்கும் இத்தகைய மாமல்லபுரத்தின் தலைவனே! ஏழு மரா மரங்களை ஒரே அம்பினால் தொலைத்த பல்லவனே. (இராமன்) உனது தொண்டை மாலையை நினைத்துத் தலைவி வாடியிருப்பாள். அவளை நீ தழுவவேண்டும்.

**84. தலைவி தோழியரை வேண்டல்:-**

தலைவி, 'தோழியரே! நீங்கள் பேசும் திறன் இல்லாமல் போய் விட்டீர்களே. தன் போர் ஆற்றலால் குருக்கோட்டையில் அம்புகள் தொடுத்து வென்ற அவனது அருளை உடல் மெலிவு அடையாமலும், சோர்வடையாமலும் எளிதாகப்

பெற்றிருக்கலாம். வேண்டியவற்றைக் கேட்காமல் வந்தீர்களே!", என்று கூறி தன்துயரைத் தலைவனிடம் தெரிவிக்க வேண்டுகிறாள்.



**85.தோழி தலைவனை தலைவிக்கு அருள் செய்ய வேண்டல் :-**

தோழி, 'யானைகளையும், குதிரைகளையும், தேரையும் கொண்டு போரிட வந்த பகைமன்னர்களைக் கண்டு அச்சம் கொள்ளாமல் தெள்ளாற்றுப் போரில் கடம்பூரை முற்றுகையிட்டு பகைவர்கள் இறந்து மேலுலகம் அடையும்படி வென்ற நந்திவர்மனே. என் தோழி, நீ அவளது தங்கையர்க்கே அருள் செய்வதாகக் கூறுகிறாள். அவளது துயரை நீ அறிந்து அருள் செய்ய வேண்டும்' என்கிறாள்.

**86.தோழி நந்திவர்மன் சிறப்பு கூறல்:-**

பகைவர்களின் படைகளைத் தெள்ளாற்றில் விழுந்து இறங்கும்படி போர்புரிந்தவன் நந்திவர்மன். அவன் கச்சை அணிந்த குங்குமம் அணியப்பெற்ற கொங்கைகளின் தழுவலில் மகிழ்ந்து விளை வயலில் பெற்ற வருவாயை மகிழ்ந்து ஈவான்.

**87.தோழி தலைவி துயர் கூறியது:-**

'தலைவி ஆயர் இசைக்கும் புல்லாங்குழலின் ஓசையால் காதல் துயர் மிகுதியாகித் தாங்க முடியாதவள் ஆகிறாள். நந்திவர்மன் நாடுதோறும் தன் போர்த்திறனால் பொருட்கள் நிறைந்த சாலைகளைப் பெற்றிருப்பவன். அவன் வருவதை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இவளுக்கு மாமரத்தில் அமர்ந்து இனிய ஓசை எழுப்பும் குயில்களால் எத்தகைய துன்பம் நேருமோ? (காலம் கண்டு கூறியது)

**88.தலைவி நாரையைத் தூதுவிடல்:-**

நந்திவர்மனின் மாமல்லபுர நகரில் உப்பங்கழிகளிலும் சோலைகளிலும் உலவும் நாரையே, திருமாலான நந்தியின் துளசிமாலையை நான் அடையவில்லை, தூது சென்ற தோழி வறிதே திரும்பினாள். இதனை நீ அறிவாயா? யானை உண்ட விளாங்கனி போல் என் வறிய உடலைக் கண்டாய். மலரம்புகளை மன்மதன் எறிந்து வஞ்சத்தையும் கண்டாய். என் துயரங்களை அறிந்தாய்; அதனால் தலைவனிடம் தூதுசென்று என் துயர் உரைப்பாயாக என்கிறாள் தலைவி.

**89. தலைவி தலைவனின் மாலையைப் புகழ்தல்:-**

தலைவி, 'தோழி என்னை நானே புகழ்ந்து கொண்டேன் என நினைக்காதே! என் கால்களைப் பிடிக்கும் தோழியர்களின் கைகளில் அரசர்க்கெல்லாம் அரசனான நந்திவர்மனின் திருமுடியில் அணிந்திருக்கும் தொண்டை மலர் மாலையின் மணம் வீசும். (நந்திவர்மன் மாலை மிக்க மணமுடையது அதனையே நான் விரும்புகிறேன்) என்கிறாள். இதனை,

குறிப்புகள்

□என்னையா னேபுகழ்ந்தேன் என்னாதே எப்புவிக்கும்
மன்னர்கோன் நந்தி வரதுங்கன் - பொன்முடியின்
மேல்வருடும் தொண்டை விரைநாறும் இன்னமும் என்
கால்வருடும் சேடியர்தங் கை”

எனும் பாடல் எடுத்துரைக்கும்.

**90. தலைவன் தலைவியின் இடையைப் புகழ்தல் :-**

ஈ பறக்கும் காற்றுக்குப் பொறுக்காத தலைவியின் இடை; அவள் மெலிந்த இடை இரு கொங்கைகளாகிய குடங்களையும் இடையில் தாங்கிய பொன்குடம் ஆகிய மூன்று குடங்களையும் தாங்குகையில் நந்திவர்மனின் மலை மூங்கில் மரங்களில் நுழைந்து வரும் மிகுந்த காற்றுக்கு எவ்வாறு தாங்கும்? (முறிந்துவிடும்) என்கிறான் தலைவன்.

**91.நந்திவர்மனின் கொடைப் பெருமை:-**

கொடைத்தன்மை உடைய கரங்களை உடைய நந்திவர்மன். உலகத்தின் காவலன் ஆகிய பல்லவமன்னன். அவன்மீது குளிர்ந்த தன்மையான வளமான பாடல்களைப் பாடிய புலவர்கள் அனைவரும் நிரம்பப் பரிசுகளைப் பெற்று மன்னர்களாக மாறிவிட்டனர். எனவே பூமியில் இரவலர்கள் உண்டு என்று சொன்னால் அந்த இரவலர் என்ற சொல் வறியவரைக் குறிக்காமல் இரவில் மலரும் அல்லிமலரையே குறிக்கும்.

**92.தோழி நந்தியின் நாட்டு வளம் கூறல்:-**

நந்திவர்மனின் நாடானது முத்துவளம் மிக்கது எவ்வாறு எனில் காலில் அணிந்துள்ள சிலம்புகளில் பதித்துள்ளனவும், மேலாடையை அலங்கரிப்பனவும் அரசர்கள், கூட்டமாக வருபவர்களின் கைகளில் விளக்காக இருப்பதும், ஊர்மக்கள் தங்கள் வீடுகளில் விளக்காகப் பயன்படுத்துவதும், நந்திவர்மனின் போர்களத்தில் பாடி வீடுகளில் விளக்காகப் பயன்படுவனவும், காதணி, மூக்கணி, தலையணி ஆகியனவாக அமைந்துள்ளனவும் அவன் நாட்டில் கிடைக்கும் முத்துக்களே ஆகும்.

**93.தோழி தலைவி பிரிவுத்துயர் கூறல் :-**

நந்திவர்மன் தான் காதல் கொண்ட மானை ஒத்த தலைவியைப் பிரிந்தபோது இமயமலையும் தளர்வடையும், ஏழுகடல்களும் கலங்கும், மன்மதன் மலரம்புகளை எய்து வருத்துவான், நிலவு தன் ஒளியால் துன்புறுத்தும் என்று தோழி தலைவியின் பிரிவுத்துயரைக் கூறுகிறாள்.

**94.பகைநாட்டின் அழிவிற்கு வருந்தல் :-(கொற்றவள்ளை)**

திணை - வஞ்சி, துறை- கொற்றவள்ளை

நந்திவர்மனின் பகை நாடுகள் மிகுந்த வளம் உடையன. அவன் அந்நாடுகள் மேல் போர் செய்வதற்கு முன்னால் மக்கள் ஒலியினையும், தாமரைத் தடாகங்களையும், அழகான சோலைகளையும், தேரினையும் உடையதாக இருந்தன என்று கூறுவர். நந்திவர்மன் அந்நாடுகள் மீது சினம் கொண்டு போர் செய்தபின் மேற்கண்ட அத்தனை வளங்களும் அழிந்து போகும்.

குறிப்புகள்

**95. தலைவன் தேர்ப்பாகனுக்கு உரைத்தல்:-**

அழகிய தேர்களும், நாடுகள் தோறும் பொருட்சாலைகளும் கொண்டவன் நந்திவர்மன். அவனுடைய தெள்ளாற்று நகரில் உள்ள மலையில் மணம் பொருந்திய கூந்தலை உடைய தலைவி காணுமாறு நம் தேருக்கு முன்பே மேகம் செல்லுமானால் அதைக்கண்டு அவள் வயிற்றில் கைவைத்து கொண்டு போர்க்களத்தில் நாம் என்ன ஆனாமோ என்று வருந்தியிருப்பாள். (கடமை முடிந்து கார்காலத்தில் வருவதாகக் கூறிய தலைவன் காலம் கடந்து வர அவனுக்கு முன் விரையும் கார் மேகங்களைப் பார்த்துத் தலைவி வேதனைப்படுவாள் எனத் தலைவன் பாகனிடம் உரைக்கின்றான்).

**96.தலைவி கார்காலம் கண்டு துன்புறுதல்:-**

தலைவி, 'எப்போதும் சிவனை மறவாது மனதில்கொண்டு வணங்குபவனும் வெற்றியும் நிறைந்தவன் நந்திவர்மன். அவனது ஊரில் வண்டுகள் குவளைமலர்களில் தேனருந்துகின்றன, தும்பிகள் நீர்ச்சுழலில் விளையாடுகின்றன, அவர் வருவதாகச் சொன்ன கார்காலம் தொடங்கிவிட்டது, அவர் வராததால் என் துயர் பெருகுகிறது வராமல் பழியைச் செய்யும் என் காதலர் வருவேன் என்று கூறியது கதையாய்ப் போனது என்று கூறி வருந்துகிறாள்.

**97.தலைவி நந்தியின் மாலைச்சிறப்பு கூறல் :-**

'மதநீர் கொண்ட யானைகளை உடைய நந்திவர்மனுக்கே எம் கொங்கைகள் உரிமையானவை. எனவே, ஒருநாள் அவனது மாலை என் கொங்கைகளில் கிடந்து புரள்வது உறுதி. அதற்கு முன்பாக அம்மாலை தெருவெங்கும் மணம் தந்து இன்பம் தருகிறது' என்று தலைவி நந்திவர்மனின் தொண்டை மாலையைப் புகழ்கிறாள்.

**98.தலைவி தன் பிரிவுத்துயர் உரைத்தல் :-**

'செம்மையான மாலையணிந்த நந்திவர்மனின் சிறுகுடி நாட்டில் வாழும் அன்னப்பறவையே! காதல் கொண்ட ஆணின் உயிர் பெண்ணிடத்தும் பெண்ணின் உயிர் ஆணிடத்தும் மாறி இருப்பதால் அவரவர் உயிர் அவரவருக்கு உரிமை இல்லையா? இறந்தால்தானே உயிர் உடலை விட்டுப் போகும்? இறக்காது இருந்தும் என் உயிரை நான் காணவில்லை' என்று தலைவி தான் பிரிவால் உயிரற்ற நிலையில் இருப்பதாக அன்னத்திடம் தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறாள்.

**99. தலைவி கார்காலம் கண்டு துன்புற்றது :-**

தலைவி, 'தலைவனைப் பிரிந்த தலைவியர்கள் கண்ணீர் வடிக்கும் கார்காலம் இது. மலரம்புடன் மன்மதனின் வில் வளைக்கப்பட மயில்கள் நடனமிடும் காலம், கொன்றைப் பூக்களின் நிறம் போல மார்பகங்கள் பசலை கொள்ளும் காலம், கொன்றை மரங்கள் பூக்கள் தூவும் காலம், தாமரைகளும் முல்லைகளும் மொட்டவிழும் காலம். மேகத்தைப் போல குறைவில்லாது வழங்கும் நந்திவர்மனின் அருளை (காதலை) நாம் பெறாத காலம். தலைவனிடம் உயிர் சென்று விட இங்கு உடல் மட்டும் வருந்தி இருக்கும் காலம், இருவரும் தனித்தனியாகப் பிரிந்திருந்து (தனிமைத்துயராய்)வருந்தும் காலம் ' என்று கார்காலம் கண்டு பலவாறாகப் புலம்புகிறாள். இதனை,

"மங்கையர்கண் புனல்பொழிய மழைபொழியும் காலம்
மாரவேள் சிலைகுனிக்க மயில்குனிக்கும் காலம்
கொங்கைகளும் கொன்றைகளும் பொன்சொரியும் காலம்
கோகனக நகைமுல்லை முகைநகைக்கும் காலம்
செங்கைமுகில் அனையகொடை செம்பொன்பெய் மேகத்
தியாகியெனும் நந்தியருள் சேராத காலம்
அங்குயிரும் இங்குடலும் ஆனமழைக் காலம்
அவரொருவர் நாமொருவர் ஆனகொடுங் காலம்"

என்னும் பாடல் விளக்குகின்றது.

**100. தலைவி கார்காலம் கண்டு வருந்துதல் :-**

தலைவி, 'என்நிலை கண்டு அன்னையரும் தோழியரும் ஏசுகின்றனர். ஆனி, ஆடி முடிந்து கார்காலமாகிய ஆவணி தொடங்கிவிட்டது. புன்னை, பிச்சு, மல்லிகை மலர்கள் மலரத்தொடங்கிவிட்டன. நெல் வயல்களில் பறவைகள் நிறைந்திருக்கும் வளமான நாட்டை உடைய கொடைவள்ளல் நந்திவர்மனின் தோள்களைச் சேராததால் என் துன்பம் அதிகமாக, சந்திரனின் ஒளி நெருப்பை அள்ளி இறைக்கிறது தலைவன் என்னை மறந்தாரே' என்று கார்காலம் கண்டு புலம்புகிறாள்.

**101. தலைவி தூதாக வந்த பாணனைப் பழித்தல் :-**

கலம்பக உறுப்பு - பாண்,

உறுப்பு விளக்கம் - தலைவன் பரத்தை இல்லாமல் சென்று மீள்கையில் பாணனைத் தலைவியிடம் தூதனுப்ப, தலைவி பாணனைப் பழித்தல்.

தலைவி பாணனைப் பார்த்து, 'பாணனே நந்திவர்மனின் தூதாக வந்தவனே, நீ என் தங்கையரான பரத்தையர் வீட்டிலிருந்து பாடியதை

விடிகின்ற வரையும் கேட்டோம். அதனைக் கேட்ட தாய் காட்டில் பேய் அழுகின்றது என்றாள். பிறர் நரி ஊளையிடுகிறது என்றார்கள். தோழிதான் நாய் என்று சொன்னாள். நானோ நீ (பாணன்) என்றேன். (நாய் யாவர்க்கும் நன்றியுடன் இருப்பதால் இடித்துரைப்பதாகப் பாணனை அவ்வாறு கூறினாள்). இதனை,

'ஈட்டு புகழ்நந்தி பாணநீ எங்கையர்தம்

வீட்டிலிருந்து பாட விடிவளவுங் - காட்டில் அழும்

பேய் என்றாள் அன்னை பிறர்நரிஎன் றார்தோழி

நாய்என்றாள் நீஎன்றேன் நான்'

எனும் பாடல் விளக்குகின்றது.

**102. மகட்போக்கிய செவிலி உரைத்தது:-**

செவிலி, 'கோட்டையை இடித்து அகழியாக்கி, அகழியைத் தூர்த்து மேடாக்கி, பகைவர்களின் நாட்டை அழித்துச் செல்லும் ஆண் யானையைக் கொண்ட நந்திவர்மனின் வளநாட்டில், பொன் அணியான காதிலணிந்த அணியைக் கடந்து, சுருண்ட கூந்தல் வரை சென்று திரும்பும் அழகிய கண்களை உடைய என் மகளா செல்வதற்கு அரிய இப்பாலைவனத்தில் நடந்து செல்வது? சென்றாளே' என்று தலைவி உடன்போக்கு சென்றதைக் கூறிப் புலம்புகிறாள்.

**103. தலைவி பிரிவுத்துயரால் வருந்துதல்:-**

தமிழைக் கற்று ஆய்கின்ற நந்திவர்மனின் மார்பைத் தழுவாமல் வேகின்ற என் உடம்பில் தோழியர்கள் சந்தனம் என்று சொல்லித் தீயின் சாற்றைத் தடவுகின்றனர். (பிரிவுத் துயரால் குளிர்ந்த சந்தனமும் தீயாய் சுட்டது)

**104. தலைவி மகனைப் பழித்தல் :-**

தலைவி, 'நந்திவர்மனோடு உறவுகொண்ட பெண்களை எனக்கு எதிராக்கி என்னை வருத்தமுறச் செய்து, உடலை மெலியச் செய்து ஆடைகளைத் தூய்மையற்றதாக்கி உடம்பை அங்காடிக்கு இட்ட பதர்போல ஆக்கி என் கணவரின் கண்களுக்கு என்னைப் பிடிக்காதவளாய் செய்துவிட்டாயே இதுதான் உன்னைப் பெற்றதன் பயனா?' என்று தன் மகனைக் கண்டு கூறுகிறாள். (தலைவி, குழந்தை பிறந்தபின் தலைவன் பரத்தையர் இல்லத்திலிருந்து வராமல் இருந்தபோது, குழந்தையால்தானே அவன் நம்மைப் பிரிந்தான் என்று குழந்தையைப் பழித்தல்).



**105. தலைவன் தலைவியிடம் மேகத்தைத் தூதுவிடல்:-**

கலம்பக உறுப்பு - மேகம், உறுப்பு விளக்கம் - ஆண்பால் தூதில் தலைவன் தலைவியிடம் மேகத்தைத் தூதுவிடல்.

குறிப்புகள்

தலைவன் 'தேரைக் கடந்து நந்திவர்மனின் நாட்டில் தலைவி இருக்கும் திசை நோக்கி செல்லும் மேகங்களே! நீங்கள் செல்லும் வழியில் நந்தியின் நாட்டில் தலைவியைக் கண்டால் உங்களைப் போல் விரைவாக ஓடாத தேரில் தலைவி இன்றி வாடும் உயிரற்ற உடலோடு கூடு உன்னைத் தேடி வந்து கொண்டிருக்கிறது என்று சொல்லுங்கள்' என்று கூறி மேகத்தைத் தலைவியிடம் தூதனுப்புகிறான். இதனை,

"ஓடுகின்ற மேகங்கள் ஓடாத தேரில்வெறுங்
கூடு வருகுதென்று கூறுங்கோள் - நாடியே
நந்திச்சீ ராமனுடை நல்நகரில் நன்னுதலைச்
சந்திச்சீ ராமாகில் தான்".

எனும் பாடல் உணர்த்துகின்றது.

**106. தலைவி நிலவுகண்டு இரங்குதல் :-**

தலைவி, 'உலக மக்கள் வறுமை இன்றி வாழ, மழைபோலப் பயன் கருதாது வழங்கும் கையை உடைய தமிழ் ஆராயும் நந்திவர்மனின் நாட்டில் பெண்களே பிறக்காத நகரத்தில் பிறந்தவர்களைப் போல, என்மீது உன் ஒளியால் துன்பம் செய்கின்றாயே. உனக்கு ஏன் என் மீது இத்தனை பகை (உன் கதிர்களால் துன்பம் தருகிறாயே)' என்று நிலவை நோக்கிப் புலம்புகிறாள்.

**107.தலைவி வேனிற்காலம் கண்டு வருந்துதல்:-**

தலைவி, 'மன்மதன், உயிரைப் போக்கும் குவளைமலர் அம்பினை எடுத்தான், கரும்புவில்லையும் கையிலெடுத்தான் மேலும் மலரம்புகளைத் தேடி சோலைக்குள் சென்றான். இனி உயிரைக்காத்தல் கடினம். எனவே என் உடலில் இருந்து உயிர் நீங்கும் முன் என் நிலையைத் தலைவனிடம் செல்பவர்கள் யார்? (காதல் துயரால் உயிர் நீங்கும் துன்பம்) என்று வேனிற்காலம் கண்டு வருந்தி உரைக்கின்றாள்.

**108. தலைவி நந்திவர்மனின் கொடைத்திறன் கூறுதல்:-**

திணை - பாடண், துறை - பாடாண்பாட்டு

தலைவி, ' நிலைபெற்ற புகழையும், மானத்தையும் உடையவன் நந்திவர்மன். அவனுடைய நட்பினைப் பெற்ற இந்நாளில் திருமகளின் மூத்தவளான மூதேவியின் உறவை ஒழித்தோம். (வறுமைத் துயர் நீங்கியது) நந்திவர்மனால் வாழ்வில் திருமகள் (செல்வம்) திளைத்தாள்'. என்கிறாள்.

**109. தலைவன் இயலிடம் கூறல் :-**

தலைவன், 'மண்ணுலகத் திருமாலான தேசபண்டாரி என்ற பட்டம் பெற்றவன் நந்திவர்மன். அவனது தெள்ளாறு எனும் ஊரில் உள்ள மலையில் வாழ்கின்ற தலைவியின் கூந்தல் மழைமேகத்தை ஒத்தது, அவள்

கொங்கைகள் மார்பணிக்கு அடங்காமல் விம்மிப் பருத்து இருக்கும். அவளுடைய சொற்கள் இனியான, மதிமுகத்தில் வியர்வை துளிர்க்கும். உடம்பு மாந்தளிரை ஒத்த மென்மையானது. கண்கள் காதுவரை நீண்டன என்கிறான்.

**110. கையறுநிலை :-**

திணை - பொதுவியல், துறை கையறுநிலை

'நந்திவர்மனை! நிலவினை ஒத்த உன் முகஅழகு அந்த நிலவிடமே சென்றது.

பரந்த உன்புகழ் கடலிடம் சென்றது புலியை ஒத்த உன் வீரம் காட்டில் வாழும் புலியை அடைந்துவிட்டது. இதுவரை கொடுத்துச் சிவந்த உன் கரங்களின் கொடைத்தன்மை கற்பக மரத்தை அடைந்து விட்டது இதுவரை உன்னிடம் இருந்து செல்வம் பெருக்கிய திருமகள் திருமாலைச் சென்றடைந்தாள். உன் உடலை நெருப்பு எடுத்துக் கொண்டது. இனி நானும் என் வறுமைத் துயரும் யாரிடம் சொல்ல முடியும்? எங்களுக்கு ஆதரவாக யார் உள்ளார்கள்? என் தந்தை போன்றவனே நந்தியே! ' என்று நந்திவர்மன் இறந்த நிலையில் புலவர் கையற்றுப் புலம்புவதை,

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
யானும் என்கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயா பரனே"

எனும் பாடல் எடுத்தியம்புகிறது. இவ்வாறு மன்னன் ஒருவன் இறந்துபட்ட நிலையில் அவனிடம் முன்பு பரிசில் பெற்றுப் பயனடைந்த புலவர்கள் அவன் இழப்பை எண்ணி கையற்று வருந்திப் பாடுதலே □கையறு நிலை□ எனப்படும்.

**111. நந்திவர்மன் நாட்டு மறவர் தன்நாட்டின் வீரம் உரைத்தல்:-**

கலம்பக உறுப்பு - மறம்

மறவன் 'பெண் கேட்பதற்காக, வேற்று நாட்டு மன்னன் அனுப்பிய தூதுவனே! உன்னைக் கொன்று விண்ணுலகம் அனுப்புவேன்! நீ கொண்டுவந்த ஓலையைத் திருமுகம் என்கிறாய்! அப்படியெனில் இதில் கண்கள் எங்கே, வாய் எங்கே, காதுகள் எங்கே பனை ஓலைச் சுருள்தான் அரசனின் முகமா? இது காலத்தின் கோலமோ எண்திசையும் அருள் பரப்பும் அம்பலவாணனாகிய

சிவபெருமானே இது வலிய பாவத்தால் வந்ததா? நந்திவர்மனின் மறவர் நாட்டில் பெண்கொடு என்று கேட்பவனின் வாயைக் கிழி தூதனின் காதை அறு இங்கே பெண்ணும் இல்லை மண்ணும் இல்லை' என்று சினத்துடன் கூறுகின்றான்.





**112. தலைவி கார்காலம் கண்டு இரங்கியது :-**

கலம்பக உறுப்பு - காலம்,

உறுப்பு விளக்கம் - கார்ப்பருவத்தால் தலைவி பெற்ற துயர்

'கார்கால மேகம் மழை பொழியும் காலம். முன்பு தலைவனை உறவாக்கிய தெய்வம் இன்று பகையாக்கிய காலம் தலைவர் வருவார் என வழிப் பார்த்திருக்கும் காலம், கடுமையான தீவினை உடைய நான் அவன் நினைவில் தனிமையில் வாடுகின்ற காலம், தலைவன் நிலையை யாரும் எனக்கு எடுத்துரைக்காத காலம், ஊரெல்லாம் உறங்க தோழியே நாம் இருவர் மட்டும் உறங்காமல் துயர்படுகின்ற காலம், நந்திவர்மனின் தோள்களைக் கூடி மகிழாத இக்காலம் நம்மை இருவரையும் மேலுலகம் அனுப்பும் காலம்' எனக் கார்காலம் கண்டு தலைவி புலம்புகிறாள்.

**113. தலைவியின் பிரிவுத்துயர் :-**

தலைவி, 'என் துன்பம் போக்கும் தாயே! அம்பு தைத்த புண்ணுக்காக நீ என்மேல் தடவுவது மருந்தா அல்லது வேறு ஏதேனும் ஒன்றா? புலவர்களின் வறுமையைத் தீர்த்து அவர்கள் வாழ்வை வளமாக்கிய நந்திவர்மன் என் காதல் துயரைத் தீர்க்காமல் இருக்கின்றானே இது நியாயமா'? என்று பிரிவுத்துயரால் இரங்கிக் கூறுகிறாள். இதனை,

'இரும்புழுத புண்ணிற்கு இடுமருந்தோ அன்றோ
அருந்துயர் தீர்க்கும் அனையே - பெரும்புலவர்
தன்கலியைத் தீர்க்கும் தமிழாகரன் நந்தி
என் கலியைத் தீர்ப்பான் இலன்'

எனும் பாடல் உணர்த்துகின்றது.

## 4.3 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

**இரு மதிப்பெண் வினாக்கள்**

1. மன்மதன் வீசும் மலரம்புகள் எவை?

மா, அசோகு, முல்லை, தாமரை, குவளை

2. சம்பிரதம் என்றால் என்ன?

மாயவித்தை செய்வோர் தம் இந்திரசாலம் கூறுதல்

3. மதங்கு என்றால் என்ன?

மதங்கி வாளேந்திச் சுழன்றாடுதலைக் கூறுவது

4. விடேல் விடுகு எனப்பட்டவன் யார்?

நந்திவர்மன்

5. தலைவி நந்திவர்மனிடம் தூது விடுத்த பொருட்கள் எவை?

நாரை, நெஞ்சம்

6. தலைவன் தலைவியிடம் தூது அனுப்பியதுஎதனை?

மேகம்.

7. பாணன் பாட்டினை எவற்றோடு தலைவி ஒப்பிட்டுரைத்தாள்?

பேய், நரி, நாய் ஆகியவற்றின் கூச்சல்

**குறுவினா**

8. அறத்தொடு நிற்றலைக் கலம்பக வழி விவரிக்க

63, 66, 71 ஆகிய எண்ணுள்ள பாடல்களின் செய்திகள்

9. மகண்மறுத்தல் எனும் உறுப்பில் அமைந்த நந்திக் கலம்பகப் பாடலை விளக்குக

62 ஆம் எண்ணுள்ள பத்திச் செய்தி

10. சம்பிரதம் எனும் உறுப்பில் அமைந்த நந்திக் கலம்பகப் பாடலை விளக்குக

64 ஆம் எண்ணுள்ள பத்திச் செய்தி

11. மதங்கு எனும் உறுப்பில் அமைந்த நந்திக் கலம்பகப் பாடலை விளக்குக

70 ஆம் எண்ணுள்ள பத்திச் செய்தி

12. பாண் எனும் உறுப்பில் அமைந்த நந்திக் கலம்பகப் பாடலை விளக்குக

101 ஆம் எண்ணுள்ள பத்திச் செய்தி

13. கையறு நிலைத்துறையில் அமைந்த நந்திக் கலம்பகப் பாடலை விளக்குக

110 ஆம் எண்ணுள்ள பத்திச் செய்தி

14. கார்காலம் கண்டு தலைவி வருந்திய பாடற் கருத்தை விளக்குக.

96,99 ஆகிய எண்ணுள்ள பாடல்களின் செய்திகள்

15. மறம் எனும் உறுப்பில் அமைந்த நந்திக் கலம்பகப் பாடலை விளக்குக

111 ஆம் எண்ணுள்ள பத்திச் செய்தி

**பெருவினா**

16. நந்திக் கலம்பகத்தின் அகச்செய்திகளை விளக்குக.

63, 65, 66,67, 71, 79, 81, 96,99 முதலான பல பாடல்களின் கருத்துக்கள்

17. நந்திக் கலம்பகத்தில் காணலாகும் புறச்செய்திகளை விளக்குக.

61, 64,82, 86, 91, 94, 108, 110 முதலான பல பாடல்களின் கருத்துக்கள்

## கூறு : 5 பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு

### 5.1 அறிமுகம்

விட்டுணுவை முதலாக உடையது வைணவ சமயம். இடைக்காலத்தில் அயற்சமயங்களை எதிர்த்து வைணவ சமயத்தைப் பரவலாக்கிடப் பல அடியவர்கள் முனைந்தனர். அவர்களுள் பாடல் பாடிப் பரவிய அடியார்கள் ஆழ்வார்கள். இறைவனுடனான பக்திக் காதலின் ஆழங்காற்பட்டவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் பன்னிருவர் ஆவர். வைணவ சமயப் பாடல்களைப் பாசுரம் என்பர். இப்பாசுரங்களின் தொகுப்பு நாலாயிர திவ்யப் பிரபந்தம் என வழங்கப்படுகின்றது. இவற்றுள் முதலாயிரமாகப் பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு முதல் மதுரகவியாழ்வாரின் கண்ணிநுண் சிறுத்தாம்பு வரை 947 பாடல்களும் முதலாயிரமாகவும் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் ஆகியவற்றின் 1134 பாடல்கள் இரண்டாமாயிரமாகவும் பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதி முதல் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமடல் வரை 593 பாடல்கள் மூன்றாம்

ஆயிரமாகவும் நம்மாழ்வாரின் திருவாய்மொழி 1102 பாடல்கள் நாலாம் ஆயிரமாகவும் அமைகின்றன. 24 பிரபந்தங்களுக்கு 3776 பாடல்களை உடையது.

## 5.2 பெரியாழ்வார்



பாசுரம் பாடிய பன்னிருவருள் ஒருவர் பெரியாழ்வார். பாண்டிய நாட்டுத் திருவில்லிபுத்தூரில் முகுந்தர் பதுமை இணையருக்குப் பெரியாழ்வார் பிறந்தார். இவரைக் கருடாழ்வாரின் அம்சமாய்க் கருதுவர். இயற்பெயர் விஷ்ணுச்சித்தர் என்பதாகும். திருவில்லிபுத்தூர் இறைவனைப் பிருந்தாவனத்துக் கண்ணனாகக் கருதி மாலை தொடுத்துத் திருத்தொண்டு புரிந்து வந்தார்.

பாண்டிய மன்னன் சீவல்லப தேவனுக்குப் பரம்பொருள் குறித்து எழுந்த ஐயத்தை நீக்கிப் பொற்கிழியும் பட்டர் பிரான் என்ற பட்டமும் பெற்றவர். இவர் பாடிய நூல்கள் திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும் ஆகும்.

## 5.3 திருப்பல்லாண்டு

பாட்டுடைத் தலைவர் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்திப் பாடுவது பல்லாண்டு எனும் பிரபந்தமாகும். பாடல்தோறும் பல்லாண்டு பல்லாண்டு வாழி எனும் பொருளில் பாடப்பெறுவது. சைவ இலக்கியத்தில் சேந்தனார் என்பவர் திருப்பல்லாண்டு பாடியுள்ளார். பாண்டியன் சீவல்லப தேவன் தனது ஐயத்தை நீக்கிப் பொற்கிழியைப் பெற்ற பெரியாழ்வாரை யானை மேல் அமரவைத்து ஊர்வலமாக அழைத்து வந்து பாராட்டி மகிழ்ந்தான். பெரியாழ்வார் யானை மீது வரும் காட்சியைக் காணக் கருட வாகனராய்த் திருமகளுடன் திருமால் வானில் தோன்றினார். அப்போது அக்காட்சியைக் கண்ட பெரியாழ்வார் திருமாலின் தோற்றத்தைக் கண்டவர்களால் கண்ணூறுபடும் என்றஞ்சிப் பாடியது திருப்பல்லாண்டு ஆகும். எம்பெருமானிடம் அவனுக்கே நன்மைகளை வேண்டி ஆழ்வார் பாடிய பிரபந்தமே திருப்பல்லாண்டு ஆகும். திருப்பல்லாண்டில் காப்புச் செய்யுள் 1, நூல் 10 நூற்பயன் என 12 பாடல்கள் உள்ளன.

### 5.3.1 காப்பு : குறள்வெண்செந்துறை

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன் செவ்வடி செவ்வி<br>
திருக்காப்பு.

(1) மல்லர்களை வென்ற வலிமையான திண்ணிய தோளையுடைய நீல மணி நிறத்தவனே; பற்பல கோடி லட்சம் ஆண்டுகளிலும் உன் சிவந்த திருவடிகளுக்குப் பாதுகாப்பு உண்டாகட்டும் என்று இறைவனுக்குப் பல்லாண்டு பாடிப் பெரியாழ்வார் காப்பிடுகின்றார். மேலும் நின் திருவடிகளே அடியவர்க்குச் சிறந்த காவல் எனும் பொருளும் தொக்கி நிற்கப் பாடியுள்ளார்.

### 5.3.2 திருமகளுக்குப் பல்லாண்டு

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே.

(2) அடியவர்களாகிய எமக்கும் இறைவனாகிய உனக்கும் எப்போதும் பிரிவின்றி இருக்கவேண்டும். உன் திருமேனி ஒளிக்குக் காரணமாக உன் மார்பில் வலப்புறம் தங்கிய திருமகள் பல்லாண்டு விளங்குவதாகுக. உன் வலக்கரத்தில் திகழ்ந்து ஒளி வீசுகின்ற சக்கரப்படையும் இடக்கரத்தில் இருந்து போரில் பேரொலி செய்யும் பாஞ்ச்சன்னியமாகிய சங்கும் எப்போதும் மங்களத்துடன் பல்லாண்டு நிலைப்பதாகுக.

### 5.3.3 அடியாரைப் பல்லாண்டு பாட அழைத்தல்

வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் இராக்கதர் வாழ் இலங்கை
பாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

3 எம்பெருமானுக்கு அடியவராக இருந்து நிலைத்தவர்களாக இருந்தால் எம்முடன் வந்து திருமாலின் விழாவிற்கான திருத்தொண்டு புரிவீர். திருமுளைத் திருநாளுக்கு (உற்சவத் தொடக்கம்) மண்ணைச் சுமந்து மணம்பெற வாருங்கள். சோற்றுக்கு அயலாரிடம் அடிமைப்பட்டு இருப்பவரை எங்களுடன் சேர்க்கமாட்டோம். இறைவனுக்குத் தொண்டுபுரிந்து வாழ்வதால் எங்களுடைய ஏழு தலைமுறை வரை எவ்வித குறையும் இன்றி வாழ்கின்றோம். நாங்கள் அரக்கர் சேனை மடிய வானரசேனையுடன் இலங்கை பாழாகப் படை நடத்திப் போர்புரிந்த திருமாலுக்குப் பல்லாண்டு பாடுகின்றோம்.

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து எங்கள்குழாம் புகுந்து
கூடு மனமுடையீர்கள் வரம்பொழிவந்து ஒல்லைக்கூடுமினோ
நாடும் நகரமும் நன்கறிய நமோநாராயணாய வென்று
பாடுமனமுடைப் பத்தருள்ளீர். வந்துபல்லாண்டுகூறுமினே.

4 சருகிலை நிலத்தில் விழுவதுபோன்று மரணத்திற்கு முன் வந்து எங்கள் குழுவிலே சேர்ந்துவிடவேண்டும் எனும் எண்ணமுடையவர்களே! இதுநாள் காணாத வரம்பை ஒழித்து விரைந்து வந்து சேருங்கள். இந்த நாடும் நகரமும் அறிந்து ஏத்துமாறு நமோ நாராயணாய என்று பாடுகின்ற பக்தரிடையே இருந்து திருப்பல்லாண்டு பாடுங்கள்.

இதற்குத் தத்துவப் பொருளும் உரைப்பதுண்டு. அக்கருத்து வருமாறு: ‘ஆன்மப்பேறு ஒன்றையே கருதுபவர்களே அதனை விட்டு வந்து ஆன்மாவை அனுபவித்தல் என்ற எல்லை நீங்கி விரைந்து எங்களுடன் சேர்ந்து நமோ நாராயணாய என்னும் திருமந்திரத்தைச் சொல்லிப் பாடும்பக்தர்களுடன் பல்லாண்டு பாடுங்கள்’ என்பதாகும்.



அண்டக் குலத்துக்கு அதிபதியாகி அசுரரிராக்கதரை

இண்டைக் குலத்தை எடுத்துக்களைந்த இருடீகேசன் தனக்கு

தொண்டக் குலத்திலுள்ளீர். வந்தடிதொழுது ஆயிரநாமம் சொல்லி

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே.

5. அண்டங்கள் நிறைந்த தொகுதிக்கு ஆதி காரணனாகி அசுரர், இராக்கதர் ஆகியோரின் நெருங்கிய கூட்டத்தை அழித்து நிர்மூலமாக்கியவன் இருடிகேசனாகிய திருமால் அவனுக்குத் தொண்டரான குலத்துப் பிறந்தவர்களே! வந்து இறைவனின் திருவடி தொழுது அவனுக்குரிய ஆயிரம் திருநாமங்களைச் சொல்லி அற்பப் பயனொன்றே கருதுகின்ற தன்மையைக் களைந்து அவனுக்குப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று பாடுவீர்களாக.

எந்தை தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி

வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் திருவோணத் திருவிழவில்

அந்தியம்போதில் அரியுருவாகி அரியையழித்தவனை

பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே.

6. எம் தந்தை, அவருக்குத் தந்தை, அவருக்கும் தந்தை என்று மூத்த பாட்டன் முதலாக ஏழு தலைமுறைகளாக வந்து முறை தவறாமல் திருத்தொண்டு புரிகின்றோம். அந்திப்போதில் நரசிம்ம மூர்த்தியாகி இரணியகசிபுவை அழித்த இறைவனுக்குரிய திருவோணத் திருவிழாவில் நம் பற்றுகள் ஒழியவேண்டிப் பல்லாண்டு பாடுவோம்.

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின்

கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடிகுடி ஆட்செய்கின்றோம்

மாயப் பொருபடை வாணனை ஆயிரந் தோளும் பொழிகுருதி

பாய சுழற்றிய ஆழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

7. நெருப்பைப் போலும் பொலிவு பெற்றுச் செவ்விய சுடர் விட்டு வட்டமாய்த் திகழ்கின்ற திருச்சக்கரத்தின் இலச்சினையாலே தோளில் பொறிக்கப்பட்டுக் குடும்பம் குடும்பமாக அடிமை பூண்டு தொண்டுபுரிந்து வருகின்றோம். மாயப்படை கொண்டு போரிட்ட படையுடைய வாணாசுரனின் ஆயிரம் தூளும் பாழாகிக் குருதி பாயுமாறு சக்கரப்படையைச் சுழற்றிய திருமாலுக்குப் பல்லாண்டு பாடுவோம்.



குறிப்புகள்

நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து என்னை வெள்ளுயிராக்கவல்ல
பையுடை நாகப்பகைக் கொடியானுக்குப் பல்லாண்டுகூறுவனே.

8. நெய்யுடன் கலந்த நல்ல சோறும் அரசனுக்கு உரியதான வகையில் எப்போதும் நீங்காத சேவகமும் தாம்பூலமும் தந்தான்; கழுத்துக்கு அணிகலமும் காதுக்குக் குண்டலமான காதணியும் மேனியில் பூசிட நல்ல சந்தனமும் தந்து என்னை மகிழச் செய்தான். இவ்வாறு உலகியலில் ஆழ்ந்து கிடந்த என்னை ஞானம் பெறுமாறு வைத்து அருளினான். விடமுடைய பாம்புகளுக்குப் பகையாகிய கருடாழ்வாரைக் கொடியாகக் கொண்ட திருமாலுக்குப் பல்லாண்டு கூறுகின்றேன்.

உடுத்துக் களைந்த நின் பீதக வாடையுடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன சூடும் இத்தொண்டர்களோம்
விடுத்த திசைக்கருமம் திருத்தித் திருவோணத் திருவிழவில்
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

9. திருமால் உடுத்திக் களைந்த பீதாம்பர ஆடையை விரும்பி உடுத்திக்கொண்டும் எம்பெருமான் உண்டெஞ்சிய கலத்துப் பிரசாதத்தை உண்டும் தோளில் சூடிக் களைந்த துளசி மாலையைச் சூட்டியும் அவன் இட்ட பணிகளைத் திசைதொறும் செய்து மகிழ்கின்ற தொண்டர்கள் நாங்கள். பாம்பணையில் படுத்துப் பள்ளி கொண்டவனுக்கு திருவோணத் திருநாளில் பல்லாண்டு பாடுவோம்.

எந்நாள் எம்பெருமான் உன் தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட
அந்நாளே அடியோங்கள் அடிக்குடில் வீடுபெற்று உய்ந்ததுகாண்
செந்நாள்தோற்றித் திருமதுரையுள் சிலைகுனித்து ஐந்தலைய
பைந்நாகத் தலைபாய்ந்தவனே. உன்னைப் பல்லாண்டுகூறுதுமே.

10. எம்பெருமானே! அடியவர்களாகிய நாங்கள் உனக்கு அடிமையாக விதிக்கப்பட்ட நாள் எந்நாளோ, அந்நாளிலேயே எங்களுடைய நற்கதி பெற்றது. நல்ல திருநட்சத்திரத்தில் அவதரித்து வடமதுரையில் கம்சனுடைய ஆயுத சாலையில் வில்லை வளைத்தும் ஐந்து தலையை உடைய நாகத்தின் மீது நடமாடியவனே. அத்தகைய உனக்குப் பல்லாண்டு பாடுவோமே.

அல்வழக்கு ஒன்றுமில்லா அணிகோட்டியர்கோன் அபிமான துங்கன்

செல்வனைப் போலத் திருமாலே. நானும் உனக்குப் பழவடியேன்

நல்வகையால் நமோ நாராயணாவென்று நாமம் பலபரவி

பல்வகையாலும் பவித்திரனே. உன்னைப் பல்லாண்டு கூறுவனே.

11. திருமாலே, இறைவன் உகப்பிற்கு மாறான நெறிகள் ஏதுமற்றவனாய் அழகிய திருக்கோட்டியூர்த் தலைவரும் விஷ்ணு பத்தியில் சிறந்தவருமான செல்வநம்பியைப் போல அடியவனாகிய நானும் உனக்குப் பழமையான அடியவனாகி விட்டேன். எல்லாவகையிலும் பரிசுத்தனான பெருமானே! எனக்கு நன்மையுண்டாக நமோ நாராயணா என்று பரவியும் பல திருநாமங்களைச் சொல்லியேத்தியும் உனக்குப் பல்லாண்டு கூறுவேன்.

பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை சார்ங்கமென்னும்

வில்லாண்டான் தன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல்

நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோ நாராயணாயவென்று

பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே.(2)

12. குற்றமற்ற தூய பரிசுத்தனாக இருப்பவனும் பரமபதத்தில் இருப்பவனும் சார்ங்கமாகிய வில்லை ஏந்தியவனும் ஆகிய எம்பெருமானைத் திருவில்லிபுத்தூரில் அவதரித்த விஷ்ணுச்சித்தர் என்ற திருப்பெயருடைய பெரியாழ்வார் பல்லாண்டு என்று பரிவுகொண்டு இந்தத் திருப்பல்லாண்டை அருளினார். அந்தப் பிரபந்தத்தைத் தமக்கு நன்மையாகக் கருதிச் சொல்லித் துதிப்பார். அவர்கள் மறுமையில் பரமபதத்தை அடைந்து நமோ நாராயணாய என்று பல்லாண்டும் பாடுபவர்களாய் விளங்குவர்.



## 5.4 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

### இருமதிப்பெண் வினா விடைகள்

1. ஆழ்வார்கள் - பெயர்க்காரணம் தருக.

இறைவனிடம் கொண்ட பக்தியில் ஆழங்காற்பட்டவர்கள்

2. பெரியாழ்வார் பாடியநூல்கள் எவை?

திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி

3. யாருக்குப் பெரியாழ்வார் பரத்துவம் குறித்த செய்தியை அறிவுறுத்தினார்?

சீவல்லபதேவன் எனும் பாண்டியன்

4. பல்லாண்டு - பெயர்க்காரணம் தருக.

பாட்டுடைத் தலைவனைப் பல்லாண்டு வாழ்க எனும் பொருண்மையில் பாடப்பெறும் பிரபந்தம்

5. திருமாலுக்குப் பெரியாழ்வார் ஏன் பல்லாண்டு பாடினார்?

பெரியாழ்வார் உலா வந்த காட்சியைக் காணத் திருமால் தம் பரிவாரங்களுடன் வெளிப்பட்டுத் தோன்றினான். அதனால் அவன் திருமேனிக்கு கண்பட்டு ஏதேனும் நேருமோ என்று அஞ்சிப் பாடியது பல்லாண்டு.

6. மல்லாண்ட திண்டோள் மணிவண்ணன் யார் ?

கண்ணபெருமான்

7. திருமாலுடன் வேறு எவரெவர்க்குப் பெரியாழ்வார் பல்லாண்டு பாடினார்?

திருமகள், திருவாழி, சங்கம்

8. யாரைத் தங்கள் குழுவில் சேர்ப்பதில்லை என்று பெரியாழ்வார் கூறுகின்றார்?

உணவின் பொருட்டு அயலாரிடம் குற்றேவல் செய்துவாழும் மக்களை

9. நாடும் நகரமும் நன்கறிய கூறவேண்டியது எது?

திருவெட்டெழுத்து ஆகிய நமோ நாராயணாய

10. எத்தனைத் தலைமுறையாகத் திருமாலுக்குத் தொண்டுபுரிவதாகப் பெரியாழ்வார் கூறுகின்றார்?

ஏழு தலைமுறை

11. குடில் எப்போது உய்தி பெற்றது?

திருமாலுக்கு அடிமைபட்ட நாளில்

12. அல்வழக்கொன்றும் இல்லா அணிகோட்டியூர் கோன் யார்?

வைணவ அபிமானத்தில் சிறந்த செல்வநம்பி

குறுவினா

13. பெரியாழ்வார் திருமாலுக்குப் பல்லாண்டு எனப் பாடிய திறத்தை எழுதுக

காப்பு, திருமகளுக்குப் பல்லாண்டு எனும் தலைப்பில் அமைந்தவை

பெருவினா



14. திருப்பல்லாண்டில் பெரியாழ்வார் பாடிய கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

15. பெரியாழ்வார் திருப்பல்லாண்டு எடுத்துத் திருமாலைப் பாடியமையை விளக்குக.

16. பல்லாண்டு பாடப் பெரியாழ்வார் பிறரை அழைத்த பான்மையை எழுதுக.

5.3 திருப்பல்லாண்டு என்ற தலைப்பின் உள்ள அனைத்தையும் தொகுத்து எழுதுக.

## கூறு - 6

### 6.1 பெரியாழ்வார் திருமொழி

ஆசிரியராகிய பெரியாழ்வாரை முன்னிட்டு அவருடைய பாசுரங்களின் தொகுப்பு பெரியாழ்வார் திருமொழி எனப்படுகின்றது. இத்திருமொழியில் 10 அல்லது 11 பாசுரங்கள் கொண்ட 43 பதிகங்கள் உள்ளன. ஒவ்வொரு பதிகமும் திருமொழி எனப்படும். பத்துத் திருமொழி அடங்கிய பகுதி பத்து எனப்படும். இதன்படி பெரியாழ்வார் திருமொழியில் அடங்கிய பத்து ஐந்தாகும். ஐந்தாம் பத்து நிறைவடைய வில்லை. மொத்த பாசுரங்களின் எண்ணிக்கை 461.

முதல்பத்தில் ஒன்பது திருமொழிகள் மட்டுமே உள்ளன. இத்திருமொழி கண்ணனின் அவதாரச் சிறப்புடன் தொடங்குகின்றது. முதல் 25 திருமொழிகளில் கண்ணபெருமானின் பிள்ளைமைக் குணங்களிலும் லீலைகளிலும் ஈடுபட்டுப் பாடியுள்ளார் பெரியாழ்வார். கண்ணனின் வளர்ப்புத் தாய் யசோதை எனத் தன்னைக் கருதிக்கொண்டு தாயனுபவத்துடன் பாடிய பாடல்கள் பிற்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அடித்தளமிட்டன எனலாம்.

### 6.2 முதற்பத்து - முதல் திருமொழி - வண்ண மாடங்கள் (கண்ணன் திருவவதாரச் சிறப்பு)



பாண்டிய நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று திருக்கோஷ்டியூர். பாண்டிய அரசன் ஸ்ரீவல்லபதேவன் அமைச்சராக இருந்த செல்வநம்பியின் ஊரும் அது. கண்ணன் பிறப்பாகிய கோகுலாஷ்டமித் திருநாளில் விழாக்கோலம் கொண்டிருந்த திருக்கோஷ்டியூர் வந்த பெரியாழ்வார் அங்கு அமைந்த சௌமிய நாராயணப்

பெருமாள் கோயிலை ஆய்ப்பாடியாகவும் ஊராரைக் கோகுல வாசிகளாகவும் பெருமாளைக் கண்ணனாகவும் கண்டு பாடிய பிரபந்தம் வண்ணமாடங்கள் என்று தொடங்கும் திருமொழி ஆகும். கண்ணனின் அவதார நாளன்று மகிழ்ந்த ஆயர்களின் மனவெழுச்சியைத் திருகோஷ்டியூர் தலத்தில் வைத்துப் பாடி மகிழ்கின்றார்.

**கலிவிருத்தம்**

வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்

கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்

எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிடக்

கண்ணன் முற்றம் கலந்து அளறாயிற்றே. (2)

1. அழகிய மாடங்கள் சூழ்ந்த திருக்கோட்டியூரில் கேசவன் என்ற திருப்பெயருடைய கண்ணனாகிய திருமால் பிறந்தருளினான். கண்ணன் பிறந்துள்ள வீட்டில் ஆய்ப்பாடி மக்கள் அனைவரும் பெரியமகிழ்வுடன் ஒன்று திரண்டனர். அவர்கள் எண்ணெய், மஞ்சள்பொடியை ஒருவர் மீது ஒருவரென எதிர் தூவவே அவை கீழே சிந்துகின்றன. அவை ஒன்றாகி கண்ணன் பிறந்த வீட்டு முற்றம் சேறாகிவிட்டது.

ஓடுவார் விழுவார் உகந்தாலிப்பார்

நாடுவார் நம்பிரான் எங்குத்தானென்பார்

பாடுவார்களும் பல்பறை கொட்டநின்று

ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே.

2. ஆயர் குலத்தார் தம் தலைவன் நந்தகோபனுக்கு மகவு பிறந்ததை எண்ணி மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். அவர்களுள் சிலர் தாம் செய்வது இன்னது என அறியாமல் ஓடுவார்; எண்ணேய் மஞ்சள் கலந்த முற்றத்தில் வழுக்கி விழுவார். பெருமகிழ்வுடன் ஆரவாரம் செய்வார். கண்ணனைக் காண விரும்பித் தேடுவார். குழந்தை கண்ணன் எங்கிருக்கின்றான் என வினவுவார். சிலர் மங்கலகீதங்களைப் பாடி மகிழ்ந்தனர். பறைகொட்ட நின்று ஆடி மகிழ்ந்தனர். இவ்வாறு ஆயர்பாடி மக்களின் நிலை மகிழ்வுடையதாக ஆயிற்று.

பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்

காணத் தாம்புகுவார் புக்குப் போதுவார்

ஆணொப்பார் இவன் நேரில்லைகாண் திரு

வோணத்தான் உலகாளுமென்பார்களே.

3. பிறக்கும்போதே தன்னையும் காத்துக்கொண்டு பிறந்த நல்ல குணத்தையுடைய கண்ணனாகிய பிள்ளையைப் பார்ப்பதற்கு அவன் பிறந்த இல்லத்தினுள்



குறிப்புகள்

அனைவரும் புகுவார்; பார்த்து மகிழ்ந்து செல்லுவார். இவனையொத்த ஆடவர் பிறர் ஒருவரில்லை என்பார். திருவோணத்தில் பிறந்த இவன் வைகுந்தத்தையும் ஆளக்கூடியவன் என்று கூறி மகிழ்வார்.

திருமாலுக்கு ஆடவரில் சிறந்தவன் என்னும் பொருளில் புருஷ உத்தமன் என்ற பெயர் வழங்குவதுண்டு அதனை நினைந்து கண்ணனைக் கண்ட ஆயர் கூற்றாக இவன் நேர் இல்லை என்று பெரியாழ்வார் கூறுகின்றார்.

குறிப்புகள்

ஊறியை முற்றத்து உருட்டி நின்றாடுவார்

நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்

செறிமென் கூந்தல் அவிழத் திளைத்து எங்கும்

அறிவழிந்தனர் ஆய்ப்பாடியரே.

4. ஆயர்களில் சிலர் தாம் அடைந்த பெரு மகிழ்ச்சியால் பாலும் தயிரும் நெய்யும் வைத்த உறிகளை அறுத்து முற்றத்தில் உருட்டி விளையாடுவார். பிறந்த குழந்தைக்கு நலம் உண்டாகவேண்டும் என்று பால் நெய் தயிர் ஆகியவற்றைப்பிறருக்கு ஈந்து மகிழ்வார். அடர்ந்த மென்மை மிகுந்த கூந்தல் அவிழுமாறு பெண்கள் மகிழ்ச்சியில் திளைத்து ஆடுவார். இவ்வாறு ஆனந்தத்தால் அறிவு மயங்கித் திளைத்து ஆயர்பாடி ஆயர் மகிழ்ந்தனர்

கொண்ட தாளுறி கோலக் கொடுமழு

தண்டினர் பறியோலைச் சயனத்தர்

விண்ட முல்லை யரும்பன்ன பல்லினர்

அண்டர் மிண்டிப் புகுந்து நெய்யாடினார்.

5. ஆயர்கள் உறியையும் மழுவாகிய சிறு கோடரியையும் பசு மேய்க்கின்ற கோலையும் படுப்பதற்காகப் பனையோலைப் பாயையும் உடையவர்கள் இத்தகையர் தங்கள் முல்லையரும்பு போன்ற பல்வரிசை தோன்றச் சிரித்து மகிழ்ந்தபடி கண்ணன் பிறப்பை எண்ணி மகிழ்ந்து எண்ணெய் தேய்த்து நீராடினர்.

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்

பைய வாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்

ஐய நாவழித்தாளுக்கு அங்காந்திட

வையமேழும் கண்டாள் பிள்ளை வாயுளே.



6. கண்ணனை நீராட்டி மகிழும் யசோதை கையையும் காலையும் நிமிர்த்தி நீவிவிடுகின்றாள். பின் கடாரமாகிய பெரும்பாத்திரத்தில் பச்சிலைகள், மணப்பொருட்கள் கலந்து காய்ச்சின நீரில் நீராட்டினாள். பசிய சிறு மஞ்சளை எடுத்து ஐயனாகிய கண்ணனின் நாவை வழித்தபோது வாயைத் திறந்து

கண்ணன் அங்காந்தாள். அப்போது யசோதை அந்தப்பிள்ளை வாயில் ஏழு உலகையும் கண்டு அதிசயித்தாள்

வாயுள்வையகம்கண்ட மடநல்லார்

ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம்

பாயசீருடைப் பண்புடைப்பாலகன்

மாயனென்று மகிழ்ந்தனர்மாதரே.

7. வாயில் வையகம் கண்ட யசோதை ஏனை ஆய்ச்சியர்களுக்கும் காட்ட அவர்களும் அதிசயித்து இவன் சாதாரண ஆயர் குலத்து வந்தவன் ஆகான். அரிய தெய்வமாகிய திருமாலே என்று கொண்டாடினர். மனிதர்க்கு எட்டாத பரந்த புகழுடையவனாய், சௌசீல்யம், சௌலப்யம், சுவாமித்துவம் போன்ற திருக்கல்யாணக் குணங்களுடையவனாய் விளங்கும் மாயனாகிய திருமாலே இக்கண்ணன் என்று மகிழ்ந்தனர்.

பத்துநாளும்கடந்த இரண்டாநாள்

எத்திசையும் சயமரம்கோடித்து

மத்தமாமலை தாங்கியமைந்தனை

உத்தானம்செய்து உகந்தனர்ஆயரே.

8. கண்ணன் பிறந்து பன்னிருநாட்கள் ஆனபோது வெற்றிக்கு அறிகுறியாக ஆய்ப்பாடியின் எல்லாப்பக்கங்களிலும் தோரணங்களைக் கட்டி அழகு செய்தனர். கோவர்த்தன மாமலையை குடையாக எடுத்துப் பிடித்த வலிமையுடைய குழந்தைக்குப் பெயர் சூட்டும்விழாவில் அக்குழந்தைக் கண்ணனை அனைவரும் ஏந்தி எடுத்துக்கொண்டு மகிழ்ந்தனர்.

கிடக்கில் தொட்டில்கிழியஉதைத்திடும்

எடுத்துக்கொள்ளில் மருங்கையிறுத்திடும்

ஒடுக்கிப்புல்கில் உதரத்தேபாய்ந்திடும்

மிடுக்கிலாமையால் நான்மெலிந்தேன்நங்காய்.

9. இந்தப் பாசுரத்தில் மானிடத் தன்மைக்கு மீறிய லீலைகளைச் செய்யும் கண்ணன் இயல்பினால் யசோதை உடல் மெலிந்தமையை அவள் கூற்றாகப் பெரியாழ்வார் படைத்துள்ளார்.

பெண்ணே! (நீயும் உன்னைப்போன்ற பெண்களும் பருவத்துக்குத் தகுந்த செயல்களைச் செய்யும் பிள்ளைகளைப் பெற்றீர். அதனால் உங்களுக்கு எந்தக் குறைவில்லாது உள்ளீர். என் நிலையைக் கேளுங்கள்) இப்பிள்ளையைத் தொட்டிலில் கிடத்தினால் தொட்டில் துணி கிழியுமாறு உதைப்பான். எடுத்து இருப்பில் வைத்துக்கொண்டால் இடை நோக முறித்து விடுகின்றான்.

இக்குழந்தைக்கு நோவுமே என்று மார்போடு அணைத்துக்கொண்டால் கால்களால் வயிற்றை உதைக்கின்றான். அவனைப் பார்த்துக்கொள்கின்ற அளவு வலியற்றதால் நான் மிகவும் மெலிந்துவிட்டேன்.

செந்நெலார்வயல்சூழ் திருக்கோட்டியூர்
மன்னுநாரணன் நம்பிபிறந்தமை
மின்னுநூல் விட்டுசித்தன்விரித்த இப்
பன்னுபாடல்வல்லார்க்கு இல்லைபாவமே. (2)

10. செந்நெல் நிறைந்த வயலுடைய திருக்கோட்டியூரில் திகழும் நாராயணனாகிய நம்பி கண்ணனாக அவதரித்தமையை விஷ்ணுச்சித்தர் விரிவாகப் பாடினார். இவ்வாறு பாடிய பிரபந்தத்தைப் பாடவல்லவர்க்குப் பாவம் எதுவும் இருப்பதில்லை.

## 6.3 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

### இரு மதிப்பெண் வினா விடைகள்

1. பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி யார்?

   பெரியாழ்வார்

2. வண்ண மாடங்கள் என்னும் திருமொழி எந்தத் தலத்தைப் போற்றுகின்றது?

   திருக்கோஷ்டியூர்

3. வண்ண மாடங்கள் என்னும் திருமொழி எதனைப் பொருளாக உடையது?

   கண்ணன் பிறந்த காலத்து ஆயர் கொண்ட மகிழ்வை

4. கண்ணன் வீட்டு முற்றம் ஏன் சேறானது?

   கண்ணன் வீட்டுக்கு வந்தவர் எதிரெதிர் தூவிய மஞ்சளும் எண்ணெயும் சிந்தி

5. திருவோணத்தான் எனப்படுபவன் யார்?

   திருமால்

6. கண்ணனின் நாவழித்த யசோதை கண்டது யாது?

   மஞ்சளால் கண்ணனின் நாவை வழித்தபோது யசோதை வையம் ஏழும் கண்டாள்

**குறுவினா**

7. யசோதை கண்ணனிடம் பெற்ற அனுபவத்தை எழுதுக

6, 9 ஆம் பாடல்களின் கருத்துக்கள்

பெருவினா

8. கண்ணன் பிறந்ததால் ஆயர் கண்ட மகிழ்ச்சியைக் கட்டுரைக்க.

6.2 பெரியாழ்வார் திருமொழி - முதற்பத்து வண்ண மாடங்கள் என்னும் தலைப்பின் கீழ் அமைந்த பாசுரங்களின் கருத்துக்கள்

## கூறு - 7
## பெரியாழ்வார் திருமொழி -
## முதற்பத்து இரண்டாம் திருமொழி - சீதக்கடல்

7.1 இரண்டாம் திருமொழி - சீதக்கடல்

கண்ண பெருமானின் திருமேனி அழகை, அவனுடைய குழந்தைப் பருவ லீலைகளை வருணிப்பதன்மூலம் பெரியாழ்வார் எடுத்தியம்புகின்றார். இப்பாசுரமானது கண்ணனுடைய திருமேனி அழகைப் பாதாதிகேசமாக வருணிக்கின்றது. இப்பிரபந்தத்தில் கண்ணனின் அழகின் மீது கொண்ட ஆர்வ மிகுதியால் ‘காணீரே... வந்து காணீரே’ என்று இருமுறை உரைக்கின்ற தன்மையைக்காணலாம்.

சீதக்கடல் உள்ளமுதன்ன தேவகி

கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த

பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்

பாதக் கமலங்கள் காணீரே! பவள வாயீர்! வந்து காணீரே.

1. பவளம் போன்ற வாயுடைய பெண்டீரே! குளிர்ந்த கடலில் இருந்து தோன்றிய அமுதம்போன்ற தேவகியிடமிருந்து மலரணிந்த குழலுடைய அசோதைக்கு அனுப்பி வைக்கப்பெற்ற இளங்குழந்தை கண்ணன். அவன் தன்கைகளாலே தாமரை மலர்போன்ற தன் திருவடிகளை வாயிலே வைத்துச் சுவைத்து மகிழும் காட்சியைக் காணுங்கள் எனப் பெரியாழ்வார் இப்பாசுரத்தில் கண்ணன் கால்விரலைச் சுவைக்கும் காட்சியை வருணிக்கின்றார்.

அமுது அன்ன என்ற உவமையைக் கண்ணபெருமானுக்குப் பொருத்தும்போது குளிர்ந்த பாற்கடலில் அமுதம் தோன்றினாலும் அதனால் பயன்கொள்ளாது தேவர்களே பயன்கொண்டதைப்போலத் தேவகியிடம் கண்ணன்

அவதரித்திருந்தாலும் யசோதையே அவனை வளர்த்துப் பிள்ளைப் பேற்றின் இன்பத்தை அடைந்தாள் என்னும் நயம் தோன்றுகின்றது.

முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற்போல் எங்கும்
பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்
ஒத்திட்டிருந்தவா காணீரே ஒண்ணுதலீர். வந்துகாணீரே.

2. ஒளி பொருந்திய நெற்றியை உடைய பெண்களே வாருங்கள்! நீலமணி போன்ற நிறத்துடைய கண்ணபெருமானின் திருப்பாதங்களில் முத்தையும் மாணிக்கத்தையும் வைரத்தையும் சிறந்த பொன்னையும் மாறி மாறி அழுத்திச் சேர்த்தது போலப் பத்து விரலும் ஒத்திட்டு இருப்பதைக் காணுங்கள்.

பணைத்தோள் இளவாய்ச்சி பால்பாய்ந்த கொங்கை
அணைத்தார உண்டு கிடந்த இப்பிள்ளை
இணைக்காலில் வெள்ளித்தளை நின்றிலங்கும்
கணைக்கால் இருந்தவா காணீரே! காரிகையீர்! வந்துகாணீரே.

3. பெண்களே வாருங்கள்! மூங்கில் போன்ற அழகிய தோள்களுடைய இளம் ஆய்ச்சியாகிய யசோதையின் பால் நிறந்த மார்பகத்தைப் பற்றி அணைத்து வயிறார உண்டு அவள் மடியில் கிடக்கும் இந்தக் கண்ணனாகிய குழந்தையின் இரு கால்களிலும் வெள்ளித் தண்டைகள் அணிவிக்கப்பட்டு அழகுபெற்ற கணைக்கால்களில் அழகு திகழ்கின்றமையைக் காணுங்கள்.

உழந்தாள் நறுநெய் ஓரோர் தடாவுண்ண
இழந்தாள் எரிவினால் ஈர்த்து எழில்மத்தின்
பழந்தாம்பால் ஓச்சப் பயத்தால் தவழ்ந்தான்
முழந்தாள் இருந்தவா காணீரே! முகிழ்முலையீர்! வந்துகாணீரே.

4. அரும்பிய அழகு மார்புடைய பெண்டிரே! மணமிக்க ஒவ்வொரு பானை நெய்யையும் கண்ணன் தானே தனித்து உண்டான். அதற்கு மிகவும் மனம் வருந்திய யசோதை மிகவும் சினங்கொண்டு கண்ணனை இழுத்து, மத்தில் கட்டும் பழந்தாம்புக் கயிறால் அடிக்கக் கரத்தை உயர்த்தினாள். அப்போது பயங்கொண்டவன்போல் முழந்தாளிட்டுத் தவழ்ந்தான்; அவ்வாறு தவழ்ந்த முழந்தாளின் அழகைக் காணவாருங்கள்.

இப்பாடலில் தான் இறைவனாக இருந்தபோதும் தாய் யசோதையின் அன்புக்குக் கட்டுப்பட்டவனாய், அவளுடைய அடிக்கு அஞ்சியவனாக இருக்கும் எளிமைக்குணம் (சௌலப்யம்) பேசப்படுகின்றது.

பிறங்கிய பேய்ச்சி முலைசுவைத்து உண்டிட்டு
உறங்குவான் போலே கிடந்த இப்பிள்ளை
மறங்கொளிர் அணியன் மார்பை முன்கீண்டான்
குறங்கு வளை வந்துகாணீரே! குவிமுலையீர்! வந்துகாணீரே.

5. குவிந்த அழகு நகிலுடைய பெண்டிரே! மாறுபட்ட அழகிய வடிவு கொண்டுவந்த பேய்ச்சியின் முலைப்பாலை சுவைத்து உண்டு உயிரையும் வாங்கிய கண்ண பெருமான் அவள் மேலே உறங்குவான் போலே கிடந்தான். இவனே முன்பு முன்பு நரசிம்ம அவதாரத்தில் இரணியனின் மார்பைப் பிளந்தவன். அவனுடைய திருத்தொடைகளின் அழகைக் காண வாருங்கள்.

இரணியனைக் கொன்றபோது அவனை தன் தொடைகளின்மீது வைத்துக் கொன்றமையை நினைந்து இங்கு நரசிம்ம அவதாரச் செய்தியை இணைத்துப் பெரியாழ்வார் பேசுகின்றார்.

மத்தக் களிற்று வசுதேவர் தம்முடை
சித்தம் பிரியாத தேவகி தன்வயிற்றில்
அத்தத்தின் பத்தாநாள் தோன்றிய அச்சுதன்
முத்தமிருந்தவா காணீரே! முகிழ்நகையீர்! வந்துகாணீரே.

6. அரும்புகின்ற இள புன்னகையுடைய் பெண்டிரே! மதங்கொண்ட ஆண்யானைகளைக் கொண்ட வசுதேவரின் மனத்தை விட்டு என்றும் நீங்காது நிலைத்திருக்கும் தேவகியின் வயிற்றில் அத்தம் நட்சத்திரத்திற்குப் பத்தாம்நாள் திருவோணநாளில் அவதரித்தவன் அச்சுதன்; அவனுடைய முத்துப்பல் அழகினை வந்து காணுங்கள்.

அத்தத்திற்குப் பத்தாம் நாள் மேல்முறையில் ரோகிணியும் கீழ்முறையில் திருவோணமும் ஆகும். திருமாலுக்குரிய நாள் திருவோணம் கண்ணன் அவதரித்த நாள் ரோகிணி. எனவே இரண்டும் பொருந்துமாறு பெரியாழ்வார் அத்தத்திற்குப் பத்தாம் நாள் என்று கூறுகின்றார்.

இருங்கை மதகளிறு ஈர்க்கின்றவனை
பருங்கிப் பறித்துக்கொண்டு ஓடுபரமன் தன்
நெருங்கு பவளமும் நேர்நாணும் முத்தும்
மருங்கும் இருந்தவா காணீரே! வாணுதலீர்! வந்து காணீரே.

7. ஒளியுடைய நெற்றியுடைய பெண்டிரே! பெரியகையை உடைய மதம் பொருந்திய குவலாய பீடம் என்னும் யானையையும் அதன் பாகனையும் கொன்று அதன் தந்தத்தைப் பறித்துக்கொண்டு கம்சனுடைய அவையை நோக்கி ஓடியவன் பரமனாகிய கண்ணபெருமான். அவனுடைய இடையில் பவழமும்

முத்தும் கோக்கப்பட்டு நேரிய பொன்னால் ஆகிய நாண் கிடந்த திருமருங்கு (இடை) அழகைக் காணவாருங்கள்.

வந்த மதலைக் குழாத்தை வலிசெய்து
தந்தக் களிறுபோல் தானே விளையாடும்
நந்தன் மதலைக்கு நன்றும் அழகிய
உந்தி இருந்தவா காணீரே! ஒளியிழையீர்! வந்துகாணீரே.

8. ஒளியுடைய அணிகளை அணிந்த பெண்டிரே! தன்னோடு விளையாடும் சிறுவர் குழாத்திற்குத் தான் ஒருவனே எதிர்நின்று வம்பு செய்து தோற்கடித்துத் தந்தமுடைய யானை போலே விளையாடும் கண்ணபெருமான் தன் தந்தை நந்தகோபன் முன் பணிவுடன் நடந்துகொள்கின்றான். இத்தகைய கண்ணனின் உந்தியின் அழகை வந்து காணுங்கள்.

அதிரும் கடல்நிற வண்ணனை ஆய்ச்சி
மதுர முலையூட்டி வஞ்சித்து வைத்த
பதரப்படாமே பழந்தாம்பால் ஆர்த்த
உதரம் இருந்தவா காணீரே! ஒளிவளையீர்! வந்துகாணீரே.

9.ஆர்க்கின்ற கடலின் நிறங்கொண்ட கண்ணனுக்கு ஆய்ச்சியாகிய யசோதை தன் இனிய பாலை ஊட்டுகின்றாள். முலையூட்டும்போதே அவனறியாமல் வஞ்சகமாகப் பழங்கயிற்றால் கட்டப்பட்ட திருவயிற்றின் அழகை வந்து காணுங்கள்.

உரலில் கட்டப்பட்டதால் ஏற்பட்ட தழும்பை உடையவன் கண்ணன்; எனவே அவன் தாமோதரன் எனப்பெற்றான். எனவே பெரியாழ்வார் திருவயிற்றைப் பாடும்போது தழும்பு பட்ட நிகழ்வைச் சுட்டிப்பாடுகின்றார்.

பெருமா உரலில் பிணிப்புண்டிருந்து அங்கு
இரு மாமருதம் இறுத்த இப்பிள்ளை
குருமாமணிப்பூண் குலாவித் திகழும்
திருமார்பு இருந்தவா காணீரே! சேயிழையீர்! வந்துகாணீரே.

10. சிவந்த பொன்னால் ஆகிய அணியுடைய பெண்டிரே! பெரிய உரலோடு கட்டப்படிருந்த கண்ணன் யாரும் அறியாதபடி இருபெரிய மருத மரத்தின் ஊடேசென்று அவற்றைச் சாய்த்து முறுவலித்தான். இத்தகைய பெருமையுடைய இப்பிள்ளையின் நிறம்பொருந்திய மணிகள் பொருந்திய பூணணிந்த திருமார்பின் அழகைக் காண வாருங்கள்.

நாள்களோர் நாலைந்து திங்கள் அளவிலே

குறிப்புகள்

தாளை நிமிர்த்துச் சகடத்தைச் சாடிப்போய்
வாள்கொள் வளையெயிற்று ஆருயிர் வவ்வினான்
தோள்கள் இருந்தவாகாணீரே! சுரிகுழலீர்! வந்துகாணீரே.

11. சுருண்ட குழலுடைய பெண்டிரே! தான் பிறந்து நாலைந்து மாதங்கள் சென்ற அளவிலே தன் திருப்பாதத்தை உயர்த்தி வண்டியை உதைத்து அவ்வடிவத்தில் வந்த அசுரனையும் கொன்றான். வஞ்சக பூதனையாகிய பேய்ச்சியின் ஆருயிர் வவ்வினான். அவனுடைய திருத்தோள்கள் அழகைக் காணவாருங்கள்.

மைத்தடங்கண்ணி யசோதை வளர்க்கின்ற
செய்த்தலை நீல நிறத்துச் சிறுப்பிள்ளை
நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய
கைத்தலங்கள் வந்துகாணீரே! கனங்குழையீர்! வந்துகாணீரே.

12. கனத்த குழை அணிந்த பெண்டிரே! மையுடைய கண்ணையுடைய யசோதை வளர்க்கப்படுபவன் நீலநிறக் குவளைபோலும் நிறமுடைய கண்ணன். அவனுடைய நெய்யும் வெண்ணெயும் திருடி உண்ட நெய்ப்புத் தன்மை நீங்காது சக்கரமும் சங்கும் ஏந்திய திருக்கரங்களின் அழகை வந்து காணுங்கள்.

வண்டமர் பூங்குழல் ஆய்ச்சி மகனாகக்
கொண்டு வளர்க்கின்ற கோவலக் குட்டற்கு
அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய
கண்டம் இருந்தவா காணீரே! காரிகையீர்! வந்துகாணீரே.

13. பெண்டிரே! வண்டுகள் மொய்க்கும் பூங்குழல் ஆய்ச்சி யசோதையால், தன் மகனாகக் கருதி ஆயர்குலத்துக் குழவியாக வளர்க்கப்படுபவன் கண்ணபெருமான். அவன் திருவயிற்றில் அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய திருத்தொண்டையின் அழகு திகழ்வதை வந்து காணுங்கள்.

எந்தொண்டைவாய்ச் சிங்கம் வாவென்றெடுத்துக்கொண்டு
அந்தொண்டை வாயமுது ஆதரித்து ஆய்ச்சியர்
தம்தொண்டை வாயால் தருக்கிப் பருகும் இச்
செந்தொண்டை வாய் வந்து காணீரே! சேயிழையீர்! வந்துகாணீரே.

14. சிவந்த பொன்னணிந்த பெண்டிரே! ஆயர்பாடிப் பெண்கள் எல்லோரும் ‘எம் கொவ்வைக்கனியொத்த வாயை ஒத்தவனே! சிங்கமே வா என்று கண்ணனைச் சீராட்டி எடுத்துக்கொண்டு அவனது அழகிய கொவ்வைக்கனி போன்ற வாயிலிருந்து சுரக்கும் அமுதத்தைத் தம் சிவந்த வாயால் பெருமையுடன் பருகி மகிழ்வர். அத்தகைய கண்ணனின் திருவாய் அழகை வந்து காணுங்கள்.

நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்

நாக்கு வழித்து நீராட்டும் இந்நம்பிக்கு

வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்

மூக்கும் இருந்தவா காணீரே! மொய்குழலீர்! வந்துகாணீரே.

15. அடர்ந்த கூந்தலையுடைய பெண்டிரே! கண்ணனுடைய மேனியின் மென்மையைக் கருதிய யசோதை அரைத்த மஞ்சளால் நாக்கை வழித்து நீராட்டுவாள். இவ்வாறு சீராட்டப்பெறும் கண்ணபெருமானின் வாய்மொழியும் திருக்கண்ணும் வாயும் அதில் விளங்கும் புன்முறுவலும் மூக்கும் இருக்கின்ற அழகினைக் காணவாருங்கள்.

விண்கொள் அமரர்கள் வேதனைதீர முன்

மண்கொள் வசுதேவர்தம் மகனாய் வந்து

திண்கொள் அசுரரைத் தேய வளர்கின்றான்

கண்கள் இருந்தவா காணீரே! கனவளையீர்! வந்துகாணீரே.

16. கனத்த வளையல் அணிந்த பெண்டிரே விண்ணில் வாழும் அமரரின் துயரைத் தீர்க்க முன்பே வசுதேவருக்கு மகனாகத் தோன்றித் திண்ணிய வலிமையுடைய அசுரரின் அழிவை எண்ணி வளர்கின்றான். அவனுடைய திருக்கண்கள் இருக்கின்ற அழகுக் கோலத்தை வந்து காணுங்கள்.

பருவம் நிரம்பாமே பாரெல்லாம் உய்ய

திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற

உருவு கரிய ஒளிமணி வண்ணன்

புருவம் இருந்தவா காணீரே! பூண்முலையீர்! வந்துகாணீரே.

17. பூணணிந்த பெண்டிரே! திருமகளின் வடிவினை ஒத்த தேவகி பெற்ற மகன் கண்ணன். அவன் உரிய வயது வரும் முன்பே அரக்கர் பலரைக் கொன்று பாரெல்லாம் உய்யுமாறு செய்தான். அத்தகைய பெருமைமிக்கவனாய்க் கரிய மாணிக்கம் போல் ஒளியுடைய மணிவண்ணனின் புருவம் இருக்கின்ற அழகைக் காண வாருங்கள்.

மண்ணும் மலையும் கடலும் உலகேழும்

உண்ணுந் திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு

வண்ணம் எழில்கொள் மகரக்குழையிவை

திண்ணம் இருந்தவா காணீரே! சேயிழையீர்! வந்துகாணீரே.

18. சிவந்த பொன்னால் ஆன அணிகளை அணிந்த பெண்டிரே! பூமியும் அதில் அடங்கிய மலையும் கடலும் என ஏழு உலகங்களையும் வயிற்று அடக்க விழுங்கி மகிழ்ந்து உண்கின்ற இந்த கண்ணபெருமானாகிய பிள்ளைக்கு நிறம்பொருந்திய அழகுடைய மகரக்குழைகள் உறுதியாக இருந்த தன்மையைக் காண வாருங்கள்.

முற்றிலும் தூதையும் முன்கைம்மேல் பூவையும்

சிற்றிலிழைத்துத் திரிதருவோர்களை

பற்றிப் பறித்துக்கொண்டு ஓடும் பரமன்தன்

நெற்றி இருந்தவா காணீரே நேரிழையீர்! வந்துகாணீரே.

19. நேர்த்தியுடைய அணியணிந்த பெண்டிரே! சிற்றில் இழைத்து விளையாடும் ஆயர் குலச்சிறுமியர் கையில் வைத்திருக்கும் நாகணவாய்ப் பறவையையும் சிறு முறங்களையும் சிறுபானைகளையும் பற்றிப் பறித்துக்கொண்டு வலிய தீம்புகள் செய்யும் பரம்பொருளாகிய கண்ணபெருமானின் நெற்றி இருக்கின்ற அழகைக் காண வாருங்கள்.

அழகிய பைம்பொன்னின் கோல் அங்கைக்கொண்டு

கழல்கள் சதங்கை கலந்து எங்குமார்ப்ப

மழ கன்றினங்கள் மறித்துத் திரிவான்

குழல்கள் இருந்தவா காணீரே! குவிமுலையீர்! வந்துகாணீரே.

20. அழகிய பெண்டிரே! பசிய பொன்னாலாகிய கோலைத் தன் கையில் பிடித்தபடி காலில் அணிந்த வீரக்கழல்களும் சதங்கைகளும் கலந்து ஆரவாரிக்க இளங்கன்றுகளை மறித்தபடி விளையாடித் திரிபவன் கண்ணன். அவனுடைய கருங்குழல்களின் அழகைக் காணவாருங்கள்.

சுருப்பார் குழலி யசோதைமுன்சொன்ன

திருப்பாத கேசத்தைத் தென்புதுவைப் பட்டன்

விருப்பாலுரைத்த இருபதோடொன்றும்

உரைப்பார்போய் வைகுந்தத்து ஒன்றுவர்தாமே. (2)



**குறிப்புகள்**

21. வண்டுகள் மொய்க்கும் குழலையுடைய யசோதை முன் ஆயர்குலப் பெண்டிர் கூறும் திருப்பாதாதிகேசக் கூற்றாக தென்புதுவைப் பட்டர்பிரானாகிய விஷ்ணுசித்தர் விருப்பத்தோடு இவ்விருபத்தொரு பாடல்களைப் பாடியருளினார். இவற்றைப் பாடிப் பரவுவார் வைகுந்தத்தில் நிலைபெற்று மகிழ்வர்.

குறிப்புகள்

இப்பாசுரத்தில் கண்ணனின் இளமைத் திருத்தோற்றத்தையும் அவதார மகிமையையும் பால லீலைகளையும் ஒருங்கே சுட்டிப் பாதாதி கேசமாகப் பெரியாழ்வார் பணிந்துரைக்கின்றார்.

## 7.2 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

### இருமதிப்பெண் வினா விடைகள்

1. சீதக்கடல் உள்ளமுது என்ற பாசுரத்தின் பாடுபொருள் யாது?

   கண்ணபெருமானின் திருவடிவைப் பாதாதி கேசமாக அனுபவித்தல்.

2. சீதக்கடல் என்னும் பாசுரம் எவ்வாறுஇறைவனைப் போற்றுகின்றது?

   பாதாதி கேசம்

3. கண்ணன் எதனைப் பிடித்துச் சுவைக்கின்றான்?

   தன் பாதத்து விரல்களை

4. யசோதைக்குக் கண்ணனைப் போத்தந்தவள் யார்?

   தேவகி

5. நெய்யுண்ட கண்ணனை அடிக்க ய்சோதை எதனை ஓச்சினாள்?

   மத்தில் கட்டும் பழந்தாம்புக் கயிறு

6. கண்ணன் யாருடைய முலை உண்டு உறங்குவான் போலே கிடந்தான்?

   பேய்ச்சியாகிய பூதனை

7. யாருடைய மார்பைக் கண்ணன் முன்பு கீண்டான்?

   நரசிம்ம அவதாரத்தில் இரண்ய கசிபுவின் மார்பை

8. கண்ணன்பிறந்த நாள் எது?

   அத்தத்தின் பத்தாம் நாள் (திருவோணம், ரோகிணி)

9. பெரு மாஉரலில் பிணிப்புண்டு இருந்து இரு மாமருதம் இறுத்த பிள்ளை யார்?

   கண்ண பெருமான்

10. குழந்தைக் கண்ணன் எவற்றை மறித்துத் திரிவான்?

இளங்கன்றினங்கள்

**குறுவினா**

11. கண்ணன் செய்த அருளாடல்களையும் அவதாரச் செயல்களைக் குறிப்பிடுக.

5, 7, 9, 10, 11 ஆகிய பாடல்களின் கருத்துக்கள்

12. கண்ணன் ஆயர்பாடியில் செய்த குறும்புகளை எழுதுக.

4, 8, 14, 19, 20 ஆகிய பாடல்களின் கருத்துக்கள்

**பெருவினா**

13. பெரியாழ்வார் ஆய்ச்சியர் கூற்றாகக் கண்ணனின் திருமேனியழகை வருணித்தமையைக் கட்டுரைக்க.

,ரண்டாம் திருமொழி - சீதக்கடல் என்னும் தலைப்பின் கீழ் அமைந்த பாசுரங்களின் கருத்துக்கள்

# பிரிவு-3

## கூறு - 8

## பெரியாழ்வார் திருமொழி முதற்பத்து மூன்றாம் திருமொழி - மாணிக்கம் கட்டி



## (கண்ணனைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுதல்: தாலப்பருவம்)

8.1 **மாணிக்கம் கட்டி என்று தொடங்கும் இந்தப் பிரபந்தம்** கண்ணபெருமானைத் தாலாட்டுகின்ற யசோதைப் பிராட்டி நிலையிலிருந்து பெரியாழ்வார் பாடுகின்ற பிரபந்தமாகும். தொட்டிலிடும்போது பிரமன் தொட்டிலையும் சிவபெருமான் இடைச்சுரிகை மாதுளம்பூக்கோவையாகிய அரைவடத்தையும் தந்து மகிழ்ந்தனர். ஏனைத் தேவர்களும் குழந்தைக் கண்ணனைக் கண்டு மகிழ்ந்து பல பரிசுகளைத் தந்தனர். அவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லும் யசோதை அழுகின்ற குழந்தையாகிய கண்ணனை அழாதபடி தாலாட்டுகின்றாள்.

தால்- நாக்கு. நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு எனும் பெயர் பெற்றது. பிள்ளைத்தமிழில் இப்பருவம் மூன்றாவதாக அமையும். குழந்தை பிறந்து எட்டாம் திங்களில் பாடுவதாகப் பிள்ளைத்தமிழ் இலக்கணம் பகரும். இந்தச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்குப் பெரியாழ்வாரின் இப்பிரபந்தம் பெரிதும் அடிகோலிற்று எனலாம்.

## 8.2 கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதல்

**கலித்தாழிசை**

மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி

ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறுத்தொட்டில்

பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்

மாணிக் குறளனே! தாலேலோ !

வையமளந்தானே! தாலேலோ!

1. இரு பக்கத்திலும் மாணிக்கத்தை நிறுத்தி இடையிலே வைரத்தைக் கட்டி உயர்ந்த பொன்னாலாகிய தொட்டிலை மிகவும் விரும்பியவனாய்ப் பிரமதேவன் உனக்காக அனுப்பியுள்ளான். மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்க வாமன அவதாரம் எடுத்தவனே! தாலேலோ! அவ்வடிவிலிருந்து திரிவிக்கிரம கோலங்கொண்டு உலகை அளந்தவனே! தாலேலோ!



உடையார் கனமணியோடு ஒண் மாதுளம்பூ

இடைவிரவிக் கோத்த எழில் தெழ்கினோடு

விடையேறு காபாலி ஈசன் விடுதந்தான்

உடையாய் ! அழேல் ! அழேல் ! தாலேலோ !

உலகமளந்தானே! தாலேலோ.

2. காளையை வாகனமாக உடையவன் சிவபெருமான். அவ்விறைவன் திருவரைக்குப் பொருந்துமாறு தக்க பொன்மணியும் அழகிய மாதுளம் பூ எனும் சங்கிலிக்கோவை இடையிலே கலந்து பொருந்திய இடைச்சுரிகையும் உணக்கு அனுப்பிவைத்துள்ளான். எல்லா உயிர்களையும் அடிமையாகக் கொண்டவனே! அழாதே! தாலேலோ! வையம் அளந்த பிரானே தாலேலோ!

என்தம்பிரானார் எழில் திருமார்வர்க்கு

சந்தம் அழகிய தாமரைத் தாளர்க்கு

இந்திரன் தானும் எழிலுடைக் கிண்கிணி

தந்து உவனாய் நின்றான் ! தாலேலோ !

தாமரைக் கண்ணனே! தாலேலோ!

3. எனக்குத் தலைவனும் அழகான திருமார்பை உடையவனும் மென்மையும் அழகும் கொண்ட தாமரை போன்ற திருவடியானாகிய கண்ண பெருமானே! உனக்குஇந்திரன் அழகிய கிண்கிணிச் சதங்கையைத் தந்து அடியார் கூட்டத்தினிடையே நின்றான். தாலேலோ! தாமரை போலும் கண்ணழகை உடையவனே தாலேலோ!

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்

அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும்

அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்

செங்கண் கருமுகிலே! தாலேலோ !

தேவகிசிங்கமே! தாலேலோ!

4. வானத்து அமரர்கள் உனக்காக வலம்புரிச் சங்கத்தையும் திருவடிகளில் பூண்பதற்குரிய சதங்கையையும் அழகிய கைகளில் அணிவிப்பதற்கான முன் சரி வளைகளும் அரைஞாணும் அரைவடமும் காணிக்கையாகத் தந்துள்ளனர். சிவந்த கண்ணுடைய கரிய மேகம் போன்றவனே! தாலேலா! தேவகி பெற்ற சிங்கம் போன்றவனே! தாலேலா!

எழிலார் திருமார்வுக்கு ஏற்கும் இவையென்று

அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு

வழுவில் கொடையான் வயிச்சிரவணன்
தொழுது உவனாய் நின்றான் ! தாலேலோ!
தூமணிவண்ணனே! தாலேலோ!

5. குற்றமில்லாத கொடைக்குரிய குபேரன் உன்னுடைய எழிலார்ந்த திருமார்புக்கு ஒத்தன என்று கருதி அழகிய ஐம்படைத் தாலியும் ஆரமும் கொண்டுவந்து தந்து இடையில் நின்றான் காண். தாலேலோ! தூய மணி நிறத்தவனே ! தாலேலோ!

ஓதக் கடலின் ஒளிமுத்தின் ஆரமும்
சாதிப் பவளமும் சந்தச் சரிவளையும்
மாதக்க என்று வருணன் விடுதந்தான்
சோதிச்சுடர்முடியாய் ! தாலேலோ !
சுந்தரத்தோளனே! தாலேலோ!

6. வருணன், நீர்மிகுந்த கடலில் விளைந்த ஒளியுடைய முத்துக்களால் ஆன ஆரமும் உயர்ந்தவகையைச் சார்ந்த பவளமும் ஓசைமிக்க சரிவளையும் என்னும் இவற்றை உனக்கே தகும் என்று அனுப்பியிருக்கின்றான். ஒளியுடைய திருமுடியணிந்தவனே! தாலேலோ! அழகிய தோளுடையவனே! தாலேலோ!

கானார் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்
வானார் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்
தேனார் மலர்மேல் திருமங்கை போத்தந்தாள்
கோனே! அழேல்!அழேல்! தாலேலோ!
குடந்தைக் கிடந்தானே! தாலேலோ!

7. தேனுடைய தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் காட்டில் விளைந்த நறுமணமிக்க துளசியால் தொடுக்கப்பட்ட மாலையையும் வானகத்துத் தேவருலகின் கற்பக மரத்தின் பூவினால் தொடுக்கப்பெற்ற நெற்றி மாலையையும் அனுப்பியிருக்கின்றாள். எம் அரசே! அழாதே! தாலேலோ! குடந்தை நகரில் பள்ளிகொண்ட இறைவனே! தாலேலோ!

திருமகள் தனக்கு நாதனாகிய திருமாலே கண்ணனாக அவதரித்தமையால் மாலை புனைந்து அளித்தாள் என்ற நயத்தை இப்பாடலில் அறியமுடிகின்றது.



கச்சொடு பொற்சுரிகை காம்பு கனவளை
உச்சிமணிச் சுட்டி ஒண்தாள் நிரைப்பொற்பூ

அச்சுதனுக்கென்று அவனியாள் போத்தந்தாள்

நச்சுமுலையுண்டாய் ! தாலேலோ!

நாராயணா! அழேல் ! தாலேலோ!

8. நிலமகள் அச்சுதனாகிய உனக்கு இடைக்கச்சும் பொன்னால் ஆகிய உடைவாளும் உட்கூடுடைய கனமான வளையும் உச்சியில் சூடுதற்குரிய நெற்றி மணிச்சுட்டியும் ஒளியுடைய காலில் அணியத்தக்கதான பொன்னாலாகிய பூவையும் அனுப்பியுள்ளாள். பூதனையின் நச்சு முலையருந்தியவனே! தாலேலோ! நாராயணனே! அழவேண்டாம் தாலேலோ!

பூபாரம் தீர்க்கும் வண்ணம் அவதரித்தவன் ஆகையால் உடைவாளை அளித்தாள் என்று கருதுமாறு இப்பாடல் அமைகின்றது.

மெய்திமிரும் நானப்பொடியோடு மஞ்சளும்

செய்ய தடங்கண்ணுக்கு அஞ்சனமும் சிந்துரமும்

வெய்ய கலைப்பாகி கொண்டு உவளாய் நின்றாள்

அய்யா! அழேல் ! அழேல் ! தாலேலோ

அரங்கத்தணையானே! தாலேலோ!

9. விருப்பம் தரும் ஆண்மானை வாகனமாகக் கொண்ட காளி, மேனியில் பூசிக்கொள்ளும் வாசனைப்பொடியையும் மஞ்சளையும் சிவந்த திருக்கண்ணில் இடத்தக்க மையையும் நெற்றியில் அணிவதற்கான சிந்தூரமும் கொண்டுவந்து தந்து இங்கு இடையே வந்து நின்றுள்ளாள். ஐயனே! அழ வேண்டாம்! தாலேலோ திருவரங்கத்தில் பாம்பணையில் பள்ளிகொண்டவனே! தாலேலோ!

வஞ்சனையால் வந்த பேய்ச்சி முலையுண்ட

அஞ்சன வண்ணனை ஆய்ச்சி தாலாட்டிய

செஞ்சொல் மறையவர்சேர் புதுவைப் பட்டன்சொல்

எஞ்சாமை வல்லவர்க்கு இல்லை இடர்தானே! (2)

10. வஞ்சகமாக வந்த பூதனையாகிய பேய்ச்சியின் நச்சு முலையுண்ட மைநிறத்தானை ஆய்ச்சி யசோதை தாலாட்டுகின்றவாறு சிறந்த சொல்லெடுத்து அந்தணர் வாழும் புதுவையின் பட்டர்பிரான் பாடிய இத்தாலாட்டைக் குறைவின்றிச் சொல்பவர்களுக்கு இடரென்றும் இல்லையாம்.



குறிப்புகள்

## 8.3 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

### இருமதிப்பெண் வினா விடைகள்

1. மாணிக்கம் கட்டி என்ற பாசுரத்தின்பொருள் யாது?

கண்ணனைத் தாலாட்டுதல்

2. கண்ணனுக்குப் பிரமன் தந்த பரிசு எது?

மாணிக்கமும் வைரமும் கலந்த பொன் தொட்டில்

3. கண்ணனுக்குக் கிண்கிணி தந்தவன் யார்?

இந்திரன்

4. வழுவில் கொடையான் வயிச்சிரவணன் - யார்?

குபேரன்

5. கண்ணனுக்கு ஐம்படைத்தாலி தந்தவன் யார்?

குபேரன்

6. திருமங்கை கண்ணனுக்குத் தந்தவை எவை?

துளசி மாலையும் கற்பக மரத்துப் பூவால் ஆகிய மாலையும்

7. கலைப்பாகி என்பவள் யார்? அவள் கண்ணனுக்குத் தந்தன எவை?

கலைப்பாகி -காளி: காளி அஞ்சனமும் சிந்தூரமும் தந்தாள்

8. புதுவைப்பட்டன் எனப்படுபவர் யார்?

பெரியாழ்வார்

### குறுவினா

9. கண்ணனுக்குத் தேவர்கள் அளித்த பரிசுகளைச் சுட்டுக.

மாணிக்கம்கட்டி என்று தொடங்கும் பாசுரம்தோறும் இடம்பெற்ற பரிசு குறித்த செய்திகள்

### பெருவினா

10. கண்ணனை யசோதை கூற்றாகப் பெரியாழ்வார் தாலாட்டிய பாங்கை எழுதுக.

கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதல் என்ற தலைப்பின் கீழ் அமைந்த பாடல்களின் செய்திகள்

# கூறு - 9 பெரியாழ்வார் திருமொழி - முதற்பத்து நான்காம் திருமொழி - தன் முகத்து



## 9.1 சந்திரனை அழைத்தல், அம்புலிப்பருவம்

கண்ணன் தவழும் பருவத்தை அடைந்ததும் வீதிக்குச் சென்று புழுதியில் விளையாடத் தொடங்கினான். அப்போது வானில் திரியும் முழுநிலவைக் கண்ட கைகளை அசைத்து வாவென்று கூப்பிட்டான். அது கண்ட யசோதைப் பிராட்டி நிலவை வருமாறு கெஞ்சியும் அச்சுறுத்தியும் வராவிட்டால் ஏற்படும் விளைவுகளைக் கூறியும் குழந்தைக் கண்ணனுடன் விளையாட நிலவை அழைக்கின்ற பிரபந்தமாகப் பெரியாழ்வார் இதனை அமைத்துள்ளார்.

பிள்ளைத் தமிழின் காப்புப் பருவம் அம்புலிப் பருவம் நீங்கலாக ஏனையவற்றுள் பாட்டுடைத் தலைவனை நோக்கிக் கூறுவதாகப் பாடல்கள் அமைந்திருக்கும். அம்புலிப் பருவத்தில் நிலவைக் குழந்தையாகத் திகழும் பாட்டுடைத் தலைவனுடன் நிலவை விளையாட வருமாறு சாம, பேத, தான, தண்டம் என்ற நான்கு நிலைகளில் விளிப்பது மரபு. இவ்வாறு நிலவை முன்னிலையாக்கிப் பாடுவதற்குப் பெரியாழ்வாரின் இந்தப் பிரபந்தமே அடிப்படையாகும்.

## 9.2 நான்காம் திருமொழி - தன் முகத்து

இந்தப் பிரபந்தத்தின் முதல் இரு பாடல்களில் நிலவைச் சாதாரணமாகப் போற்றி விளையாட அழைப்பதாகவும் மூன்று முதல் ஆறு பாடல்கள் கண்ணனின் சிறப்புக்கு ஒவ்வாத நிலவின் நிலையையும் கண்ணனின் மேன்மையையும் கூறுவதாகவும் ஏழு முதல் ஒன்பது வரையிலான பாடல்கள் கண்ணனுடன் விளையாட வராவிட்டால் ஏற்படும் நிலையைக் கூறி அச்சுறுத்துவதாகவும் அமைந்துள்ளன. இவை முறையே சாம, பேத, தண்டம் என்னும் நிலைகளுடன் ஒப்பன. இதன் வளர்நிலையிலேயே பிற்காலப் பிள்ளைத்தமிழில் அம்புலிப்பருவம் பெருக வளர்ந்து பிள்ளைத்தமிழில் அம்புலிப் புலி என்னும் தொடரால் பாராட்டப்பெறும் சிறப்பைப் பெற்றது. அதற்கான அடித்தளைத்தை, இலக்கிய மூலக் கருவை இப்பிரபந்தத்தில் காண முடிகின்றது.

**கலிநிலைத்துறை**

தன்முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய்
பொன்முகக் கிண்கிணியார்ப்பப் புழுதியளைகின்றான்
என்மகன் கோவிந்தன் கூத்தினை இள மாமதீ!
நின்முகம் கண்ணுளவாகில் நீ இங்கே நோக்கிப்போ!

1. இளைய நிலவே! என் மகன் கோவிந்தன் தன் முகத்து நெற்றிச்சுட்டி பலவாறு அசையுமாறு தவழ்ந்துவெளியே சென்று பொன்னால் ஆகிய அரைச் சதங்கை ஆரவாரிக்கப் புழுதி அளைந்து விளையாடுகின்றான். உன் முகத்தில் கண்ணிருந்தால் அவனுடைய பிள்ளைப்பருவ விளையாட்டுக்களை இங்கே வந்து பார்த்துவிட்டுச் செல்வாய்.

குறிப்புகள்

என் சிறுக்குட்டன் எனக்கோர் இன்னமுது எம்பிரான்
தன் சிறுக்கைகளால் காட்டிக் காட்டியழைக்கின்றான்
அஞ்சன வண்ணனோடு ஆடலாட உறுதியேல்
மஞ்சில் மறையாதே! மாமதீ! மகிழ்ந்தோடிவா!

2. குளிர்ச்சியாலும் வட்ட வடிவாலும் பெரிய நிலவே! என் சிறிய மகனும் எனக்கு இனிய அமுதம் போன்றவனும் எனக்குத் தலைவனும் ஆன கண்ணபிரான் தன் பிஞ்சுக் கரஙகளால் உன்னைக் காட்டி காட்டி விளையாட அழைக்கின்றான். மேகவண்ணன் ஆகிய கண்ண பெருமானுடன் விளையாட விரும்பினால் மேகத்தில் மறைந்துகொள்ளாதே. இந்த வாய்ப்பிற்காக மகிழ்ந்து விரைந்தோடி விளையாட வருவாய்.

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும்
எத்தனை செய்யினும் என்மகன் முகம் நேரொவ்வாய்
வித்தகன் வேங்கட வாணன் உன்னை விளிக்கின்ற
கைத்தலம் நோவாமே அம்புலீ! கடிதோடிவா!

3. சந்திரனே! எங்கும் உன்னுடைய ஒளி மயமான மண்டலம் சூழ ஒளையை வீசிப் பரந்து எத்தனை காட்சியளித்தாலும் என்மகன் கண்ணனுடைய திருமுக மண்டலத்தின் பிரகாசத்திற்கு நீ ஒப்பாகமாட்டாய். திருக்கல்யாணக் குணங்கள் நிறைந்தவனாய் வேங்கட மாலையில் வாழ்பவனாய்த் திகழும் என் மகன் உன்னை விளையாட அழைக்கின்ற திருக்கரம் நோகாதபடிவிரைந்து ஓடி வருவாய்.

சக்கரக் கையன் தடங்கண்ணால் மலரவிழித்து
ஒக்கலை மேலிருந்து உன்னையே சுட்டிக்காட்டும்காண்
தக்கது அறிதியேல் சந்திரா! சலம்செய்யாதே
மக்கட்பெறாத மலடன் அல்லையேல் வா கண்டாய்.

*Self -Instructional Material*

4. சந்திரனே! என் இடையில் இருந்துகொண்டு சக்கரத்தை ஏந்திய கையன் தன் குளிர்ந்த கண்ணால் ஆசையுடன் பார்த்து உன்னையே சுட்டிக் காட்டுகின்றான். உனக்குத் தகுதியானதை நீ அறிந்துணர்ந்தால் இவனிடத்தில்

வெறுப்பைத் தூண்டாதிருப்பாய். பிள்ளைகளைப் பெறாத மலடன் நீ இல்லாதிருந்தால் என் மகனுடன் விளையாட இப்போதே வருவாய்.



அழகிய வாயில் அமுதவூறல் தெளிவுறா
மழலை முற்றாத இளஞ்சொல்லால் உன்னைக் கூவுகின்றான்
குழகன் சிரீதரன் கூவக் கூவ நீ போதியேல்
புழையில ஆகாதே நின்செவி புகர்மாமதீ!



5. களங்கத்தையுடைய பெரிய சந்திரனே! எல்லோரிடத்திலும் இனிது கலந்திருக்கும் குழகனும் ஸ்ரீதரனுமான என்மகன் தன் அழகிய பிஞ்சு வாயில் அமுத ஊறி வழிய தெளிவில்லாத மழலை இளஞ் சொற்களால் உன்னைப் பலமுறைக் கூவிக் கூவி அழைக்கின்றான். அவ்வாறு பலமுறை அழைத்தும்நீ வாராது செல்வாயானால் உம்முடைய காது துளையற்றதாய் (கேட்கும் திறனற்றுப் போய்) ஆகிவிடாதா?

தண்டொடு சக்கரம் சார்ங்கம் ஏந்தும் தடக்கையன்
கண்துயில் கொள்ளக் கருதிக் கொட்டாவி கொள்கின்றான்
உண்ட முலைப்பாலறா கண்டாய் உறங்காவிடில்
விண்தனில் மன்னிய மாமதீ! விரைந்தோடிவா.

6. விண்ணில் நிலைத்திருக்கும் பெரிய நிலவாகிய சந்திரனே! என் மகன் கண்ணன் எப்போதும் கதையையும் சக்கரத்தையும் சார்ங்கமாகிய வில்லையும் ஏந்துகின்ற பெரிய கரத்தை உடையவன். உறங்கக் கருதியவனாய்க் கொட்டாவி விடுகின்றான். இவன் சரியாக உறங்காவிட்டால் என்னிடத்தில் பருகிய பால் செரிக்காது. ஆகவே அவனுடைய தூக்கத்தைத் தாமதம் செய்யாதபடி விளையாடும்பொருட்டு விரைந்திங்கு ஓடி வருவாய்!

பாலகனென்று பரிபவம் செய்யேல் பண்டொருநாள்
ஆலினிலை வளர்ந்த சிறுக்கன் அவன்இவன்
மேலெழுப் பாய்ந்து பிடித்துக்கொள்ளும் வெகுளுமேல்
மாலை மதியாதே மாமதீ! மகிழ்ந்தோடிவா!

7. பெருமையுடைய நிலவாகிய சந்திரனே! என் மகன் கண்ணனை உருவில் சிறு பாலகன் என்று எண்ணி அலட்சியப்படுத்தாதே! முன்பொருநாள் ஊழிக் காலத்தில் ஆலிலை மேல் துயின்ற சிறு குழவி அவனும் இவனே என்று உணர்ந்துகொள். என் மகனாகிய திருமாலை மதியாமல் வராது இருக்காதே. அவ்வாறு இருந்தால் விண்மேல் பாய்ந்து உன்னைப் பற்றிக்கொள்வான். ஆகவே இவனோடு விளையாடுதல் அரிது என்று மகிழ்ந்து ஓடி வருவாய்.

சிறியனென்று என்னிளஞ் சிங்கத்தை இகழேல் கண்டாய்
சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்றுகேள்
சிறுமைப் பிழைகொள்ளில் நீயும் உன்தேவைக்குரியைகாண்
நிறைமதீ! நெடுமால் விரைந்து உன்னைக்கூவுகின்றான் !

குறிப்புகள்

8. கலைகளால் நிறைந்த நிலவே! இளம் சிங்கக் குட்டி போன்ற என் மகனைச் சிறுவன் என்று இகழ்ச்சியாக எண்ணாதே! இவனைச் சிறுவன் என்று எண்ணிய மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூவடியால் உலகிரந்த பெருமையன். அவனிடம் சென்று இச்சிறுவனின் பெருமையைக் கேள். சிறுபுத்தியால் பிழைசெய்தால் நீயும் மாவலிபோலத் துயர் உறுவதற்கும் கண்ணனின் தேவையறிந்து அடிமைச் சேவகம் புரியவும் உரியவனாகிவிடுவாய். அதைக் கருத்திற் கொண்டு நெடிய மாலாகிய என் மகன் கண்ண பெருமான் விரைந்து உன்னைக் கூவி அழைக்கும்போதே விரைந்தோடி வருவாய்.

தாழியில் வெண்ணெய் தடங்கை ஆரவிழுங்கிய
பேழை வயிற்றெம்பிரான் கண்டாய் உன்னைக் கூவுகின்றான்
ஆழிகொண்டு உன்னையெறியும் ஐயுறவில்லை காண்
வாழ வுறுதியேல் மாமதீ! மகிழ்ந்தோடிவா!

9. பெரிய நிலவாகிய சந்திரனே! தாழியில் வைத்திருந்த வெண்ணெய்யைத் தன்னுடைய கைநிறைய அள்ளி உண்டு விழுங்கிய பெரு வயிற்றுக்காரன் என் தலைவனான என் மகன். அவன் உன்னைக் கூவி அழைக்கவும் நீ வாராதிருந்தால் தன்கைச் சக்கரப் படைகொண்டு உன்மீது வீசுவான். இதில் சிறிதும் ஐயமில்லை. நெடுங்காலம் வாழ விருப்பமிருந்தால் விரைந்து மகிழ்வாக விளையாட வருவாய்.

மைத்தடங் கண்ணி யசோதை தன்மகனுக்கு இவை
ஒத்தன சொல்லி உரைத்த மாற்றம் ஒளிபுத்தூர்
வித்தகன் விட்டுசித்தன் விரித்த தமிழிவை
எத்தனையும் சொல்லவல்லவர்க்கு இடரில்லையே. (2)

10. மையிட்ட கண்ணையுடைய யசோதை தன் மகனுக்கு ஒத்ததாக நிலவை அழைத்தபடி அமைந்த இக்கூற்றை ஒளியுடைய விஷ்ணுச்சித்தர் விரிவாகப் பாடினார். அவர் பாடிய இந்தத் தமிழ்ப் பிரபந்தப் பாடல்களைப் பலமுறை சொல்லவல்லவர்க்கு எப்போதும் இடரில்லையே!

## 9.3. தன்மதிப்பீட்டு வினா விடைகள்

குறிப்புகள்

### இரு மதிப்பெண் வினா விடைகள்

1. நிலவிற்குக் கண்ணிருந்தால் எதனைச் செய்யுமாறு யசோதை கூறுகின்றாள்?

   கண்ணன் புழுதி அளைந்து விளையாடுவதைக் கண்டு செல்லல்

2. எத்தனை செய்யினும் யார் முகத்துக்கு நிலவு ஒவ்வாது?

   கண்ணனின் திருமுகம்

3. நிலவின் செவி கேட்கும் திறனற்றதோ என யசோதை ஐயுறுவதேன்?

   நிலவைக் கூவி அழைப்பினும் அது வாராமையால்

4. கண்ணன் தன் கையில் ஏந்துபவை எவை?

   சார்ங்க வில், சக்கரம், தண்டு

5. பண்டொரு நாள் ஆலிலை வளர்ந்த சிறுக்கன் யார்?

   கண்ணன்

6. சிறுமையின் வார்த்தையை யாரிடம் கேட்குமாறு யசோதை கூறுவாள்?

   மாவலி

7. நிலவு விளையாட வராவிட்டால் கண்ணன் யாவை செய்வான்?

   மேல் எழப் பாய்ந்து பற்றும்; சக்கரப்படையை வீசுவான்

### குறுவினா

8. கண்ணனின் சிறப்புக்கு நிலவு ஒவ்வாத தன்மையை விளக்குக.

   இப்பாசுரத்தின் மூன்று முதல் ஆறு பாடல்களின் கருத்துக்கள்

9. கண்ணனுடன் விளையாட வராவிடின் நிலவுக்கு ஏற்படும் துயர்களை விளக்குக.

   இப்பாசுரத்தின் ஏழு முதல் ஒன்பது வரையிலான பாடல்களின் கருத்துக்கள்

### பெருவினா

10. நிலவைக் கண்ணனுடன் விளையாட அழைக்கும் யசோதையின் கூற்றாகப் பெரியாழ்வார் பாடிய திறத்தை விளக்குக.

11. பல்வகையாக வேண்டியும் ஆணையிட்டும் நிலவை விளையாட அழைத்த திறத்தைத் தன்முகத்து என்னும் பாசுரம்வழி விளக்குக.

12. பிற்காலப் பிள்ளைத்தமிழின் அம்புலிப்பருவத்திற்குத் தன்முகத்து என்னும் பாசுரம் அடித்தளமிட்டமையை ஆய்க.

9.2 நான்காம் திருமொழி தன்முகத்து என்னும் தலைப்பின் கீழுள்ள செய்திகள்



## கூறு - 10

## செயங்கொண்டார் - கலிங்கத்துப் பரணி முதல் பகுதி

### 10.1 பரணி - அறிமுகம்

பரணி என்பது போர்க்கள நிகழ்ச்சிகளைப் பாடும் இலக்கியமாகும். ஆயிரம் யானைகளைப் போர்க்களத்தில் கொன்றவனுக்குப் பாடப்படுவது பரணியாகும். இதனை,

‘ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி’’

என்று இலக்கண விளக்கம் (832) கூறுகின்றது.

‘யானை சாய்த்த அடுகளத்து அல்லது
யாவரும் பெறாஅர் பரணிப் பாட்டே’’

என்ற பன்னிருபாட்டியல் நூற்பா, யானை அல்லாத பிறபடை வென்றோரின் வீரம் சிறப்பாகப் போற்றப்படுவதில்லை என்று கூறுகின்றது.

போர் நடைபெறும் காலத்தில் போர்க்களப் பரண் மீதிருந்து பாடப்பெறுவதால் இப்பெயர் பெற்றது. பரணி நட்சத்திர நாளில் வெற்றி பெற்ற தலைவன் போரில் இறந்த யானை, குதிரை வீரர்களின் உறுப்புகளைக் கொண்டு கூழ் சமைத்துக் காளிக்குப் படைப்பது, அதனை பேய்கள் உண்டு அரசனை வாழ்த்தும். இதன் காரணமாக இப்பெயர் பெற்றிருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

‘பண்டு மிகுமோர் பரணிக்கூழ் பாரதத்தில் அறியாமோ’’ என்னும் கலிங்கத்துப்பரணி தொடரும், ‘காடுகெழு செல்விக்குப் பரணிநாள் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதொரு வழக்கு’’ என்னும் பேராசிரியர் உரை விளக்கமும் இதற்குத் துணை செய்கின்றன.



### 10.2 பரணி நூல்கள்

செயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணி மட்டுமன்றி வேறுபல நூல்களும் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்றுள்ளன. அவையாவன,

| நூலாசிரியர்கள் | - | நூற் பெயர்கள் |
|---|---|---|
| ஒட்டக்கூத்தர் | - | தக்காயாகப் பரணி |
| தத்துவராயர் | - | அஞ்ஞவதைப் பரணி |
| கனகராஜா ஐயர் | - | இலங்கைப் பரணி |
| பா.சு. மணியன்- | | சீனத்துப் பரணி |
| அரங்க - சீனிவாசன் | - | வங்கத்துப்பரணி |

முதலாம் இராஜேந்திரனின் இரண்டாம் மகன் இரண்டாம் ராஜேந்திரன் (கி.பி. 1051-63) கி.பி.1054-ல் மேலைச் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனுடன் கொப்பத்தில் போர்புரிந்து வென்றான். இதனைப் பாடியது 'கொப்பத்துப்பரணி" என்ற இலக்கியமாகும். இவன் தம்பி வீரராசேந்திரன் (கி.பி.1063-70) கிருஷ்ணை துங்கபத்திரை ஆறுகள் கூடும் கூடல் என்னுமிடத்தில் குந்தளர்களாகிய மேலைச் சாளுக்கியரை வெற்றிகொண்ட சிறப்பினை விரிப்பு விவரிப்பது கூடல் சங்கமத்துப் பரணி.

'.............கொலையானை
பப்பத்து ஒருபசிப்பேய் பற்ற ஒருபரணி
கொப்பத்து ஒருகளிற்றால் கொண்டகோன் ஒப்பொருவர்
பாட அரிய பரணி பகடொன்றின்
கூடல சங்கமத்துக் கொண்டகோன;' (24- 28)

என ஒட்டக்கூத்தர் இராசராச சோழன் உலாவில் பொறித்துள்ளார். இவ்விரு பரணிகளையும் பாடியவர் யார் என அறிய முடியவில்லை இப்பரணி நூல்கள் இரண்டும் மறைந்துவிட்டன.

## 10.3 நூல் அமைப்பு

பரணி என்பது புறத்திணைகளாகிய ஆகிய வஞ்சி, உழிஞை, வாகை, பாடாண்திணை போன்றவற்றின் சில துறைகளின் வளர்ச்சி என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பாட்டுடைத் தலைவனை அடிப்படையாகக் கொண்டு,

| | |
|---|---|
| 1. கடவுள் வாழ்த்து | 8. இராச பாரம்பரியம் |
| 2. கடைதிறப்பு | 9. பேய் முறைப்பாடு |
| 3. காடு பாடியது | 10. அவதாரம் |
| 4. கோயில் பாடியது | 11. காளிக்குக் கூளி கூறியது |
| 5. தேவியைப் பாடியது | 12. போர்பாடியது |

| | |
|---|---|
| 6. பேய்களைப் பாடியது | 13. களம் பாடியது |
| 7. இந்திரசாலம் | 14. கூழடுதல் |

என 14 உறுப்புகளைக் கொண்ட பரணி, இப்பாடல்கள் ஈரடி கலித்தாழிசையில் அமைந்திருக்கும்.

'வஞ்சி மலைந்து உழிஞை முற்றித்

தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை

வெம்புசின மாற்றான் தானை வெங்களத்தில்

குருதிப் பேராறு பெருகுஞ் செங்களத்து

ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே''

என்று பன்னிரு பாட்டியல் (58) பரணியின் அமைப்பையும் பண்பையும் ஒருசேர விளக்குகிறது.

## 10.4 கலிங்கத்துப்பரணி - அறிமுகம்

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் செயங்கொண்டார் பாடியநூல் கலிங்கத்துப் பரணி ஆகும். இந்நூல் காலத்தால் முந்தியதாகக் கருதப்படுகின்றது, சோழஅரசன் குலோத்துங்கன் கலிங்க மன்னன் அனந்தவர்மன் சோடகங்கன் மீது படையெடுத்தான். **கருணாகரத் தொண்டைமான்** சோழர் படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்றார். தோற்ற அரசனுடைய நாட்டில் பாசறை அமைத்துப் போர் செய்து வென்றதால், பரணி அங்கே பாடப்படுவதாகக் கொண்டு, தோற்ற நாட்டின் பெயரால் நூலை வழங்குவது மரபாயிற்று. இதனால் இந்நூல் கலிங்கத்துப்பரணி என்றும் பெயர் பெற்றது. இந்நூலில் குலோத்துங்க சோழனும் அவன் படைத்தலைவனாகிய கருணாகரத் தொண்டமானும் சிறப்பித்துப் போற்றப்படுகின்றனர்.

இதனுள் இராச பாரம்பரியம் கூறும் பகுதி சோழர் வரலாற்றினைக் கூறும் சிறிய நூலாகக் கொள்ளத்தக்கது. முதற் குலோத்துங்கனின் மகனான விக்கிரம சோழன் (கி.பி. 1118- 36) தென்கலிங்க வேந்தனாகிய தெலுங்க வீமனைப் போரில் வென்று வெற்றி வாகை சூடினான். இதனைப் பொருளாகக் கொண்டது **கலிங்கத்துப்பரணி** என்ற இலக்கியம் ஆகும். இதனை எழுதியவர் ஒட்டக்கூத்தர் என்ற செய்தி தக்கயாகப்பரணி அளிக்கும் குறிப்பு மூலம் வெளிப்படுகிறது.



போர்க்களம் சென்று வீரன் மீது காதல் கொண்ட மகளிரின் நிலையைப் பற்றிக் கடைதிறப்பு எனும் பகுதியில் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார்.

'பேணும் கொழுநர் பிழைகள் எல்லாம் பிரிந்த

பொழுது நினைந்து அவரைக்

காணும் பொழுது மறந்திருப்பீர் கனகப்

பொற்கபாடம் திறமினோ''

என்றும்,

'வருவார் கொழுநரெனத் திறந்தும் வாரார்

கொழுநரென அடைத்தும்

திருகுங் குடுமி விடியளவும்

தேயுங் கபாடந் திறமினோ''

என்றும், தலைவியின் உள்ளக்கிடக்கையை அழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

கலிங்கத்துப்பரணி வீரச்சுவை நிறைந்த நூல் ஆயினும் காதல் சுவையும் இடையிடையே விரவித்தோன்றப் புலவர் இதனை இயற்றியுள்ளார். இரண்டு இரண்டு அடிகளால் ஆன தாழிசை என்னும் செய்யுள் வகையால் இயற்றப்பட்டது. போர்க்கள நிகழ்ச்சிகளைக் குறிப்பதற்கோர் மிடுக்கான ஓசையைக் கொண்டமைகின்றது. ஓசைகளை வேறுபடுத்திப் பாடுவதில் செயங்கொண்டார் வல்லவர். சொற்களின் பொருளின் ஓசையும் சேர்ந்து படிப்பவரின் மனதில் காட்சிகளைப் பதிய வைக்கின்றன. சான்றுகளாக,

'எடும் எடும் எடும்என எடுத்ததோர்

இகல்ஒலி கடல்ஒலி இகக்கவே

விடுவிடு விடுபரி கரிக்குழாம்

விடும் விடும் எனஒலி மிகைக்கவே

விளைகனல் விழிகளின் முளைக்கவே

மினல்ஒளி கனலிடை பிறக்கவே

வளைசிலை உரும்என இடிக்கவே

வடிகணை நெடுமழை சிறக்கவே

போன்ற தாழிசைகளைக் குறிப்பிடலாம்.

## 10.5 செயங்கொண்டார்

செயங்கொண்டார் முதலாம் குலோத்துங்கனின் காலத்தில் வாழ்ந்தவராவர். 'பரணிக்கோர் செயங்கொண்டான்'' என்று கூறும் அளவிற்கு ஓசைநயம், யாப்பு

முதலியன அந்தந்த உணர்வுகளுக்கு ஏற்ப அமைத்துப் பாடுவதில் வல்லவர் செயங்கொண்டார்.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் சயங்கொண்டாரின் சால்பினை உரைக்கும் போது



‘ வெண்பாவிற் புகழேந்தி **பரணிக்கோர்**

**சயங்கொண்டான்** விருத்தமென்னும்

ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா

அந்தாதிக் கொட்டக் கூத்தன்

கண்பாய கலம்பத்திற் கிரட்டையர்கள்

வசைபாடக் காள மேகம்

பண்பாகப் பகர்சந்தம் படிக்காம

லாலொருவர் பகரொ ணாதே’

என்கின்றார்.

## 10.6 நூல்

### 10.6.1. கடவுள் வாழ்த்து

கலிங்கப் போரைப் பாடவந்த ஆசிரியர் சயங்கொண்டார் முதலில் கலிங்கப் போர்த் தலைவனான குலோத்துங்கன் நெடிதுநின்று வாழவேண்டிக் கடவுளரை வணங்குகின்றார். சிவன், திருமால், நான்முகன், ஞாயிறு, விநாயகர், முருகன், கலைமகள், உமையன்னை, அன்னைமார் எழுவர் ஆகிய கடவுளரைப் போற்றும் பொழுது அவர்களின் ஆற்றலோடு குலோத்துங்கனின் ஆற்றலை இயைபுபடுத்திக் கூறுவது படித்து இன்புறத்தக்கது.

உலகின் வாழ்வியல் முறையை உணர்த்தும் வண்ணம் சிவன் உமையம்மையைப் புணர, குலோத்துங்கனோ அரியமறையின் நெறியை உணர்த்த மணமகளைப் புணர்ந்தான் என்கிறார் செயங்கொண்டார்.

மேலும் திருமால் உலகம் முழுவதும் தன் வயிற்றுள் அடக்கக் குலோத்துங்கன் தன் வெண்கொற்றக் குடைக்குள் உலகமுழுதையும் அடக்கினான் என்றும், நான்முகன் நான்குலகையும் படைக்கக் குலோத்துங்கன் நானிலத்தையும் காத்தான்.



புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்

தொழில்காட்டப் புவன வாழ்க்கைச்

செயல்வண்ண நிலைநிறுத்த மலைமகளைப்

புணர்ந்தவனைச் சிந்தை செய்வாம். 1

அருமறையி னெறிகாட்ட வயன்பயந்த

நிலமகளை யண்டங் காக்கும்

உரிமையினிற் கைப்பிடித்த வுபயகுலோத்

தமனபயன் வாழ்க வென்றே. 2

கதிரவன் ஓர் சக்கரத்தை உடைய தேரை நடத்திச் செல்லக் குலோத்துங்கன் உலகனைத்தையும் தன் ஓர் ஆணைச் சக்கரத்தால் நடத்திச் சென்றான்.

யானை முகனான விநாயகன் யோகியர்களின் உள்ளத்தில் அவர்களின் பக்தியால் கட்டுண்டு கிடக்கக் குலோத்துங்கன் திசை யானைகளாகிய வெற்றித் தூண்களில் (எட்டுத் திசைகளிலும்) தன் புகழால் நிலைத்து நின்றான். இதனை,

‘தனித்தனியே திசையானைத் தறிகளாகச்

சயத்தம்பம் பலநாட்டி ஒருகூடத்தே

அனைத்துலகுங் கவித்ததெனக் கவித்து நிற்கும்

அருட்கவிகைக் கலிப்பகைஞன் வாழ்கவென்றே’

எனும் பாடல் விளக்கும்.

ஆறு முகங்களை உடைய செவ்வேள் பன்னிரண்டு கண்கள் கொண்டு விளங்க குலோத்துங்கனோ பன்னிரண்டு கடலும் திசையும் படைத்திருந்தான். கலைமகள் வெள்ளிய ஆடையை உடுத்திருக்க, குலோத்துங்கனோ மண்மகளுக்குப் புகழாகிய வெள்ளாடையை உடுத்தினான்.

உமையம்மை காமனின் மலர் அம்புகள் அணுக முடியாத சிவனின் திருவடியில் இருக்க, குலோத்துங்கன் அரசர் முடிமலர்கள் அணியப்பெற்ற திருவடிகளை உடையவன். அன்னையர் ஏழு பேரும் எருமை முதலிய ஏழுகொடிகளையும் உயர்த்த, குலோத்துங்கனோ பன்றி முதலாகிய பிற அரசர்களின் கொடிகளெல்லாம் தாழப் புலிக்கொடியே உயர்த்தினான்.

இவ்வாறு மேற்கண்ட பல நிலைகளிலும் செயங்கொண்டார் குலோத்துங்கனை கடவுளரோடு ஒப்புமைப்படுத்தி வாழ்த்துகின்றார். நிறைவாக அவனது செங்கோலால் மறைத் தொழிலும், மழையும், பயிர்களும், உயிர்களும் நிலை பெறுக என உலகை வாழ்த்தி முடிக்கின்றார்.

விதிமறை யவர்தொழில் விளைகவே

விளைதலின் முகில்மழை பொழிகவே



குறிப்புகள்

நிதிதரு பயிர்வளம் நிறைகவே
நிறைதலி னுயிர்நிலை பெறுகவே. 19
தலமுத லுளமனு வளர்கவே
சயதர னுயர்புலி வளர்கவே
நிலவுமிழ் கவிகையும் வளர்கவே
நிதிபொழி கவிகையும் வளர்கவே. 20

**10.6.2. கடை திறப்பு**

கலிங்கப் போருக்குச் சென்ற வீரர்கள் திரும்பிவரக் காலம் தாழ்த்தியதால், அதனைக் கண்ட மகளிர் ஊடல் கொண்டு கதவை அடைத்தனர். இந்நிலையில் கலிங்கப் போர்ச் சிறப்பைக் கேட்டு மகிழ்வதற்காகக் கதவைத் திறக்க வேண்டும் என்று அமைத்துப் பாடுகிறார். இச்சூழலில் புலவர் அம்மகளிரின் தன்மைகளை அழகாக எடுத்துக்கூறி அவர்களை அழைக்கும் திறன் பெரிதும் நயமுடன் அமைந்துள்ளது.

**10.6.2.1உறுப்புநலன் கூறியது**

சூதாடுகருவி போன்ற தனங்களையும், உடுக்கைபோன்ற இடையையும், காதளவு நீண்ட பெரிய மதர்த்த விழிகளையும் உடைய பாற்கடலில் தோன்றிய அமிழ்தினை ஒத்தபெண்களே! கதவைத் திறப்பீர்களாக. நன்கு பருத்த முலைகள் இடையை வருத்துவது போலக் காண்பவரையும் வருத்தும் இயல்புடையன. இத்தகைய இயல்புடைய பெண்களே! தாழிட்ட வாயிற் கதவைத் திறப்பீராக. குளிர்ந்த மொழிகளைப் பேசும் பெண்களே! சுருண்ட கூந்தல் அசையக் காலில் அணிந்துள்ள பரிபுரம் ஒலி எழுப்ப மயிலென வந்து கதவைத் திறப்பீராக.

**10.6.2.2 கனவுநிலை கூறி அழைத்தல்**

கனவிற்கண்ட குலோத்துங்கனைத் தழுவிப் புணராது பிணங்கிய நெஞ்சினை நொந்துகொள்ளும் பெண்களே! கதவைத் திறவுங்கள். தன் கொங்கைகளில் குலோத்துங்கனின் நகக்குறியைக் கையால் நனவுநிலையில் ஆராயும் பெண்களே! கதவைத்திறப்பீராக. (கனவில் கண்ட நகக் குறியை நனவில் தேடுவது இரண்டிற்கும் வேற்றுமை உணரா நிலையை உணர்த்தும்).

தலைவன் பகற்பொழுதில் உலா வரும்போது நிறையை இழந்து இரவில் கனவினில் புணர்ந்து மொழி பதறுவீர். இத்தகைய நிலை உடைய பெண்களே! கதவைத் திறப்பீராக.



**10.6.2.3 ஊடல் நிலை கூறி விளித்தது**

ஊடலால் ஏற்பட்ட சினத்தால் மழலைச் சொற்களோடு எங்கள் ஆடையை விடுங்கள் என்று சொல்லிக்கொண்டு தலைவனை விட்டு அகலாமல் நிற்பதால்

ஆடையைப் பிடியுங்கள் என்ற பொருள்பட நிற்கும் ஊடல் நிறைந்த பெண்களே! கதவைத் திறவுங்கள்.

ஊடல் கொண்டு பின் ஊடல் நீங்கிய நிலையில் தலைவன் பவளம் ஒத்தவாயில் முத்தமிட வரும்போது மீன் போன்ற கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீரை உதிர்க்கும் பெண்களே! கதவைத்திறவுங்கள்.

ஊடல் நீங்கி அப்பெண் கூடலை விழையும் நிலையை,

‘மெய்யே கொழுநர் பிழைநலிய

வேட்கை நலிய விடியளவும்

பொய்யே உறங்கும் மடநல்லீர்

புனைபொற் கபாடம் திறமினோ’ (பாட 36)

என்ற பாடல் உரைக்கின்றது. கணவருடன் ஊடல் கொண்டாலும் கூடல் வேட்கையால் இரவெல்லாம் உறங்காமல் பொய்யாக உறங்கும் பெண்களே! கதவைத் திறவுங்கள்.

**10.6.2.4 குலோத்துங்கன் மேல் மையம் கொள்ளும்நிலை**

முத்தாலாகிய மாலையணிந்த மார்பகத்தின் மேல் பவளம் ஒத்த வாயினால் தலைவன் செய்த பற்குறிகளைப் பவளமாலை போல் அணிந்த பெண்களே! கதவைத்திறப்பீராக.

கொடைத்தன்மை உடைய குலோத்துங்கனின் மார்பில் அணியப்பெற்ற ஆத்தி மாலை மீதே கண்கள் பதிந்து மயக்கத்தை விளைவித்து விட்டன. எனவே அந்த கண்களைக் கொண்டு தாம் போகும் வழியினைத் தேடவேண்டியதாயிற்று.

மீனக் கொடியை உடைய பாண்டிய மன்னனை மதுரைநகரில் (கூடல்) போர் செய்து காடு விழ நெருங்கி அழித்த குலோத்துங்கன் வேற்படையை ஒத்த கண்களை உடைய பெண்களே! கதவைத் திறப்பீராக என்பது பொருள். மேலும்,

‘அஞ்சியே கயல்கெடக் கூடலிற் பொருதுசென்று

அணிகடைக் குழையிலே விழஅடர்ந் தெறிதலால்

வஞ்சிமா னதன்விடும் படையினிற் கொடியகண்

மடநலீர் இடுமணிக் கடைதிறந் திடுமினோ’ (32)

எனும் பாடலில் கெண்டைமீன் போன்ற கண் கெட இருகண்கள் கூடுமிடத்தில் மோதி காதணியை சென்று மோத வஞ்சியைச் (பெண்) சூடிக்கொண்ட குலோத்துங்கனின் வேற்படை ஒத்த கண்களை உடைய பெண்களே! கதவைத் திறப்பீராக எனச் சிலேடையாகப் புலவர் பாடியுள்ளார்.

### 10.6.2.5 புணர்ச்சி நிலை கூறி அழைத்தது

பரவசமுற்று உள்ளம் நெகிழத் தூக்கம் தொலைந்து நீங்க வாய் செம்மை நிறம் கொள்ள நிறையாகிய மன உறுதி நீங்கக் கடைவிழி சிவக்க மகிழ்ச்சியால் புன்முறுவல் தோன்றக் கணவரைச் சேரும் பெண்களே! கதவைத் திறப்பீராக.

கள்ளுண்டது போலக் காமத்தால் களித்து ஆடை நீங்கியபோது நிலவொளியை எடுத்து அணிவீர். புணர்ந்தாலும் நனவென்று உணராது கனவெனவே மயங்கும் பெண்களே! விடிந்தது உணராமல் உறங்கும் பெண்களே! கதவைத் திறப்பீராக.

### 10.6.2.6 பெண்களைத் திரையாகப் பெற்றமை

தோற்றோடிக் கானம் புகுந்தனர் பாண்டியர்கள். அவர் நாட்டுப் பெண்கள் அனைவரையும் சிறைபிடித்துத் தனியிடத்தில் (வேளம்) வைத்தனர். மேலும் மலைநாடு, துளு நாடு ஆகிய நாடுகளில் இருந்த பெண்கள் திறைப்பொருளாகக் குலோத்துங்கனுக்கு அளிக்கப்பட்டனர்.

காலைப் பொழுதில் துயிலெழும்போது ஒருகையில் கூந்தலையும் ஒரு கையில் ஆடையையும் பிடித்துக் கொண்டு எழுந்து வரும் பெண்களே! கதவைத் திறவீர்.

### 10.6.2.7 தோற்ற இயல்பு கூறல்

கடலில் தோன்றிய ஆலகால விஷம் போல, அமுதம் போல, மன்மதனின் மலர் அம்புகள் போல உயிரையும் உணர்வையும் உருவும் மதர்விழிப் பெண்களே! கதவு திறவுங்கள்.

பற்களாகிய இளம்பிறையும் முத்துமாலையாகிய முழுநிலவும் ஒளிவீசக் கழுநீர் மலரையும் இளைஞர்களின் உயிரையும் ஒன்றாகக் குழலில் சூடிக்கொள்ளும் பெண்களே! கதவைத் திறப்பீராக.

### 10.6.2.8 கூடல் இழைத்த இயல்பு

தன்னை விட்டுப் பிரிந்த கணவர் மீண்டு வருவர் என்று நினைத்துப் பெண்கள் மணற்கரையில் கூடல் இழைத்தனர். அக்கூடல் சுழி கூடாமையால் அழுத கண்ணீரில் மணல் கரைந்தது இவ்வாறு கூடல் இழைத்து வருந்தும் பெண்களே! கதவைத் திறப்பீராக.

### 10.6.2.9 நோயும் மருந்தும்

தங்கள் வேல் போன்ற கண்கள் செய்த புண்களைத் தங்கள் கொங்கைகளால் வேது ஒற்றுவர். அத்தகைய நோயும் மருந்துமான பெண்களே! கதவைத் திறமின்களே.

### 10.6.2.10 காவிரியை ஒப்புக் கூறுதல்

அழகுமிக்க மலர்கள் செறிந்து தேனைக் கையால் நுகருதல், இரண்டு கரைகளையும் மோதும் வண்ணம் மீன்கள் (கண்கள்) புரளவும் ஆகிய இவ்விரண்டு தன்மைகளிலும் காவிரிநதியை ஒத்த பெண்களே கதவைத் திறப்பீராக.

**10.6.2.11 கலிங்கப் போர்ப்பாடல் கேட்க அழைத்தல்**

'காஞ்சி இருக்கக் கலிங்கங் குலைத்த
கலவி மடவீர் கழற்சென்னி
காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ' (63)

எனும் பாடலின் வாயிலாக இடையில் மேகலை இருக்க ஆடை நெகிழ பெண்கள் திகழ காஞ்சிநகரம் இருக்க கலிங்க நகரம் குலைய நடத்த போர் பற்றிய பாடலைக் கேட்க பெண்களே! கதவைத் திறப்பீர்.

**10.6.2.12 பிரிவாற்றா நிலைகூறி அழைத்தது**

பிரிவாற்றாமையால் நிலவைக்கண்டு பயந்து படுக்கையறையே நிலவறைபோல உடல்வெம்பிப் புழுங்கி அங்கும் இருக்கப் பயப்படும் பெண்களே! கதவைத் திறப்பீராக.

பிரிவாற்றாமல் தலைவன் பிரிதலை அஞ்சிக் கண்ணீர்மழை ததும்பக் கால் பெருவிரலால் நிலத்தைக் கீறி நின்றனர்.

இவ்வாறு பல நிலைகளிலும் பெண்களின் உறுப்புநலன் குணநலன்களைக் கூறி கதவைத் திறக்கக் கோரிப் பாடல்களை நயமுற செயங்கொண்டார் படைத்துள்ளார்.

**10.6.3. காடு பாடியது**

கலிங்கப் போர்க்களத்தில் பரணிக்கூழைப் பேய்கள் அடையுமாறு செய்த காளியைப் பற்றி கூறத் தொடங்கிய செயங்கொண்டார் அவள் தங்கும் இடமாகிய பாலை நிலத்தை சார்ந்த காட்டின் இயல்பை விரித்துக் கூறுகின்றார்.

**10.6.3.1 காட்டின் இயல்பு**

பொரிந்து போன பட்டை உரிந்த காரை, கரிந்து போன சூரைமரங்கள், புகைந்துபோன வீரை, எரித்த மூங்கில் என்றிவ்வாறு மரங்கள் காய்ந்து போகும் அளவு வெம்மையுடையது பாலைநிலக் காடு. மேலும் வெள்ளில், நெல்லி, துள்ளி, வேல், முள்ளி, வள்ளி, கள்ளி பரந்து காணப்படும் வாகை, கூகை, (ஒருவகைக் கிழங்குக்கொடி) தேற்றாமரம், வேலமரம், இண்டங்கொடி, முறிந்த மூங்கில், புன்கமரம் வரிசையாக இருத்தன. இதனை,

'வற்றல் வாகைவ றந்த கூகைம
டிந்த தேறுபொ டிந்தவேல்

முற்ற லீகைமு ளிந்த விண்டுமு

ரிந்த புன்குநி ரைந்தவே' (78)

எனும் பாடல் விளக்குகிறது.

**10.6.3.2 நில இயல்பு**

பாலை நிலம் ஆதலால் வறட்சியால் பூமி வெடிப்புகளை அடைந்தது, அத்தகைய வெடிப்புகளில் சூரியன் தன் மனைவியான சாயை (நிழல்) எனும் பெண்ணைத் தேடுவது போல் தன் கதிர்க்கரங்களால் துழாவித் தேடும் நிலையில் நிலம் இருக்கும்.

அப்பாலை நிலத்தில் எங்குமே நிற்கும் நிழல் இல்லை. பறக்கின்ற பருந்தின் நிழலும் வெப்பத்தைக் கண்டு பயந்தோடுவது போல் தோன்றும். மரங்களும் தண்ணீர் இல்லாமையால் வறண்டு பட்டுப் போய் நின்றமையால் அவற்றால் கிடைக்கும் நிழல் இல்லை.

தரைப்பரப்பு நெருப்பைப் போன்றும் அதன் மேல் பறக்கும் புறாக் கூட்டங்கள் புகையைப் போன்றும் தோன்றும். பெண்மான்கள் மிகுந்த நீர்வேட்கையால் செந்நாய்களின் வாயில் ஒழுகும் நீரை நக்கும் தன்மை இல்லாததால் அதனை நக்கிய மானுக்கு விக்கல் உண்டாயிற்று.

வானத்தில் ஞாயிற்றின் குதிரை இயங்காததால் அங்கு இளைப்பாற முடியாத நிலையில் காளி உறைந்து இருக்கும் காட்டின் நடுவே செல்லுதல் அரிதாகும். கடவுளர்களின் கால் நிலத்தில் படாமைக்குக் காரணம் இந்நிலத்தின் வெம்மையே ஆகும்.

இந்நிலத்தைக் கடந்து செல்லும் மேகமும், நிலவும் ஓடிச்சென்றதனால் தோன்றும் வியர்வைதான் பனியும் புனலுமாகும் (நீர்). தேவர்கள் மேகத்தால் திரையிட்டு நிலவாகிய விசிறியைக் கையிலேந்துவதும் வெப்பம் கருதியே ஆகும்.

நெடுமோடி நிறுத்திவைத்த பேய் பெருமூச்சு விடுவதுபோல் மரங்கள் கரிந்து புகைந்து நிற்கின்றன. இவ்வாறு முற்றிய பொந்துகள் உள்ள மரத்தில் பேய் நாக்கை நீட்டுவது போலப் பாம்புகள் புறப்படும்.

**10.6.3.3 காற்றின் இயல்பு**

பேய்த் தேர் என்று சொல்லப்படும் கானல் நீர் சுழன்று வருவதைப் போன்று சூறாவளிக் காற்று சுழன்றடிக்கும். அக்காற்றானது சாம்பற் பொடியைப் பறக்கும் வண்ணம் வீசுவதால் அதனுள் புதைந்த மாணிக்கமணிகள் தழல்போல் தோன்றும். மூங்கில்கள் உதிர்க்கும் முத்துக்கள் பாலை நிலக் கொடிய இயல்பைக் கண்டு இரங்கிச் சிந்தும் கண்ணீர் முத்துக்கள் போன்றன. அம்முத்துக்களே வியர்வைத் துளிகளாகவும் கொப்புளங்களாகவும் தோன்றும்.

மேலும் வெப்பக் காற்றைத் தடுக்கவே அலைகளாகிய கரங்களால் கடல் தடுக்கு. திசையானைகள் செவிகளை அசைப்பது, வெப்பக் காற்று வராமல் தடுப்பதற்கே ஆகும்.

குறிப்புகள்

### 10.6.3.4 வெப்பநிலை

முன்பு பாண்டியர்கள் தோற்று ஓட அபயன் (குலோத்துங்கன்) சினந்து செய்த போரில் தீயால் வெந்த பாண்டியரின் காவற்காடு போல இக்காடுகள் விளங்குகின்றன. இலங்கைப் போர்க்கு எழுந்த இராமபிரானின் சேனையில் இருந்த வானரங்கள் அலை கடலை அடைக்க இப்பாலை நிலத்தில் மணலைக் காணாது வெப்பமான மலைகளைப் பேர்த்துஎடுத்துக் கலங்கின.

### 10.6.4. கோயில் பாடியது

பேய்களுக்குக் கலிங்கக் கூழ் அளித்த தலைவியாகிய காளி தங்கியுள்ள காட்டைக் கூறிய பின் அவளது கோயிலின் இயல்பு கூறப்படுகிறது.

காட்டில் உறையும் அணங்காகிய பெண் தெய்வத்திற்குப் பூதலம் பழைய கோயிலாகும். எனினும் புதிய கோயிலும் உள்ளது; அதன் தன்மைகளைக் காண்போம்.

### 10.6.4.1 கோயிலின் அமைப்பு

புதுக்கட்டிடத்திற்கு கடைக்கால் இடும்போது நவமணிகளை இடுதல் மரபு, அதன்படி குலோத்துங்கன் வெற்றி கொண்டு இறந்துபோன மன்னர்களின் பட்டத்து தேவியர் நகைகளில் பதித்த ரத்தினம் கடைக்காலாக இடப்பட்டன.

குலோத்துங்க சோழனை எதிர்த்து விழுந்த சேர வீரர்களின் கொழுப்பாகிய சேற்றை இரத்தமாகிய நீரில் குழைத்து அவ்வீரர்களின் தலைகள் அடுக்கப்பட்டுச் சுவராக அமைக்கப்பட்டது.

சோழனின் யானைகள் பிடுங்கி எறிந்த வாயிற்கதவின் குறுக்கே இடும் கணையமரங்கள் தூணாகவும் உத்திரமாகவும் அமைந்தன. மேலும் அந்த உத்திரத்தின் மேல் யானைகளின் எலும்புகள் கொண்டு துலாம் (முக்கோணவடிவ மரம்) அமைத்து அவற்றின் விலா எலும்புகளைக் கூரையாகப்பரப்பினர். கூரைமேல் விரிப்பாக களத்தில் இறந்த யானைகளின் முகபடாத்தை விரித்தனர்.

கோவிலுக்குக் கோபுரமாகவும் மதிலாகவும் எலும்புகளை அமைத்து மகர தோரணமாகப் பேய்கள் ஒரு இரும்பை வளைத்துக் கட்டின. மேலும் அவற்றை அழகு செய்வதற்கு மயில் கழுத்தும், வீரர்கள் பலியிட அரிந்த முகத்தாமரையும், கொழுப்பாலான கொடிச் சீலைகளையும் இளங்குழந்தைகளின் தலையையும் கொண்டு அழகு செய்தன பேய்கள். பகைமன்னர் யானைகளின் முறம் போன்ற காதுகளையும் ஊசல் போல தொங்கச் செய்து தோரணம்

நாட்டின. பின்னர் இரத்தநீர் தெளித்து மெழுகிப் பூச்சிதறி ஈமவிளக்கினை ஏற்றின பேய்கள்.

### 10.6.4.2 வழிபாடு



மனந்தளராத ஆண்மையை உடைய வீரர்கள் காளியிடம் வரம் பெறுவதற்காகத் தங்கள் உறுப்புகளைப் பலிகொடுக்கும் வண்ணம் அவளைத் துதிக்கும் ஒலி எங்கும் பரவும் மேலும் ஓமத்தீ வளர்ப்பர். தம் எலும்பைப் பிடுங்கி விறகாக எரியவிடுவர். தம் குருதியை நெய்யாக வார்ப்பர். தம் சிரத்தை அரிவர். அரிந்தசிரம் காளியின் கரத்திற்குக் கொடுப்பர். கொடுத்த தலையானது இறைவியைப் பரவும் (வணங்கும்). தலையற்ற குறை உடலோ அத்தேவியைக் கும்பிட்டு நிற்கும். இதனை,

‘அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவ ராலோ
அரிந்தசிரம் அணங்கின்கை கொடுப்ப ராலோ
கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ’ (பா 111)

என்ற பாடல் வருணிக்கும்.

பலியிடப்பட்ட தலை பலிபீடத்தில் இருக்கும். அதனைக் கண்ட ஆண்டலைப்புள் (பறவை) தன் இனம் என்று கருதி அத்தலையை அணைக்க முயலும். அத்தலையோ அச்சுறுத்தும். தலையை அரிந்தும் உடல் மட்டும் துள்ளிக் கொண்டு இருந்தமையால் பேய்கள் அருகே செல்ல அஞ்சும்.

எருமைக்கடாவினை பலியிட்டுத் தமருகம் எனும் உடுக்கையொலி எழுப்புவர். காளியின் மெய்க்காப்பாளர்களாகிய சாதகர் வருவார். காளியின் பரிவார மகளிரான யோகினிகள் வருவர்.

### 10.6.4.3 பேய்கள் இயல்பு

பேய்கள் எல்லாத்திசைகளிலும் இடங்களிலும் விழிகள் விழித்து நின்று சிரிக்கும் தலைகளைக் கண்டு தூங்குதலை மறந்து இருக்கும். கொள்ளிவாய்ப் பேய்ப் பிள்ளைக்குத் தசைகள் தர உயிர்களைக் கொல்லும் கிழநரியிடம் இருந்து தசையைப் பறிக்கும்.

இவ்வாறு காளி கோயிலானது நெருப்பும், செம்பருத்தியும், பிணமும், பேயும் சுடுகாடும் நரியும் நிரம்பியதாய்த் தோற்றமளிக்கும்.

### 10.6.5. தேவியைப் பாடியது



காட்டினையும் கோவிலையும் பாடியபின் காளிதேவியின் சிலம்பு, திலகம், அவளது கூத்து, கொங்கை, உடை, வயிறு, மேலாடை, கை, உதடு, முகம், காதணி, மாலை என்பன நிரலே இப்பகுதியில் வருணிக்கப்படுகின்றன.

மந்தர மலையை மத்தாக்கிப் பாற்கடலைக் கடைந்த வாசுகி எனும் பாம்பைக் கயிறாக்கி ஆதிசேடனை வடமாக்கி விண்மீன்களை முத்துப்போல் தைத்த சிலம்புகளை உடைய இணையடி கொண்டவள் காளிதேவி.

ஆதிசேடனும் திசையானைகளும் தம்கால்களை வைத்ததனால் பூமி குழி விழுந்தது. அப்பொழுதில் குலோத்துங்கன் தன் குடையினால் உலகினைத் தாங்கினான் அவனை வாழ்த்திக் காளி கூத்து பயின்றாள்.

(சிவன்) தலைவர் நுகர்தற்கு என நினைத்து வெண்ணீறு (தவளப்பொடி) இட்டு அவ்வெண்ணீறே அடையாளமாக இட்டு அமுதம் இருத்திய செப்புக்கிண்ணம் போன்ற தனங்களை உடையவள் காளிதேவி. சிவபெருமான் அவளோடு கலவியிற் மகிழ்ந்து அவளுக்கு அளித்த யானைத் தோலாகிய ஆடையைத் தன் உடலில் இறுகக் கட்டிய வண்ணம் உடுத்தியவள்.

பிரம்மனையும் திருமாலையும் பொன்நிறத்தவனையும் யானைமுகனையும் அசுரரை அழித்த முருகனையும் பெற்ற அழகான வயிற்றினை உடையவள்.

கயிலைக் களிறாகிய சிவபெருமான் விருப்பம் கொள்ளும் முலைகளின் மேல் முத்துமாலைகளுடன் பவளத்தை ஒத்த தழலைப் போன்ற மேலாடை அணிந்திருந்தாள் தேவி.

மிடற்றினை அறுத்துப் பலியிட அதனால் பெருகும் இரத்தவெள்ளத்தை அள்ளுதலாலும் பருகுதலாலும் அச்சிவப்புக்கு எதிர்ந்த கரிய தாமரையை ஒத்த கரங்களை உடையவள்.

தேவியின் உதட்டழகைக் கூறும் போது,

‘சிமையவ ரைக்கனகத் திரளுரு கப்பரவைத்

திரைசுவ றிப்புகையத் திசைசுடு மப்பொழுதத்து

இமையவ ரைத்தகைதற்கு இருளுமிடற் றிறைவற்கு

இனியத ரத்தமுதக் கனியத ரத்தினளே’ (பா-129)

பாற்கடலில் தோன்றிய ஆலகால விடத்தைத் தேவர்கள் வேண்ட அவர்களைக் காப்பதற்காக உண்ட கரிய மிடற்றினை உடைய சிவபெருமானுக்கு அமுதக்கனியைப் போன்ற சிவந்த அழகிய உதடுகளை உடையவளே.

விழிக்கடை எழுப்பிய காமநோய் ஒழியும் வண்ணம் குரவை எழுப்பும் புன்முறுவல் செய்யும் பற்களாகிய முத்துக்கள் நிறைந்த குதலைமொழிகள் பேசும் அழகான சிவந்த வாயினை உடையவள்.

அபயன் (குலோத்துங்கன்) தோன்றிய குலத்திற்கு முதல்வனாகிய கதிரவனை ஒத்த ஒளிபொருந்தியது தேவியின் திருமுகம். அம்முகத்தில் அழகான திலகம் தோன்றும் அழகினள் அவள் மலைகளைக் காதுகளில் குதம்பைகளாக

(காதோலைகள்) அணிவாள். அம் மலைகளையே கோர்த்து மாலையாகவும் அணிவாள் அத்தனை பேருருக் கொண்டவள் அம்மலைகளையே அம்மானைக் காய்களாகவும் கழங்காகவும் செய்யும் ஆற்றல் மிக்க பேருருக் கொண்டவள்.

**10.6.6. பேய்களைப் பாடியது**

காளிதேவியைச் சூழ்ந்து காணப்படும் பேய்களின் இயல்பு இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

பேய்களின் கை, கால், வாய், வயிறு, முழந்தாள், உடம்பு, கன்னம், கண், முதுகு, உந்தி, உடல் மயிர், மூக்கு, செவி, பல், தாலி, தலை, உதடு ஆகியவற்றின் இயல்பு வியக்கும் வண்ணம் கூறப்பட்டுள்ளது.

மேலும் கால்முடப்பேய், கைமுடப்பேய், குருட்டுப்பேய், ஊமைப்பேய், செவிட்டுப்பேய், குறட்பேய், கூன்முதுகுப்பேய் ஆகியன காளியைச் சூழ்ந்துள்ளதை விளக்குவதுடன், குலோத்துங்கன் வெற்றிச்சிறப்புகள் பலவும் குறிப்பிடப் பெறும்.

**10.6.6.1 பேய்களின் உருவச் சிறப்பு கூறல்**

எப்போதும் அவளடியை வணங்குவதால் பெருமை உடைய தெய்வமாகிய அணங்கை (காளி) விட்டு அகலாமல் இருக்கும் பேய்களைப் பற்றிக் கூறலாம்.

நெடிய தீராத பசியை உடைய பாத்திரங்கள் போல்வன பசியால் மேலும் மேலும் மெலிவன. கால்கள் பனங்காடு போன்றன.

வாயானது தானே பெரியது என்று குகையுடன் வாதம் புரிவதுபோல் பெரியதாக இருக்கும் அவை குத்துக்காலிட்டு அமர்ந்தால் அவற்றின் முழங்கால்கள் அவற்றின் முகத்திற்கும் மேலே செல்லும் அளவாக இருக்கும்.

உடம்பினுள் உள்வயிறு வெந்தும் மேலே விறகுபோல் வேகாமலும் கொல்லும் இடமாகிய போர்க்களத்தில் கூழ் இல்லை. எனவே கூழடும் பணி செய்யலாமா என வினவும் தன்மையன.

இரண்டு கன்னங்களும் ஒட்டிக் காணப்படும் தன்மையன விழிகள். இரண்டு கொள்ளிக்கட்டைகளைக் கொண்டு ஒருவன் குகையில் புகுந்தால் குன்று எவ்வாறு தோன்றுமோ அப்படிப்பட்ட தோற்றம் கொண்டன. முதுகுகள் மரக்கலத்தின் புறப் பக்கத்தை ஒப்பன. அதன் உந்திகளோ பாம்பும் உடும்பும் புகுந்த புற்றுகளைப் போல் இருக்கும்.

பாம்பினைப் போன்ற மயிரினையும், நாள்பட்ட அழுகிய பாசி போல நாற்றம் வீசும் மூக்கும் உடையன. அதன் காதுகள் உலாவித் திரிகின்ற வௌவாலைப் போன்றன.



அவற்றின் பல், தாலி முதலியன பற்றிக் கூறும் போது,

‘கொட்டும் மேழியுங் கோத்தன பல்லின

கோம்பி பாம்பிடைக் கோத்தணி தாலிய

தட்டி வானைத்த கர்க்குந் தலையின

தாழ்த்து மார்பிடைத் தட்டும் உதட்டின' (பா 142)

எனும் பாடலில் பற்கள் கோர்த்ததுபோல் உள்ளன என்றும் அவை ஏர்க்கலப்பையும் மண்வெட்டியும் சேர்த்துக் கோர்த்தன போலுள்ளன என்றும் வானை முட்டும் தலையினை உடையன மார்புவரை தாழ்ந்த உதட்டை உடையன என்றும் வருணிக்கப்பட்டுள்ளன.

குழந்தைப் பேய்கள் மூங்கில்களைக் கண்டால் தாய்ப்பேய் என்று நினைத்து அழும், பேய்களோ ஒட்டகங்களைக் கண்டு பிள்ளைகள் என நினைத்துத் தங்கள் இடையில் ஏற்றிக் கொள்ளும்.

### 10.6.6.2 பலவகையான பேய்கள்

மேகத்தை ஒத்த கொடைத்தன்மை உடைய குலோத்துங்கன் புலிக்கொடியுடன் துரத்த பாண்டியன் (மீன்கொடி) ஓடி ஒளியும் வெம்மை மிக்க காடு போன்ற பெரும்பசியை உடையன அப்பேய்கள்.

பேய்கள் காளியை விட்டு அகலாமல் அவளை வணங்கி அவளுடனே இருக்க அப்பேய்களுள் பல குலோத்துங்கன் போரிடும் களத்தில் பகையரசர்கள் சிரம் அறியப்பட்டு அவர்களின் மூளைச் சேறாகக் கிடக்க அந்தச் சேற்றில் வழுக்கி விழுந்து கால் முடமாயின. பகைவீரர்களின் பற்களை அரிசியாக எடுத்து யானைத்தந்தம் என்னும் உலக்கையால் குத்தும் போது ஊனமான கைகளை உடையன.

சக்கரக்கோட்டம் எனும் ஊரில் கூழ் சமைக்கும்போது சூடான கூழ் கண்ணில்பட்டு குருடான பேய்களும் மதுரைப் போர்க்களத்தில் காவிரி நாடனை வாழ்த்திக் கூழை உண்ணும்போது ஆசையால் கொதிக்கும் கூழை உண்டதனால் பேய்கள் ஊமையாகின.

குலோத்துங்கன் குதிரையைச் செலுத்தி யானைகளைக் கொன்று வெற்றி கொண்டு போர்க்களத்தில் பேரொலி எழுப்ப வீரர்களின் பேரொலியால் பேய்கள் செவிடாகின.

பாண்டியரோடு போர்புரியும் போது அவர்களின் பூதகணங்களைக் கொண்டு வந்து காளியின் பேய்கள் அவற்றோடு சேர்ந்ததால் பிறந்த பிள்ளைப் பேய் குள்ளமான குறட்பேயாகப் பிறந்தன. கடாரம் அழித்த நாளில் இரத்தமாகிய செம்புனல் ஆடியும் நீந்தியும் வெகுநேரம் இருந்ததால் குரங்குவாதம் எனும் நோய் அடைந்து பேய்கள் கூன் முதுகு பெற்றன.

இலங்கையோடு தென்மதுராபுரியையும் போரிட்டு வென்றான் குலோத்துங்கன். அந்நேரம் களத்தில் கூழ் சமைத்த பேய்கள் கடலில் புகுந்ததால் விரல்கள் திறந்தவண்ணம் இருந்தன.

**தன்மதிப்பீட்டு வினா விடைகள்**



**இரு மதிப்பெண் வினா விடைகள்**

1. ஆயிரம் யானைகளைப் போரில் வென்றவனுக்குப் பாடப்பெறும் இலக்கியம் எது?

   பரணி

2. காளிக்குரிய நாள் எது?

   பரணி

3. கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் யார்?

   செயங்கொண்டார்

4. கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?

   இரண்டாம் குலோத்துங்கன்

5. கலிங்கத்துப் பரணி கூறும் கலிங்க மன்னன் யார்?

   அனந்தவர்மன் சோடகங்கன்

6. குலோத்துங்கனின் படைத்தலைவன் யார்?

   கருணாகரத் தொண்டைமான்

7. கலிங்கத்துப் பரணியின் உறுப்புகளைச் சுட்டுக.

   கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராச பாரம்பரியம், பேய்முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது

8. சோழன் அணியும் மாலை எது?

   ஆத்தி மாலை

9. பூவுடன் மகளிர் எதனைச் செருகுகின்றனர்?

   ஆடவர் மனம்

10. திறைப் பொருட்களாக வந்த மகளிர் எந்த எந்த நாட்டவர்?

    கன்னடர், துளுவினர், மலை நாட்டினர்

11. ஆடையென்று பெண்டிர் எதனை எடுத்தனர்?

    நிலவின் ஒளி

12. பூமி வெடிப்பில் கதிரவன் எதனைத் தேடுகின்றான்?

குறிப்புகள்

தன் மனைவியான சாயை என்னும் நிழலை

13. கடவுளரின் கால் நிலம் தோயாதது ஏன்?

காட்டின் வெம்மையால்

14. காட்டில் பனியும் புகையும் - எது?

வியர்வைநீர்

15. கோயிற் கடைக்காலில் இட்ட மணிகள் எவை?

தோற்ற பகையரசர் மனைவியரின் அணிகலன்

16. கோயிற் சுவர் எதனால் ஆனது?

மடிந்த வீரர்களின் தலைகளால்

17. குழி விழுந்த பூமியைக் குலோத்துங்கன் எவ்வாறு காத்தான்?

தன் வெண் கொற்றக் குடையால் தாங்கி

18. குட்டிப்பேய்கள் தாய் என்றும் பெரும்பேய்கள் பிள்ளைகள் என்றும் எவற்றைக் கருதின?

குட்டிப் பேய்கள் தாய் எனக் கரிந்த மூங்கிலைக் கருதின

பேய்கள் தம் பிள்ளைகள் என ஒட்டகங்களை எடுத்தன

**குறுவினா**

19. கடவுள் வாழ்த்தாகச் செய்ங்கொண்டார் கூறுவனவற்றை எழுதுக.

கடவுள் வாழ்த்து (10.6.1 முழுவதும்)

20. காட்டின் வெம்மையையும் கொடுமையையும் விவரிக்க.

காடு பாடியது (10.6.3. முழுவதும்)

21. கோயிலின் அமைப்பைக் கலிங்கத்துப் பரணி எவ்வாறு கூறும்?

கோயில் அமைப்பு என்ற தலைப்பின் கீழ் உள்ளவை (10.6.4.1)

22. கோயிலில் நிகழ்ந்த வழிபாட்டை விளக்குக.

வழிபாடு என்ற தலைப்பில் உள்ளவை (10.6.4.2)

23. பேய்களின் உருவத்தை எழுதுக

பேய்களின் உருவச் சிறப்புக் கூறுதல் என்ற தலைப்பில் உள்ளவை (10.6.6.1)

24. பலவகைப் பேய்கள் குறித்துச் செயங்கொண்டார் கூறுதலை விளக்குக.

பலவகையான பேய்கள் என்ற தலைப்பில் உள்ளவை (10.6.6.2)

**பெருவினா**

25. கடை திறப்புப் பகுதியில் செயங்கொண்டாரின் கவித்திறன் புலப்படுமாற்றை விளக்குக.

கடை திறப்பு முழுவதும்

26. தேவியின் எழிலைக் கலிங்கத்துப் பரணி வழி விளக்குக.

தேவியைப் பாடியது முழுவதும்

## கூறு- 11 கலிங்கத்துப் பரணி - பிற்பகுதி

## 11.1. இந்திரசாலம் (முற்பகுதியின் தொடர்ச்சியாக 7)

காளிதேவியைப் பேய்கள் பலவும் சூழ்ந்திருக்கக் காளி காற்பரப்பிய கட்டில் மேல் வீற்றிருந்தாள். இடாகினிகள் அவளுக்கு இருபக்கமும் கவரி வீசின. அப்போது நெடும்பேய் ஒன்று வந்து காளிக்கு வணக்கம் சொல்லி முன்பு காளியின் சினத்திற்குப் பயந்து இமயம் சென்று மறைந்திருந்த முதுபேய் வந்ததை உரைத்தது. காளியும் அப்பேயை உள்ளேவரச் சொல்ல வந்த அந்த முதுபேய் தான் இமயத்தில் கற்ற இந்திரசால வித்தைகளை (மாயவித்தை) காளி முன் காட்டுகின்றது. அவற்றை இப்பகுதி விளக்குகின்றது.

### 11.1.1 காளி வீற்றிருத்தல்

காளிதேவியானவள் இவ்வகையான பேய்கள் சூழ எலும்புக் குவியல் மீது தீபக்கால் கட்டில் இட்டு பிணமெத்தைகள் அடுக்கி, பேய் அணையை இட்டு நிண( கொழுப்பு ) மெத்தை விரித்துத், திகழும் பஞ்ச சயனத்தில் பிண்டிபாலம் என்னும் கலமேந்தி இடாகினிகள் கவரி வீச வீற்றிருந்தாள்.

தடிபிடித்த குடல்மாலை சூடி நிணத்தைச் சட்டையாக அணிந்த நெடும்பேய் காளியை வணங்கி முதுபேய் இமயத்தில் இருந்து வந்ததை உரைத்தது. காளியும் அதனை உள்ளே அழைத்து வர உத்தரவிட்டாள்.

### 11.1.2முதுபேய் காளியைக் காணல்

தேவியே உன் அருளால் நான் பிழைத்தேன். இமயம் சென்ற நான் ஆயிரம் இந்திரசாலம் கற்றுவந்தேன் (கண்கட்டு வித்தை) என்று சொன்னது. பின்னர் யானைத் துதிக்கைகளைத் தலைகளாக மாற்றிக்காட்டியது.

இவைமட்டுமன்றி வங்கத்தில் உள்ள கடக்கம் எனும் ஊரில் அபயன் போர் செய்து பெருவெற்றி கொள்ளும் பெரிய பரணியை நீ இன்று பார்ப்பாயாக என்று முதுபேய் உரைத்தது.

குறிப்புகள்

குலோத்துங்கன் புரிந்த போரில் குதிரைக் கூட்டம் பார், வீரர்கள் தன் தலையை காளிக்குப் பலியிட்டபின் குறை உடல்களைப்பார், யானைப் போர்களால் ஓடும் யானைகளைப்பார், இரத்த ஆற்றினைப்பார், அந்த ஆற்றில் தோள் அலைக்கப்படுவதையும், குடல்கள் மிதப்பதையும், கால்களை நரிகள் இழுப்பதையும், அவ்வாறு இழுக்கும் போது மூளைகள் சேற்றைப்போல் வழுக்கும் நிலையைப் பார்ப்பாயாக.

### 11.1.3 நிணக்களம் காட்டிய இந்திரசாலம்

முதுபேய் நிணங்களையும் பிணங்களையும் இந்திர சாலமாகக் காட்டிற்று. அப்பேய் காட்டிய இந்திரசாலம் கண்ட பேய்கள் அவற்றை உண்மை என நம்பி செய்த செயல்களால் பேய்கள் பதறி விழுந்து உண்ண எண்ணின. பின்னர் செழுமையான குருதிநீரை முகப்பதாக எண்ணி வெறுங்கைகளால் நிலத்தைத் துழாவின. நிணத்தைக் கண்டு ஆடை பெற்றோம் என்று சொல்லி வெறுங்கைகளை சுழற்றி, வெற்று வெளியில் பற்களால் மெல்லுதலைச் செய்தன.

இவ்வாறு பேய்களின் நிலை இருக்க இது கண்ட யோகினிப் பேய்கள் அதனைக் கண்டு சிரித்து சிரித்து விலாநோக நின்றன.

### 11.1.4 பேய்கள் இந்திரசாலத்தை நிறுத்த வேண்டியது

அப்பேய்க்கூட்டங்கள் எல்லாம் இந்திரசாலத்தால் துன்பம் உற்றதால் அதனை நிறுத்த வேண்டும் எனக் காளிதேவியிடம் வேண்டின. இல்லையெனில் பேய்க்கணங்கள் இறந்துபடும். எனவே வித்தையைத் தவிர்க்க வேண்டின. பின்னர் காளிதேவியும் வித்தைகளை நிறுத்துமாறு முதுபேயிடம் கூறினாள். பின்னர் 'நீ இவற்றை எங்கு கற்றாய்' என்றாள்.

### 11.1.5 முதுபேய் வரலாறு கூறுதல்

முதுபேய் தான் இமயத்திலிருந்த செய்தியை,

'நின்முனிவும் சுரகுருவின் முனிவும் அஞ்சி
நிலையரிதென்று இமகிரிபுக் கிருந்தேற்கு ஔவை
தன் முனிவு மவன்முனிவுந் தவிர்க என்று
சாதனமந் திரவிச்சை பலவுந் தந்தே (177)

என்ற பாடல் வாயிலாக உணர்த்தும்.

இமயத்தில் இருந்தபோது உன் அடியவராகிய உருத்திர யோகினி என்பாள் 'நன்மை உள்ளது நீ இங்கேயே தங்கியிரு என்றாள். நான் அவ்வாறு இருக்கும்போது அந்த உருத்திர யோகினி இந்த இந்திரசால வித்தைகளைக் கற்பித்தாள்' என்று முதுபேய் காளியிடம் உரைத்தது.

## 11.2. இராச பாரம்பரியம் (முற்பகுதியின் தொடர்ச்சியாக 8)

இந்திரசாலம் காட்டிய முதுபேய் தான் இமயத்தில் இருந்தபோது கரிகாலன் இமயத்தில் புலிக்கொடி பொறித்ததையும், அப்போது ஆண்ட நாரதன் சோழர் மரபின் தொடக்கம் முதலான வழிமுறையைக் கூறினான் என்றும் அதைக் கரிகாலன் இமயத்தில் பொறித்தான் என்று சொல்லிச் சோழ இராசப் பாரம்பரியம் பற்றிக் கூறத் தொடங்கியது.

### 11.2.1 இமயத்தில் கரிகாலன் புலிக்கொடி பொறித்தது

கரிகாலன் ஒரு சமயம் செண்டு எனும் போர்க்கருவியால் இமயச்சிகரத்தை கீழ்மேலாக்கி திருப்பிப் புலிக்குறியை நடுவிடத்தில் பொறித்துப் பின்னர் மீண்டும் இமயத்தை முன்போல் நிறுத்தினான்.

### 11.2.2 நாரதர் இராச பாரம்பரியம் கூறியது

அவ்வாறு புலிக்குறியைப் பொறித்த கரிகாலனை அணுகி நாரதர் அவனுக்கு ஆசி கூறினார். பின் அரசனே உன்னிடம் நான் கூறவேண்டிய செய்திகள் உள்ளன. அவற்றை கேட்பாயாக என்று சொல்லத் தொடங்கினார்.

முன்பு வியாசர் சொல்ல விநாயகர் தன் கொம்பொடித்து உலகோர் உய்ய பாரதம் எழுதியது போல நான் சொல்லும் தூய பரமன் கதையை நீ எழுதுவாயாக என்று நாரதர் கரிகாலனிடம் கூறினார். பின்னர் நான்மறைகளுடன் ஒப்பிடத்தக்க சோழரின் இராசபராம்பரியத்தை உரைத்தார் நாரதர்.

### 11.2.3 குல முன்னோர்

திருமாலின் உந்திக் கமலத்தில் நான்முகன் தோன்றினான். நான்முகன் மரிசியைப் பெற்றான். மரீசி காசிபனைப் பெற்றான். காசிபன் கதிரவனைப் பெற்றான். இதனை,

'ஆதிமால் அமல நாபிகமலத்து அயனுதித்து
அயன்ம ரீசியெனும் அண்ணலை அளித்த பரிசும்
காதல் கூடர்தருமரீசி மக னாகி வளரும்
காசிபன் கதிர் அருக்கனை அளித்த பரிசும;' (பாடல் 187)

எனும் பாடல் உரைக்கின்றது.

அதன் பின்னர் அருக்கன் (சூரியன்) மகனாக **மனு** பிறந்து முறை செய்த கதையும் இவன் மைந்தனாகப் பிறந்த கதையும், **இக்குவாகுவின்** மகனாக **ககுத்தன்** எனும் வலிமையுடையவன் பிறந்தான். இவன் இந்திரனுக்கு வலிமைமிக்க களிறைப் போல திகழ்ந்து அசுரரை வென்றான்.

இம்மரபில் புலியும் மானும் ஒருதுறையில் நீருண்ணுமாறு ஆட்சிசெய்த வலிமையுடைய **மாந்தாதாவும்**, தேவலோகம் முழுவதும் பாதுகாவல் செய்த

**முசுகுந்தனும்** பாற்கடலைக் கடைந்தபின்னர் கிடைத்த அமுதத்தினைத் தேவர்கள் உண்ண அருள்செய்த **பிருதுலாட்சனும்** புறாவுக்காகத் துலாத்தட்டில் தன் சதையை அரிந்துவைத்த **சிபியும்** புகழ்மிக்கவராவர். பின்னர் இவர்கள் வழியில் சுராதிராசன் சோழ மண்டலம் அமைத்த பின்னர், இராசகேசரி, பரகேசரி என்ற இருவர் சோழமண்டலம் காத்துப் புகழ்பெற்றனர்.

இவர்கள் பரம்பரையில் தோன்றிய **கிள்ளி வளவனும்,** காவிரியைக் கொணர்ந்த **கவேரனும்,** எமதர்மனையே வெற்றிகொண்ட **இராசேந்திரமிருத்யுசித்துவும்** திகழ்ந்தனர். புலியெனக் கொடியில் இந்திரனை வைத்த **சித்திரனும்,** அவனைக் கடலில்புகச் செய்த **சமுத்திர சித்துவும்,** வாயுதேவனைப் பணித்த **பஞ்சபனும்**, அசைந்து செல்லும் மதில்களை அழித்த **தூங்கெயில் எறிந்தோனும்**, உபரிசரன் முதலியோரும் புகழுடன் திகழ்ந்தனர்.

**கிள்ளிவளவன், செங்கணான் சிறப்பு**

குகையின் வழியே தனியாகச் சென்று நாககன்னிகையை மணந்த கிள்ளி வளவனும், சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கு விலங்கிட்ட சோழன் செங்கணானும் என்று வரலாறுகள் பலவற்றையும் கரிகாலன் எழுதினான். பின்னர் சேரபாண்டியர்களையும் வென்றான். பின்னர் பிரதாபருத்திரன் கண் கொண்டான். அதன் பின்னர் குருமி என்னும் கடப்பை மாவட்டத்தில் உள்ள ஊரினை வென்றான். அதனால் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பதினாராயிரம் பொன் பெறுமாறு பட்டினப்பாலை எனும் நூல் தன்மேல் இயற்றப் பெற்றான்.

**பராந்தகன் சிறப்பு**

வீர நாராயணன் என்னும் பெயருடைய பராந்தகன் எனும் சோழ மன்னன் யானைப்படை கொண்டு பகைவரை அடக்கி இலங்கையை வென்றான். பின் மதுரை நகரையும் சிதைத்தான்.

**இராசராசசோழன் சிறப்பு**

சேரநாட்டில் சதயநாள் விழாவைக் கொண்டாட வைத்தவன் தனியொருவனாய் யானை மீது கதிரவன் போல் சென்று □உதகை□ என்னும் ஊரை வென்று யானைகள் பலவற்றைக் கவர்ந்தவன் இராசராசசோழன்.

பின் இவன் மகன் இராசேந்திர சோழன் தன் களிறானது மண்ணை என்னும் ஊரில் கங்கைநீரை உண்ணுமாறு செய்தவன். அலைகள் நிறைந்த கடலைக் கடந்து கடாரம் என்னும் ஊரையும் தன் வெண்கொற்றக் குடைக்குள் கொணர்ந்தான். பின்னர் இராசேந்திர தேவன் கொப்பம் எனும் ஊரினை வென்றான். அவன் பின் தோன்றிய இராசமகேந்திரன் வேதம் நான்கில் கூறப்பட்ட முறைகளைப் புதுக்கி அறம் வளர்த்தான்.

### 11.2.4 முதற்குலோத்துங்கன் தோற்றமும், வெற்றிகளும்

குந்தள நாட்டு வீரர்களைக் கூடலசங்கமம் என்னுமிடத்தில் வென்று அரசன் அபயன் உலகைக் காத்து அளித்தபின்னர் இந்த நிலமாகிய பாவை

இவனோடு சேர என்ன தவம் செய்திருந்தாள் என்று எண்ணும்படியாகக் குலோத்துங்கன் தோன்றினான். இதனை,

‘குந்தளரைக் கூடற்சங் கமத்துவென்ற
கோனபயன் குவலங்காத் தளித்த பின்னை
இந்தநிலக் குலப்பாவை இவன்பாற் சேர
என்ன தவஞ் செய்திருந்தாள் என்னத் தோன்றி’ (பா - 207)

எனும் பாடல் விளக்கிநிற்கிறது. மேலும் எவ்வளவு உலகம் தோன்றினாலும் எவ்வளவு மலைகள் நின்றாலும் அவ்வளவு கடந்து சக்கரவாளமலை வரை அவன் ஆள வந்தவன்.

இவ்வாறு இராசபாரம்பரியத்தை நாரதர் சொன்ன வண்ணம் கரிகாலன் எழுதினான் வேதத்தை ஒப்ப அவன் தன் வலிமையால் அவற்றை எழுதியதை முதுபேய் சொல்லி முடித்தது. பின்னர் அதனைக் கேட்ட காளி வியந்தாள். பின்னர் குலோத்துங்கனை நினைத்து மகிழ்ந்தாள். அவனைத் தன் மகனாக எண்ணி அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் அவன்புகழ் பெற்ற காலத்தில் தான் மிக மகிழ்வதாகக் கூறினாள். இது ‘ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும்’ என்ற குறளும் ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே’ என ஒக்கூர் மாசத்தியும் கூறுவதை ஒத்துள்ளது.

## 11.3. பேய் முறைப்பாடு (முற்பகுதியின் தொடர்ச்சியாக 9)

முதுபேய் கூறியதைக் கேட்டுக் காளி மகிழ்ந்து இருந்தபோது அவளைச் சூழ்ந்திருந்த பேய்கள் தங்கள் மிகுதியான பசியைக் கூறின. அது கேட்ட முதுபேய் தான் வரும் வழியில் கலிங்கநாட்டில் சில தீய குறிகளைக் கண்டதாகக் கூறியது. இதைக்கேட்ட காளி உங்களுக்கு ஏற்பட்ட குறியும் கலிங்கநாட்டிற்கு ஏற்பட்ட குறியும் உங்கட்கு நன்மையே என்று பேய்களிடம் கூறினாள். மேலும் குலோத்துங்கன் யானைகள் போருக்குத் எழுந்துள்ளன. ஒரு பரணிப் போர் உண்டு என்றாள். இதனைக் கேட்ட பேய்கள் மகிழ்ந்தன.

### 11.3.1 பேய்கள் காளியிடம் முறையிடுதல்

அபயனால் காக்கப்படும் பூதமாய்ப் பிறவாமல் பேய்களாய் பிறந்து கெட்டோம். எங்களை உன்னை அல்லால் வேறு யார் காப்பார்? நாங்கள் தளர்ச்சி அடைந்தோம், பிழைக்க மாட்டோம், சாகத்தான் வேண்டுமோ நான்முகன் முன்னாளில் செய்த பாவத்தால் பசியை வைத்தான். பதர்களைப் போல் பறக்கின்றோம். உனக்கே அடிமை செய்தோம்.

குலோத்துங்கன் இரக்கம் கொள்ளமாட்டான் அவன் யானைகள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டன. நாங்கள் வாடி உலர்ந்து போனோம் என்று காளியிடம் பேய்கள் முறையிட்டன.

#### 11.3.2 முதுபேய் கலிங்கத்தின் தீநிமித்தம் கூறுதல்



முதுபேய் காளிகளையும் காளிதேவியையும் கண்டு நான் வடகலிங்கம் வழியாக இமயத்தில் இருந்து வரும்வழியில் அக்கலிங்க நாட்டில் கண்ட தீநிமித்தம் இவையென உரைக்கின்றேன் கேளுங்கள் என்று சொல்லிற்று. ஆண்யானையின் மதநீர் வற்றும், பெண் யானைக்கு மதநீர் ஒழுகும் விளக்கின் ஒளி கருத்துக் காணப்படும், மேகம் இரத்தத்தை மழையாகப் பொழியும், முரசானது வறிதே ஒலிக்கும், இரவில் வானவில் தோன்றும், வீட்டில் பேராந்தை எழ நரி ஊளையிட்டு அழ வேள்வித்தீ ஈமத்தீ போலத் துர்நாற்றம் வீசும்.

குறிப்புகள்

மாலைகள் புலால் போல நாறும். மணிமாலை ஒளி குறையும், ஓவியங்கள் எல்லாம் வியர்த்து வரும், நீரானது இரத்த வாடையோடு வரும் என்று உரைத்தது முதுபேய். இதனை,

'பூவிரியு மாலைகள் புலால்கமழு மாலோ

பொன்செய் மணி மாலை ஒளி போயொழியு மாலோ

ஓவியமெலாம் உடல் வியர்ப்பவரு மாலோ

ஊறுபுனல் செங்குருதி நாறவரு மாலோ' (பா- 225)

எனும் பாடல் இயம்புகின்றது

#### 11.3.3 காளி உரைத்தல்

உங்கள் குறியும் கணிதப்பேய் கூறும் நனவும் கனவும் சொல்லுவோம். குலோத்துங்கனின் யானைகள் அணிவகுத்து நிற்கின்றன. அவற்றுக்குப் பரணிப்போர் உண்டு என்று காளி உரைத்தாள்.

இம்மொழிகளைக் கேட்ட பேய்கள் பலவாறு மகிழ்ந்தன. இதனைக் கண்ட காளி நீங்கள் போதும் போதாது என்று கூழிற்காக வருந்த வேண்டாம். கலிங்கப்போர் இலங்கைப் போரை விட இரண்டு மடங்காகும் என்றாள்.

### 11.4. அவதாரம் (முற்பகுதியின் தொடர்ச்சியாக 10)

குலோத்துங்கனால் ஒரு பரணிப் போர் உண்டு என்று காளி கூறியபின் குலோத்துங்கனின் புகழைக் கூறத் தொடங்குகின்றாள்.

#### 11.4.1 திருமாலின் அவதாரம்

காளிதேவி குலோத்துங்கனின் பிறப்பைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றாள்.

'இலங்கைப் போர் செய்த இராமனாகிய திருமாலே கண்ணனாகி பாரதப் போரை முடித்துப் பின் கலிங்கப்போர் நடக்குமாறு, சாளுக்கிய குலத்து இராசராசன் மனைவியும், கங்கை கொண்ட சோழன் மகளுமான

அம்மங்கைதேவியின் வயிற்றில் வந்து பிறந்தான். அவன் பிறந்தபோது கங்கைகொண்ட சோழன் மனைவி, பிறந்த பேரனைத் தன் கையால் எடுத்தணைத்துத் தன் மைந்தர்க்குப் புதல்வர் பேறு இல்லாமையால் பேரர் அரசர்க்குரிய எல்லா இலக்கணம் பெற்று விளங்கியமை கண்டு, 'இவனே எங்கள் குலத்திற்கும் மகனாகி எங்குலத்தை விளங்கச் செய்வான;' என்று கூறி மகிழ்ந்தாள். இதனை,

'அவனியர்க்குப் புரந்தரனாம் அடையாளம்
அவயவத்தின் அடைவே நோக்கி
இவனெமக்கு மகனாகி இரவிகுலம்
பாரிக்கத் தகுவன் என்றே' (பா - 238)

எனும் பாடல் விளக்கும்.

### 11.4.2 ஐம்படைத்தாலி அணிந்தமை

இவ்வாறு பிறந்தவன், அடிவைத்து நடைபயின்றும் ஐம்படைத்தாலி அணிந்தும், மழலை மொழிந்தும், முந்நூல் அணிந்தும், மழலை பேசியும், முப்புரிநூல் அணிந்தும் மறைகளைக் கற்றும், படைக்கலம் கற்றும், யானை ஏற்றம் குதிரை ஏற்றம் பயின்றும், பல்கலைகள் கற்றும் சிறந்தான். இதனை,

'நிறைவாழ்வைப் பெறல்நமக்கும் அணித்தென்று
நிலப்பாவை களிப்ப விந்தத்
துறைவாளைப் புயத்திருத்தி உடைவாளைத்
திருவரையின் ஒளிர வைத்தே' (பா - 245)

'சக்கரமு தற்படையொ ரைந்து முதல்நாளே
தன்னுடைய ஆனவத னால் அவை நமக்குத்
திக்குவிச யத்தின்வரு மென்றவை பயிற்றிச்
செங்கைமலர் நொந்தில சுமந்தில தனக்கே' (பாடல் - 248)

எனும் பாடல்கள் அறிவிக்கின்றன.

### 11.4.3 குலோத்துங்கன் இளவரசன் ஆதல்

இவ்வாறு கங்கை கொண்ட சோழனின் நான்காம் புதல்வனாகிய வீர ராசேந்திரன் (தன் உடன்பிறந்தாள் மகனாகிய இக்) குலோத்துங்கனை இளவரசனாக்கினான்.

இளவரசு பட்டம் எய்திய குலோத்துங்கன் போர்மேற்செல்ல விரும்பி, வடதிசை நோக்கிச் சென்று, சென்ற இடங்களெல்லாம் பகைவரை அழித்தான்.

வயிராகரம் என்னுமிடத்தை எரித்தான், சக்கரக்கோட்டம் அழியுமாறு செய்தான். இவ்வாறு சென்ற இடங்களில் எல்லாம் வடவரை அடக்கி அவர்களின் யானையும் குதிரையும் செல்வமும் கைப்பற்றினான். இதனை,

•சரிக ளந்தொறுந் தங்கள்ச யமகள்
தன்னை மன் அபயன் கைப் பிடித்தலும்
பரிக ளுங்களி றுந் தன ராசியும்
பாரி போகங் கொடுத்தனர் பார்த்திபர்' (பா - 256)

என்ற பாடல் எடுத்தியம்பும்.

வீரராசேந்திரனின் இறப்பு

இவ்வாறு குலோத்துங்கன் வடநாட்டில் போர் மேற்கொண்டு இருக்கையில் வீரராசேந்திரன் மண்ணுலக வாழ்வை நீத்தான். அரசன் இறந்ததால் நாடு நிலைகுலைந்து தடுமாறியது. இதைக் கேள்வியுற்ற குலோத்துங்கன் விரைந்து சோழநாடு சென்றான். அந்நாட்டை நெறிபெறச் செய்து முன்பு போல நிலை நிறுத்தினான். இதனை,

'ஒருவரை யொருவர் கைம்மிக்கு
உம்பர்தங் கோயில் சோம்பி
அரிவையர் கற்பின் மாறி
அரண்களு மழிய ஆங்கே' (பாடல் - 261)

'கலியிருள் பரந்த காலைக்
கவியிருள் காக்கத் தோன்றும்
ஒலிகடல் அருக்க னென்ன
உலகுய்ய வந்து தோன்றி' (பாடல்- 262)

எனும் பாடல்கள் விளக்குகின்றன.

### 11.4.4 குலோத்துங்கன் மங்கல நீராடல்

பின் குலோத்துங்கன் மங்கலநீராடி, முடிசூடி புலிக்கொடி கொண்டு, வெண்கொற்றக்குடை நிழற்ற விளங்கினான். பொருள்மழை பொழிந்தான். பரிசுகள் பலவற்றை அளித்தான். அவன் செங்கோல் சிறந்தது. மற்போரும், புலவர்களின் சொற்போரும், கோழிப்போரும், யானைப்போரும் கண்டு களித்தான். கலை, கலைவாணர் இசை, காதன்மாதர், மனுநீதி, மறை என்பவற்றோடு பொழுது போக்கினான்.

இவ்வாறிருந்த குலோத்துங்கன் காவிரிக்கரையில் வேட்டையாடிய பொழுது ஒருநாள், 'பாலாற்றங்கரை சென்று வேட்டையாட எண்ணினான். இதனை,

'காலாற்றண் டலையுழக்கும் காவிரியின்

பாலாற்றங் கரைமருங்கு பாரிவேட்டை

ஆடுதற்குப் பயண மென்றே' (பா - 279 )

எனும் பாடல் உணர்த்துகின்றது.

### 11.4.5 பாலாற்றங்கரைப் புறப்படுதல்

குலோத்துங்கன் பாலாற்றங்கரைப் புறப்பட எண்ணினான். உடனே முரசறையபட்டது. நால்வகைப் படைகளும் திரண்டன. ஒரு நல்லபொழுதில் சேனையுடன் புறப்பட்டான் குலோத்துங்கன். மறையவரும், மன்னவரும் கவிவாணரும் சூழ்ந்தனர்.

குலோத்துங்கன் வெண்கொற்றக்குடை நிழற்ற இருபுறமும் கவரிவீச, யானை மீது ஏறிவந்தான், வலம்புரியும் சங்கும் பிற வாத்தியங்களும் ஒலித்தன. அரசர் □செய□ என்னும் ஒலியும் மறையவர் வேத ஒலியும் எங்கும் நிறைந்தன. அரசன் தேவியான ஏழிசை வல்லபி யானைமீது உடன் இருந்தனள். மற்றைய தேவியான தியாகவல்லி பெண்யானை மீது உடன் வந்தனள். மகளிரும் அரசரும் பிடி மீதும் யானை மீதும் சூழ்ந்து வந்தனர். இதனை,

'பிடியின் மேல்வரு பிடிக்குல மநேக மெனவே

பெய்வ ளைக்கைமட மாதர்பிடி மீதின் வரவே

முடியின் மேன்முடி நிரைத்துவரு கின்ற தெனவே

முறைசெய் மன்னவர்கள் பொற்குடை கவித்துவரவே' (பாடல் - 288)

எனும் பாடல் விளக்கிநிற்கிறது.

படைவீரர் படையுடன் நெருங்கி வந்தனர். யானைமீது முரசுகள் ஒலித்தன. கொடிகள் எங்கும் காட்சியளித்தன. மகளிர் பலர் தேரேறி வந்தனர். பலர் சிவிகை ஏறி வந்தனர். வெண்கொற்றக்குடைகள் நெருங்கித் தோன்றின. பல நாட்டரசர் கொடிகளும் மிடைந்து வந்தனர். புலிக்கொடி மேலோங்கி விளங்கியது. இருபுறத்தும் மகளிர் திரண்டு நின்றனர்.

### 11.4.6 குலோத்துங்கன் தில்லைக் கூத்தனை வணங்குதல்

இவ்வாறு தென்திசையில் இருந்து புறப்பட்டு வடதிசை நோக்கிச் செல்லும் குலோத்துங்கன் தில்லையம்பதி அடைந்தான். தில்லைக் கூத்தன் அருள் பெற்று விடைகொண்டு புறப்பட்டுத் திருவதிகை சென்று படையுடன் இறுத்தனன்.

பின் அங்கு இருந்து புறப்பட்டு இடையிடையே தங்கிக் காஞ்சிநகர் அடைந்தான். இதனை,

'தென்திசையி னின்றுவட திக்கின்முகம்
வைத்தருளி முக்கணுடை வெள்ளி மலையோன்
மன்றில் நடமாடி பாடியருள் கொண்டு விடை கொணடு
அதிகை மாநகருள் விட்ட ருளியே' (பா - 300)

எனும் பாடல் எடுத்துரைக்கின்றது.

### 11.4.7 கலிங்கப்போர் கண்ட பேய்

மேற்கண்ட செய்திகளைக் காளி பேய்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு பேயானது விரைவாக ஓடிவந்து கலிங்கப்போர் நடக்கும் தன்மையைக் கூறியது. 'கலிங்கம் நிறையக் கலிங்கர் குருதி இனி எழுக எழுக' எனக் கூவியது. அதுகேட்ட மற்ற பேய்கள் அனைத்தும் மகிழ்ச்சிக் கூத்தாடின. அப்போது காளி அவற்றைப் பார்த்து ஆடல் பாடல்களை நிறுத்துமாறு பணித்தாள். பின்னர் கலிங்கப் பேயைப் பார்த்து அங்கு நிகழும் போரின் இயல்பைக் கூறுமாறு கட்டளையிட்டாள். இதனை,

'ஆடிவரு பேய்களின் அலந்தலை தவிர்த்தடு
பறந்தலை யறிந்து அதனின்று
ஓடிவரு பேயைஇக லுள்ளபடி
சொல்கென உரைத்தன ளுரைத்த ருளவே' (பாடல் - 312)

எனும் பாடல் உணர்த்தும்.

## 11.5 காளிக்குக் கூளி கூறியது (முற்பகுதியின் தொடர்ச்சியாக 11)

கலிங்கப்போரைப் பற்றிக் கூறுமாறு கேட்ட காளிக்கு, கலிங்கப்பேய் முதலில் அப்போர்க் காரணத்தைக் கூறத்தொடங்குகின்றது.

### 11.5.1காஞ்சிநகர்ச் சிறப்பு

குலோத்துங்கனின் கரங்களைப் போல மழை மேகங்கள் பொன்னைப் பொழிந்தமையால் (காஞ்சனம்) காஞ்சிமாநகர் பொலிவு பெற்றது. அத்தகைய காஞ்சியில் அமைந்த மாளிகையில் செய்தமைந்த சித்திரமண்டபத்தில், முத்துப் பந்தரின் கீழ் வெண்கொற்றக் குடை நிழற்றவும், இருபுறமும் கவரி வீசவும் அரியணையில் அமர்ந்திருந்தான்.



குறிப்புகள்

### 11.5.2 குலோத்துங்கன் வீற்றிருக்கை

குலோத்துங்கன் தன் இரு தேவியரும் உடனிருக்க, இசைவல்ல மகளிர் பலர் இருக்கவும், சூதர், மாகதர், மங்கலப் பாடகர், முதலியோர் புகழ்பாடவும், வீணை, யாழ், குழல் மத்தளம் வல்லோர் சூழ்ந்திருந்து அரசன் குறிப்பை எதிர்நோக்கி இருந்தனர். இதனை,

'சூதர் மாகதர் ஆகிய மாந்தரும்

துய்ய மங்கலப் பாடகர் தாமும்நின்

பாத மாதர ராயவர் கட்கெலாம்

பைம்பொன் மௌலி எனப்புகழ் பாடவே' (பாடல் - 323)

எனும் பாடல் அறிவிக்கின்றது.

தாளமும் பண்ணும் பிழையா வகையில் பாடுபவர்கள் பாட அதைக் கேட்டும், ஆராய்ந்தும் மகிழ்ந்தும் மன்னன் இருந்தான். சிற்றரசர் பலர் சாமரம் வீசவும் தோற்ற மன்னர்களின் மனைவியர் சேடிப்பெண்களாக நிற்கவும், கருணாகரன் முதலான அமைச்சர்கள் அரசன் அடியை வணங்கி நெருங்கியிருக்கவும் அரண்மனை வாயிலில் வந்து நின்ற அரசர்கள் அனுமதி பெற்று அவன் முன் வந்து ஏராளமான திறைப் பொருட்களை செலுத்தினர். இதனை,

'எந்நக ரங்களும் நாடும்

எமக்கருள் செய்தனை எம்மையிடச்

சொன்ன தனங்கள் கொணர்ந்தனம்

என்றடி சூடு கரங்களொடே' (பா - 334)

எனும் பாடல் விளக்குகின்றது.

குலோத்துங்கனின் வினா

குலோத்துங்கன் அந்த அரசர்களுக்கு அருள் செய்து 'திறை செலுத்தாதவர்கள் உள்ளனரோ? என வினவினான். அதற்கு பதிலாக 'வடகலிங்கவேந்தன் இரண்டுமுறையாகத் திறை செலுத்தவில்லை! என்றனர். அதுகேட்ட புன்னகைத்த மன்னன் குலோத்துங்கன் படையுடன் சென்று அவனை கொண்டுவருமாறு ஆணையிட்டான். இதனை,

'உறுவ தென்கொலென நிலைகு லைந்தரசர்

உயிர்ந டுங்கஒளிர் பவளவாய்

முறுவல் கொண்டபொருள் அறிகி லம்சிறிதும்

முனிவு கொண்டதிலை வதனமே' (பாடல் - 341)

எனும் பாடல் பகர்கின்றது.



### 11.5.3 குலோத்துங்கன் ஆணையும் கருணாகரன் செயலும்

இவ்வாறு மன்னன் கூறியவுடன் கருணாகரத் தொண்டைமான் தானே போர் எடுத்துச் சென்று கலிங்க மன்னனை அழைத்து வருவதாக உரைத்தான். குலோத்துங்கனும் அவனுக்கு விடையளித்தான்.

குறிப்புகள்

### 11.5.4 கருணாகரத் தொண்டைமான் போர்க்கெழல்

கருணாகரன் போருக்குப் புறப்பட்டான் உடனே நால்வகைப் படைகளும் திரண்டன. சங்குகள் முழங்கின, முரசு அதிர்ந்தன. கொம்புகள் ஒலித்தன, குடைகள் எழுந்தன, கொடிகள் விளங்கின. இவ்வாறு புறப்பட்ட படை பகலெல்லாம் சென்றும் இரவுதங்கியும் வழிக் கொண்டது. கருணாகரன் யானை மீது ஏறிச் சென்றான். படைப் பெருக்கமானது,

‘பார்சி றுத்தலிற் படைபெ ருத்ததோ

படைபெ ருத்தலிற் பார்சி றுத்ததோ

நேர்செ றுத்தவர்க் கரிது நிற்பிடம்

நெடுவி சும்பலால் இடமு மில்லையே’ (பா - 350)

என்று வருணிக்கப்படுகிறது.

இவ்வாறு சென்ற படை பாலாற்றையும், குசைத்தலையாற்றையும், பொன்முகரி யாற்றையும், கொல்லியாற்றையும் கடந்து வடபெண்ணை ஆற்றையும் கடந்து. மேலும் சென்று மண்ணாற்றையும் குன்றியாற்றையும் பேராற்றையும் (கிருஷ்ணா நதி) கடந்து, பின் கோதாவரியாற்றையும், பம்பையாற்றையும் காயத்திரி ஆற்றையும் கோதமையாற்றையும் கடந்து நிறைவாகக் கலிங்கத்தை அடைந்தது.

### 11.5.5 கலிங்கரின் நிலை

இது கண்ட கலிங்கர்கள் கலிங்கவேந்தன் அனந்த வர்மனிடம் ஓடி முறையிட்டுக் குலோத்துங்கனின் படை வந்து வளைத்தது என்பர். அதுகேட்ட கலிங்கவேந்தன் ‘குலோத்துங்கனின் படைக்கோ நான் அஞ்சுவேன்’ என்று கூறி ஆர்த்து எழுந்தான். அவனுடைய அமைச்சராகிய அங்கராயன் குலோத்துங்கன் படைகள் பல வெற்றிகள் பெற்ற தன்மையைத் தம் அரசர்க்கு எடுத்துரைத்தான். கருணாகரன் தலைமை ஏற்று வந்துள்ளதையும் அறிவுறுத்தினான். எனினும் கலிங்க வேந்தன் அதனை இகழ்ந்து தன் படைகளை நோக்கி போருக்கு வருமாறு ஆணையிட்டான். நால்வகைப் படைகளும் எழுந்தன.

## 11.6. போர் பாடியது (முற்பகுதியின் தொடர்ச்சியாக 12)

போர்க் காரணத்தைக் கூறிய கலிங்கப் பேய் போரைப் பற்றிக் கூறத் தொடங்குகிறது.

### 11.6.1 போர்த்தொடக்கம்:-



எங்கும் போர் முழக்கம் மண்டியது. நால்வகைப் படைகளும் எதிர்நின்று போரிட்டன. மன்னரோடு மன்னர் போர்செய்தனர். சிலர் யானையோடு போரிட்டனர். வில்படை கொண்டு பல வீரர்கள் போரிட்டனர். கலிங்கவீரர்கள் கேடயங்களைக் கொண்டு தடுத்துப் போர் செய்தனர். பலர் சக்கரம் கொண்டு போரிட்டனர். குதிரையோடு பொருதனர் பலர். வீரர்கள் சிலர் யானை வீரரோடு பொருதனர். படைக்கருவிகளை இழந்த சிலர் தன் மேலும் பிறர் மேலும் எறிந்த படைக்கருவிகளைப் பறித்துப் போரிட்டனர். இதனை,

"எடுமெடு மெடுமென வெடுத்ததோர்
இகலொலி கடலொலி இகக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
விடும்விடு மெனுமொலி மிகைக்கவே" (பா - 405)

எனும் பாடல் விளக்கும். மேலும் யானைப்படையும் தேர்படையும் மோதிக்கொண்ட நிலையை,

" கனவரை யொடுவரை முனைத்தபோல்
கடகரி யொடுகரி முனைக்கவே
இனமுகில் முகிலோடு மெதிர்த்தபோல்
இரதமொ டிரதமும் எதிர்க்கவே" (பா - 408)

எனும் பாடல் வருணிக்கின்றது.

### 11.6.2 போரின் கடுமை

இவ்வாறு இருதிறப் படைகளும் போரிடவும் போர் முதிரவும், கருணாகரன் தன் யானையை முந்திச் செல்லுமாறு வேகமாகச் செலுத்தினான். இந்நிலையில் இரண்டுபடைகளும் பரந்துபட்டு நின்ற நிலையில் இருந்து மாறி ஒருமுகப்பட்டு நின்று போர்செய்து தம் வெற்றியைக் காண முன்னேறிச் சென்றன. பிணமலை பெருகியது. இதனை,



"இட்ட வட்ட ணங்கண் மேலெ
றிந்த வேல்தி றந்தவாய்
வட்ட மிட்ட நீள்ம திற்கு

வைத்த பூழை ஒக்குமே” (பா - 427)

எனும் பாடலும், குறை உடல்களின் ஆட்டத்தை,

“கவந்த மாட முன்பு தம்க

ளிப்பொ டாடு பேயினம்

நிவந்த வாடலர் ஆட்டு விக்கு

நித்த காரர் ஒக்குமே” (பா - 433)

எனும் பாடலும் விளக்கிநிற்கின்றன. வீரர் தன்மார்பில் குத்திய அம்பை எடுத்து தன்வில்லில் வைத்து எறிந்த வீரத்தை,

“மார்பிடையில் குழித்த பகழியை

வார்சிலையில் தொடுத்து விடுவரே” (பா - 437)

எனும் பாடலடிகள் எடுத்துரைக்கும்.

### 11.6.3 கலிங்க வேந்தன் நிலை

இவ்வாறு போர் கடுமையாக நிகழ்ந்து கொண்டிருந்த நிலையில் கலிங்கவேந்தன் அனந்தவர்மன் தன்வீரர்கள் தளர்ச்சி அடைந்ததைக் கண்டான். பின்னர் அவன் போரில் எதிர்த்து நில்லாமல் மறைந்து பதுங்கிக் கொண்டான். அதனைக் கண்ட கலிங்க வீரர் நாலாபுறமும் சிதறி ஓடிப் பதுங்கிக் கொண்டனர். இதனை,

“வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி

மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்

இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்

இருவர் ஒருவழி போகல் இன்றியே” (பா - 452)

எனும் பாடல் உணர்த்தும்.

கலிங்க நாட்டில் உள்ளோர் நடுக்கத்துடன் கதறி ஓடினர். சோழவீரர்கள் போர் புரியும் திறன் கண்டு மாய வித்தையோ, எரிக்கும் நெருப்போ எமனோ, ஊழிக்கால முடிவோ என்று கூற முடியாதபடி அலறினர். சிலர் கடலில் பாய்ந்தனர். சிலர் கொடிய யானைகளின் உடலில் மறைவர். வலிய குகைகளில் இறங்குவர். அடர்ந்த புதர்களில் பதுங்குவர்.

பந்தய ஓட்டத்தில் ஒருவரை ஒருவர் முந்துவது போல ஓடினர். அவரவரைத் தொடர்ந்து வரும் தம் நிழலையே தம்மைத் துரத்தும் தமிழர் என்று கருதினர். ஓடுவதற்கு அஞ்சித் தஞ்சம் தஞ்சம் எனக் கெஞ்சினர்.

புறமுதுகு காட்டி ஓடுபவரைத் தாக்காமையால் முதுகுகள் தம்மைக் காப்பாற்றின என்பர். கலிங்கமாகிய நாட்டையும் இழந்து கலிங்கமாகிய ஆடைகள் விழுவது கூடத் தெரியாமல் ஓடினர். ஆடைகளை இழந்து தலைமயிரையும் புதர்களில் சிக்குண்டு இழந்த வீரர்கள் எஞ்சியவற்றையும் பறித்துத் தம்மைத் திகம்பரர் என்று சொல்லித் தப்பினர். வில்லின் நாணைப் பூணூலாக அணிந்து வேதியர் வேடம் தரித்து கங்கையில் நீராடவந்ததாகக் கூறித் தப்பினர்.

குருதியில் மூழ்கிய கொடிச்சீலைகளைக் காவியாடையாகச் சொல்லியும் மொட்டையடித்தும் புத்த துறவிகள் என்று கூறி உயிர்பிழைத்தனர். சிலர் யானைகளின் மணிகளைத் தட்டித் தங்களைத் தெலுங்கர்கள் என்றும் பாணர்கள் என்றும் கூறித் தப்பினர். இவ்வாறு தப்பியவரைத் தவிர ஏனைய கலிங்க வீரர்கள் முற்றும் அழிந்தனர்

### 11.6.4 சோழவீரர்கள் கலிங்கர் பொருள்களை கைப்பற்றும் நிலை

சோழ வீரர்கள் கலிங்கர்தம் யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும், ஒட்டகங்களையும், கலிங்கர் செல்வங்களையும், மகளிரையும் கைப்பற்றினர். இவ்வாறு கவர்ந்த நிலையில் கருணாகரன் கலிங்கவேந்தன் இருக்குமிடத்தை அறிவதற்காக தன் ஒற்றர்களையும் படைகளையும் ஏவினான்.

### 11.6.5 ஒற்றர்களின் செயல்

ஒற்றர்கள் கலிங்கவேந்தனைக் காணமுடியாத நிலையை அடைந்தனர். அப்போது ஒரு மலைக்குவட்டில் கலிங்கவீரர்கள் சூழ்ந்து இருப்பதைக் கண்டனர். பின்னர் சோழ வீரர் அங்கு விரைந்து சென்று ஞாயிறு மறையும் நேரத்தில் அம்மலையைச் சூழ்ந்து வளைத்தனர். வில்லும் வேலும் கையில் கொண்டு விடியும்வரை அம்மலையைக் காத்தனர். பொழுது விடிந்தும் அங்கிருந்த கலிங்க வீரர்களோடு போரிட்டு அவர்களை அழித்தனர். இதனால் குன்று முழுவதும் இரத்தம் சூழ்ந்தது. இதனை,

“செம்மலையால் ஒளிபடைத்த தியாதோ என்றும்
செங்கதிரோன் உதயஞ்செய்து உதயம் மென்னும்
அம்மலையோ இம்மலையும் என்னத் தெவ்வர்
அக்குருதி நதிபரக்க அறுக்கும் போழ்தில” (பா - 466)

எனும் பாடல் விளக்குகின்றது.

### 11.6.6 கலிங்க வீரர் உருவைமாற்றித் தப்பிக்க நினைத்தல்

கலிங்கவீரர் பலர் துறவியைப்போல மாறுவேடம் அணிந்து பலவாறு தப்பிக்கக் கருதினர். இவ்வாறு மறைந்து ஓடியவர்களைத் தவிர்ந்த ஏனைய கலிங்கவீரர்களைச் சோழவீரர்கள் கொன்றழித்தனர். இதனை,

“வேடத்தால் குறையாது முந்நூலாக

வெஞ்சிலைநாண் மடித்திட்டுவிதியாற் கங்கை

ஆடப்போந் தகப்பட்டோம் கரந்தோம் என்றே

அரிதனைவிட்டு உயிர்பிழைத்தார் அநேகர் ஆங்கே" (பா - 468)

எனும் பாடல் வாயிலாக அறியலாம்.

**கருணாகரன் வெற்றிவாகை சூடுதல்**

இவ்வாறு கருணாகரன் கலிங்கத்தை அழித்து வெற்றித்தூணை நிலைநிறுத்தி யானைகளையும் செல்வத்தையும் கவர்ந்து வந்து குலோத்துங்கனின் திருவடியை வணங்கி மகிழ்ந்தான்.

## 11.7 களம் பாடியது (முற்பகுதியின் தொடர்ச்சியாக 13)

கலிங்கத்தில் போர்நடந்த வரலாற்றைக் கலிங்கப்பேய் காளிக்குக் கூறியது. பின்னர் தேவஅசுர, ராமாயண, மகாபாரதப் போர்க்களத்தோடு ஒப்பிடத்தக்க கலிங்கப் போர்க்களத்தைக் காணுமாறு காளியை அழைத்தது. காளியும் பேய்கள் சூழச் சென்றாள். சென்று போர்க்களக் காட்சி ஒவ்வொன்றையும் பேய்களுக்குக் காட்டினாள்.

### 11.7.1 காளி களம் சென்று காணுதல்

சிவபெருமான் கண்டு களிக்கும் அமுது ஒத்தவள் காளி. அவளிடம் கலிங்கப்பேய் எமனது கொலைக்களமாகிய போர்க்களத்தை வந்து காண்பாயாக என்றது. காளி போர்க்களத்தைக் கண்டு வியந்தாள். தன்னோடு வந்த பேய்க்கூட்டத்தைக் களத்தைக் காணுமாறு சொன்னாள்

### 11.7.2 யானையும் கப்பலும்.

போர்க்களமெங்கும் குருதி வெள்ளம் பரந்தது. அவ்வெள்ளத்தில் புண்களிலிருந்து வெள்ளம் வடியப் பின்னங்காலை அசைக்கும் யானைகள் நீந்திச் செல்கின்றன. இந்தக் காட்சி வரிசையாகக் கடலில் செல்லும் கப்பல் போன்றிருந்தமையைக் காணுங்கள்.

உடலின்மேற் பலகாயஞ் சொரிந்து பின்கால்

உடன்பதைப்ப வுதிரத்தே யொழுகும் யானை

கடலின்மேற் கலந்தொடரப் பின்னே செல்லுங்

கலம்போன்று தோன்றுவன காண்மின் காண்மின்.

### 11.7.3 குதிரையும் குதிரைத் தறியும்

பெரிய குதிரைகள் சேணங்கள் சரியும்படியாகப் பாய்ந்து செல்கின்றன. அப்போது அவற்றின் கால்கள் கொழுப்பாகிய சேற்றில் அழுந்தியுள்ளன.

அவற்றை எடுக்க முடியாதபடி குதிரைகள் வரிசையாக நிற்கின்றன. இது இரத்த வெள்ளத்தை அடைக்க வரிசையாகக் குதிரை மரங்களை நிறுத்தியது போன்றிருந்தது.

### 11.7.3 வீரர் நிலை

விருந்தினரும் ஏழைகளும் தம்மிடமிருந்து உணவைப்பெற்று உண்ணுதலைப் பார்க்கும்போது களிப்பால் முகம் மலரும்பெரியோர் போலபருந்துகளும் கழுகுகளும் தம் உடலையே உண்ண இறந்து கிடக்கும் வீரர்கள் முகம் மலர்ந்து காணப்படுவர். இறக்கும் வரையிலும் மற்றவர்களுக்குப் பொருளுதவி செய்யாதவர் கருமியாவர். அவர்களை நாடிச் செல்பவர்கள் மூடர்கள். அம்மூடர்களைப் போல கொலையுண்ட வீரர்களின் உடல்களில் உயிர் நீங்கும்வரை அவர்களை விட்டு நரிக்கூட்டம் நீங்கா.

### 11.7.4 வண்டும் விலை மாதரும்

யானைகள் போர்க்களத்தில் பெரு மழையென மதநீரைச் சொரிந்தன. அப்போது வண்டுகள் யானைகளைப் பற்றியிருந்தன. யானைகள் இறந்துவிட்டபின் மதநீர் வடியாமற் போனது. அப்பொழுது கருணாகரன் வெற்றியைக் கண்டு தேவர்கள் பூமாரி பொழிந்தனர், வண்டுகள் அந்தப் பூக்களை நாடிச் சென்றன. இந்தக் காட்சி விலை மகளிர் பொருளுள்ளவரை ஒருவரைப் பற்றிப் பொருள் நீங்கியதும் விலகிச் செல்வது போல் இருந்தது.

மாமழைபோற் பொழிகின்ற தான வாரி

மறித்துவிழுங் கடகளிற்றை வெறுத்து வானோர்

பூமழைமேற் பாய்ந்தெழுந்து நிரந்த வண்டு

பொருட்பெண்டிர் போன்றமையுங் காண்மின்காண்மின்

### 11. 7. 5 யானைகளும் கற்புடை மகளிரும்

களத்தில் அரசர்களின் கொடிகள் சாய்ந்து கிடக்கின்றன. அவற்றொடு யானைகள் இறந்து கிடக்கின்றன. இக்காட்சி சுடுகாட்டில் நெருப்புப் படுக்கையில் கற்புடை மகளிர் கணவனுடன் உடன்கட்டை ஏறிக் கிடப்பதைப் போலத் தோன்றிற்று.

களத்தில் இறந்து கிடக்கும் கணவரின் முகங்களை அவனோடு சேர்ந்து உயிர்விடுமுன் ஒருமுறையேனும் காணவேண்டும் என்று கற்புடைப்பெண்டிர் களம் புகுந்தனர். களத்தில் காணமுடியாததால் சுடுவதற்குப் பிணங்களை எடுத்துச் சென்று இருப்பர் என்று எண்ணி இடாகினிப் பேயிடம் வினவுகின்றனர்.

தங்கணவ ருடன்றாமும் போக வென்றே

சாதகரைக் கேட்பாரே தடவிப் பார்ப்பார்

எங்கணவர் கிடந்தவிட மெங்கே யென்றென்

நிடாகினியைக் கேட்பாரைக் காண்மின் காண்மின்

கணவனின் உதடுகள் மடித்துக் கிடக்கக் காரணம் உதடுகளில் வடுப்பட்டானோ என்று புலம்பித் தானும் உயிரை விடுகின்றாள். ஒருத்தி கணவனின் உயிரை நிலமகள் தாங்கவிடாமல் மார்போடணைத்தும் தேவருலகப் பெண்கள் கணவன் உயிரைத் தழுவும் முன்பு தங்கள் உயிரை விட்டுவிட்டுக் கணவனுடன் சென்றாள்.

### 11.7.6 போர்க்களக் காட்சிகள்

போர்க்களத்தில் கணவனின் தலையை மட்டும் கண்ட மனைவியானவள் பயிரவியைக் கேட்பது போல அமையும் காட்சியை,

“பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே

போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத

பருவயிரத் தோளெங்கே எங்கே யென்று

பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்” (பா - 485)

எனும் பாடல் எடுத்துரைக்கும்.

பீறிட்ட குருதி வானத்தில் பட்டுச் சிதறியதால் கரிய மேகங்கள் சிவந்த மேகங்களாகின. சிவந்த போர்க்களத்தில் கொழுப்புகளும் நிறைய உள்ளன. பிணம் தின்னவந்த காகங்களும் போர்வையாக மூடிக் கொண்டன. அதனால் அந்தக் கரிய காகங்கள் வெண்ணிறத்தைப் பெற்றன.

நெருங்காக வச்செங் களத்தே

தயங்கும் நிணப்போர்வை மூடிக்கொளக்

கருங்காகம் வெண்காக மாய்நின்ற

வாமுன்பு காணாத காண்மின்களோ

**போர்க்களம் தாமரைக்குளத்தை ஒத்திருத்தல்**

போர்க்களத்தில் தேரின் மொட்டுக்கள் தாமரை மொட்டுக்களாகவும் இரத்தம் நீராகவும் வீரத் தலை முடிகள் பாசியைப் போலவும் கிடக்கின்றன. எனவே இப்போர்க்களம் தாமரைக் குளத்தை ஒத்திருந்தன.

மிடையுற்ற தேர்மொட்டு மொட்டொக்க

வெஞ்சோரி நீரொக்க வீழ்தொங்கல்பா

சடையொக்க வடுசெங்க ளம்பங்க

யப்பொய்கை யாமாறு காண்மின்களோ.

**11.7.7 வீரர் மூங்கிலை ஒத்திருத்தல்**

வீரர்கள் உடலில் வேலும் அம்பும் தைக்கப்பெற்று நிலத்தில் சாயாதபடி நிற்கின்றனர். இக்காட்சி கழைக் கூத்தர்கள் கயிற்றைக் கொண்டு கட்டிய மூங்கிலை ஒத்திருக்கும். அவ்வீரர்கள் உடலை பறவைகள் கொத்தும் போதுவேல்கள் அழுந்திக் குத்துகின்றன. அதனால் பருந்துகளும் கழுகுகளும் துன்புற்றன. படைத்தலைவர்கள் தாம் முன்னின்று போரிட்டு உயிர் நீத்துச் செஞ்சொற்றுக் கடனைத் தீர்ப்பர்.

**11.7.8 எழுந்தாடும் வீரர் தலை**

யானை மேலிருந்து போர் புரியும் வீரர் ஒருவரை ஒருவர் எதிர்த்தபோது வெட்டுப்பட்ட தலைகள் மேலே கிளம்பித்துள்ளிக் குதித்துக் கீழே விழுகின்றன. இக்காட்சி வீரமகள் அம்மானை ஆட்டத்தில் எறிந்து விளையாடும் அம்மானைக் காய்களை ஒத்திருந்தது.

வீரர்கள் போர்க்களத்தில் மடிந்து வீர சுவர்க்கம் புகுந்தனர், அதனால் கலிங்கப் போர்க்களத்தைவிட மிகுதியான வீரர் கூட்டம் தேவருலகில் காணப்பட்டது. குருதிக் கடலில் யானைகளின் மதநீர் கடற் கால்வாய் போலக் கலக்கவும் குதிரைகளாகிய அலைகள் வீசவும் சாமரமாகிய நுரைகள் மிதக்கவும் குருதிக்கடல் பரவியிருந்தது.

**11.7.9 போர்க்களத்து வருணனை**

உலகோரைக் காக்கும் குலோத்துங்க சோழன் முன்பு இராமனாக அவதரித்தபோது கடல்மீது அணை அமைக்க வில்லை வளைத்தான். அப்போது குரங்குக் கூட்டங்கள் கடலில் பெரிய மலைகளைக் குவித்தன. யானைகளை மலைகளை ஒத்தன அம்மலைக் கூட்டங்கள்போல யானைகளின் பிணங்கள் இரத்தக் கடலில் குவிந்துள்ளன.

கருணாகரன் விடுத்த அம்புகள் கலிங்கவீரரின் கேடகத்தையும் கவசத்தையும் ஊடுருவின. அதனால் கலிங்கவீரர் கருணாகரனின் வில்லாற்றலைப் புகழ்ந்தனர். தம்படை வீரர்களைப் போருக்குச் செல்லாது கைகளால் தடுத்தனர்.

விண்ணுலகு போகும் வீரர் மட்டுமல்லாது உடம்புகளும் மலர்ச்சி கொண்டு கண்ணிமையாது இருந்ததால் அவையும் தேவர்களை ஒத்திருந்தன. பிறைச் சந்திரனை ஒத்த தந்தங்களை உடைய இறந்த யானைகளின் தலையாகிய உடலும் துண்டாகின. குறைந்த தலைகளாகிய துண்டுகள் கொல்லனுடைய சம்மட்டிகளை ஒத்திருந்தன.

தங்கள் வாயில் புகுந்த வேல்களைப் பறித்து எடுக்க அவற்றைத் தம்வலக்கையால் பறித்தபடி கொம்பூதுபவரைப் போன்றிருந்தனர்.

வீரர்கள் தம் மார்பில் பாய்ந்த பெரிய வேல்களைப் பறித்து நிலத்தில் ஊன்றிக் குருதியாற்றில் தேர்மீது நிற்கும் தன்மை படகோட்டிகள் துடுப்புகள் ஊன்றி ஆற்றில் செல்வதை ஒத்துள்ளது.

போர்க்களத்திற்கு வந்த பூதம் நால்வகைப் படைத்தலைவன் உடலை வயிறு நிரம்பத் தின்று மேலும் இறந்த குதிரைகளைத் தலையில் சுமந்து வருவது நிறைந்த சூல் கொண்ட மேகம் போன்றிருந்தது.

மலைகள் இவ்வாறு தான் இருக்கும் என்று கண்டோர் வியக்கும்படி நிற்கும் போர்யானையின் வீரர்கள் ஒருவரை ஒருவர் வெல்ல முனையும் போர்க்களத்தில் புறப்புண் படுமோ என்று அஞ்சி மார்பில் புண்பட்டு வீழந்தனர்.

இவ்வாறு வாழ்வில் மட்டுமல்லாமல் களத்தில் மடியும்நிலையிலும் வீரரின் மறவுணர்வு வெளிப்படுகின்றது.

## 11.8 கூழடுதல் (முற்பகுதியின் தொடர்ச்சியாக 14)

களம் முழுவது பேய்களுக்குக் காட்டுதல் முடியாதது என்று கருதிய காளி, களத்தில் பெருகிய குருதியில் நீராடுமாறு கட்டளையிட்டது. பின்னர் நிணக்கூழைச் சமைக்குமாறு பேய்களுக்கு ஆணையிட்டாள்.

களமடையக் காட்டுதற்கு முடிவ தன்று
கவிழுமதக் கரிசொரியக் குமிழி விட்டுக்
குளமடைபட் டதுபோலுங் குருதி யாடிக்
கூழடுமி னென்றருளக் கும்பிட் டாங்கே

### 11.8.1 பேய்கள் நீராடல்

காளி பேய்களுக்கு கூழ் சமைக்கக் கட்டளை இட்ட பின் பேய்கள் ஒன்றையொன்று கூப்பிட்டன.

குறுமோடீ நெடுநிண மாலாய்
குடை கலதீ கூரெயிறீ நீலி
மறிமாடீ குதிர் வயிறீ கூழட
வாரீர் கூழட வாரீரே

பேய்கள் எல்லாம் பல்விளக்கி, நாக்கினை வழித்து, நகந்திருத்தி எண்ணெய் இட்டுத் தலை முழுகி, ஆடை அணிந்து அணிகலன்களையும் அணிந்து கூழினைச் சமைக்கத் தொடங்கின. பேய்கள் பல் துலக்குவதை,

"பறிந்த மருப்பின் வெண் கோலால்
பல்லை விளக்கிக் கொள்ளீரே
மறிந்த களிற்றின் பழுஎலும்பை

வாங்கி நாக்கை வழியீரே” (பா - 506)

எனும் பாடல் விளக்கும். மேலும் யானையின் மதநீரை எண்ணெய்யாகத் தேய்த்து வெண்மூளைக் களியால் தலை தேய்த்துக் குளித்தன.



குருதிக் குட்ட மித்தனையுங்
கோலும் வேலுங் குந்தமுமே
கருவிக் கட்டு மாட்டாதீர்
கரைக்கே யிருந்து குளியீரே.

குருதியின் பெருக்கத்தில் வேற் படைக் கருவிகள் கிடப்பதால் அவற்றில் சிக்கிக்கொள்ளாதிருக்கக் கரையிலிருந்து பாதுகாப்பாகக் குளிக்குமாறு பேய்கள் கூறிக்கொண்டன.

பேய்கள் குருதிக் குளத்தில் வெகுநேரம் நீந்தி விளையாடாது இருக்குமாறு கூறின. போரில் மடிந்த கலிங்க வீரரின் கொழுப்பாகிய ஆடைகளை விரித்துப் புனைய வேண்டின.

ஆழ்ந்த குருதி மடுநீந்தி
யங்கே யினையா திங்கேறி
வீழ்ந்த கலிங்கர் நிணக்கலிங்கம்
விரித்து விரித்துப் புனையீரே

யானையின் கிம்புரியைக் கைவளையல்களாகவும் குதிரைகளின் கால்மிதியாகிய அங்க அடிகளைக் காலணிகளாகவும் இறந்த வீரர் வீசி எறிந்த பெரிய வளைத்தடிகளைக் காதணிகளாகவும் புனைந்தன. இரட்டை முரசங்களை வாளின் பிடியில் செருகிக் கோத்து இரட்டை வாளி என்னும் காதணிகளாக அணிந்தன.

யானையின் துதிக்கைகளைக் கைகளில் காப்புக் கயிறாகக் கட்டிக்கொண்டன. இறந்த குதிரைகளின் குளம்புகளைத் தோள்வளையாகவும் வீரர்கள் வீசிய சங்குகளைக்கோத்து முத்து மாலைகளாகவும் அணிந்தன். மேலும் வீரர்களின் கண்மணிகளையும் யானைகளின் தலைகளில் உள்ள முத்துக்களையும் நரம்பில் கோத்து வன்சரம் எனும் அணியாக அணிந்தன

### 11.8.2 கூழ் சமைத்த முறைகள்

நிலத்தை மெழுகிக் கோலமிட்டு, அடுப்பு வைத்துப் பானையை அடுப்பிலேற்றி, உணவுப் பொருள்களை கைக்கொண்டு, உலை வைத்து வெங்காயமும் உப்பும் கொண்டு அடுப்பில் தீமூட்டி, விறகுவைத்து, அரிசிகொண்டு உரல்களில் உலக்கை கொண்டு வள்ளைப்பாட்டு பாடின.

முரசங்களை அரிசி குற்றும் உரல்களாகக் கொண்டு வீரர்களின் பற்களை அரிசிகளாகப் பெய்து யானைத் தந்தகளாகிய உலக்கைகளால் சலுக்கு மொலுக்கு என ஓசையிடக் குற்றின. வள்ளைப்பாட்டில் வென்ற குலோத்துங்கனையும் காளியையும் வாழ்த்தி பாடின.



பேய்கள் உலக்கை குற்றிப் பாடிய தன்மையில் காளியின் புகழைப் பாடின. பின் குலோத்துங்கனைப் பாடிக் குற்றின. அவன் சேர பாண்டியரை வென்றமையையும் வட புலத்தாரை வென்றமையையும் பகைவரெல்லாம் பணிய உலகம் இன்புற ஆண்டமையையும் பாடின. பின்பு கருணாகரனையும் வாழ்த்தின. பல்வேந்தர்கள் திறை தராது அழிந்தமையும் பிறர் திறை தந்து பணிந்தமையும் பொருளாகக் கொண்டு போற்றின. குலோத்துங்கனைத் திருமாலுக்கு நிகராகத் தோள்வலிமையைப் பாராட்டின. இதனை,

தணந்த மெலிவு தான்றீரத் தடித்த வுடல்வெம் பசிதீரப்
பிணந்தரு நாச்சியைப் பாடீரே பெருந்திரு வாட்டியைப் பாடீரே
கவன நெடும்பரி வீரதரன் காவிரி நாடுடை யானிருதோள்
அவனி சுமந்தமை பாடீரே அரவு தவிர்ந்தமை பாடீரே
மன்னர் புரந்தரன் வாளபயன் வாரண மிங்கு மதம்படவே
தென்ன ருடைந்தமை பாடீரே சேர ருடைந்தமை பாடீரே.
ஒளிறு நெடும்படை வாளபயற் குத்தர பூமிய ரிட்டதிறைக்
களிறு வரும்படி பாடீரே கடமத நாறுவ பாடீரே
எற்றைப் பகலினும் வெள்ளணிநாள் இருநிலப் பாவை நிழலுற்ற
கொற்றக் குடையினைப் பாடீரே குலோத்துங்க சோழனைப் பாடீரே
முடியினால் வழிபட்டு மொழிந்ததிறை யிடாவேந்தர்
அடியினால் மிதிபட்ட அருவரைநூ றாயிரமே
நாற்கடலைக் கவித்தகுடை நரதுங்க னமுதமெழப்
பாற்கடலைக் கடைந்தருளும் பணைப்புயநூ றாயிரமே

எனவரும் தாழிசைகளால் உணரலாம்.

வெண்ணிறப் பற்களே அரிசியாக்கித் தீட்டின. பின் அரிசியைப் சள்ளவட்டம் எனும் கேடயத்தை முறமாகக் கொண்டு புடைத்தன. அம்பறாத் தூணியால் அளந்து உலையில் இட்டுத் பேய்கள் வீரர் கைகளாகிய துடுப்பும் குதிரைக் கால்களாகிய அகப்பையும் கொண்டு சமைத்தன. துடுப்பும் அகப்பையும் பயன்படுத்திக் கூழினைச் சமைத்தன. யானை வயிறே பானையாகக் கொண்டு

குதிரையின் குருதியூற்றி, பற்களை உள்ளியாக இட்டு நகங்களை உப்பாக இட்டுப் பேய்கள் கூழ் அட்டன. இக்கருத்துக்களை,

"கொலையினுட் படுகரிக் குழிசியுட் கூழினுக்கு

உலையெனக் குதிரையின் உதிரமே சொரிமினோ" (பா - 521)

எனும் பாடலும்

"துள்ளிவெங் களனில் வீழ் துரகவெண் பல்லெனும்

உள்ளியும் கிள்ளியிட்டு உகிரினுப்பு இடுமினோ" (பா - 522)

எனும் பாடலும, விளக்குகின்றன. இறந்து பட்ட வீரரின் ஈட்டி அம்பு முதலியவற்றை விறகாக்கித் தீமூட்டின என்பதை

"தனிவிசும் படையினும் படைஞர்கண் தவிர்கிலா

முனிவுஎனுங் கனலைநீர் மூளவைத் திடுமினோ" (பா - 523)

எனும் பாடல் விளக்குகின்றது.

### 11.8.3 கூழைப் பதம் பார்த்து உண்ணுதல்

பின் கூழைப்பதம் பார்த்து உப்பு சரிபார்த்து இறக்கிவைத்தன. தண்ணீர் முகந்து வைத்துக் கொண்டன. நீர்தெளித்து உண்பதற்கேற்ற நிலையில் நிலத்தைத் திருத்தின. உண்பதற்கேற்ற பாத்திரங்களை பரப்பி வைத்தனர். பகல் விளக்கும் பாவாடையும் (துணி விரிப்பு) இட்டன. உணவு உண்ண எல்லாப் பேய்களையும் அழைத்தன. உணவு படைக்க வேலில் சிக்குண்ட தலைகளை அகப்பைகளாக எடுத்துக் கொண்டன. சமையல்காரப் பேய்கள் கூழ் வார்க்கத் தொடங்கின. (பரிமாறின).

பல்வகைப் பேய்களுக்கும் கூழ் பரிமாறப்பட்டது. பேய்கள் எல்லாம் உண்டன. வெற்றிலைப் பாக்கு போட்டுக்கொண்டன. பின் மகிழ்ச்சியில் குதித்துக் கூத்தாடின. குலோத்துங்கனை வாழ்த்தின. இதனை,

நிலத்தைச் சமைத்து கொள்ளீரே

நெடுங்கை களிற்றி னிருசெவியாங்

கலத்திற் கொள்ள குறையாத

கலங்கள் பெருக்கி கொள்ளீரே (பா - 561)

எனும் பாடலும்,

"பரிசு படவே கலம்பரப்பிப்

பத்தி பந்தி பட உங்கள்

வரிசை யுடனே இருந்துண்ண

வாரீர் கூழை வாரீரே” (பா - 563)

எனும் பாடலும் எடுத்தியம்புகின்றன.

பந்தி பந்தியாய் அமர்ந்த பேய்களுக்கு மடைப் பேய்களைக் கூழ் ஊற்றுமாறு ஆணையிட்டன. பிச்சை கேட்கும் பார்ப்பனப் பேய்க்கும் உயிர்களைக் கொல்லாது ஒரு நாளைக்கு ஒருமுறையுண்ணும் சமணப் பேய்களுக்கும் முழுத்தோலை ஆடையாகப் போர்த்த புத்த பேய்களுக்கும் வெள்ளாட்டு மாமிசத்தைத் தின்றும் போதாமையால் உடல் மெலிந்த கண்காணிப் பேய்க்கும் கூழை ஊற்றுங்கள் என்பதைப் பின்வரும் கண்ணிகள் உணர்த்தும்.

அவதி யில்லாச் சுவைக்கூழ்கண் டங்காந் தங்காந் தடிக்கடியும்

பவதி பிட்சாந் தேகியெனும் பனவப் பேய்க்கு வாரீரே.

உயிரைக் கொல்லாச் சமண்பேய்கள் ஒருபோழ் துண்ணு மவையுண்ண

மயிரைப் பார்த்து நிணத்துகிலால் வடித்துக் கூழை வாரீரே.

முழுத்தோல் போர்க்கும் புத்தப்பேய் மூளைக் கூழை நாக்குழறக்

கழுத்தே கிட்ட மணந்திரியாக் கஞ்சி யாக வாரீரே.

குருட்டுப்பேய், ஊமைப்பேய், கருவுற்ற பேய்களுக்கும் கூழை ஊற்றுமாறு ஆணையிட்ட பேய்கள், ஒரு ஓட்டைப் பாத்திரத்தில் ஊற்றிய கூழ் ஒழுகுவதைத் தலைகீழாகத் திருப்பிப்பார்த்துக் கூழ் முழுமையும் சிந்திவிட்ட முட்டாள் பேய்க்கும் கூழ் ஊற்றச் சொல்லின.

பொல்லா வோட்டைக் கலத்துக்கூழ் புறத்தே யொழுக மறித்துப்பார்த்

தெல்லாங் கவிழ்த்துத் திகைத்திருக்கும் இழுதைப் பேய்க்கு வாரீரே.

தாரையை முழக்கும் நோக்கப் பேய்க்கு யானை துதிக்கையின் நுனியில் கூழை ஊற்றின. கணவருக்கும் குழந்தைகளுக்கும் தராத தானே குடிக்கும் கூத்திப்பேய், விருந்துப்பேய், ஊர்ப்பேய் அவற்றோடு கனா வுரைத்த பேய், கணக்கபேய் ஆகிய அனைத்துப் பேய்களுக்கும் கூழை உள்ளம் மலர ஊற்றின.

உண்டபின் வாய்பூசிய பேய்கள் குதிரைகளின் காதுகளாகிய வெற்றிலையும் குளம்பாகிய வெட்டுப்பாக்குகளையும் வீரரின் கண்களின் வெள்ளைவிழிளாகிய சுண்ணாம்பையும் ஒன்றாக்கி வெற்றிலையிட்டன. பூதம் தலையில் உள்ள மயிரை மோந்து புரையேறிவிடாது பார்த்துக்கொள்ளுங்கள் என்றன.

### 11.8.4 பேய்களின் களிப்பும் பாட்டும்

பேய்கள் களிப்பு மிகுதியால் மகிழ்ச்சியாக மேலாடையை வீசிக்கொண்டும் பாடிக்கொண்டும் இந்திரனைப் போலும் குலோத்துங்கன் கலிங்கரை வென்ற தன்மையைப் பாடிக்கொண்டும் பேய்கள் கூத்தாடின. சிலபேய்கள் பாண்டியர்

மலைக்குகைகளில் நுழைவதுபோல் மதயானைகளின் வயிறுகளில் புகுந்து விளையாடின.

சேரர்கள் கடலில் விழுவதுபோல் குருதிக் கடலில் புகுந்து விளையாடின. சில பேய்கள் நிலத்தில் விழுந்து புரண்டு விளையாடின. கலிங்க வீரர்கள் தலை விரி கோலமாய்த் தோற்றோடியமை போல சிலபேய்கள் முதுகு காட்டி ஓடின. அபயனின் திருவடிகளில் பகைவர்கள் திறைப்பொருளொடு பணிவர் என்றபடி சில பேய்கள் கூத்தாடின. எனக் குலோத்துங்கனின் பகைவர்களின் செயல்களைப் பேய்களின் மேல்வைத்துச் செயங்கொண்டார் பாடுகின்றார்.

சூரிய குலத்தில் வந்த புரந்தரனைப் போன்றே சிறப்புடையவன் குலோத்துங்கன். அவன் புகழைப் போற்றிப் பாடுவோம் என்றன. கலிங்க வீரர்களை வெற்றி கொண்ட குலோத்துங்கனுடைய கருணையைச் சில வாழ்த்தின. சிசுபாலன் வைதாலும் அருள் செய்த கண்ணன்போன்றவன் பொன்னித் துறைவன், பொருனைத் துறைவன், கங்கை மணாளன் எனப் பேய்கள் வாழ்த்தின.

இறுதியாக ஒட்டக்கூத்தர் தம் கூற்றாக வாழ்த்துப் பாடி நூலை நிறைவு செய்துள்ளார்.

யாவ ருங்களிசி றக்கவே தருமம் எங்கு மென்றுமுள தாகவே
தேவ ரின்னருள் தழைக்கவே முனிவர் செய்த வப்பயன்வி ளைக்கவே.
வேத நன்னெறி பரக்கவே அபயன் வென்ற வெங்கலிக ரக்கவே
பூத லம்புகழ்ப ரக்கவே புவி நிலைக்க வேபுயல்சு ரக்கவே.

## 11.9. தன்மதிப்பீட்டு வினா விடைகள்

**இருமதிப்பெண் வினாவிடைகள்**

1. இந்திரசாலம் செய்த பேயெது?

   முது பேய்

2. காளியைச் சூழ இருந்தோர் யாவர்?

   பேய்களும் இடாகினிகளும்

3. காளி ஏந்திய கலத்தின்பெயர் யாது?

   பிண்டிபாலம்

4. முது பேய்க்கு இந்திரசாலம் கற்றுத் தந்தது யார்?

   உருத்திர யோகினி

5. இராசபாரம்பரியத்தை யார் கூறக் கரிகாலன் இமையத்தில் பொறித்தான்?

நாரதர்

6. குகை வழியே சென்று நாக கன்னிகையை மணந்தவன் யார்?

கிள்ளிவளவன்

7. இரும்பொறைக்கு விலங்கிட்டவன் யார்?

செங்கணான்

8. குந்தளரைக் குலோத்துங்கன் எங்கு வென்றான்?

கூடல சங்கமம்

9. அம்மங்கை வயிற்றுப் பிறந்தவன்யார்?

குலோத்துங்கன

10. இளவரசன் குலோத்துங்கன் அழித்த இடங்களைச் சுட்டுக

வயிராகரம், சக்கரவாகக் கோட்டம்

11. குலோத்துங்கன் எங்கு சென்று வேட்டையாடக் கருதினான்?

பாலாற்றங்கரை

12. பாலாற்றங்கரை செல்லும்வழியில் தரிசித்த தலங்களைச் சுட்டுக.

திருவதிகை, தில்லை

13. விசயதரன் எனப் பெயர்பெற்றவன் யார்?

முதலாம் குலோத்துங்கன்

14. புலியும் மானும் ஒரே துறையில் நீருண்ணும் வண்ணம் ஆட்;சி செய்தான் யார்?

மாந்தாதா

15. பட்டினப் பாலை என்னும் நூல் யாரால் யார்மீது பாடப்பெற்றது?

கடியலூர் உருத்திரங்கண்ணனார் கரிகால் பெருவளத்தானைப் பாடியது.

16. முதலாம் பராந்தகனின் வேறுபெயர் யாது?

வீரநாராயணன்

17. கடாரம் கொண்டான் எனப்பெற்றவன் யார்?

இராசேந்திர சோழன்

18. காளி குலோத்துங்கனை யாராகக் கருதினாள்?

தன் மகனாக



குறிப்புகள்

19. பேய்கள் காளியிடம் எவற்றைப் போல் பறப்பதாக முறையிட்டன?

பதர்களைப்போல்

20. கலிங்கத்தின் தீய நிமித்தத்தைக் கூறியது எது?

முதுபேய்

21. கலிங்கத்தில் தோன்றிய தீ நிமித்தங்கள் இரண்டனைக் குறிப்பிடுக.

மேகம் இரத்தம் பொழியும். முரசுவறிதே ஒலிக்கும். இரவில் வானவில் தோன்றும்

22. முதுபேய் கூறியதைக் கேட்ட காளி கூறியது யாது?

பரணிப்போர் உண்டு என்றாள்

23. கலிங்கப் போரை எந்த எந்தப் போர்களுடன் காளி ஒப்பிட்டாள்?

இராமன் நிகழ்த்திய இலங்கைப் போர்

24. வீற்றிருந்த குலோத்துங்கனைப் புகழ்ந்தோர் யாவர்?

சூதர், மாகதர், மங்கலப் பாடகர்

25. குலோத்துங்கனுக்குத் திறையிடாதவன் யாவன்?

கலிங்கமன்னன் அனந்தவர்மன்

26. கலிங்க மன்னனின் அமைச்சன் யார்?

அங்கராயன்

27. பார் சிறுத்தது ஏன்?

படை பெருக்கத்தால்

28. படை கடந்த ஆறுகளைச் சுட்டுக.

பாலாறு, குசைத்தலை ஆறு, பொன்முகலி ஆறு, கொல்லியாறு, வடபெண்ணை, மண்ணாறு, குன்றியாறு, பேராறாகிய கோதாவரி, கிருஷ்ணா

29. மலை மலையுடன் போரிட்டது போன்று விளங்கியது எது?

யானையும் யானையும் போரிட்டமை

30. இரு தேர்கள் தம்முள் மோதியமைக்குக் கூறும் உவமை யாது?

மேகத்துடன் மேகம் பொருதது போல்

31. கலிங்க வீரர் எங்ஙனம் பதுங்கினர்?

கடல் பாய்வர். குகையில் மறைவர். புதருக்குள் மறைவர்

32. கலிங்கப் போர் வீரர் எவ்வேடமிட்டுத் தப்பினர்?

முப்புரிநூல் அணிந்து காவி உடை அணிந்து துறவிகளைப்போல

33. பருந்துகளால் தீண்டப்பெற்ற வீரர்கள் முகம் மலர்ந்துகிடந்தமை எவ்வாறு வருணிக்கப்படுகின்றது?

விருந்து கண்ட பெரியோர் போல

34. கப்பலைப் போன்று தோன்றியவை எவை?

குருதி வெள்ளத்தில் இருந்த யானைகள்

35. கணவனின் தலை பெற்ற மங்கை பயிரவியை வினவியது யாது?

தன்கணவனின் வாளும் தோளும் மார்பும் எங்கே என

36. கரு மேகம் செம்மையானது எவ்வாறு?

போரில் குருதி வானில் தெறித்தலால்

37. காகம் வெண்மைநிறன் அடைந்தது எவ்வாறு?

கொழுப்புப் போர்வையால் மூடியதால்

38. வீரமங்கையின் அம்மானைக் காய்களாகத் தோன்றியவை எவை?

யானை வீரரின் வெட்டுப்பட்டு எழுந்தாடும் தலைகள்

39. வீரர் உடல்கள் தேவரை ஒத்திருந்தன எவ்வாறு?

கண்ணிமையாமல் கிடந்தமையால்

40. துறக்கம் இடம் போதாமைக்குக்காரணம் என்ன?

வீரர் பலர் வீரசுவர்க்கம் புகுந்ததால்

41. வீரர் படகோட்டிகளை எங்ஙனம் ஒத்திருந்தனர்?

மெய் பாய்ந்த வேல் பறித்து தேர்மீது நின்ற காட்சியால்

42. பேய்கள் எவ்வாறு பெயரிட்டு அழைத்தன?

குறுமோடி, நெடுநிண மாலாய் கூர் எயிறீ, நீலி

43. பேய்கள் ஆடையாக உடுத்தியது எதனை?

வீரர்களின் கொழுப்பாகிய ஆடை

44. பேய்களின் கைவளையும் காலணியும் எவை எவை?

யானையின் கிம்புரிகள் குதிரைகளின் அங்கவடி

45. இரட்டை வாளி எனப்பெற்றது எது?



குறிப்புகள்

இரு முரசங்களை வாளின் பிடியைக் கோத்து அமைந்த காதணி

46. கூழ் சமைத்த பானை எது?

யானையின் வயிறு

47. பேய்கள் எதனால் அரிசியை அளந்தன?

அம்பறாத் தூணியால்

48. கூழிற்கு அரிசியாகப் பயன்பட்டன எவை?

குதிரை, வீரர்களின் பற்கள்

49. பேய்கள் எவ்வாறு அடுப்பிற்குத் தீமூட்டின?

வீரர்களின் கண்களில் என்றும் நீங்காத சினம் என்னும் தீயினால்

50. அரிசி குற்றும் உரல், உலக்கை எவை?

உரல் - முரசம்; உலக்கை - யானைத் தந்தம்

51. கூழ் சமைக்க உதவும் துடுப்பும் அகப்பையும் எவை?

துடுப்பு -வீரரின் கைகள், அகப்பை - குதிரைகளின் கால்கள்

52. உண்ண அழைக்கப்பெற்ற பேய்கள் யாவை?

பார்ப்பனப் பேய், சமணப்பேய், புத்தபேய், பார்வைப் பேய்,
குருட்டுப்பேய், ஊமைப்பேய், மூடப்பேய், கூத்திப்பேய்

**குறுவினா**

53. முதுபேய் காட்டிய இந்திர சாலத்தை விவரிக்க.

இந்திரசாலம் என்ற தலைப்பில் உள்ளவை (11.1முழுவதும்)

54. கலிங்கத்துப் பேய் கூறிய தீநிமித்தங்கள் யாவை?

முதுபேய் தீ நிமித்தம் கூறுதல் என்ற தலைப்பில் அமைந்தவை (11.3.2)

55. குலோத்துங்கன் வீற்றிருந்த சிறப்பை எழுதுக.

குலோத்துங்கன் வீற்றிருக்கை என்ற தலைப்பில் அமைந்தவை(11.5.2)

56. கலிங்கப்போருக்கு எழுந்த சோழர் படையின் செயலை விளக்குக.

போருக்கு எழுதல் (11.5.3, 11.5.4)

57. கலிங்க வீரர் தப்பிப் பிழைத்தமையை விளக்குக.

கலிங்க வீரர் தப்பிக்க நினைத்தல் (11.6.6)

58. கூழுண்ட பேய்களின் செயல்கள் யாவை?

பேய்களின் களிப்பும் பாட்டும் என்ற தலைப்பில் உள்ளவை (11.8.4)

**பெருவினா**

59. நாரதர் கூறிய இராச பாரம்பரியத்தைக் கட்டுரைக்க.

இராச பாரம்பரியம் என்ற தலைப்பில் உள்ளவை (11.2 முழுமையும்)

60. குலோத்துங்கன் பற்றிக் காளி கூறியமையை விளக்குக.

அவதாரம் என்ற தலைப்பில் அமைந்தவை (11.3.4 முழுமையும்)

61. போரின் கடுமையைக் கலிங்கத்துப் பரணி எவ்வாறு விளக்குகின்றது?

62. செயங்கொண்டாரின் கற்பனைத் திறனைப் போர் பாடியது வழி விளக்குக.

போர் பாடியது முழுமையும் (11.7)

63. பேய்கள் குளித்துக் கூழ் சமைத்துண்டமையைக் கலிங்கத்துப்பரணி வழி கட்டுரைக்க.பேய்கள் நீராடல், கூழ் சமைக்கும் முறை, பதம் பார்த்து உண்ணல் (11.8.1., 11.8.2, 11.8.3)



குறிப்புகள்

# பிரிவு- 4:
## கூறு - 12
## குலோத்துங்க சோழன் உலா

குறிப்புகள்

## 12.1 உலா இலக்கியம்

சிற்றிலக்கிய வகைகளுள் குறிப்பிடத்தக்கது உலா இலக்கியம். பொதுவாக உலா இலக்கியம் என்பது தெய்வத்தையோ மன்னரையோ அல்லது ஒருவகையில் புகழ்பெற்றவரையோ தலைவராகக் கொண்டு பாடப்பெறுவது. அவர்கள் வீதியில் உலா வரும்போது அவர்களைக் கண்டு பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவ மகளிரும் ஒருதலைக் காதல் கொள்வதாகப் பாடப்படுவதாகும்.

உலாவின் நுவல் பொருள் பற்றி கல்யாண சுந்தரையர் மூவருலா முன்னுரையில்,

'இவ்வுலாக்களில் சோழர்களுடைய குலத்தொன்மை தலைவர் பெருமை, பள்ளி எழுதல், நீராடி அலங்காரம் செய்து கொள்ளல், பட்டத்து யானையின் மீது அமர்தல், உடன் வருவோர், குழாங்கள், அவர்கள் கூற்று என்பன முதலிலும் ஏழு பருவ மகளிருடைய உணர்ச்சிகளும் செயல்களும் விளையாட்டுகளும் தலைவர்களைக் கண்டு காமுற்றதும் அவர்கள் அருள் செய்தலும் ஆகிய இந்நிகழ்ச்சிகள் பின்பும் கூறப்படுகின்றன.

தலைவன் உருவத்தைக் கிழியில் வரைதல் பந்து அம்மானை ஆடல், விறலி தலைவன் பெருமையைப் பாடுதல், மதுவை அருந்துதல், தலைவன் நிறத்திற்கு ஏற்ப உடுத்தல், பூணல், பூக்கொய்தல் நீராடல், கழங்காடல், சிற்றில் இழைத்தல் முதலிய விளையாட்டுகள் ஆகிய இவற்றைக் காணலாம். (மூவருலாமுகவுரை)

என்கிறார்.

உலா பற்றிய கூறுகள் தொல்காப்பியத்தினும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில்,

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப

வழக்கொடு சிவணிய வகைமை யான" (தொல்.பொருள் - 82)

எனும் நூற்பா உலா பற்றிய செய்தியைக் கொண்டது. பிரபந்த தீபம் என்னும் நூல் ஏழுவகைப் பெண்டிர் தலைவன் உலா வருவதைக் காண்பதை விளக்குவது உலா எனக் குறிப்பிடுகின்றது. புறநானூற்றுப் பாடல் ஒன்றில் (புறம்-4) சோழன் உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி குதிரைகள் பூட்டிய பொன் தேரில் உலா வருவது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் உலா

தனிச்சிற்றிலக்கியமாக வளர்ச்சி அடைந்தாலும் ஒரு துறை அளவிலான குறிப்பு பழந்தமிழில் காணப்படுகின்றது.

தமிழில் தோன்றிய முதல் உலா திருக்கைலாய ஞான உலா. இதனை ஆதி உலா என்றும் கூறுவர்.

## 12.2 சோழர்கால இலக்கிய வளம்

இடைக்காலத்தில் சோழர் ஆட்சியில் புலவர்களைப் பெரிதும் போற்றியிருக்கின்றார்கள். கம்பர், ஒட்டக்கூத்தர், சேக்கிழார், செயங்கொண்டார் என்னும் பெரும்புலவர்கள் சோழர்காலத்தில் வாழ்ந்தவர்களாவர்.

இவர்களுள் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தருக்கு இன்னொரு பெருஞ்சிறப்புள்ளது. பிற்காலச் சோழர்களில் தந்தை, மகன், பேரன் என விக்கிரம சோழன், அவன் புதல்வன் இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி-1133 - 50), அவன் மைந்தன் இரண்டாம் இராசராசன் (கி.பி- 1146 - 63) ஆகிய சோழவேந்தர் மூவர் ஆட்சியிலும் அவைக்களப் புலவராகவும் ஆசானாகவும் விளங்கியவர் ஒட்டக்கூத்தர் ஆவார்.

| மன்னர்கள் | ஆட்சி காலம் |
|---|---|
| 1. விக்கிரம சோழன் | கிபி 1118- 1135 |
| 2. இரண்டாம் குலோத்துங்கன் | கிபி 1133 1150 |
| 3. இரண்டாம் இராசராசன் | கிபி 1146 1163 |

மேற்காணும் மூன்று மன்னர்களின் புகழ் கூறும் மூவருலா ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது. ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்ற தக்கயாகப்பரணியில் இரண்டாம் இராசராசனின் சிறப்பும், அவன் முன்னோர் பெருமையும் பாடப் பெற்றிருத்தல் காணலாம். மூவருலாவும் இரண்டாம் குலோத்துங்கன் மீது பாடிய குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழும் சோழப் பேரரசின் வரலாற்றைச் சுவையுற விளக்குகின்றது.

## 12.3 ஒட்டக்கூத்தர்

தமிழிலும் வடமொழியிலும் புலமைமிக்க ஒட்டக்கூத்தர் சோழநாட்டின் மலரி என்னும் ஊரில் பிறந்தவர். மேலும் சிலர் காழி ஒட்டக்கூத்தன் என்னும் குறிப்பைக் கொண்டு இவர் பிறந்த ஊர் சீர்காழி என்றும் குறிப்பர்.

இராசராசன் மீது இவர் உலா பாடியபோது ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் பொற்காசுகளைப் பரிசாகப் பெற்றார் என்பதைத் தமிழ்விடு தூது மூலம் அறியமுடிகின்றது.

......... ........ ............ கூடல்

நராதிபன் கூத்தன் எதிர் நண்ணி ஓர் கண்ணிக்கு

ஓராயிரம் பொன் ஈந்த உலாவும் (தமிழ்விடு தூது 58- 59)

குறிப்புகள்

இரண்டாம் குலோத்துங்கன் இவருக்கு அரிசிலாற்றின் தென்கரையில் கூத்தனூர் என்னும் ஊரைத் தானமாக வழங்கினான். அவ்வூரில் கலைமகளுக்குக் கோயில்கட்டி வழிபாடு செய்துள்ளார் என்னும் செய்தி தக்கயாகப்பரணி வாயிலாக வெளிப்படுகிறது.

விக்கிரம சோழனின் கலிங்க வெற்றியைக் **கலிங்கத்துப் பெரும்பரணி** எனும் நூலாகப் பாடியுள்ளார் இந்நூல் இதுவரை கிடைக்கவில்லை. ஒட்டக்கூத்தர் எழுதியவையாகப் பின்வரும் நூல்கள் கூறப் பெறுகின்றன.

1.மூவருலா

1.விக்கிரம சோழன் உலா

2.குலோத்துங்க சோழன் உலா

3.இராசராச சோழன் உலா

2. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்

3. உத்தரகாண்டம்

4. அரும்பைத் தொள்ளாயிரம்

5. ஈட்டி எழுபது

6. எழுப்பு எழுபது

7. களிப்பு எழுபது

8. தக்கயாகப் பரணி

9.காங்கேயன் நாலாயிரக் கோவை

இவர் புலமையைப் பாராட்டி கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசர், கவுடகவி, சர்வஞ்ஞகவி எனப்பட்டங்களை பெற்றுள்ளார், இவ்வாறு ஒட்டக்கூத்தர் பிற்காலச் சோழர் காலத்தில் செல்வாக்கோடு பெரும்புலவராகத் திகழ்ந்துள்ளார்.

*Self -Instructional Material*

## 12.4 இரண்டாம் குலோத்துங்க சோழன்

மன்னன் குலோத்துங்கன் தில்லைநடராசர் கோவில் விரிவாக்கம், புதுப்பிப்பு போன்றவற்றில் பெரும்பங்கு வகித்துள்ளான்.

ஒட்டக்கூத்தரிடம் தமிழ் பயின்ற இரண்டாம் குலோத்துங்கன் புலமை மிக்கவனாக, புலவரைப் போற்றுபவனாக வாழ்ந்துள்ளான். அநபாயசோழன் எனப்படும் குலோத்துங்கன் காலத்தில்தான் சேக்கிழார் பெருமானால் பெரியபுராணம் இயற்றப்பட்டது.

இடைக்காலத் தமிழகத்தில் நல்லாட்சி செய்த சோழ மன்னர்களுள் இரண்டாம் குலோத்துங்க சோழனும் குறிப்பிடத்தக்க இடம்பெறுகிறான். இதனால்தான் ஒட்டக்கூத்தர் இவன்மேல் குலோத்துங்க சோழனுலா குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் என்ற இரண்டு சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார்.

## 12.5 குலோத்துங்க சோழன் உலா

மூவருலாவில் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கச சோழன், இரண்டாம் இராசராச சோழன் என்னும் மூவரின் பெருமைகள் கூறப்பட்டாலும் மூன்று நூல்களிலும் சோழர்களின் பொதுவான சிறப்பியல்புகள் ஆங்காங்கே பேசப்படுகின்றன. அவ்வகையில் இரண்டாம் குலோத்துங்கனின் முன்னோர்கள் பற்றி முதலில் ஒட்டக்கூத்தர் குறிப்பிடுகின்றார்.

### 12.5.1 முன்னோர் பெருமை

ஒவ்வொரு மரபிற்கும் சில அடையாளங்கள் இருக்கும். குலம், கொடி, மாலை என பல்வேறு நிலையில் இந்த அடையாளங்கள் அமைந்திருக்கும் தமிழகத்தின் மூவேந்தர்களில் காவிரி பாயும் பகுதியை ஆண்ட சோழர்களும் அடங்குவர்.

சோழர்குலம் சூரியகுலம், கொடி புலிக்கொடி, மாலை ஆத்திமாலை, குலோத்துங்க சோழனுக்கு முன்னோர்களாக இருபத்து ஏழுபேர், இவ்வுலா நூலில் குறிக்கப்பட்டுள்ளனர். புராணமும் வரலாறும் கலந்த நிலையில் சோழர்குல முன்னோர்கள் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளனர். பின்வரும் எட்டுக் கண்ணிகளில் எண்மர் விளக்கப்பட்டுள்ளன.

முதல் எட்டு கண்ணிகளில் உலக உயிர்களின் தோற்றத்திற்கு அடிப்படையான கதிரவன் முதல் எட்டு சோழர் குல முன்னோர்களின் பெருமைகள் கூறப்படுகின்றன. (1)கதிரவன் (2)மனுநீதிச் சோழன் (3)ககுத்தச்சக்கரவர்த்தி (4)முசுகுந்தச் சக்கரவர்த்தி (5)திலீபச் சக்கரவர்த்தி (6)பெருநற் கிள்ளி (7)மாந்தாதா (8)பகீரத சக்கரவர்த்தி.

1. ஆரவாரமிக்க திருப்பாற்கடலில் பசிய இலைகளுக்கு நடுவில் செந்தாமரை மலர் பூத்தது போல் பாய்கின்ற ஏழு பச்சைக் குதிரைகள் பூட்டப்பட்ட ஒற்றைச்சக்கரம் உள்ளதேரில் உலாவரும் கதிரவனாகிய **ஆதித்தன்**.

2. உலக உயிர்கள் அஞ்சும்படி கன்றின் மேல் தேரைச் செலுத்திக்கொன்ற தன்மகன் விடங்கனைத் தாய்ப் பசுவின் துக்கத்தைப் போக்கத்

தேரைவிட்டே கொன்ற நடுநிலை மாறா நெஞ்சுறுதியுடைய **மனுநீதிச் சோழன்**.

3. தேவர்கள் பணிந்து தங்கள் துயர்தீர்க்க வேண்டிய போது இந்திரனைக் காளை வாகனமாக்கி ஏறிச்சென்று தேவர்களின் எதிரிகளை அழித்த **ககுந்த சக்கரவர்த்தி**.

4. தேவர்களின் வேண்டுகோளின்படி முருகப்பெருமான் வரும்வரை சோர்வடையாமல் தேவருலகைக் காத்த **முசுகுந்த சக்கரவர்த்தி**.

5. தேவர்களுக்கு உதவி செய்ததால் இந்திரலோகத்தில் இந்திரன் முகம் சோர்ந்து போகும் வண்ணம் சிம்மாசனத்தில் அமர்ந்து இருக்கும் **திலீபச் சக்கரவர்த்தி**.

6. பெரிய வாயினால் ஆரவாரம் செய்து அச்சுறுத்தும் கூற்றுவனுக்காக வழக்குரைத்துத் தீர்ப்புச் சொன்ன **பெருநற்கிள்ளி**.

7. கொலை செய்வதையே தொழிலாகக் கொண்ட புலியோடு மானும் ஒரே துறையில் நீர் அருந்தும் வகையில் அமைதியாக உலகை ஆளும் **மாந்தாதா**.

8. முனிவரின் சாபத்தால் முன்னோர்கள் நற்கதி அடையாமைக்கு வருந்தித் தவமிருந்து ஆகாய கங்கையைக் கொண்டுவந்த **பகீரத சக்கரவர்த்தி**. போன்றோரும் பின்னே விளக்கப்படும் பலரும் சோழர் குலத்தின் முன்னோர்கள்.

கதிரவனையும் மனுநீதிச் சோழனையும் குறிப்பிடுவன பின் வரும் கண்ணிகள்,

தேர்மேவு பாய்புரவிப் பாசடைச் செங்கமலம்
போர்மேவு பாற்கடல் பூத்தனையோன் - பார்மேல்
மருளப் பசு ஒன்றின் மம்மர்நோய் தீர
உருளும் திருத்தேர் உரவோன் (கண்ணி - 1, 2)

பின்வரும் ஒன்பது முதல் பதினெட்டு வரை உள்ள கண்ணிகளில் பத்து சோழமன்னர்களின் பெருமைகள் கூறப்பட்டுள்ளன. (9) தசரதன் (10) இராமன் (11) கரிகாற் சோழன் (12) நாபாக சோழன் (13) தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் (14) சங்கரண சக்கரவர்த்தி (சம்□ர்ஷணன்) (15) சிவுக சோழன் (16) பிருது சக்கரவர்த்தி (17) சிபி (18) கரிகாற் பெருவளத்தான் முன்னோர் பெயர் வைக்கும் முறையால் இரண்டு கரிகால் சோழர்கள் இடம்பெறுகின்றனர்.



9. வானவர்களுக்குத் தொல்லை தரப் பத்துத் தேர்களில் வந்த சம்பாசுரன் என்னும் அசுரனைத் தேவர்கள் வேண்டுகோள்படி, ஒரு தேரில் சாரதியாகக் கைகேயியுடன் வந்து அழித்த **தசரதன்.**

10. பத்துமலைகள் அதிர முழங்கும் பத்துதலை இராவணன் இலங்காபுரி அரசனை பிரம்மாத்திரத்தால் வீழ்த்திய **இராமன்.**

11. தன்னை எதிர்த்த வடபுல மன்னர்களைக் காளி தேவியின் துணையோடு வென்று பேய்க் கூட்டத்திற்கு விருந்தளித்த **கரிகாற் பெரு வளத்தான்.**

12. தாமரையில் வீற்றிருக்கும் பதுமக்கடவுள் எனப்படும் நான்முகன் படைத்த உயிர்களைக் காத்து இறுதிகாலத்தில் முதுமக்கள் தாழியில் அவர்களை வைத்துக் காத்த **நாபாகச் சோழன்.**

13. எல்லா உலகங்களையும் தனக்கே உரியதாக்க ஆகாயத்தில் இயங்கிய மூன்று கோட்டைகளையும் அழித்து அசுரரை வென்று வானுலகம் காத்து நாடாண்ட **தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்**. இதனை,

'வாங்கு எயில் நேமி வரையாக மண்ணாண்டு

தூங்கு எயில் கொண்ட சுடர்வாளோன;' (கண்ணி - 13)

என்னும் கண்ணி விளக்கும்.

14. மேலைக் கடலுள் பூமியின் எல்லை மூழ்கியதால் அப்பகுதியை மீட்க சூரிய கிரகணங்களைத் தன்னுடலில் தரித்து மேலைக்கடல்நீரை உறிஞ்சி கீழைக்கடலை நிரப்பிய **சங்கரண சக்கரவர்த்தி. (சம;'ர்ஷனன்)**

15. அலைகள் பரவும் காவிரி ஆற்றில் குறுக்கிடும் மலைகளைத் திருத்தி சோழநாட்டிற்கும் பாசன வசதி செய்த **சிவுகன்** எனப்படும் **கருவர் சோழன்**.

16. தோற்றமும் முதலும் தெரியாமல் கடலால் சூழப் பட்ட உலகைத் தன் வேலால் தாக்கிப் பூமியில் எல்லாம் உருவாக வழி வகுத்த **பிருது சக்கரவர்த்தி**.

17. ஒரு புறாவின் உயிரைக் காப்பதற்காகத் தன் உடம்பின் தசைகளையும் இறுதியில் உடலையும் கொடுக்க அரியாசனத்தில் அமர்வது போல் தராசுத் தட்டில் ஏறிய **சிபிச் சக்கரவர்த்தி**.

18. மண்போட்டுக் கரை கட்ட வாராத ஈழத்துப் பிடாரி பிரதாபத்தினி என்பவளின் கண்ணைத் தோண்டிச் செருக்கை அடக்கிய **கரிகாற் பெருவளத்தான்**.

(19 - 28) பத்தொன்பது முதல் இருபத்தெட்டாம் கண்ணிகள் வரை (19) கிள்ளி வளவன் (20) கோச்செங்கணான் (21) இராசராச தேவன் (22) மும்முடிச் சோழன் (23) முதலாம் பராந்தகன் (24) முடிகொண்ட சோழன் (25) கங்கை கொண்ட சோழன் (26) முதலாம் குலோத்துங்கன் (27) விக்கிரம சோழன் என்னும் மன்னர்களைப் பற்றி எடுத்துரைக்கின்றன.

19. உவசச் சேனன் எனப்படும் ஆயிரம் படங்களைப் பெற்றிருக்கும் நாகங்களின் அரசன் நாகராசனின் செல்வமகளை மணந்து கொண்ட **கிள்ளி வளவன்**.

20. முன்பு சேரமான் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறைப்பிடித்து பொய்கையார் களவழி நாற்பது என்னும் நூலைப் பாடி வேண்டியதால் சேரனை விடுதலை செய்த **கோச்செங்கணான்**.

21. தொடர்ந்து நடந்த போர்களின் நேரில் பங்கேற்றுத் தன்னுடைய மார்பில் தொண்ணூற்று ஆறு விழுப்புண்களைப் பெற்ற **இராசராச தேவன்** (முதலாம் இராசராசன்)

22. தில்லை நடராசப் பெருமானின் திருநடனத்தைக் காணத் தடையாக இருந்த காவலனான பிரம்ம அரக்கனை இறைவனின் நியதிப்படி மார்பினைப் பிளந்து திருநடனத்தைக் கண்டுகளித்தவன் **திருமுடிச் சோழன்** (மும்முடிச் சோழன்)

23. மன்னர்கள் அனைவரும் வணங்கும்படி தமிழுக்குச் சங்கம் வைத்து வளர்த்த மதுரையையும் ஈழநாட்டையும் வெற்றிகொண்ட **முதலாம் பராந்தகன்**.

24. ஒரு பகல் பொழுதில் பாலைநிலங்களைக் கடந்து சேரநாட்டில்லுள்ள உதகை என்னும் நகரை அழித்து, சேரனுக்காகத் தூது வந்தவனின் மேலாடையை நீக்குக என்பது போல நோக்கிய **முடிகொண்ட சோழன்.**

25. சிம்மாசனத்தில் இருந்தபடியே படைகளை அனுப்பி வடநாட்டிலுள்ள கங்கை பகுதியையும் மலேயா தீபகற்பத்தில் உள்ள கடாரம் என்னும் நாட்டையும் வென்ற **கங்கைகொண்ட சோழன்** (இராசேந்திரன்)

26. மனு ஆண்ட காலம் முதல் காலங்காலமாக விதிக்கப்பட்டு வந்த சுங்கவரியைத் தவிர்த்த சோழன் எனப்படும் **முதலாம் குலோத்துங்கன்**.

27. புலவர்களால் போற்றத்தக்க சான்றாண்மை மிக்கவன் பெரியோன் எனப் போற்றப்படும் முதலாம் குலோத்துங்கனுக்குப் பின்வந்த **அகளங்கன்** எனப்படும் **விக்கிரம சோழன்.**

### 12.5.2 இரண்டாம் குலோத்துங்கன்

விக்ரம சோழனின் மகனாகிய இரண்டாம் குலோத்துங்க சோழன் (1133 - 1150) ஆட்சி காலத்தில் அதிகம் போர் இல்லாமல் நல்லாட்சி நடத்தியதாக வரலாற்று அறிஞர்கள் குறிப்பர். சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்டு தில்லை நடராசர் கோயிலுக்கு நிறைய அறப்பணிகள் செய்துள்ளான்.

இவ்வுலா நூலின் தலைவனான இரண்டாம் குலோத்துங்கன் அனைத்துலகங்களையும் பேணிகாக்கும் ஆற்றல் மிக்கவன். உலக உயிர்களை எல்லாம் காக்கும் கார் மேக வண்ணன் திருமாலுக்கு ஒப்பானவன்.

துவரை என்னும் பகுதியை ஆண்ட இந்துமரபு எனக் கூறப்படும் சந்திரகுலத்திற்கு உரிய மகள் விதுகுலநாயகி என்பாள் சோழர்குல மருமகளாக வந்தவள். அவள் பெற்றெடுத்த இளங்களிறாகிய **இரண்டாம் குலோத்துங்கனுக்கு கனகளபன்** என்பது அன்பாக அழைக்கப்படும் பெயர்.

வண்ணம் தீட்டி எழுதமுடியாத அளவிற்கு அழகு ஓவியமாகத் திகழ்ந்த தியாகவல்லி என்னும் மங்கைக்கு மாலை சூட்டிப் பட்டத்து அரசி ஆக்கிக் கொண்டான் இரண்டாம் குலோத்துங்கன். சோழநாட்டுடன் போரிட்டு ஆட்சியை இழந்து சிறையில் வாடிய மன்னர்களுக்கு எல்லாம் விடுதலை கொடுத்தான். அவர்கள் சோழநாட்டுக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தை இனிச் செலுத்த வேண்டாம் எனத் தள்ளுபடி செய்தான்.

அடுத்து இவ்வுலகைத் தாங்கிக் கொண்டிருக்கும் எட்டு மலைகள், எட்டு திக்கு யானைகள், படங்களை உடைய ஆதிசேடன் முதலான எட்டு நாகங்கள் என இவற்றின் சுமையைப் போக்குவதற்காக இரண்டாம் குலோத்துங்கன் இந்த உலகைச் சுமக்கத் தலைப்பட்டான்.

தந்தை விக்கிரம சோழனுக்குப் பிறகு சூரிய குலமாகிய சோழர்குலம் தோல்வி அடையாதிருக்க ஞானமென்னும் அறிவை அழிக்கும் அஞ்ஞானத்தை மனதிலிருந்து நீக்கும் ஆற்றல் பெற்றான். தனக்குரிமை உடைய பட்டத்தரசி தியாகவல்லியுடன் வேத விற்பன்னர்கள் ஆசியோடு நலநிதிகளையும் அனைவருக்கும் வாரி வழங்கி உலக நாயகனாக ஆட்சி புரிந்தான்.

### 12.5.3 குலோத்துங்கனின் தில்லை திருப்பணிகள்

எல்லாக் காலத்திலும் தமிழகத்தை ஆண்ட மன்னர்களும் குறுநில மன்னர்களும் முதன்மைத் தொழிலாகிய வேளாண்மைக்கு நீர்நிலைகளை அமைத்துள்ள நிலங்களைச் செப்பனிட்டுள்ளனர் அதேபோல் வழிபாட்டுத் தலங்களின் மேம்பாட்டுக்கு வாரி வழங்கியுள்ளனர். இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லை நடராச பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயத்திற்கு செய்த திருப்பணி இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

முடிசூட்டிக் கொண்ட பிறகு குலோத்துங்கன் சிதம்பர நடராசரை வணங்கி மகிழ்ந்தான். தில்லை வாழ் அந்தணர்களின் வேண்டுகோளின்படி பெருந்தெய்வங்களைச் சிறு தெய்வம் எனக்கருதி அவைகள் எழும்கடலில் தூக்கி எறிந்தான்.

பின் நாவலந் தீவிலிருந்து பொன்னை அள்ளிக் கொண்டுவந்து தில்லை அம்பலத்திற்குப் பூரணகும்பம் செய்து வைத்து மகிழ்ச்சியோடு வணங்கினான். பொன்தகடுகளால் நிலம் அமைத்து வைரங்களைக் கொண்டு இருக்கை அமைத்தான். குடையாக முத்துக்களைப் பதித்து புனிதகங்கைநீர் அருவியாக விழுவதைப்போல் அமைத்தான்.

உலகைத் தாங்கும் ஆதிசேடனின் தலையிலுள்ள சூடாமணி கொண்டு திருத்தீப விளக்கை அமைத்துக் கொடுத்தான். வைரக் கற்களால் குளத்தை அமைத்துக் கொடுத்தான் மரகதக் கற்களால் பசிய இலைகளை உருவாக்கினான் இலைகளில் திரண்டிருக்கும் பனித்துளிகள் போல் முத்துக்களைக் கொண்டு வடிவமைத்தான். இதனை,

"தொடுக்கும் சிரச்சேடன் சூடாமணி கொண்டு

எடுக்கும் திருத்தீபம் ஏற்றி - அடுக்கிய

தூய வயிரத்தால் வாவியாய்ச் சூழ்கடந்த

பாய மரகதத்தால் பாசடையாய்த் - தூய

பருமுத்தால் ஆவியாய் பற்பராகத்தால்

திருமிக்க செந்தாமரையாய்" (கண்ணி - 43, 44, 45)

என்னும் கண்ணிகள் விளக்கும்.

பற்பராகம் என்னும் செந்நிறமணிகளால் தாமரை செய்து. வண்டுகளாய் நீலமணிகள் கொண்டு உருவாக்கினான். இவ்வாறு கோயிலின் மகுடம் பீடத்தை அமைத்து இரண்டாம் குலோத்துங்கன் திருப்பணி செய்தான். (47 - 52 )

மேலும் பொன்மலையாக இருக்கும் மேரு மலையைப் போன்றும் பரந்து விரிந்த சக்கரவாள மலை போன்றும் தில்லைக்கூத்தன் ஆடும் திருப் பேரம்பலத்தை மிகப் பெரிதாக விரிவுபடுத்தினான். கூட கோபுரம் மாடங்களோடு ஈசனுக்கு மாளிகை அமைத்தான்.

சத்த குலப் பருவதங்கள் எனப்படும் ஏழு மலைகளும் ஒன்றோடு ஒன்று அடுக்கி நிற்குமாறு தில்லை அம்பலத்திலுள்ள உள்ள ஏழு கோபுரங்களையும் முறைப்படுத்தினான். கோபுர உச்சியில் வானவர் உலகம் ஒளிபெற்று விளங்குவது போல உயர்ந்த சிகரங்களை அமைத்தான். கடாரம் எனப்படும் பெரும் பாத்திரங்களில் பனிநீர் பளிச்சிடுவது போலப் பொன்தடாகங்களை அமைத்துக் கொடுத்தான். (53 - 60)

எப்போதும் இரவு பகல் போலத் தெரியும் அளவில் கற்பக வருக்கத்தின் கதிர்கள் சூழவும் அழகிய மகளிர் திருக்கோயில் பணிக்கு வந்த தேவலோக மகளிர் போலத் தங்களுடைய பணிகளைச் செய்து முடிக்கத் தொடர்ந்து வருகின்றனர்.

கடவுள் உறையும் பெரிய இமயமலையின் மன்னனாகிய இமவானின் மகளாகிய சிவகாமி அம்மை பிறந்த இடத்தைவிடச் சிறப்பாக வளம் சிறக்கத் தில்லையில் எழுந்தருளி இருக்கின்றாள். இருக்கு வேதம் முதலான நான்கு வேதங்களையும் ஈன்ற அன்னை சிவகாமிக்கு உலகத் தலைவன் குலோத்துங்கன் திருக்காமக் கோட்டம் அமைத்தான்.

ஆலயப் பணி மட்டுமன்றிப் பொன்னாலும் மணியாலும் கதிரவனின் ஒளியை விஞ்சும் வகையில் இல்லங்களையும் அரச வீதிகள் நான்கையும் தேவர்களின் தலைவனாகிய இந்திரனின் அமராவதி நகரும் தோற்கும் வண்ணம் தில்லையை அழகுபடுத்தினான்.

இவ்வாறு முடிசூட்டிக் கொண்டபின் தில்லை நடராசப் பெருமானுக்குப் பல திருத்தொண்டுகள் செய்தபிறகு கடலால் சூழப்பட்ட ஈரேழ் உலகிற்கும் தாயகமாக விளங்கும் கங்கை கொண்ட சோழபுரம் என்னும் படைவீட்டுக்கு வருகை புரிந்தான். தாங்கள் இழந்த தேசங்களை இறைஞ்சிப் பெற வந்துள்ள மன்னர்களிடம் தான் வீதி உலா செல்லப் போவதைக் காணுமாறு பணிக்கின்றான் குலோத்துங்கன்.

### 12.5.4. குலோத்துங்க சோழன் வீதியுலா வருதல்(61 - 100)

குலோத்துங்க சோழன் வெள்ளாடை உடுத்திக் கொண்டு நறுமணம் கமழ அலங்காரம் செய்து கொண்டு பட்டத்துயானையில் வீதி உலா வருகிறான்.

(61 - 65)

மயிலன்ன சாயலுடைய தன் பட்டத்தரசியுடன் குலோத்துங்கன் துயின்று பள்ளி எழுந்தான். கரியமலை நீராடுதல் போல நீராடிமுடித்தான். செம்மை நிற சடைமுடி உடைய சிவபெருமானை வணங்கி வழிபட்டான். மறை ஓதும் அந்தணர்களுக்கு வேண்டிய தானங்களை வழங்கினான்.

வானத்தில் இந்திர மழையை வளைத்தது போன்றில்லாமல் வெண்மை பளிச்சிடும் தூய்மையான ஆடையைக் குலோத்துங்கன் அணிந்து கொண்டான்.

(66 - 72)

மேலும் தோல் உறைக்குள் இருக்கும் வாளையும் ஒன்பது வகை மணிகள் பதிக்கப்பட்ட கச்சையும் குலோத்துங்க சோழன் இடுப்பில் அணிந்து கொண்டான். எல்லா சூரிய ஒளியையும் தோற்கச் செய்யும் ஒளி வீசும் திருவுதர பந்தத்தையும் அணிந்து கொண்டான்.

தன் கருங்கடல் அனைய மார்பில் பாற்கடலைப் போன்ற வெண்மையான ஒளி வீசும் முத்துமாலையை அணிந்து கொண்டான். செந்தாமரை மலரில் எழுந்தருளும் இலக்குமி போலத் திருப்பாற்கடலைக் கடையும் போது வெளிவந்த தெய்வமணியாகி கௌத்துவ அணியையும் மார்பில் அணிந்தான்.

நாக பாம்பின் மணி ஒளி வீசுவதைப் போல விளங்கும் தோள் வளையம் என்னும் அணிகலனைத் தோளில் அணிந்தான். மேருமலையை ஒத்த தோளுக்கு மேல் சுறாமீன் வடிவிலான குழைகள் செவிகளில் ஒளி வீசின.

கிரீடம் எனப்படும் திருமுடியில் பதிக்கப்பட்டுள்ள இரத்தினக் கற்களும் வெண் கொற்றக் குடைக்கு அணிவிக்கப்பட்டுள்ள முத்து மாலையையும் நிலவைப்

போல் ஒளிவிடக் குலோத்துங்க சோழனின் திருவுலா காண்போரை மயங்கச் செய்தது.

(73-82)

குறிப்புகள்

முன்கையில் அணிந்த கடகமும், தலையில் சூடிய மகுடமும் ஒளியை உமிழ்கின்றன. பளபளக்கும் அரச மாலையும் அணிந்தான். பொன்னுருவம் தழுவிக் கொண்டுள்ளது போன்ற நெற்றியில் திருநீற்றால் திரிபுண்டரத்தை இட்டுக் கொண்டான் அது உலாக் காணவந்த மகளிரின் மனதைப் பேதலித்துக் கலங்கவைக்கிறது.

புழுகு (புனுகு) மன்மதச் சாந்து எனப்படும் கத்திரி குழம்பு போன்றவற்றின் மனத்தோடு அகிற்புகை மணமும் கலந்து எங்கும் பரவுகிறது. அரசத்தளிர் மாலையும் மணம்கமழும் செங்கழுநீர் மாலையும் பேரண்டத்தில் இருந்து பரவும் ஒளியை காண வைக்கும் வகையில் தன்மையுடன் விளங்கிடுகின்றன.

தொடுக்கப்பட்ட மாலைகளை அணிந்த பிற நாட்டு மன்னர்கள் திருஉலா வரும் குலோத்துங்கனை வணங்கிநின்றனர். மறையவர் வேதம் ஓதி வாழ்த்துகின்றனர்.

அரண்மனைக்குப் புறத்தே நிற்கும் போரிடும் வல்லமை பெற்ற பட்டத்துயானை, வேந்தர்கள் சூழ்ந்து நின்ற இடத்தில் ருக்மணியால் விரும்பப்பட்ட கண்ணனுக்கும் பாண்டிய மன்னனுக்கும் இந்திரனின் வச்சிராயுதத்தாலும் இடி ஏற்றாலும் சிதைக்கமுடியாத மலைக்கும் முதுவாய் வடவை எனப்படும் வடமுகாக்கினி என்னும் தீயினுக்கும் உலகம் முழுவதும் கடலாக இருந்த காலத்தில் நீரை உறிஞ்சிய இவர் பன்னிரு சூரியர்களுக்கும் பொதுவாக நின்று அபயம் செய்யும் ஐராவத யானைக்கும் இணையானது குலோத்துங்கனின் யானை.

பகைவருக்குக் கூற்றுவனைப் போல விளங்கிச் சொர்க்கத்தை அளிக்கவல்ல பயமிக்க புறக்கழுத்தை உடைய மேருமலை போன்ற களிற்றியானையின் மேல் திருவுலாப் புறப்பாட்டிற்காக ஏறிக் குலோத்துங்க சோழன் அமர்ந்தான். இதனை,

“அபயம் கொடுக்கும் அயிரா பதத்தை
உபய வயக்கோட்டு உருமை - விபவ
நிருத்தம் தருமோர் நிதிப் பொருப்பைக் கண்ணுற்று
எருத்தம் திருக்கவின் ஏறித்...........! கண்ணி( 81 - 82)

என்னும் கண்ணிகள் உணர்த்தும்.

(83 - 90)

பகலின் ஒளியையும் வெல்லும் திருப்பள்ளித் தொங்கல் திரளின் ஒளியும் வெண்கொற்றக் குடையின் ஒளியும் யானையின் மேல் உயர்ந்து ஒளிர்கின்றன. சோழர் பரம்பரைக்கு உரிய வலம்புரிச் சங்கு முதலில் ஊதிய பின்பு மற்ற சங்குகள் ஊதப்படுகின்றன. வெண்சாமரங்கள் வீசப்படுகின்றன. முரசங்கள் முழங்கும் ஒலி, முழுநிலா வீசும் காலத்தில் கடல் அலைகள் ஆர்ப்பரித்து எழுந்து ஒலிப்பது போல எங்கும் அதிர்வோடு பரவுகின்றது.

உலகத் தலைவனாகிய குலோத்துங்கனின் ஐம்படைகளாகிய வாள், சங்கு, சக்கரம், சார்ங்கம், எனும் வில், தண்டம் என்பவை இருளைப் போக்கும் வகையில் ஏந்தப்பட்டு ஒளி வீசிக் கொண்டுள்ளன.

முடியுடை மூவேந்தர்களாகிய சேரனின் விற்கொடியும் பாண்டியனின் மீன் கொடியும் நடுவில் வரும் சோழரின் புலிக்கொடிக்குப் பக்கம் பக்கமாகப் பறந்து செல்கின்றன.

இவ்வாறு உலாப் புறப்பட்டு வரும்போது தென்றல் இதமாக வீசிக் கொண்டிருக்கின்றது. இந்த உலாக் காட்சியைக் காணத் தென்றலைத் தேராகவும் கரும்பை வில்லாகவும் மலர்களை அம்பாகவும் கொண்ட மன்மதன் வந்துவிட்டான் என்பதை உணரமுடிகின்றது.

உலா செல்லும் நேரத்தில் வானம் பொழிகின்றது. இந்த உலாக்காட்சியைக் காண மேகத்தை வாகனமாகக் கொண்ட வானவர் தலைவன் இந்திரனும் வந்திருப்பதை அறிய முடிகின்றது. திருமாலின் வடிவாக விளங்கும் உலாத் தலைவனாகிய குலோத்துங்கனைக் காண விண்ணவர் மண்ணவர் என யார்தான் வராமல் இருப்பர்.

(91 - 95)

தன்னை ஒத்த குடியினராகப் பாண்டியர் சேரர் போன்ற மன்னவர்கள் இருப்பதால் அவர்கள் யானையின் மீது ஏறி வந்து வணங்க குலோத்துங்கன் அவர் சேவித்ததை ஏற்றுக்கொண்டு உலா சென்றான். சூரிய குலத்தைச் சேர்ந்த சோழர்களின் புகழைப் பிற மண்டலங்களை ஆளக்கூடிய மன்னர்கள் குதிரைகளில் அமர்ந்து போற்றிச் சொல்லிப் பின்னால் சென்றனர்.

குலோத்துங்கன் உலா செல்லும்போது எட்டுதிசை யானைகளைத் தவிர மதம் பொழியும் யானைகள் அனைத்தும் பின்னால் சென்றன. சூரியனின் தேரை இழுக்கும் ஏழு குதிரைகள் தவிர ஏனைய குதிரைகள் அனைத்தும் உலாவின் பின் சென்றன. குபேரனின் வாகனமாகிய நரன் என்னும் இயக்கன் தவிர ஏனைய மனிதக் கூட்டமெல்லாம் திருஉலாவின் பின் சென்றன. இதனை,

“விட்டுமதம் பொழியும் வேழம் திசைவேழம்
எட்டும் ஒழியப் புகுந்தீண்டக் - கட்டி
இரவிக்கு நிற்பன ஏழும் ஒழியப்

புரவிக் குலம் முழுதும் போத - விரவி

உடைய நிதிக்கடவுள் ஊர்தி ஒழிய

அடைய நர வெள்ளம் ஆர்ப்ப..........." (கண்ணி - 93 ,95)

எனும் கண்ணிகள் விளக்கும்.



(96 - 100)

யானைகளும் குதிரைகளும் மக்களும் ஒன்று சேரத் திருஉலாவின் பின் செல்லப் பூமியிலிருந்து கிளம்பிய தூசியும் துகளும் விண்ணுலகத்தை மண்ணுலகம் போல ஆக்கிவிட்டன. திருஉலாவில் சென்றோரும் விண்ணிலிருந்து கண்டுகளித்த வானோரும் அள்ளி வீசிய பொன் நிறச் சுண்ணப் பொடியால் மண்ணுலகம் விண்ணுலகம் போல் ஒளி வீசியது.

மேலுலகில் இருந்தபடியே ஏத்தும் வித்தியாதரர் எனப்படும் கந்தருவர்களும் மங்கலம் பாடும் பாணர்களும் ஒன்றாகப் பூலோகத்தில் இருந்தாற் போலப் போற்றிப் புகழ்கின்றனர். கற்பகத்தரு போல மன்னர்கள் திரையைப் பொழிய அவற்றைக் கையாகிய மேகத்தால் பொன்னாகிய மலையைப் பொழிந்து உலா நாயகன் குலோத்துங்க சோழன் மாட, மாளிகை நிறைந்த வீதியை அடைகின்றான்.

### 12.5.5. வீதி உலாக் காணும் மக்கள்

(101 - 105)

குலோத்துங்கன் வீதியுலா வருவதைக் காண மக்கள் வீதிகள் முழுவதும் வந்து குவிகின்றார்கள். சாளரங்களாகிய சன்னல்கள் வழியாகப் பார்க்க முயல்கின்றார்கள். நிலா முற்றத்தில் கூடி நின்று பார்க்க முயற்சி செய்கிறார்கள். வீதியின் அணுக்கமாக உள்ள திண்ணைகளில் கூடி நெருங்கி நிற்கின்றார்கள். உலாத் தலைவன் பார்வையில் படுகிறானா என நெற்றியைச் சுருக்கிப் பார்க்கின்றார்கள்.

பொற்றொடிகளாகிய மகளிர் குலோத்துங்கனின் வீதி உலாவைக் காண மாளிகைகளில் உள்ள மாடங்களில் ஏறுகின்றார்கள். மண்டபத்தில் குவிந்து நிற்கின்றார்கள். மாடங்களின் உச்சிப் பகுதியாகிய சூளிகை எனப்படும் உச்சிவிமானப் பகுதியில் ஏறி நெருக்கிக் கொண்டு நிற்கிறார்கள்.

இவ்வாறு மக்கள் கூட்டம் கூட்டமாக நீண்ட வீதியின் இரண்டு பக்கமும் மொய்த்துக் கொண்டு நிற்கும்போது மகளிரின் கரிய புருவமாகிய வில்லும் கண்ணாகிய மலரம்பும் இந்தப் பெரிய உலகத்தின் எல்லையைப் பிடிப்பது போலத் துடித்துக் கொண்டிருக்கின்றன.

(106 - 110)

மங்கையரின் கூந்தலிலுள்ள மலர்களில் தேனுண்ணும் வண்டுகள் வெளிப்படுத்தும் ரீங்காரஒலி நீலநிறக் குதிரைகளுக்கு மொகுமொகு என இரைப்பது போலுள்ளது. சுருட்டிக் கட்டப்பட்ட கார்மேகம் போன்ற உச்சிமுடியிலுள்ள மலர்களில் வண்டுகள் வாய் வைத்து ஊதுவது காகாளம் (காகளம்) என்னும் இசைக்கருவியை வாசிப்பது போலுள்ளது.

மணம் நிறைகூந்தல் தோளில் தவழ்ந்து மகரக்கொடி அசைவது போலுள்ளது. மன்மதனின் சேனையாகிய மகளிர் கூட்டம் படைக் கூட்டம் செல்லும் வழியில் தூவும் வண்ண சுண்ணத்தூள் எங்கும் பரவுகின்றது. இவ்வாறு காமன் சேனையாகிய மகளிர் கூட்டம் தூவிய சுண்ணப் பொடியால் மூவேந்தரையும் இச்சேனை வென்றது போலாயின. மகளிரின் கைவளையல்களும் கழன்றன. நிறத்தையும் இழந்ததோடு மனத்தையும் இழந்தார்கள். இதனை,

“ தகரம் கமழ்கதுப்பின் தாழ்குழை தோடாழ்

மகரம் பிறழ்கொடியின் வாய்ப்பு - இகல் அனங்கன்

சேனா சமூகம் தெரிப்ப அதன்எதிர்

சேனா பராகம் எனத்திகழப் - பூநாறும்

சுண்ணம் எதிர் தூயுடனே கொடியும் தூஉய்

வண்ணம் இழப்பார் மனம் இழப்பார்” (கண்ணி - 108 , 110)

எனும் கண்ணிகள் விளக்கும்.

(111 - 119)

இவ்வுலக மக்களின் துன்பங்களுக்குக் குலோத்துங்கன் பகைவன் என்பர். இராசாதிராசனாக ஆக விளங்கிய விக்கிரம சோழனின் மகன் என்பர். முதுகுல மன்னர்கள் எல்லோரும் வணங்கக் கூடிய தாயாகிய விதுகுல நாயகியின் சேய் என்பர்.

உலகைக் காக்கும் கண்ணிற்கு அழகான குலோத்துங்கனை எட்டுதிசைப் பாலகர்களும் காண்பர். மண்ணுலக மக்களுக்கும் விண்ணுலகத் தேவர்களுக்கும் கீழுலக நரகர்களுக்கும் தெய்வத்தன்மை சார் முனிவர்களுக்கும் இம்மன்னனே தலைவன் என்பர்.

இனிய தன்மை கொண்ட குலோத்துங்க சோழன் அணிந்து கொள்ளும் மாதவி, செங்கழுநீர் நந்தியாவட்டம், கொன்றை போன்ற மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளைத் தாங்களும் அணிவோம் என்று பலர் கூறுவர்.

யாராலும் வளைக்க முடியாத மிதிலையில் சீதா தேவிக்குத் துயரான வில்லை ஒடித்து அவளை மணந்த இராமன் இக்குலோத்துங்கனே என்பர். தன் மனையாளை இராவணன் சிறைஎடுத்துச் சென்ற பழியைத் தீர்ப்பதற்காகக்

கடலைத் தூர்த்துப் பாலம் கட்டிச் சென்று மீட்டவன் எனக் குலோத்துங்கனைப் புகழ்வர்.

குலோத்துங்கனைக் கண்ட மாதர் ‘ உலா நாயகனே! உன்னைப் பார்த்தது முதல் எம் கண்கள் உறக்கம் தொலைத்தன. இனி ஆயர்களின் இனிய குழலிசை நஞ்சாகும் என்பர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்நிலம் ஆள்பவனே, இனி எமக்குத் தென்றல் கோடையைப் போல் வருத்தும்’ என்பர்.

மணமிக்க கூந்தல் மகளிர் மலர்ந்தகண்ணால் உலா நாயகனின் அழகைப் பருகுவர். மகளிர் நிலைகண்ட மன்மதன் மேலும் அவர்கள் இச்சை பெருக மலரம்புகளை எய்வதை எவ்வாறு சொல்வோம். அவர்களை வருத்திவிட்டான். இதனை,

“உளைத்தான் சிலைஇக்கு ஒரு கோடி கோடி

வளைத்தான் அரும்பு உலகின் மாய்த்தான்” (கண்ணி - 122)

என்னும் கண்ணி விளக்கும்.

**12.6 தன்மதிப்பீட்டு வினா விடைகள்**

**இரு மதிப்பெண் வினா விடைகள்**

1. குலோத்துங்க சோழன் உலாவின் ஆசிரியர் யார்?

   ஒட்டக்கூத்தர்

2. ஒட்டக்கூத்தர் பாடியவற்றுள் ஏனைய நூல்கள் இரண்டனைக் கூறுக.

   உத்தர ராமாயணம், குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ், ஈட்டி எழுபது, அரும்பைத் தொள்ளாயிரம்

3. மூவருலாவின் பாட்டுடைத் தலைவர்கள் யாவர்?

   விக்கிரமசோழன், குலோத்துங்க சோழன், இராசராசசோழன்

4. சோழர் எக்குல மரபினர்?

   சூரிய குலம்

5. இரண்டாம் குலோத்துங்கனின் பெற்றோர் யாவர்?

   விக்கிரமசோழன், விதுகுல நாயகி

6. சோழர் மரபில் புராண இதிகாசச் சார்புடையவர் யாவர்?

   இக்குவாகு, தசரதன், இராமன், மனு, சிபி, பகீரதன்.

7. உலாவில் இடம்பெறும் எழுபருவ மகளிர் யாவர்?

குறிப்புகள்

பேதை, பெதும்பை, மங்கை,மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்

8. பசுவின் மம்மர் நோய் தீர்த்தவன் யார்?

மனுநீதிச் சோழன்

9. ஆகாய கங்கையைப் பூமிக்குக்கொணர்ந்தவன் யார்?

பகீரதன்

10. தலைபத்தும் வெட்டும் சரத்தோன் யார்?

இராமன்

11. ஆகாயக் கோட்டைகள் மூன்றனை அழித்தவன் யார்?

தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்

12. காவிரியைக் கிழக்கிற்குத் திருப்பியவன் யார்?

சிவுகன்

13. துலையேறி வீற்றிஉந்த தோன்றல் யார்?

சிபிச்சக்ரவர்த்தி

14. சேரனை விடுவித்துக் களவழி நாற்பது பாடல் பெற்றவன் யார்?

கோச்செங்கணான்

15. சுங்கம் தவிர்த்த சோழன் யார்

குலோத்துங்க சோழன்

16. கடாரம் கொண்டவன் யார்?

இராசேந்திர சோழன்

17. கலிங்கப்பெரும்பரணியை ஒட்டக்கூத்தர் யார்மீது பாடினார்?

விக்கிரமசோழன்

18. அகளங்கன் எனப்பட்டவன் யார்?

விக்கிரமசோழன்

19. கனகளபன் எனப்பெற்றவன் யார்?

இரண்டாம்குலோத்துங்கன்

20. இரண்டாம்குலோத்துங்கனின் பட்டத்தரசி யார்?

தியாகவல்லி

21. குலோத்துங்கன் தில்லையில் செய்த திருப்பணிகள் இரண்டனைச் சுட்டுக.

பொன் தகடு வேய்தல், மதில் உயர்த்தல், சிவகாமி அம்மைக்குத் திருக்காமக்கோட்டம் அமைத்தல் பொற்றடாகம் அமைத்தல்

22. உலாவில் இந்திரன், மன்மதன் வருகையை எவ்வாறு உணர்ந்தனர்?

மழைத்துளிகளால் இந்திரனையும் தென்றலால் மன்மதனையும்

23. உலா காண்போர் குலோத்துங்கனை இராம பிரானுடன் எங்ஙனம் ஒப்பிட்டனர்?

வில்லொடித்துச் சீதையை மணந்தவன்; கடலுக்குப் பாலமிட்டுச் சீதையை மீட்டவன்

**குறுவினா**

24. குலோத்துங்கன் தில்லையில் செய்த திருப்பணிகளை விளக்குக.

21. குலோத்துங்கன் தில்லையில் செய்த திருப்பணிகள் இரண்டனைச் சுட்டுக.

பொன் தகடு வேய்தல், மதில் உயர்த்தல், சிவகாமி அம்மைக்குத் திருக்காமக்கோட்டம் அமைத்தல் பொற்றடாகம் அமைத்தல்

22. உலாவில் இந்திரன், மன்மதன் வருகையை எவ்வாறு உணர்ந்தனர்?

மழைத்துளிகளால் இந்திரனையும் தென்றலால் மன்மதனையும்

23. உலா காண்போர் குலோத்துங்கனை இராம பிரானுடன் எங்ஙனம் ஒப்பிட்டனர்?

வில்லொடித்துச் சீதையை மணந்தவன்; கடலுக்குப் பாலமிட்டுச் சீதையை மீட்டவன்

**குறுவினா**

24. குலோத்துங்கன் தில்லையில் செய்த திருப்பணிகளை விளக்குக.

## கூறு - 13 குலோத்துங்க சோழன் உலா பிற்பகுதி

வீதி உலா வரும் சோழனைக் கண்ட எழுவகைப் பருவ மகளிர் தம் தோற்றமும் செயல்களும் அவர்கள் குலோத்துங்கன் மீதுகொண்ட காதலால் எழுந்த காம நோயும் இப்பகுதியில் எடுத்துரைக்கப்படுகின்றன. (123 - 387)

இரண்டாம் குலோத்துங்க சோழன் வீதியுலா வரும்போது ஏழுவகைப் பருவ மகளிர் ஒரு தலையாகக் கொண்ட காதல் இப்பகுதியில் விளக்கப்படுகின்றது. ஏழுபருவ மகளிரின் வயது வரம்பைப் பின்வருமாறு பிற்கால நிகண்டு குறிப்பிடுகின்றது.

குறிப்புகள்

1. பேதை - 5 முதல் 7 வரை
2. பெதும்பை - 8 முதல் 11 வயது வரை
3. மங்கை - 12 முதல் 13 வரை
4. மடந்தை - 14 முதல் 19 வரை
5. அறிவை - 20 முதல் 25 வரை
6. தெரிவை - 26 முதல் 31 வரை
7. பேரிளம்பெண் - 32 முதல் 40 வரை

**(6) ஏழு பருவ மகளிர்**

## 13.1 ஏழு பருவ மகளிரின் பேதை (123 - 140)

### 13.1.1

குலோத்துங்கன் உலா வரும் போது பேதைப் பெண் ஒருத்தியின் செயல்பாடு இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

அவன் உலா வரும்போது மகளிர் மனம் பேதலித்த முத்துப்பதித்த கைவளை அணிந்த பெண் ஒருத்தி அக்கூட்டத்தில் நிற்கிறாள். அவள் மழை மேகம் முழங்கும் போது ஆடத்தெரியாத மயில் போன்றவள். சூரியனைக் கண்டு மலராத தாமரை மொட்டு போல் பருவத்தினள். பொருளறியாது சொன்னதைச் சொல்லும் கிளி போன்றவள்.

பறித்துச் சூடிக்கொள்ளும் அளவு வளர்ச்சியுறாத மாந்தளிர் போன்றவள் இடம் காலம் அறிந்து தழைக்காத வஞ்சிக்கொடி போன்றவள். குளிர்ச்சி இல்லாத திங்களை ஒத்தவள். வண்டுகள் தேனுண்ண முடியாத சோலையைப் போன்றவள். விளைந்து வழியாத தேன் போன்றவள். முடியும் அளவிற்கு வளர்ந்தும் வளராத சுருண்ட முடியை உடைய அவள் எளிய பேதைப்பருவப் பெண்ணாவாள்.

### 13.1.2 (128-135)

குலோத்துங்கனின் உலாவைக் கண்டு நிற்கும் பேதையைச் சுற்றிலும் தோழியர் கூட்டம் நிற்கின்றது. தாயராக விளங்கும் ஐவரில் முலைத்தாயார், கைத்தாயர் இன்னும் இருவரும் அவர் அருகே நெருங்கி நிற்கின்றனர்.

மாலை அணிந்த வெண்கொற்றக் குடையுடன் திகழும் குலோத்துங்கன் பகைவர்க்கு எமன் போன்ற பராந்தகன். பாண்டியநாட்டையும் ஆள்வதால் மீனவன் பாண்டியன் என்று ஆயரும் தாயரும் போற்றி வணங்குகின்றனர்.



அவர்கள் வணங்குவது கண்டு அப்பேதைப் பெண்ணும் வணங்கிப் போற்றுகின்றாள். ஏனைய மகளிர் இந்த உலாத்தலைவனுக்குத் தலைவி ஆவது எந்நாளோ என வருந்தும்போது அவளும் வருந்தி அவ்விடம் அகலாமல் நிற்கின்றாள்.

மக்களைத் தீயகுணம் அணுகாமல் நல்குணத்தோடு காக்கும் மன்னன் அணிந்த முத்துமாலையைத் தன்னோடு விளையாடும் அன்னம் வாழும் ஆறு என்கிறாள். கோவையாகத் தொங்கும் திருப்பள்ளிச்சரங்களைத் தன் கிளியும் பூவையும் அமர்ந்து ஆடும் சோலை என்கிறாள்.

அப்பேதைப் பெண் ஐராவதம் என்னும் யானையைத் தன் மயில் விளையாடும் மலை என்று கூறுகிறாள். குயில் மொழியை உடைய அப்பேதைப்பெண் தேன் சொரியும் வெண்கொற்றக் குடையை தன்மான் வாழும் மாசில்லாத நிலவு என்கிறாள். குலோத்துங்கன் ஆளும் கடலை ஆடையாக அணிந்த நிலமகள் அணிந்த குவளை மலர் மாலை தன்னுடையது என்பாள் தனக்கு அணிந்து விடுக என்பாள்.

**13.1.3 (136-140)**

உலாக் காணும் இந்த பேதைப் பெண், செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளுடன் பிறந்த கற்பகம் மாலையைத் தன்னுடையது என்று கூறுகின்றாள். காஞ்சிக்கு உரிய புகழ் மகளாக விளங்கும் தேவியின் சாம்பூநதம் என்னும் உயரிய பொன்னாலான மாலைக்காக ஏங்குவாள். பொன் வளையல் அணிந்த வெற்றித் திருமகள் தன் போராற்றலால் பெற்ற ஆத்திமாலைக்கு ஆசைப்பட்டு மயங்குவாள்.

நேரி மலைக்கு உரிமை உடைய சோழனுக்கு உரிய நிலமடந்தை, பூமடந்தை, புகழ் மடந்தை, போர் மடந்தை, கடவுள் மடந்தையர் என அனைவருக்கும் பொதுவான துழாய்மாலை எனப்படும் துளசிமாலையைத் தன்னுடையது என்பாள். இவையன்றி இப்பேதைப் பெண்ணால் மயங்க வைக்கும் வேறுமொழி தெரியாது. இதனை,

“ஏந்திழை மாதர் எவருக்கும் பொதுவாய
பூந்துழாய் மாலை புனைக என்னும் - வேந்தன்முன்
இவ்வகை அல்லது இளங்கிழையார் மால்கூரும்
அவ்வகை கூராள் அயல் ஒருத்தி” (கண்ணி- 139, 140)

என்னும் கண்ணிகள் உணர்த்துகின்றன.

## 13.2 பெதும்பை (141- 177)

### 13.2.1

எட்டு முதல் பதினொரு வயது வரையான பெதும்பைப் பருவம் எழு பருவத்தில் இரண்டாவதாக அமைகின்றது. உலா இலக்கியத்தில் இந்தப் பெதும்பைப் பருவம் குறித்துப் பாடுவது கடினம் என்று குறிப்பிடுவர். இதனை,

“பேசும் உலாவில் பெதும்பைப் புலி

பிள்ளைத் தமிழில் அம்புலிப் புலி”

என்னும் பாடல் வாயிலாக உணரலாம்.

**(141-146)**

அனைவரையும் தன்வயப்படுத்தும் மன்மதனை முடியாக அணிந்ததுபோல் உச்சிக் கொண்டையை உடையவள். காமவேள் வெற்றித்திருமகனுக்கு ஆயிரம் விண்மீன்களைக் கோர்த்துத் தாரா அபிடேகம் செய்தது போல் முத்து மாலையைத் தழைய அணிந்திருந்தாள்.

எட்டுத்திக்கு நாகங்களும் யானைகளும் போல இப்பெண்ணும் நஞ்சையும் மதத்தையும் பெற்ற கொலைத் தொழில் புரியும் கண்களை உடையவள்.

பிறரைப்பற்ற வரும் எமன் குலோத்துங்கனுக்கு அஞ்சி இப்பெதும்பைப் பெண் வடிவில் வந்துள்ளானோ என ஐயுறும் வண்ணம் அழகினைப் பெற்றவள். திரிகூட மலையிலுள்ள துணைமணி தன் உருவழகாலும் கொல்லிப்பாவை தன் உடல் அழகாலும் பிறர் உயிரை உண்ணும் என்பார்கள். இவளைப் போல அவற்றை யாரும் கண்டாரில்லை. உயிரும் நடையும் வாய்ந்த வல்லிக்கொடி போன்றவள் மதர்ப்புடைய இப்பெதும்பைப் பெண்.

### 13.2.2 (147 - 154)

திருவுலாக் காண நிற்கும் அப்பெதும்பை, முதலில் தனக்குப் பணிவிடை செய்யும் ஆயமகளிரை அகன்று போகச் சொல்கிறாள். பிறகு தான் வளர்க்கும் கிளியை எடுத்து அதற்கு முத்தமிடுகிறாள். உன் பவளவாயால் என்னை உன் அன்னை என்று சொல்வாயோ? எனக் கேட்கிறாள். பின்னர் அஞ்சி நிற்கும் அக்கிளியிடம் நீ அறிந்து எதனையும் சொல்லவில்லை; சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை. ஆதலால் பிறவற்றை அறிந்து உன்னால் சொல்லக் கூடுமோ? என்கிறாள்.

உறுதிமிக்க அரணை உடைய கோழியூர் எனப்படும் உறையூரைத் தலைநகராகக் கொண்ட ஆழித்தடக்கை அபய சோழனாகிய குலோத்துங்கன் திரு மஞ்சனம் ஆடுவதற்கு உரிய பெரும் பாத்திரம் ஏழு கடல்களோ? சோழனின் மார்பிற்கு அழகிய ஆரமாக அமைந்தவை ஏழு நதிகளுமா? அவன் காதில் அணிந்துள்ள அணிகள் ஏழு பண்களா?

குலோத்துங்கன் அணிந்த வாகுவலயம் திருமால் அளந்த தீவுகள் ஏழுமோ? சோழன் அணிந்த குளிர்ந்த மாலையை ஏழுலகம் தந்தனவோ? விளையாடும் பந்துகள் ஏழும் மலைகளோ? நெறிமுறையில் தான் ஏவுவதால் செய்யும் கோள் ஏழும் தீப ஒளிகளோ? காலம் தவறாமல் பெய்யும் மேகங்கள் ஏழும் இசைக் கருவிகளோ?

குறிப்புகள்

இதற்கு விடை இவ்வையகம் கூறத்தக்கதோ எனச் சிறுவளையல் அணிந்த அப்பெதும்பைப் பெண் யாரிடமும் வினவாமல் தனக்குத் தானே வினவிக் கொண்டாள். இதனை,

“தூவல் நறவப் பொழில் ஏழும் தொங்கலோ

காவல் மலை ஏழும் கந்துகமோ - ஏவலால்

செய்யும் நலனுடைய கோள் ஏழும் தீபமோ

பெய்யும் முகில் ஏழும் பேரியமோ - வையகம்

கூறும் அவை இவை என்று குறுந்தொடி

வேறு தனி வினவும் வேலைக் கண்.........” (கண்ணி -152 - 154)

என்னும் கண்ணிகள் இதனை உணர்த்தும்.

**13.2.3 (155-160)**

தன்னுடைய ஒப்பற்ற திருவடிகளால் மருத மரங்களாக நின்ற நலகூபரர், மணிக்கிரீவர் என்போருக்கு வீடு பேறு அளித்த கண்ண பெருமான் எனவும் திருப்பாற்கடலைக் கடையும் போது தோன்றிய திருமகளின் மார்பகத்தைத் தழுவிய திருமால் எனவும் சக்கரவாளக் கிரியை மதிலாக உடைய பூமாதேவியின் கணவனாகிய அழகர் எனவும் ஈசன், சூரியன், இந்திரன், கூற்றுவன், வருணன், குபேரன், கேசவன் ஆகிய கடவுளர் எனவும் பூமியை வாகுவலயமாக அணிந்தவன் எனவும் தரும சக்கரத்தை ஏந்தியவன் எனவும் அபயன் அநபாயன் எனவும் போற்றப்படுபவன் குலோத்துங்க சோழன். மதநீர் பொங்கும் பட்டத்து யானையின் மேல்வீதி உலா வரும் குலோத்துங்கனை அப்பெதும்பைப் பெண் கண்டாள். அமைதியாக நின்றாள். அவனுக்குச் செந்தளிர் போன்ற இருகரங்களால் கைகூப்பி நின்றாள்.

**13.2.4 (161-167)**

அவ்வாறு பெதும்பைப் பருவப் பெண் நிற்பதால் பின்பனிப் பருவக் காற்றால் மலரும் தாழையும் முல்லையும் மலர்வதைத் தவிர்த்தன. கொன்றைக் கொத்தும் மலராது அப்படியே நின்றது. தென்றலைத் தழுவும் மாங்கன்றும் மணங்கமழாது நின்றது.

செடி, கொடி போன்றவை இயங்க மறுத்தாலும் அவளுடைய இரு கொங்கைகளும் எதையும் அறியாமல் பருத்து வளர்ந்தன. கண்கள் காதளவு மட்டுமல்லாமல் மேலும் அந்த எல்லையை விட்டும் ஓடுகின்றன.

இவ்வாறு பெதும்பைப் பருவப் பெண்ணுக்கு உருவமும் வளர்ச்சியும் ஒளியும் இயைவது இயல்பாகும். மனச்சிதைவைப் பிறர் அறியாமல் மறைத்துக் குலோத்துங்கனின் தடந்தோளைக் காவலையும் மீறித் தழுவ மனம் துணிந்து நிற்கின்றாள்.

**13.2.5 (168-177)**

பெதும்பைப் பெண்ணாகிய அவளிடம் ஒருவனைக் காணும்போது தோன்றும் மெய்ப்பாடுகள் காணப்பட்டாலும் புணர்ச்சியின் பொருட்டாகத் தடந்தோளின் இருகையையும் தூக்கி ஏந்தும் இயல்பை மன்மதன் காணவில்லை. அப்பெதும்பைப் பெண்ணின் கொங்கைகள் பருப்பதை அகன்ற அல்குலை, கார்மேகம் போலக் கருத்து நீண்டகூந்தலை மன்மதன் காணவில்லை.

இவையெல்லாம் முழுமை அடையாத ஒரு பெதும்பைப் பருவப் பெண்ணாக அவள் நிற்பதால் மன்மதன் மலரம்பை எய்யத் துணியவில்லை. இப்பெதும்பையிடத்தில் இவ்வகை மெய்ப்பாடுகள் தோன்றக் காரணம் குலோத்துங்கனின் நெடிய வில் போன்ற புருவம் அவளின் செந்தாமரைக் கண்ணுமே என உலாவைக் காண்போர் நொந்து கூறுகின்றனர்.

வளையணிந்த அப்பெண்ணின் கைகளைச் சேர்த்தெடுத்துத் தளிரால் செய்த படுக்கையில் கிடத்தி முதுபெண்டிர் ஆயர் குழலோசையை எழுப்பச் சொன்னால் அது மன்னன் குலோத்துங்கன் ஊதும் வேய்ங்குழலோசை என்று கூறுகிறாள்.

கதிரவன் வெயிலை நிலா அன்று என்றும் குலோத்துங்க சோழனின் புகழ்நிலா என்கிறாள். வாத்திய இசையை சோழனின் வரிப்புலி முழக்கம் என்கிறாள். செங்கழுநீர் மாலையைச் சூரிய குலத்தின் ஆத்திமாலை என்கிறாள்.

இவ்வாறு பெதும்பைப் பெண் உடன்பாடாவற்றை எல்லாம் எதிர்மறையாகக் கூறினாலும் அவையெல்லாம் குலோத்துங்கனின் சோழ குலத்திற்கு உரியவை எனப் பலவற்றையும் உணர்ந்த முதுபெரும் பெண்டிர் கூறுவர். இதனை,

“பல்லியம் அன்று பரராச கேசரி
வல்லியம் என்று மருட்டியும் - மெல்லிய
கல்லாரம் அன்று கதிரோன் திருமருமான்
மெல்லாரம் என்று விளம்பியும் - நல்லார்

அருத்தி அறிவார் அவைஇவை என்று

திருத்திவிட விடாய் தீர்ந்தாள்...."  (கண்ணி - 175 -177)

எனும் கண்ணிகள் உணர்த்தும்.



## 13.3 ஏழு பருவ மகளிரில் மங்கை (178 - 227)

### 13.3.1

பரராச பயங்கரன் என்று போற்றப்படும் குலோத்துங்க சோழனின் உலாவைக் கண்ட மங்கைப் பருவப் பெண்ணின் உடலில் திடீரென்று பல்வேறு வகையான மாற்றங்கள் நிகழ்கின்றன. செவ்வரி படர்ந்த அவள் கண்களில் அழகு ததும்பியது. இரண்டு புருவங்களும் வளர்ந்தன. அவள் பருவம் கண்டு அஞ்சுதல் போலக் கொங்கைகள் வளர்ந்தன. தோள்களும் வளர்ச்சி அடைந்தன. இவ்வாறு திருவுலாத் தலைவனைக் கண்டு ஆசைமிகுதியால் தாங்கமுடியாதவளாய் மங்கைப் பருவப் பெண் தவிக்கின்றமையை இப்பகுதி விளக்குகின்றது.

### 13.3.2 (182 - 186)

இருளோடு போரிட்டு அதனை ஒழிக்கும் சூரியனின் அழகை வண்டுகள் மொய்க்கும் தாமரை தனக்குரிய என்பது தகுமா? செவ்வந்தி, செண்பகம் போன்ற காலையில் மலரும் மலர்களுக்கும் சூரியன் உரிமை உடையதுதானே.

மாலை நேரத்தில் மலரும் அல்லி மொட்டு சந்திரனைத் தனக்குரியது எனக் கூறலாமோ? மாலையில் மலரும் மலர்களுக்கும் (மௌவல், பித்தி) சந்திரன் உரிமை உடையதுதானே.

உரிய பருவத்தில் மழைதரும் கார்மேகத்தைக் கானமயில் உரிமை கொண்டாட முடியுமா? சாதகப்பறவை போன்ற குளிர்ச்சியை விரும்பும் அனைத்திற்கும் கார்மேகம் உரிமை உடையது. இளவேனிற் காலத்தைக் குயில் தனது எனக் கூறமுடியாது. தளிர்க்கும் மரம், செடி, கொடிகளுக்கும் வேனிற்காலம் உரிமையுடையது.

இயல்பான மணத்தால் வண்டுகள் உலவும் தாமரையில் இருக்கும் திருமகளுக்கு உரிய குலோத்துங்கனை நாமும் சென்று வணங்கினால் என்ன செய்வான் என்னும் கொள்கைப்பிடிப்போடு அந்த மங்கைப்பருவப் பெண் நின்றுகொண்டு இருக்கின்றாள். பண்டைநாள் முதல் சோழர்களோடு கொண்டுள்ள உறவை நீங்காத அணங்கைப் போல் மங்கை இருக்கின்றாள்.

"தன் தாமரையாள் தலைவனை யாமும்போய்

கண்டால்என் என்னும் கடைப்பிடியாள் - பண்டை

ஒளியார் அணங்கு ஆதல் தம்மைத்தாம் ஒன்றும்

தெளியாத வாறே தெளிந்தும்......”                    (கண்ணி - 185 - 186)



எனும் கண்ணிகள் இதனை விளக்கும்.

**13.3.3 (187 - 189)**



இயற்கையான அழகுடைய இம்மங்கை தெளியாத மயக்கத்தை உடைய அன்னம் குளக்கரையில் கண்டால் இவளை நீரில் வாழும் அரமகள் என்று எண்ணி வணங்கி ஆடி மகிழும். இம்மங்கைப் பருவத்தாள் சோலையில் பூக்கொய்யச் சென்றால் வனதுர்க்கை என வனதேவதைகள் எண்ணித் தோழியருடன் உடன் செல்வர். வண்டுகள் ஒலிக்கும் செய்குன்றில் நின்றால் இவளை வரையர மகளிர் ஒளி ஆரணங்கு என்று போற்றுவர்.

**13.3.4 (190 - 192)**

உலாக்கண்டு நிற்கும் மங்கை முத்து மாலையை அணிந்தால் வெண்தாமரையில் கலைமகள் போலிருப்பாள். பச்சை மரகதக்கல் அணிகலனை அணிந்திருந்தால் பருத்த கொங்கைகள் கொண்ட நிலமகளைப் போன்றும் மாணிக்கக் கல் அணிகலன் அணிந்தால் மேன்மைமிக்க திருமகளைப் போல விளங்குவாள்.

இவ்வாறு பல வகை வண்ண அணிகலங்களால் அழகுபடுத்தும்போது மங்கைப் பருவத்தள் வேறுவேறு தெய்வமகளிராகக் கண்ணுக்குத் தெரிவாள்.

**13.3.5 (193 - 198)**

மக்களின் அதிபதி, சேர நாட்டையும் ஆண்டதால் கார்முகில் போன்ற வானவன், மீன் கொடியை உடைய பாண்டிய நாட்டையும் ஆண்டதால் மீனவன் என்றும் அழைக்கப்படும் மழைமேகம் என்ற கையை உடைய (கொடைத்தன்மை) குலோத்துங்கன் யானைமீது உலா வரும்போது பெதும்பைப் பருவத்துக்கு அடுத்த மங்கைப் பருவத்தாள் தனக்கென ஒரு கொள்கையுடையாள்.

குலோத்துங்கன் கார்வண்ணனாக உள்ளதால் அந்நிறம் ஒத்த நீலநிற மலர்களையே சூடுகின்றாள். நீலமணிநிற அணிகலன்களையே அணிகிறாள். நீலநிற உடைகளையே அணிந்து வேறு வண்ணத்தை நினைக்காதவளாக இம்மங்கை பருவப் பெண் ஆகிவிட்டாள்.

இவ்வாறு சூடும் மலர், அணிகலன், உடை என அனைத்தும் நீலநிறம் ஆனதால் அவளின் தளிர் போல் சிவந்த நிறத்தை அது தழுவிக் கொண்டது. ஒன்று பின்னரும், முன்னருமாக மலரும் செங்கழுநீர், நீலோத்பல மலர்களையும் ஒத்திருந்தது. கையிலும் தோளிலும் வாகுபுரி அளவாக அணிந்துள்ளவையும் நிறம்மாறின, சிவந்த வானுலகக் கற்பகக் கொடியும் குளத்தையும் சோலையையும் மறந்து கொடியில் தூங்கும் தும்பி நிறத்திற்கு ஒப்பானது. ஒளியெனத் தளிர்த்து அசையும் மாங்கொம்பும் கருவிளை போல மாறும் இல்பொருள் உவமையாக விளங்குகின்றாள்.

உலாத் தலைவனின் கார் வண்ணத்திற்கு ஏற்ப மங்கைப் பருவத்தாள் நிறம் மாறியதால் எல்லாமே இல்பொருள் என்னும் நிலையில் தம்மை மாற்றிக் கொண்டன. இதனை,

'இறங்கிய கற்பக வல்லியும் ஏறி
உறங்கிய தும்பியும் ஒத்தும் - பிறங்க
வயங்கு தளிர் ஈனும் மாங்கொம்பர் பூக்கொண்டு
உயங்கு கருவிளை ஒத்தும் (கண்ணி - 197,198)

என்னும் கண்ணிகள் விளக்கும்.

**13.3.6 (199-208)**

உலாவரும் குலோத்துங்க சோழனிடம் மனதைப் பறிகொடுத்த மங்கை அவன் சோழர்குல ஆத்திமாலையை வாங்கி வரவும் அன்பைப் பெற்று வரவும் தன் வளர்ப்புகளை தூது செல்ல வேண்டுகிறாள்.

கிளியே! உலக மன்னர்க்கெல்லாம் மன்னன் குலோத்துங்கன் அவன் கார் நிறத்திற்கு ஏற்பக் காசு, கலாபம், மேகலை, காஞ்சி, தூசு, துகில், கொடி என அணிகலன், உடை, மலர் அனைத்தையும் நீல வண்ணத்திலேயே அணிந்துள்ளேன். உலா நாயகன் அணிந்துள்ள மணம்நிறை ஆத்தி மாலையை நீ வாங்கி வந்தால் இவற்றை எல்லாம் நான் உனக்குத் தருவேன்.

நீ மன்னனிடம் மாலையைக் கேட்கமாட்டாய். உனக்கு சொன்னதைச் சொல்லத்தான் தெரியும். தானாகக் கேட்கத் தெரியாது.

வண்டே! குலோத்துங்கன் மாலையை வாங்கி வர உன்னை அனுப்பலாம். ஆனால் நீ அம்மாலையின் மகரந்தத்தைக் கோதித் தேனும் மணமும் இருக்கும்வரை அங்கிருந்து எளிதில் புறப்பட மாட்டாய்.

அன்னமே! எம் தலைவனாகிய குலோத்துங்க சோழனை இங்குக் கொணரப் பறவைகளாகிய உங்களுக்கு அரசனாக விளங்கும் கருடன் மீது ஏறி செல்வாய்.

மயிலே வீரக்கழல் அணிந்த முருகப் பெருமானின் வாகனமாகிய உன்னை அனுப்பலாம். குலோத்துங்கன் அக்கடவுளின் சேக்கையன் ஆதலால் விரைந்து வரமாட்டாய். மானே! மடப்பம் உள்ள நீ மதம் பொழியும் யானை போன்ற குலோத்துங்கன் முன் நீ சென்றால் என்னைக் காப்பாற்ற விரைந்து வருவான்.

மன்மதன் தரும் காம உணர்வுகளுக்குப் பயந்து தன் நாணம் விட்டு நேரடியாகவே குலோத்துங்கனுடன் இணைந்துவிடத் தான் வளர்க்கும் கிளி, வண்டு, அன்னம், மயில், மான் போன்றவற்றோடு இம்மங்கைப் பருவத்தாள் பேசுகின்றாள்.

குலோத்துங்கன் உலா செல்லும் வழியில் மங்கை அணிந்துள்ள நீலவண்ண அணிகலன்கள் சூரியனின் வெயிலையே மறுத்து விலக்கின. இம்மங்கை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என எல்லாவற்றையும் மன்னனால் இழந்து நிற்கிறாள்.

**13.3.7 (209-216)**

உலா நாயகன் முன்னர் சென்ற மங்கைப் பருவத்தாள் அப்படியே சரிந்து விழ அது கண்ட தோழியர் உடனே தலைவியிடம் ஓடினார்கள். மன்னனைப் பார்த்ததும் அஞ்சாமல் களிற்று யானையைக் கண்டும் அஞ்சாமல் நுடங்கிக் கிடந்த தலைவியாகிய மங்கையைத் தூக்கி தோள் மீது அணைத்துக் கொண்டனர். மன்னன் முன்னர் அழைத்துச் சென்றனர். மதநீரைப் பொழியும் பட்டத்து யானை விரும்பும் வனமாகப் பெருங்கொடிகள் எங்கும் வளர்ந்து பரவிக்கிடப்பவை போலவும் நாம் இருப்போம் என்பது போல வண்டுகள் ஒலிக்கவும் திகழும் கூந்தலோடு தம்மை வனமாகப் பாவனை செய்து நிற்கின்றனர்.

மனம் மிகுந்த தங்கள் கொள்கைகளைச் சிகரங்கள் உள்ள மாலையாகப் பாவித்து நிற்கின்றனர். ஒளிமிக்க முத்துமாலையை அருவியாகப் பாவித்தனர். தங்கள் அடியைக் கொடியாக பாவித்து பட்டத்து யானையைச் சூழ்ந்தனர். பிடி யானையாகப் பாவித்துக் கொண்டு வண்ணத்துகள்களை மன்னன் மேல் வீசுவர். யாழாய்ப் பாவித்து மிடற்றால் பாடி வணங்குதும் யாம் என்று துணிந்து நிற்கின்றனர்.

**13.3.8 (217-224)**

ஆணைச் சக்கரத்தை ஏந்தியவனும் எதையும் வழங்குபவனுமாகிய தியாகனை மற்றவர்களுக்கு மதிப்பளிக்கும் மானதனை, எட்டுத்திக்கையும் காக்கும் பாகனை மங்கை பருவப் பெண்ணின் தோழியர் சுற்றி நின்று பற்றிக் கொண்டனர்.

ஆய்ச்சியர்களின் ஆடைகளைக் கவர்ந்து செல்லும் துளசி மாலையை அணிந்தவனே! நின் பொன்னாலாகிய பீதாம்பரத்தைக் கொடுத்துச் செல்வாயாக! என்பர். இவளின் சங்கு வளை கழலுமாறு செய்த தாமரைக் கண்ணனே! உன் பாஞ்சசன்யம் என்னும் சங்கினைத் தருவாயாக என்பர். பாற்கடலில் பள்ளி கொள்ளும் பெருமாளே தூக்கம் இன்றித் தவிக்கும் இம்மங்கைக்கு உன் தூக்கத்தைக் கொடுப்பாய் என்று சிலர் வேண்டினர்.

மான் போன்ற மருண்ட பார்வையையும் மயில் போன்ற சாயலையும் உடைய மங்கையின் தோழியர் இவ்வாறு கூறி உலாவைத் தடுத்தனர். இருப்பினும் உலாத்தலைவன் நூறு மடங்கு வேட்கையையும் அருளையும் தன் பார்வையால் அம் மங்கைக்கு வழங்கினான். அவன் புன் முறுவலுக்கு அம்மங்கையும் புன்முறுவல் பூத்தாள்.

மன்மதனும் இக்காட்சிகளைக் கண்டு தன் பணி முடிந்ததாக எண்ணிப் புன்முறுவல் பூத்தான். மங்கையாகிய தலைவியின் ஆயத்தாரும் மனவருத்தம் நீங்கி அவளுடன் சென்றார்கள். இதனை,

'திருநகை முரல் திகழ்ந்தான் அணங்கும்

ஒரு நகை கூர்ந்து ஒருவாறு உய்ந்தாள் பெருநகை

எய்தி அனங்கன் எழப்போனான் மாதரும்

உய்து சிறந்தா ளுழைச் சென்றார்' (கண்ணி - 223, 224)

என்னும் கண்ணிகள் உணர்த்தும்

**13.3.9 (225-227)**

மற்றவர்கள் புறம்கூறும் அலர் மொழி இல்லாமல் பசலை படராமல் ஆடை நெகிழ்ந்து விழாமல் சுற்றத்தார் எல்லோரும் புகும் இல்லத்துள் புகாமல் எவ்விதமான போக்கும் நிகழாமல், அகிற்புகை மணக்கத் தலைவனுடன் பள்ளியறையில் தங்காமல் மங்கைப் பருவ தலைவியும் தோழியரும் உலாவரும் குலோத்துங்கனின் அருளைப் பெற்றனர். எல்லாப் பருவ காலத்திலும் முருகப்பெருமானின் தோளில் தோய்ந்திருக்கும் வள்ளியினும் சிறந்த வாய்ப்பை இந்த மங்கை பெற்றுள்ளாள்.

## (13.4) ஏழு பருவ மகளிரில் மடந்தை: (228-262)

**13.4.1(228-234)**

இப்போது உலா காண வரும் பதினான்கு, பத்தொன்பது வயதுடைய மடந்தைப் பருவத்தாள் மாதரில் ஒப்பில்லாதவள். உருவம், செல்வம், நலம், குலம், என அனைத்திலும் தெய்வ மகளிர் அனைவரும் சென்று தொழக்கூடிய இந்திராணி போன்றவள்.

தலையில் புழுகு நெய் பூசப்பட்ட கூந்தலுக்குத் தோற்று மேகம் திறையாகச் சொரிந்த முத்துக்களால் செய்யப்பட்ட தலைக்கோலம் என்னும் அணியை அணிந்த கொண்டையை உடையவள்.

இம்மடந்தை தன் தோளுக்குத் தோற்ற மூங்கில் திறையாகச் சொரிந்த முத்துக்களால் செய்யப்பட்ட தோள்வளை எனப்படும் தொடி அணிந்தவள். அணிகளுக்கெல்லாம் முதன்மையான மங்கல நாண் அணியப்பட்ட கழுத்துக்குத் தோற்று வலம்புரிச் சங்கு திறையாகக் கொடுத்த முத்தால் செய்யப்பட்ட கட்டுவடம் என்னும் மணிமாலை அணிந்தவள்.

பொன்பரந்த பசலை படர்ந்த கொங்கைகளுக்குத் தோற்று எண் திசை யானைகள் திறையாக அளித்த முத்துக்களால் செய்தது இம்மடந்தை கட்டிய மார்புக்கச்சு. கடல் ஒலியைத் தன் கலாப இடையணியின் ஒலியால்

அதிரவைக்கும். அகன்ற அல்குலுக்குத் தோற்றுக் கடல் திரையாக அளித்த முத்தால் செய்யப்பட்டது மடந்தை அணிந்துள்ள மேகலை.

இம் மடந்தைப் பருவத்தாள் அணிந்த அணிகலன்கள் எல்லாம் தம்முடைய இயல்பில் இருந்து மாறுபட்டுத் தளிர் போன்ற உடம்பில் விளங்கின. இத்தகைய மடந்தை பருவத்தாள் செக்கர் வானத்தைச் சார்ந்திருக்கும் சந்திரனின் இளைய நிலா ஒளி வீசுவது போலப் புறப்பட்டு மன்னன் உலாவரும் வீதிக்கு வருகிறாள்.

'அடல்விடும் அல்குல் பரவைக் குடைந்து
கடல்விடு முத்தின் கலையும் - உடலி மேல்
ஏந்தும் இனைய இளநிலா விட்டு எறிப்பப்
போந்து மறுகு புகுந்து ஒழிந்தாள் (கண்ணி-233, 234)

என்னும் கண்ணிகள் இதனை விளக்கும்

ஆறு முனைகளைக் கொண்ட சமந்தகம் என்னும் மாணிக்கக்கல் பதிக்கப்பட்ட தோளணி உலா நாயகன் தோளில் அணி செய்கிறது. கடலே முழுவதும் சிவக்கும் வகையில் கடலில் பிறந்த கவுத்துவமணி மார்பினில் ஒளியுடன் பொருந்தி உள்ளது. உலகைத் தாங்கும் ஆதிசேடனின் ஆயிரம் தலைகளிலும் விளங்கும் மாணிக்கங்கள் நாணும் வகையில் குலோத்துங்கனின் தலையிலுள்ள மாணிக்கம் ஒளி வீசுகின்றது. இதைக்கண்ட பன்னிரண்டு கதிர்களின் முகமும் மாறுபட்டன.

மென்மையான நடையை உடைய தோழியர் கூட்டமும் சந்திரனைப் போன்ற குடையை உடைய அரசர் கூட்டமும் வெள்ளமாக வந்து கூடுகின்றன. அங்கு மடந்தையைக் கண்டோர் உதித்து வரும் சந்திரன் என்று வணங்கினர். உலாத் தலைவனை வனசபதி (தாமரையின் தலைவன்) சூரியன் என்றெண்ணித் துதித்தனர்.

இவ்வாறு உலகம் போற்றும் சூரியன் சந்திரன் என்னும் இருவரும் உலா வரும் தலைவனுக்கும் மடந்தைப் பருவத்தாளுக்கும் ஒப்பாகார்.

**13.4.2 (242-251)**

உலாக் காண வரும் மடந்தையும் அவளுடைய தோழியரும் நெருக்கி அடித்துக் கொண்டு வீதியில் வரும்போது உலாத் தலைவனை வணங்கியபடி வரும் மன்மதன் தன் தொழிலைச் செய்யத் தலைப்பட்டான்.

முற்பருவ மங்கைப் பருவத்தாள் போல இல்லாமல் மடந்தைப் பருவத்தாள் மேலும் வளர்ச்சி அடைந்த நிலையில் இருக்கிறாள். மன்மதன் இடை என்பது இல்லாமல் இருந்தாலும் அதற்கு அஞ்சாமல் வளரும் கொங்கையின் மதர்ப்பையும் தோளின் பெருமையையும் உணர்கிறான். கொலைத்தன்மையால் மகரத்தை

வெல்லும் சாய்ந்த பார்வை பார்க்கும் கடைக்கண் பார்வையை மன்மதன் ஆராய்கிறான்.

வல்லிக்கொடி போன்ற மடந்தைப் பருவத்தாளின் முகத்தாமரையில் புருவக்கொடி ஒருகாலும் கண்ணின் கடைப்பார்வையை விட்டுப் போகாமல் அகமும் புறமும் ஒரே தன்மையாய் உள்ளன.

களிப்போடிருக்கும் பல கோடி மக்களைக் காக்கும் குலோத்துங்கனைக் கண்டு மன்மதன் அஞ்சுகிறான். அருவமாகித் தென்றல் தேரில் வாடையாக விரைந்து கண்காணக் கிடந்து நின்று வில்லை நாணேற்றினான். பின் மன்மதனுக்கு நடுக்கம் பிறந்தது.

இங்கு உலா வருபவன் அரசன் அல்லன். பாம்பணையில் பள்ளிகொள்ளும் திருமால். வீதியில் நிற்பவள் திருமகள். மானிட மகளல்லள். முன்பு உமாதேவியை மணக்கும் பொருட்டுச் சிவபெருமான் தவம் செய்தபோது அவர் மேல் பாணத்தை ஏவிச் சாம்பலானதை எண்ணித் தன் இடத்திற்குச் சென்றான்.

மடந்தைப் பருவ தலைவி ஒருதலைக் காமத்தால் வருந்தினாள். உலாத் தலைவன் அபயனாகிய குலோத்துங்கன் நகைத்தான் எனக் கருதி அவன் அணிந்த நகைகளையும் தோளையும் வணங்கினாள். காமன் வினை புரியாது இருக்கக் கண்டு அழுதாள். கலையும் நிலையும் தரிந்தாள் சிவந்த பொன்னாடை சரியத் தன் தோழியர் தோள் மேல் சாய்ந்தாள்.

முழுதுஆள் அபயனை முகிழ்நகையும் தோளும்

தொழுதாள் ஒருதானே தோற்றாள் - அழுதாள்

திரிந்தாள் கலை நிலையும் செம்பொன் துகிலும்

சரிந்தாள் துணைவியர்மேல் சாய்ந்தாள் (கண்ணி 250-251)

என்னும் கண்ணிகள் இதனை விளக்கும்.

**13.4.3 (252-256)**

பால் வாடை வீசும் ஆயர்குல மகளிரோடு முன்பு குரவைக் கூத்தாடினாய். அது நகைப்பிற்கு உரியதா? எப்போதும் யாழ் பயிலும் ஒழுக்கத்தினைப் பெற்றிருந்தாய். அது நகைப்பிற்கு உரியதா?

ஆயர் குல மகளிர் மென்மையானவர் மட்டும் அல்லர். வீரம் மிக்கவர். உன் வீரத்தைக் காட்ட ஏழு காளைகளைத் தழுவிய நப்பின்னைப் பிராட்டியை ஏற்றுக் கொண்ட நீ இவளை ஏற்றுக் கொண்டு இவளின் கொங்கைகளைத் தழுவி மகிழ்வதில் என்ன தவறு?

ஆயர் குல மகளிர் அணிந்த பால் வாடை வீசும் ஆடைகளை விரும்பி அள்ளிக்கொள்வாய். இம் மடந்தை பருவப்பெண் விரும்பி ஏற்க வேண்டும் ஆடையை ஏற்றுக் கொள்வதில் என்ன தவறு?

துளசிமாலை அணிந்த கார்மேகக் கண்ணனுக்கு உவந்தது. சோழர் குல மன்னனான உமக்கு மங்கையரிடம் ஏன் உவப்பாக இல்லை? சோழ மன்னனே இவளிடம் உன் வஞ்ச மனத்தைக் காட்டுகிறாய். நாங்கள் இதைப் பொறுக்க மாட்டோம் என மடந்தைக்கு இரக்கப்பட்டு பேசுகின்றனர்.



**13.4.4 (257-262)**

இவ்வாறு மடந்தை பருவப் பெண்ணுக்கு உலாக் காண வந்தோர் இரங்கினர் அவளைப் படுக்கையில் அமர்த்தினர். முள் முருங்கைப் பூவின் இதழ் போல சிவந்த இதழை உடைய இவள் மேலும் கலக்கம் அடைந்தாள்.

இம்மடந்தைப் பருவத்தாளின் வாய்மலர் துவர்ப்பு வண்ணத்தில் பவளமொத்திருந்தது தோளும் கொங்கையும் மலையும் முகடும் போலப் புதுமையாக விளங்கும். கண்ணின் கடை பகுதிக்கு முடிவின்றி நீண்டுள்ள புருவக்கொடியும் மன்மதனின் தொழிலைச் செய்யவிடாமல் தடுக்கும் சந்திரோதயம் வினை செய்யாமையால் தலைவி உயிர் சுமந்து வாழும்

தென்றலும் நிலவும் வினை செய்யாமல் இருந்தாலும் மடந்தைப் பெண்ணுடன் அவற்றின் தொடர்பு ஏழு பிறப்பினால் ஆனது என உலாக் காண்போர் உரைத்தனர். மன்னனைக் கண்டு மடந்தை மயக்கம் கொள்கிறாள்.

## 13.5 ஏழு பருவ மகளிரில் அரிவை (263-300)

**13.5.1 (263-268)**

மடந்தைப் பருவத்தின் அடுத்த நிலையான அரிவைப் பருவத்தாள் (20-25 வயது) உலாக் காணக் கிளம்பும்போது இவள் திருமகள் எனக் கருதித் தாமரை இனங்கள் பாதம் வணங்கும். தோள்களைப் பாம்புகள் தொழும். அப்போது மாலை நேர மங்கலம் பாடும் விறலியர் வளவர் பெருமான் (சூரியன்) நாளை பவனி வருவார் என்கின்றனர்.

அதைக் கேட்ட அரிவை இரவை எண்ணிக் கலக்கமடைகிறாள் இந்த இரவு பிரமதேவன் இரவு போல மிக நீண்டதாக இருக்கும் என்று வெறுப்புற்றாள். விடியுமளவும் நிலவு சுடுமே என்று கருதினாள்.

அவளின் மன வேதனை கண்ட கதிரவன் அவளுக்கு உதவ எண்ணினான் குலோத்துங்கனின் முதல்வனாகிய சூரியன் இவளின் மெலிவைப் போக்க மாலை என்னும் பகைவனைப் போக்கி காலை என்னும் துணைவனை வரவழைத்தான். கவலை போக்கும் காலையைக் கண்டு அரிவை

மகிழ்ந்தெழுந்தாள். அணிகலன்களில் தனக்குப் பிடித்தவற்றை அணிந்து கொண்டு அவ்விடம் அகன்றாள்.

**13.5.2 (269-271)**

மாலைக் காலத்தில் தாமரையாகிய பூங்கோயில் சேர்த்த திரு எல்லாவற்றையும் வெளிப்படுத்த விருப்பமுற்றுச் சூரியன் தாமரை மலரின் இதழாகிய வாசலைத் திறக்கிறான். இரவில் தன் பெடையோடு கூட முடியாத சக்கரவாளப் பறவையும் இணையுடன் வர, இரவில் கூடிப் பகலில் கூப்பிடும் அன்றில் பறவை அலகால் இரைதேடும் காலைப் பொழுதில் அரிவைப் பருவத்தாள் சோலைக்குள் சென்றாள்.

கணக்கில்லாத சூரிய கதிர்கள் கூடி மலை அரணை அழிக்கப் பற்றிக்கொண்டு ஏறுவது போலக் கிரணங்கள் விடாது ஒளிரும் மாணிக்கப் பாறையால் செய்யப்பட்ட செங்குன்றில் அருகிலுள்ள சந்திர காந்தக் கற்களால் கட்டப்பட்ட நிலா முற்றத்தில் ஏறுகின்றாள்.

**13.5.3 (272-278)**

தோழியரும் அரிவைப் பருவத்துத் தலைவியும் வருவதைச் சோலையில் உள்ளவை பார்க்கின்றன. மருண்டு குதித்துக் கடக்கும் மானினத்தையும் அன்னமும், சேவலும் இன்புற்று நடப்பதை கண்டுகளித்தும், மயில்களின் ஆடலையும் அதற்கேற்பக் கிளிகள் பாடுவதையும் கேட்கின்றனர்.

பளிங்குச் சுவர்களில் உள்ள பாவைகளுக்குத் திருமணப் பொருத்தம் பார்க்கிறார்கள் பூவைகள் பேச கேட்க விரும்பாத சேவல்கள் வேறு பக்கம் முகத்தைச் சாய்த்துக் கொள்கின்றன.

வண்டுகள் தம்முள் மயங்கிக் களியாட்டம் செய்வதை அரிவையும் அவள் தோழியரும் கண்டு களிக்கிறார்கள். புறாக் கூட்டத்தைச் சேர்ந்த பேடும் சேவலும் ஒன்றை ஒன்று அழைப்பதையும் அக்கூட்டம் கண்டு வியக்கிறது.

இவ்வாறு மான், அன்னம், மயில், கிளி, பூவை, வண்டு, புறா என அனைத்தும் தம் இணையுடன் மகிழ்ந்திருப்பதைக் கண்டு அரிவை வாழ்த்துகின்றாள்.

அரிவை தளர்ந்திருந்த அந்நேரத்தில் குலோத்துங்கன் உலா வந்ததற்கு அடையாளமாக முரசு முழங்குகிறது.

வீரக்கழல் அணிந்த பாண்டியரின் மதுரையைக் கைப்பற்றிச் சங்கத்தமிழையும் கொண்ட குலோத்துங்கன் வரவை அறிவிக்கும் சங்கின் முழக்கம், அரிவை இருக்கும் செய்குன்றில் எதிரொலிக்கிறது. தம்மினம் புடை சூழ மன்னனின் உலாகாண அரிவை, தெருவை அடைந்தாள்.

**13.5.4 (279-286)**

ஆதிசேடன் உலகைத் தலையால் தாங்கக் குலோத்துங்கன் தோளால் தாங்குகிறான். ஆதிசேடன் அஞ்சிக் கக்கிய சிகாமணி குண்டலங்கள் மன்னனின் காதுகளில் அசைகின்றன.

மயில் விரும்பும் சாயலுடைய அரிவையின் முகத்தாமரை பொலிவுடன் விளங்கக் கிரணங்கள் வெயிலை மிகாமலும் குறையாமலும் கொடுத்தன அவள் தோளணியின் ஒளி கூந்தல் நிறத்தை அழிப்பது போல் வீசுகின்றது.

மார்பில் அணிந்த கச்சும் முகத்தில் அணிந்த மணியும் ஒளிர்தல் சூரிய ஒளியை மிஞ்சின. மேகலையுடன் அணிந்த கடிதடம், சக்கரவாளகிரி சூழ்ந்த பூமி என உள்ளது.

செய்குன்று சோலையில் உள்ள மான், மயில், கிளி, பூவை, வண்டு, புறா போன்றவை அரிவையுடன் தம்மினம் என கருதிக் கிளம்பி வர விரும்புகின்றன. நம் சாயலில் உள்ளவை என்று பகை கொள்ளாது அன்னமும் அவள் சிலம்பொலிக்கேற்ப மறுமொழி பயின்று நடக்கின்றன.

மான மிக்கவன் சேர நாட்டையும் ஆள்வதால் வில்லவன் பாண்டிய நாட்டை ஆள்வதால் மீனவன் என்னும் பல சிறப்புகளைப் பெற்றுள்ள குலோத்துங்கன் உலா வரும் வீதிக்கு அரிவை நடந்தே வந்து வெளிப்பட்டாள். இதனை

'அடர்ந்த பொலன்கேழ் அடிச்சிலம்புக்கு அன்னம்
தொடர்ந்து மறுமாற்றம் சொல்ல நடந்துபோய்
மானவற்கு புக்கதுறை வல்லவற்கு வில்லவற்கு
மீனவற்குச் சென்று வெளிப்பட்டாள்' (கண்ணி -285, 286)

என்னும் கண்ணிகள் உணர்த்தும்

**13.5.5(287-293)**

மலர்ந்த முகமும் குவிந்த கைகளும் உடைய மான் போன்ற அரிவை பலர் காண இனிய சொற்களை மனதாறக் கொடுத்தாள். உலாவரும் குலோத்துங்கனும் காவலரை விட்டுத் தடுக்காமல் இவளுக்குத் தன் கடைக்கண்ணால் அருளை வழங்கினான். அதில் திளைத்து அமைதி பெறாது உலா வரும் யானையை விரைந்து செலுத்தினான்.

தான் நினைத்தபடி அருளாமல் அகன்று சென்றதை எண்ணி அரிவைக்கு அச்சம் வர முகபடாம் எனும் அணிகலன் அணிந்த மார்பில் கழுத்தின் வியர்வை வழிந்தது.

அரிவை வியர்வையாகிய முத்தை ஈனும் சங்காகிய கழுத்துடையவள். மருட்கை மெய்ப்பாடு நிகழ்வதால் மாணிக்கத் தொடி கைகளில் இருந்து சொரிவதால் மாணிக்கச் செம்பொன் தொடி வழங்கும் பதுமநிதிக்கு நிகரானவள்

அரிவையின் ஆடை நெகிழும்போது அவளுடைய அல்குல் பாம்பின் படத்தைப் போன்று இருந்தது. தளிருடைய மாங்கொம்பு போலிருந்த இவள் இப்போது முதுவேனிற்காலப் பூங்கொம்பு எனப் பிறர் சொல்லுமாறு மாறினாள்.



**13.5.6(294-300)**

அப்போது அரிவையுடன் வந்த தோழியர் அவளின் நிலைக்கு இரங்கி ஆலோசனை கூறுகின்றனர். உலாவரும் குலோத்துங்கன் தன்னுடைய உடைவாளின் பக்கத்தில் வெற்றித் திருமகளாகிய கொற்றவையைக் குடி வைத்தாலும் மற்றொரு பக்கத்தை அரிவைக்குக் கொடுத்திருக்கலாமே; அதனையும் இம்மன்னன் செய்யவில்லை.

மணமாலையை பெற்ற நிலமகள் மன்னனின் ஒரு தோளில் வாழும்போது ஆத்தி மாலையை அணிந்த இன்னொரு பகுதியை இந்த அரிவைக்குக் கொடுக்கலாமே; இம்மன்னன் அதனையும் செய்யவில்லை.

இவ்வாறு தலைவியான அரிவைக்கு இரங்கித் தோழியர் அவர்களோடு வந்த அ.்.றிணை உயிர்களுக்கும் வேண்டுகோள் வைக்கின்றனர்.

அன்னப்பறவைகளே! உலாவரும் குலோத்துங்கனிடம் அரிவையின் நிலை கூறி ஓலம் இடுங்கள். புறாக்களே இச் சோழர் குலம் முன்பே உங்களை அறியும். இந்த அரிவைக்கும் அபயம் தர வேண்டுங்கள் நறிய நெற்றிப் பாவைகளே இவள் எம்மைப் போல உயிர் அற்றவளாய் உள்ளாள் என்றும் குறிப்பை மன்னனின் முன்னர் சென்று கூறுங்கள். நாகணவாய்ப் பறவைகளே! உலாவரும் குலோத்துங்க சோழனின் செங்கோன்மை புகழ்ந்து போற்றுங்கள். விரைந்து தாவும் மருட்சியை உடைய மான்களே! உனக்கும் பேதமை உளதாமே என்று மிகவும் வருந்தி உரையுங்கள். வண்டினங்களே! குலோத்துங்கனிடம் இந்த அரிவைக்காக மாலையைத் தா எனக் குரல் கொடுங்கள்.

கைக்கிளைக்காதல் கொண்ட அரிவைப் பருவத்தாள் தன் துன்பத்தின் எல்லை எதுவரை என்று கேட்கும்போது திருவுலா கண்ட தோழியர் இவ்வாறு கூறினர்.

## 13.6 ஏழு பருவ மகளிரின் தெரிவை(301-340)



### 13.6.1(301-310)

அரிவைப் பருவத்தாளுக்கு அடுத்து திருவுலாக் காண வந்தவள் தெரிவை பருவத்தாள் (26-31 வயது வரை) ஒப்பில்லாத இவளுக்கு இரண்டு விரற்கிடை அளவுக்குத் தள்ளி நிற்கும் தோழியரில் சிலர் வணங்கிக் கேட்கின்றனர்.

பெருமானாகிய குலோத்துங்கன் நம்மிடம் தாண்டிப்போகும் நேரம் வரை நம்மால் பொழுதுபோக்க முடியாமல் இருக்க முடியுமோ?

'சூதாட வேண்டாம்' என்று தலைவியான தெரிவை கூற அதற்குத் தோழியர் பின்வருமாறு கூறுகின்றனர்.

காதில் அணிந்த பசும்பொன் குழையளவு சென்றுவரும் கண்ணை உடைய தெரிவைப் பருவத்தாளே; நாம் சூதாட வேண்டாம் பந்தாடுவோம் எனக் கூறியதும் 'பந்தை எடுத்து வருக' எனத் தெரிவை குறிப்பாலுணர்த்தினாள் தலைவி பந்தாட போகிறாள் என்பதை அறிந்து பாடவந்த பாணரும் ஆட வந்த கூத்தரும் வியந்தனர். சந்தனக்குழம்பு பூசிய கொங்கைகளையும் தோளையும் பாரம் என்று கருதாமல் இடை ஒடியுமே என்று கவலைப்படாமல் தலைவி பந்தாடப் போவதை நினைத்தனர். தெரிவையும் தோழியரும் பந்தாட விரைந்தனர்

விரைந்தாட முத்துப் பந்துகளையும் அம்மானைப் பந்துகளையும் கலந்து எடுத்தார்கள். எடுத்ததை எல்லோர்க்கும் கலந்து கொடுத்து ஆடினார்கள் தெரிவை பந்து, அம்மானை இரண்டையும் சிறப்பாக ஆடினாள். பாவைக்கூத்தின் முறையை யாவரும் அறிய ஆடினாள். பந்தைப் பந்து அடைவு எனும் முறையிலும் அம்மானையை அம்மானை அடைவிலும் மூன்று நான்கு மடங்காக அதிகமாக்கி எறிந்து ஆட வாருங்கள் எனத் தெரிவை தோழியரிடம் கூறினாள்.

பந்தைப் பிடிக்கும் கை எல்லையும் கால் எல்லையும் உயரம் அதிகமுள்ள தாமரை உயரமற்ற தாமரை இரண்டிலும் படியும் அன்னப்பறவை போல் உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்தன.

தலையில் சூடிய செங்கழுநீர் மலர் ஆடும் போது கூந்தல் மேல் பந்தல் விரித்தது போலுள்ளது. பரவி உயரும் கூந்தல் எல்லையும் பந்தின் எல்லையும் பந்தலிடையே முத்துக்கால் அமைத்தது போலிருந்தது.

### 13.6.2(311-316)

தளிர்க் கைகளால் அம்மானைப் பந்துகளை விண்ணளவு வீசி ஆடுங்கள். மண் கொள்ளாத அளவு பறந்து ஆடுங்கள். இவ்வகை ஆட்டத்தை தேவருலகிலும் காண முடியாதென எனப் பாணர்கள் போற்றினர். ஆட்டத்தில் விரைவது கைகளா? கால்களா? கண்களா? என்று வல்லுநராலும் அறிய முடியாத வண்ணம் பந்தாடினர் பெண்கள்.

ஆட்டம் முடிந்து தெரிவையும் தோழியரும் நீராடும் மண்டபத்தை அடைகின்றார்கள் அப்போது அநாபயன் உலாவரும் முழக்கம் கேட்கிறது ஆடை, அணி, மாலை முதலியவற்றைத் தோழியர் ஏந்தி நிற்கின்றனர். ஆடையை வாங்கிய தெரிவை அதனை விரைந்து உடுத்திக் கொண்டு உலா காண வீதிக்கு வருகிறாள்.

குறிப்புகள்

**13.6.3(317-329)**

மாந்தளிரும் தமனிய மாலையும் கழுநீர் மலரும் ஆகிய மாலைகள் இல்லாமலும் வலம்புரி சூடாரத்தினம், தொய்யகம், புல்லகம் போன்ற அணிகலன்கள் அணியாமலும் தெரிவை இயற்கை அழகோடு விளங்குகிறாள். அலையாகப் பரவும் கூந்தலுக்கு யமுனை நதியின் அலையும் காவிரி ஆற்றின் கருமணலும் தோற்கும்.

மைதீட்டாத செவ்வரி படர்ந்த கண்களில் அழகு நிறைந்துள்ளது சலஞ்சலம் என்று சங்கு முத்தை ஈனாமல் மாணிக்கம் நின்றதுபோல் கழுத்து விளங்கிற்று. இயற்கையான தோள் அழகிற்கு மூங்கில் தோற்றது. சாம்பூநதம் எனும் பொன்னாலான கச்சு அணியா கொங்கைகள் அழகுடன் உள்ளன. உதரபந்தனம் அணியாத வயிற்றுப்பகுதி மென்மையாக உள்ளது. தேவலோகம் விட்டுத் தேவர்களை வரச்செய்வது போல் சிறு உரோமமும் உந்திச்சுழியும் தோன்றின.

மேகலை அணியா அல்குலும் குறங்கு செறி அணியாத தொடைகளும் மரகதம் போலிருந்தன. சிலம்பு அணியாத பாதம் செந்தாமரை போலிருந்தன.

அணிகலன்கள் அணிந்து உலகைக் காப்பாற்று எனத் தெரிவையைத் தோழியர் வேண்ட அவளோ தன் ஒப்பனை இல்லாத உருவழகு வெளிப்பட உலாகாண செல்கிறாள்.

'தாங்கி உலகம் தரிப்பத் தரி என்று

பாங்கியர் எம்மருங்கும் பாராட்டப் - பூங்கேழ்

உருவில் ஒளிபோய் உலகு அடையக் கோப்பத்

தெருவில் எதிர் கொண்டு சென்றாள்' (கண்ணி 328-329)

என்னும் கண்ணிகள் இதனை உணர்த்தும்

## 13.6.4(330-333)

உலா வரும் குலோத்துங்கனின் குடைகீழ் மலை போன்ற யானை மேல் வருகிறான் அப்போது கைக்கிளைக் காதல் இல்லாமல் இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கி வேட்கையில் ஒன்றானார்கள்.

மனுகுலத்தார் மறந்த திருப்பாற்கடலைக் கடைய வந்தவள் இவள் எனக் கருதிய குலோத்துங்கனின் உள்ளம் இத்தெரிவை மேல் சென்றது. இயற்கை நலமிக்கவள் எனவே தன் உள்ளத் தாமரையில் இடமளித்தான்.

**13.6.5 (334-340)**

மூன்றடியால் உலகளந்த திருமால் போன்றவன் குலோத்துங்கன். அவனை இப்பெண் மான் போன்ற மருண்ட பார்வையால் பருகும் மகளைத் தாயார் கண்டனர்.

தெரிவையின் கண்ணால் மன்னன் அழகைப் பருகும் தன்மையும் அவன் அருளும் தன்மையும் நோக்கித் தலைவன் தழுவினால் அன்றி இவள் வேட்கை தீராது என்று அத்தாயார் கருதினர். அவர்கள் அத்தெரிவையை மலர்ப்படுக்கையில் கிடத்தினார்.

யாரும் கட்டாமல் இயல்பாக மாலையாகப் பூக்கும் கற்பக மாலையைக் கொண்டைக்கும் நெய்யப்படாமல் பொன்னால் செய்த ஆடையைத் தொடைக்கும் பாம்பு வடிவ சுருளைக் கூந்தலுக்கும் அகில் சந்தனக்குழம்பைக் கொங்கைகளுக்கும் வல்லத்தின் பொன் பனைக் குருத்தில் செய்த தோடு காதிற்கும் என உனக்காகக் குலோத்துங்கன் கொடுத்தான் என அவற்றை நாங்கள் கொண்டுவந்தோம் எனப் பாணரும் கூத்தரும் கூறத் தெரிவை பெருமயக்கம் நீங்கித் தெளிவுற்றாள்.

## 13.7 ஏழு பருவ மகளிரில் பேரிளம் பெண்

**13.7.1(341-347)**

தெரிவைப் பருவத்தாளினை அடுத்துச் சோழனின் உலாக் காண வருபவள் ஏழாம் நிலையிலுள்ள பேரிளம் பெண் (31-40 வயது) ஆவாள். திருமகள் தன்மீது வருந்தியிருப்பாள் எனச் சினங்கொண்டு பேசுவாள்.

தென்னம் பாளையில் இருந்து கலயங்களில் இறக்கப்பட்ட கள்ளை விரும்பும் தெய்வத்திற்குப் படைத்து இனிய மொழி கூறும் ஒருத்தி அதனைப் பேரிளம் பெண்ணிற்குத் தர அவளும் அக்கள்ளைப் பருகினாள்.

பின்னர் வாய் குழறி மழலை மொழி பேசுகின்றாள். இம்மொழியைக் கற்கக் குயிலும், கிளியும் எண்ணுகின்றன. வியர்வை அவளின் நெற்றியை அலங்கரிக்கின்றது.

கைக்கிளைக் கனவில் அரற்றும் பேரிளம் பெண்ணுக்கு உலா வரும் குலோத்துங்கன் கொடுமை செய்ததாகத் தோழியர் முகமன் கூறியவரைக் கடிந்து கொண்டாள் பாணன் வழி குலோத்துங்கன் உலா வருவதை அறிந்தாள்.

**13.7.2(348-357)**

குலோத்துங்க சோழன் உலா வரவை அறிந்ததும் காலில் சிலம்பணிந்தாள். இடை, கை, கழுத்து, மார்புக்கு மதானி என்னும் அணிகலன்கள் அனைத்தையும் அணிந்தாள். அந்த அணிகளிலிருந்து வீசும் ஒளியும் மரகதமணி ஒளியும் சூரியனின் ஏழு குதிரைகளையும் மறைத்தன.

புருவத்தின் இடையில் குமிழ மலர்போல் நாசி அதன் இருபுறமும் கருவிளை மலர்கள் போல் கண்கள் முருக்க மலர் போல் சிவந்த உதடுகள் பாளை போன்ற கழுத்து தேங்காய் ஒத்த மார்புகள் மூங்கில் ஒத்த தோள்கள்

மாந்தளிர் போன்ற மேனி, காந்தள் போன்ற மேனி, காந்தள் போன்ற கைகள் வஞ்சிக் கொடி போன்ற இடை, வாழை போன்ற தொடைகள் அழகாகத் தோன்றும்.

அத்தகைய பெண்ணுடன் சகோரப்பறவை, அன்னம் மானும் மயிற் கூட்டமும் புறாக்களும் ஏனைய பறவை இனமும் அவளைத் தம்மினம் எனக் கருதிச் சுற்றிவரும். இவ்வாறு மன்மதன் புகவிரும்பும் சோலை போன்று தலைவி தோன்றினாள் இதனை,

‘புறவும் தொடர்ந்துடனே போத அவையே
பிறவும் இனம் என்று பெட்பச் - சுறவு உயர்த்தோன்
காலை புகுந்து கரப்பது ஒரு பசும் பொன்
சோலை என வந்து தோன்றினாள்’ (கண்ணி 356-357)

என்னும் கண்ணிகள் விளக்கும்

**13.7.3(358-365)**

தெய்வத்தன்மை பொருந்திய குலோத்துங்க சோழனும் கை தொழுது நின்ற பேரிளம் பெண்ணைத் திருவுலா வரும்போது கண்டு கொள்கின்றான்.

போரில் சூரபதுமனை அழித்த முருகனே விரும்பும் பருவம் உடையவள் இப் பேரிளம்பெண். அவளுடைய பருத்த மார்பும் செந்தாமரைக் கண்களும் திரண்ட தோள்களும் ஒளி உமிழ் காதுகளும், திருவடித் தாமரையும் ஆகியவற்றைச் சோழன் கண்டான்.

குலோத்துங்கன் நோக்கப் பேரிளம் பெண்ணும் நோக்கினாள் கள்ளுண்ட களிப்பால் கண்களும் மனமும் களிப்படைகின்றன. மன்னன் கனவில் செய்த கொடுமைகளைப் பின்வருமாறு நினைக்கின்றாள்.

ஏழு மலைகள் ஏறித் துர்க்கைப் போலத் தவம் செய்ய மாட்டேன். திருமகள் போல் ஏழு கடலிலும் நீராட மாட்டேன், உன் குல முதல்வன் சூரியனின் ஏழு உலகங்களையும் வலம் வர விரும்ப மாட்டேன்.

வேந்தனே! குலோத்துங்கனே உன் குடையின் கீழ் தங்க இடமும் உன் குலத்திற்குரிய ஆத்தி மாலையை அணிய வாய்ப்பும் கொடுத்தால் மேற்கூறிய மூன்றையும் என்னால் செய்ய முடியும் என்று நினைத்தாள் பேரிளம்பெண்.

**13.7.4(366-371)**

பால் வாடை வீசும் தோள்களையுடைய ஆயர்குல மாதரைத் தழுவக் காளையைத் தழுவிய செந்தாமரைக் கையனே! உன் பட்டத்து யானையின் துதிக்கையைத் தழுவி, கோரம் என்னும் குதிரையின் காலைத் தழுவி உன் பகைவரின் மனவலிமை அழியத் தாவும் உடல் வலிமை மிக்க புலியைத் தழுவி உன் குடையின் கீழ் வாழும் வாழ்க்கை வேண்டும் இவற்றை வழங்க ஏவல் விடுவாயோ?

உலா நாயகனே கடல் சூழ்ந்த உலகை வெள்ளம் சூழ்ந்த போது மச்சாவதாரம் எடுத்துக் காத்தாய். உன் புகலிடமான திருப்பாற்கடலை மேருமலையை மத்தாகவும் வாசுகியைக் கயிறாகவும் கொண்டு கடைந்தபோது உன் தேவியர் சீதேவி பூதேவி இருவரையும் உன் தோள்களில் வைத்தாய்

அழிக்க வந்த குருந்த மரத்தை சாய்த்து அதன் கிளைகளை முறித்ததும் ஏழு காளைகளைத் தழுவி மாய்த்ததும் ஆயர்குல மகளிர்க்காகத்தானே! எல்லாப் பிறப்பிலும் உன்னை நினைத்து வாழும் என் உள்ளத்தில் குறையை உண்டாக்கியவனே நீ அருள்வாயோ என உள்ளம் அஞ்சுகின்றது.

**13.7.5(372-379)**

குலோத்துங்கனே, உன் போர் ஆற்றலால் பதினெட்டு மலை அரணை உடைய சேரனின் கொடியில் உள்ள வில் முறிந்து விட்டது. ஆனால் உன் நிழலில் வாழும் என் போன்றோரை வதைக்கும் மன்மதனின் கரும்பு வில்லை முறிக்க மாட்டாயா? காரணம் என்ன?

சேரமன்னரோடு போரிடும் போது அவர்களின் காவல் மரமான பனை மரத்தை வெட்டிச் சாய்த்தாய். ஆனால் உன்மீது நீங்காத அன்பு வைத்துச் சோகமான எங்களை மேலும் சோகமாக்கிக் கூடவும் அன்றில் பறவை தங்கும் பனை மரத்தை வெட்டாத காரணம் யாதோ?

மாறுபட்ட பாண்டியரின் படைக்கடல் அழித்தாய் ஆனால் எம்மை வாட்டும் காமக் கடலை மாய்த்து அருள மாட்டாயா? உன் பகை மன்னரின் புகழ்நிலவை மாய்த்தாய். உன் சூரிய குலத்திற்கு பகைவனான நிலவை மாய்க்காத காரணம் யாதோ?

சிங்கள நாட்டு பகைவருடன் போரிட்டு யாழ்க் கொடியை அறுத்தாய் உன் நினைவால் சோகமாக வாழும் காதுகளில் ஓசையிடும் யாழினைத் தண்டிக்காதது ஏன்?

கொடிய போர்க்களத்தில் காடவர்களின் கொடியிலுள்ள காளையை மாறுபட்டு அழித்தாய். எம்மை வருத்தும் வகையில் கழுத்தின் மணி ஓசை செய்யும் காளையை கண்டிக்காதது ஏன்?

பல்லவ நாட்டினை அழித்த உலா நாயகனே, அச்சேனை கொண்டு எம்மை வருத்தும் மன்மதனின் கரும்பு வில்லில் இருந்து புறப்படும் இளந்தளிரான அம்புகளை அழிக்காதது ஏன்?

**13.7.6(380-385)**

மன்மதன் தன் கரும்பு வில்லால் எம் உயிர் அழிய மோதுகிறான் கழுத்தில் சுரும்பாகிய வண்டு, நாணினை அழுந்தக்கட்டி மேலே தூக்கிடுகின்றான். அம்பாகிய கழுவை மார்பகத்தில் வீசுகின்றான். ஆறாத சின நெருப்பை எம்போன்ற மகளிரின் திடத்தை உருக்குகின்றான். தப்பாமல் உடல் பிளவுபடும் வண்ணம் மன்மதன் தன் தென்றல் தேரைச் செலுத்துகின்றான். அவன் கொடியிலுள்ள மீனுக்கு எங்கள் உயிரை உணவாகக் கொடுக்கின்றான்.

ஏவப்பட்ட தூதால் எமனின் தண்டத்தை அகற்றி முன்னர் ஒருமுறை இந்த உலகத்தைக் காத்தருளினாய். கரிய மேகம் போன்ற கண்ணனே! பள்ளிகொண்ட மகராலயம் எனப்படும் திருப்பாற்கடலை மறந்து இங்கு இருப்பவனே. மன்மதன் எம்மோடு நடத்தும் காமப்போரில் இருந்து நீ காக்காவிட்டால் இளம் பெண்கள் எவ்வாறு உயிர் காக்க முடியும்?

இவ்வாறு ஒருதலைக் காமத்தால் வாடிய பேரிளம் பெண்ணாள் மன்மதனால் படும்பாட்டைக் குலோத்துங்க சோழனைக் கார்மேக வண்ணனாக உருவகப்படுத்தி மைதீட்டிய கண்ணை உடையவள் கூறிப் புலம்புகின்றாள்.

**13.7.7(386-387)**

இவ்வாறு பருவந்தோறும் அழகான பொன் மயில் போன்ற சாயலை உடைய மகளிர் பிறர் அலர் கூறும் தன்மையிலும் ஒருதலையாகக் காதல் கொண்டு காமம் நீங்காது கலவி இன்றி வருந்தி மன்றம் ஏறுவார்கள். ஏழு கடல்களையும் ஏழு உலகங்களையும் ஒரு குடையின் கீழ் ஆளும் குலோத்துங்க சோழன் இவற்றையெல்லாம் கண்டும் அறிந்தும் திருவுலா சென்றான்.

**நேரிசை வெண்பா**

என்று இனிமீள் வதுஇர ணியனை

அன்றிரு கூறாய் அடர்த்தருளிக் - கன்றுடனே

ஆவின்பின் போன அனகன் அனபாயன்

மாவின்பின் போன மனம்.

பிரகலாதனைக் காக்கும் பொருட்டு அவன் தந்தை இரணியனை நரசிம்ம அவதாரம் எடுத்து மாலை நேரத்தில் வாயிற்படியில் அமர்ந்து நகத்தால் கிழித்துக் கொன்றவர் திருமால்.

கண்ணனாக ஆயர்பாடியில் அவதாரம் எடுத்துக் கன்றுகளுடன் பசுமாடுகளின் பின்னால் சென்றவர் திருமால். அத்தகைய திருமால் அவதாரம் எடுத்த குலோத்துங்க சோழன் என்னும் யானையின் பின்னர் பருவம் பெண்ணின் மனம் சென்றது.

**கட்டளைக் கலித்துறை**

ஆடும் கடைமணி நாவசை யாமல் அகிலம் எல்லாம்

நீடும் குடையில் தரித்த பிரான் என்பர் நித்தநித்தம்

பாடும் கவிப்பெருமான் ஒட்டக்கூத்தன் பாதாம்புயத்தைச்

சூடும் குலோத்துங்க சோழன் என்றே எமைச் சொல்லுவரே

இச்செய்யுளின் முதல் இரண்டு அடிகளை ஒட்டக்கூத்தரும் பின் இரண்டு அடிகளைக் குலோத்துங்க சோழனும் பாடியுள்ளனர்.

**ஒட்டக்கூத்தர்**

அரண்மனையில் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணி ஒலிக்கப்படாமலேயே அகில உலகத்தையும் தன் பெரிய கொற்றக் குடையால் ஆள்பவன் குலோத்துங்க சோழன் என்றும் தினந்தோறும் கூறுகின்றனர்.

**குலோத்துங்கசோழன்**

எப்போதும் செய்யுளை இயற்றிப் பாடிக்கொண்டிருக்கும் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரின் பாதக்கமலத்தை திருமுடியின் சூடிக்கொள்பவன் குலோத்துங்கன் என்று எமைக் கூறுவர்.

## 13.8 தன்மதிப்பீட்டு வினா விடைகள்

**இருமதிப்பெண் வினா விடைகள்**

1. ஐவகைத்தாயர் யாவர்?

   முலைத்தாயர், கைத்தாயர், ஆட்டுவாள், நொடிபயிற்றுவாள், உறுத்துவாள்

2. சோழன் முத்து மாலையைப் பேதை என்னவாகக் கருதினாள்?

   அன்னம்படியும் ஆறு



குறிப்புகள்

3. மான் வாழும் மாசில் மதி எது?

வெண் கொற்றக் குடை

4. காமவேள் சூட்டும் கொற்றமுடியனைய கொண்டையாள் யார்?

பெதும்பையாள்

5. குலோத்துங்கனுக்கு அஞ்சிய எமன் எவ்வுருவில் வந்தான்?

பெதும்பை வடிவில்

6. அபயனுக்கு நீராடும் கடாரங்கள் எவை?

ஏழு கடல்

7. பெதும்பைப் பருவத்தாள் எத்தெய்வங்களுடன் மன்னனை ஒப்பிட்டாள்?

திருமால், அழகர், கதிரவன், ஈசன்,வருணன், குபேரன் இந்திரன்

8. நிருபகுலதுங்கன் யார்?

இரண்டாம் குலோத்துங்கன்

9. மங்கை குலோத்துங்கனிடம் எவற்றைத் தூது விடுத்தாள்?

மான், கிளி, வண்டு, அன்னம், மயில்

10. முருகன் தோய் வள்ளி போன்றவள் யார்?

மங்கை

11. மங்கைப் பருவத்தாள் எந்த நிறத்தில் ஆடை, அணிகள் புனைந்தாள்?

நீலமணி வண்ணம்

12. இந்திராணி போல் திகழ்ந்தாள் யார்?

மடந்தை

13. உலாக் கண்ட மக்கள் கதிரவனாகவும் நிலவாகவும் எவரைக் குறித்தனர்?

சோழன் - சூரியன் மடந்தை- நிலவு

14. மடந்தை மீது அம்பு தொடுத்தபின் மன்மதன் அஞ்சியது ஏன்?

சோழனைத் திருமாலாகவும் மடந்தையைத் திருமகளாகவும் கருதி

15. அரிவைப் பெண் ஏறிய நிலா முற்றம் எத்தகையது?

சந்திரகாந்தக் கல்லால் ஆனது

16. குலோத்துங்கன் தெரிவைக்கு அளித்த பரிசுகள் எவை?

 கற்பகமாலை, பொன்னாடை, பாம்பு வடிவ சுருள்

17. யாழ்க்கொடி யாருக்குரியது?

 சிங்களருக்கு

18. மீன் கொடி யாருக்கு உரியது?

 பாண்டியருக்கு

19. பேரிளம்பெண்ணைத் தம் இனமெனக் கருதியவை எவை?

 சகோரபட்சி, அன்னம், மயில்

**குறுவினா**

20. பேதைப் பெண்ணின் தோற்றத்தை எழுதுக.

 13.1.1 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

21. மன்னனைக் கண்ட பேதையின் செயல்கள் யாவை?

 13.1.3 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

22. பெதும்பையின் தோற்றப் பொலிவை எழுதுக.

 13.2.1 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

23. சோழனைக்கண்ட பெதும்பையின் மன நிலையை விளக்குக

 13.2.4, 13.2.5 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

24. மங்கைப் பருவத்தாள் மன்னனிடம் தன் உரிமையை எவ்வாறு உரைக்கின்றாள்?

 13.3.2 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

25. மங்கை தன்னை எவ்வாறு ஒப்பனை செய்துகொண்டாள்?

 13.3.5 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

26. மங்கை சோழனிடன் தூது விட்டமையை எழுதுக.

 13.3.6 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

27. மங்கைப் பருவத்தாள் நிலை கண்ட தோழியர் உரைத்தவை யாவை?

 13.3.8 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

28. மடந்தை அணிந்த முத்தணிகளை விளக்குக.

13.4.1, 13.4.2 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

29. மடந்தைக்கு இரங்கிய மகளிரின் கூற்றை எழுதுக.

13.4.3 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

30. அரிவை சோழனைக் காணப் புறப்பட்டமையை எழுதுக.

13.5.4 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

31. தெரிவை பந்தாடிய தன்மையை எழுதுக

13.6.1, 13.6.2 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

32. தெரிவையின் அழகு நலனை விவரிக்க.

13.6.3 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

33. பேரிளம்பெண்ணின் எழில் நலனை விவரிக்க.

13.7.2 என்னும் எண்ணிட்ட தலைப்பில் அமைந்தவை

34. பேரிளம்பெண் மன்னனிடம் யாது கூறினாள்?

13.7.4, 13.7.5

**பெருவினா**

35. பேதைப் பருவத்தாளின் செயல்களையும் உணர்வுகளையும் குறித்துக் கட்டுரைக்க.

பேதைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

36. பெதும்பையின் எழிலையும் உலாக் கண்ட அவள் நிலையையும் விரித்துரைக்க.

பெதும்பைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

37. மங்கையின் அழகையும் தூதுவிடுத்தமையையும் அவள் துயரையும் விளக்குக

மங்கைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

38. மடந்தையின் திருநலனையும் காதலுணர்வையும் விளக்குக.

மடந்தைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

39. உலாக் காண அரிவை விரைந்து வந்து காதல் கொண்டமையை விளக்குக.

அரிவைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

40. பந்தாடும் தெரிவை காதலால் வருந்திய துயரை எழுதுக.

தெரிவைப் பருவத்தாள் பற்றிய செய்திகளின் தொகுப்பு

41. பேரிளம்பெண்ணின் அழகையும் அவளின் செயலையும் எழுதுக.

# கூறு - 14 மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

## 14.1 பிள்ளைத்தமிழ் அறிமுகம்

சிற்றிலக்கியங்கள் 96 வகைகளுள் பிள்ளைத்தமிழ் குற்றிடத்தக்கது. பாட்டியல் நூல்கள் பெரும்பாலும் சிற்றிலக்கியங்களுள் பிள்ளைத்தமிழை முதன்மையாகக் குறிப்பிடுகின்றன.

முதன் முதலில் தோன்றியது குலோத்துங்க சோழன்மீது (கி.பி.1133-1150) ஒட்டக்கூத்தர் பாடிய குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் ஆகும்.

பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கிய வகைக்குத் தொல்காப்பியத்தில் வித்து இருப்பதாகக் குறிப்பிடுவர். குழவி மருங்கினும் கிழவதாகும் (1030) எனத் தொல்காப்பியர் கூறுவதே பிள்ளைத்தமிழின் அடிப்படை என்பர்.

மனிதனின் வாழ்வில் குழந்தைப் பருவம் என்பது இயல்பானது. அப்பருவத்தில் குழந்தையின் உருவமும் செயல்களும் ஐம்புலன்களால் நுகரக் கூடியவை. அப்படிப்பட்ட குழந்தைப்பருவ நிகழ்வுகளைப் பாடுவதே பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையாகும்.

### 14.2 பிள்ளைத்தமிழ் வகைகளும் அமைப்பும்

பிள்ளைத்தமிழ் ஆண்பால் பிள்ளைத்தமிழ் பெண்பால் பிள்ளைத்தமிழ் என இரு வகையாக அமைந்துள்ளது

ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக முதல் ஏழு பருவங்கள் அமைகின்றன. இரண்டிற்கும் இறுதி மூன்று பருவங்கள் வேறுபடுகின்றன. ஒவ்வொரு பருவத்திலும் பத்துப் பத்தாக 100 பாக்கள் இருப்பது மரபாகும். பாடல்கள் பெரும்பாலும் இரட்டை ஆசிரிய விருத்தத்தில் அமையும்.

| வ.எண் | பத்து பருவங்கள் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1. | காப்புப் பருவம் | | |
| 2. | செங்கீரைப் பருவம் | | |
| 3. | தாலப் பருவம் | | |
| 4. | சப்பாணிப் பருவம் | | |

5. முத்தப்பருவம்

6. வருகைப்பருவம்

7. அம்புலிப்பருவம்

8. சிறுபறைப்பருவம் ஊசல்பருவம்

9. சிற்றில் பருவம் அம்மானைப்பருவம்

10. சிறுதேர்ப்பருவம் நீராடல் பருவம்

மேற்காணும் இவை மட்டுமின்றிக் காலப்போக்கில் இன்னும் சில புதிய பருவங்கள் தோன்றிப் பதினொன்று (ஆண்டாள் பிள்ளைத்தமிழ்) பன்னிரண்டு (சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ) பதின்மூன்று (பெரியார் பிள்ளைத்தமிழ்) என வளர்ச்சி அடைந்துள்ளதைக் காணலாம்.

## 14.3 பத்துப் பருவங்கள்

பிள்ளைத்தமிழின் 10 பருவங்களை வெண்பாப் பாட்டியல் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

சாற்றரிய காப்பு தால் செங்கீரை சப்பாணி

மாற்றரிய முத்தரும் வாரானை - போற்றரிய

அம்புலியே ஆய சிறுபறையே சிற்றிலே

பம்புசிறு தேரோடும் பத்து (வெண்பாப் பாட்டியல்)

குழந்தை பிறந்து தாயின் முகம் அறிமுகம், 3-ஆம் மாதம் முதல் பிள்ளைத்தமிழ்ப் பருவ காலத்தைக் கணக்கிடுவர். 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21 என முறையே பத்துப் பருவங்களையும் மாதங்களின் அடிப்படையில் கணக்கிடுவர். ஆண்பால் பெண்பால் இரண்டிற்கும் வேறுபடும் இறுதி மூன்று பருவங்கள் 17, 19, 21 மாதங்கள் என்பதைவிட 3, 5, 7 என வயதைக் கொள்வது பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

## 14.4. பல்வகையான பாடுபொருள்கள்

தமிழில் காணப்பெறும் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் பல்வேறு பாடுபொருள்களைக் கொண்டு விளங்குகின்றன.

1) தெய்வங்களைப் பாடுவது - திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

2) தங்கள் வழிகாட்டியைப்பபாடுதல் - திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ் மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ்

3) வள்ளல்களைப் பாடுதல் - திருவேங்கடநாதர் பிள்ளைத்தமிழ்

பதினேழாம் நூற்றாண்டில் மதுரையில் எழுந்தருளிய மீனாட்சி அம்மையைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு எழுதப்பட்டதே மதுரை மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் நூலாகும். இதனை இயற்றியவர் குமரகுருபரர் எனும் சைவசமயப் புலவர் ஆவார்.

## 14.5 குமரகுருபரர்

இவர் பாண்டிய நாட்டின் திருவைகுண்டம் என்னும் ஊரில் 17-ஆம் நூற்றாண்டில் தோன்றினார். தந்தை சண்முகச் சிகாமணிக் கவிராயர், தாயார் சிவகாமி சுந்தரி ஆவார்.

ஐந்து வயது வரை குமரகுருபரருக்குப் பேச்சு வரவில்லை பெற்றோர் திருச்செந்தூர் முருகப் பெருமானை வேண்ட முருகன் அருளால் உறங்கிக் கொண்டிருந்த குமரகுருபரர் தன் தாய் தந்தையை அம்மையே, அப்பா என எழுப்பிக் **கந்தர் கலிவெண்பா** என்னும் நூலைப் பாடினார் என்று கூறப்படுகின்றது.

குருபரர் மதுரை மீனாட்சி அம்மையைத் தரிசிக்க சென்றார். அம்மைமேல் சில சிற்றிலக்கியங்களைப் பாடினார். இவற்றுள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் மதுரையை ஆண்டு கொண்டிருந்த திருமலைநாயக்கர் முன்னிலையில் அரங்கேறியது. அப்போது மீனாட்சி சிறுமியாக மன்னரின் மடியில் அமர்ந்து தன் மீது பாடப்பட்ட பிள்ளைத்தமிழைக் கேட்டு மகிழ்ந்தாள் என செவிவழிச் செய்தி உள்ளது. மேலும் தன் கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலையைக் குமரகுருபரருக்கு வழங்கியதாகக் கூறப்படுகின்றது.

பின்னர்ச் சோழ நாட்டின் தருமபுரம் ஆதீனம் சென்று சில சிற்றிலக்கியங்களைப் படைத்தார். அங்கிருந்து காசி நகர் சென்று தில்லி பாதுஷாவைக் கண்டு மடம் கட்டுவதற்கு இடம் பெற்றார். இவ்வாறு வாழ்நாள் முழுவதும் குமரகுருபரர் பல இடங்களில் சைவ மடங்களை நிறுவி சைவ சமயத் தொண்டு புரிந்தார்.

### 14.5.1 படைப்புகள்

குமரகுருபரர் பிள்ளைத்தமிழ் மட்டுமன்றிப் பல வகையான சிற்றிலக்கிய வகைகளைப் பாடியுள்ளார். அவையாவன 1) கந்தர்கலி வெண்பா 2) மதுரை மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் 3) கயிலைக் கலம்பகம் 4) மீனாட்சி அம்மைக் குறம் 5) மீனாட்சி அம்மை இரட்டை மணிமாலை 6) மதுரைக் கலம்பகம் 7) நீதிநெறி விளக்கம் 8) திருவாரூர் நான்மணிமாலை 9) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் 10) சிதம்பர மும்மணிக் கோவை 11) சிதம்பரச்

செய்யுட்கோவை 12) சிவகாமி அம்மை இரட்டை மணிமாலை 13) பண்டார மும்மணிக் கோவை 14) காசிக் கலம்பகம் 15) சகலகலா வல்லி மாலை.

திருச்செந்தூர் முதல் இமயம் வரை நடந்து பயணம் புரிந்து சைவத்தையும் தமிழையும் பரப்பிய தமிழ்த் திருமகனார் ஆகிய குமரகுருபரர் காசியில் இறைவனடி சேர்ந்தார்.



## 14.6 மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

**கடவுள் வணக்கம் (விநாயகர்)**

குமரகுருபரர் தாம் எழுதும் மதுரை மீனாட்சி அம்மைப் பிள்ளைத்தமிழ் நூல் சிறப்பாக அமைய விநாயகப் பெருமானை முதலில் இப்பாடல் வழி வணங்குகின்றார்.

கார் மேகம் போன்ற கரிய நிறக் கன்னத்தில் மதநீர் பெருக, கடைக்கண்ணின் ஊழ்த்தி அளவு கடக்காமல் தன் காதுகளால் வீசி அதனைக் குறைப்பவர் விநாயகர். சிவபெருமானின் போர்க்குணம் நிரம்பி எட்டு தோள்களிலும் பூசப்பட்ட திருநீற்றை (வெண்பொடி)த் தன் அடிகளால் மிதித்துப் புழுதியாக்கி விளையாடும் ஐராவதம் என்னும் யானையைப் போன்ற யானைமுகக் கடவுளை வேண்டுகிறார் குமரகுருபரர்.

### 14.6.1 காப்புப் பருவம்

பன்னிரு பாட்டியல் 16 தெய்வங்களைக் காப்புப் பருவத்திற்குரியனவாக குறிப்பிடுகின்றது. 11 தெய்வங்கள் பிள்ளைத் தமிழில் வரும் மீனாட்சி அம்மைக்குக் காப்புத் தெய்வங்களாக வணங்கப்படுகின்றனர். அத் தெய்வங்களாவன

1) திருமால் 2) சிவபெருமான் 3) சித்திவிநாயகர் 4) முருகப்பெருமான் 5) நான்முகன் 6) தேவேந்திரன் 7) திருமகள் 8) கலைமகள் 9) துர்க்கை 10) சப்தமாதர் 11) முப்பத்து மூவர்.

**1. திருமால்**

திருமாலின் மார்பில் துளசிமாலை காடாகக் காட்சிதர அதிலிருந்து பொழியும் தேன் வெள்ளமென வயல்களில் பாய அச்சேற்றில் முளைத்த செந்தாமரையில் திருமகள் தோன்றினாள். அவளை அணைத்தவாறு ஆதிசேடனின் வளைந்த பகுதி தோளில் அழுத்தப் பழமையான வேதங்கள் வாழ்த்தியபடி பின் செல்கின்றன. இவ்வாறு திருமழிசை ஆழ்வாரின் பின் சென்று பசுமை நிறமுடைய கார்மேக வண்ணனே திருமாலே!



இறைவனாகிய சிவபெருமானோடு அரசு வீற்றிருக்கும் மீன் போன்ற கண்களை உடைய அமுதம் போன்ற மங்கையர்க்கு அரசியாகிய மீனாட்சி அம்மையைக் காத்தருள்வாயாக.

மணிகொண்ட நெடுநேமி வலயம் சுமந்துஆற்று
மாசுணச் சூட்டுமோட்டு
மால்களிறு பிடர்வைத்த வளர்ஒளி விமானத்து
வால்உளை மடங்கல்தாங்கும்
அணிகொண்ட பீடிகையின் அம்பொன்முடி முடிவைத்துஎம்
ஐயனொடு வீற்றிருந்த
அங்கயல் கண்அமுதை மங்கையர்க்கு அரசியைஎம்
அம்மனையை இனிதுகாக்க
கணிகொண்ட தண்துழாய்க் காடுஅலைத்து ஓடுதேம்
கலுழிபாய்ந்து அளறுசெய்யக்
கழனிபடு நடவையில் கமலத்து அணங்குஅரசொர்
கைஅணை முகந்துசெல்லப்
பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்
பணைத்தோள் எருத்துஅலைப்பப்
பழமறைகள் முறைஇடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசும்கொண்டலே

**2. சிவபெருமான்**

முப்புரம் எரிக்க மேருமலையை வில்லாக வளைத்தவர் சிவபெருமான். சமணருக்கு எதிராகச் சொற்போர் புரிய ஞானசம்பந்தரின் பதிகத்தை வையை ஆற்றில் எதிர்த்து செல்லும்படி விடுத்தவர் சிவபெருமான் சிறுமை நிறைந்த என் தமிழையும் பழம்பெரும் தமிழ் போல எண்ணி உச்சிமேல் கொண்டவர் சிவபெருமான்.

இசை இலக்கணம் அறிந்த அசுவதரன், கம்பளன் என்னும் இருவரையும் சிவபெருமான் தன் காதுகளில் குழைகளாக அணிந்தவன். பவளம் போன்ற சிவந்த சடைமுடியை உடையவன். பிரமனாலும் எழுத முடியாத பழைய மறைப் பாடல்களுக்கு உரியவர் சிவபெருமான். வெள்ளி அம்பலத்தில் நடமிடும் சிவன் திருவடிகளை மனதில் கொண்டு வணங்குவோம்.

மணச்சாந்து பூசிய கூந்தலும், முத்துப் பற்களும் இறைவன் முன் போரிடும் விழிகளும் சிற்றிடையும் மனதில் எண்ணி ஓவியமாக வரைய முடியாத உருவமும் உடைய அன்னை மீனாட்சியை வெண்தாமரையில் வீற்றிருக்கும் கலைமகளும், செந்தாமரையிலுள்ள திருமகளும் வணங்குவர்.

மகர மீன்கள் துள்ளி மகிழும் பாற்கடலில் தோன்றிய அமுதத்தை, மழலை பேசும் கிளியை அன்னப் பேடையை பெண்யானையை, மலை போன்ற தோள்களால் பூமியைத் தாங்கும் மலையத்துவச பாண்டியனின் மகளாகிய நான்மாடக் கூடலின் மரகதவல்லியைக் காத்தருள்க சிவபெருமானே.

**3. சித்தி விநாயகர்**

குறிப்புகள்

துதிக்கையுடன் இருசெவிகளிலும் மதநீர் பெருக அதில் குளித்து, எம் அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்தும் கட்டுத்தறியாக விளங்கும் சித்தி விநாயகப் பெருமானின் புகழைப் போற்றுவோம். இதனை,

கைத்தலமோடு இரு கரடக் கரைத்திரை

கக்கு கடாமுடைக் கடலில் குளித்துளமா்

சித்த மதாமொரு தறியில் துவக்குறு

சித்திவிநாயகன் இசையைப் பழிச்சுதும்

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன (பா-3,1-4 அடிகள்)

அமுதமோ அருள்நிறை அழகிய கொடியோ இனிய முத்தமிழோ எனும்படி விளங்கும் மதுரையில் எழுந்தருளியுள்ள மீனாட்சி அம்மையைப் பெண்களுக்கு அரசியானவளை சித்திவிநாயகரே காத்தருள்வீராக எனக் குமரகுருபரர் வேண்டுகிறார்.

**4. முருகப்பெருமான்**

பெருமைமிகு ஐராவதம் என்னும் யானையை உடைய தேவேந்திரனுக்கும் இந்திராணிக்கும் பிறந்த தெய்வானையை முதலில் மணந்தான் முருகப்பெருமான். பின்னர் மலைச்சாரலில் குறவர்குடி மகளாகத் தோன்றிய வள்ளியை மணக்க அவளை வணங்கி ஏங்கி நின்ற முத்துக்குமரனாகிய முருகனைப் போற்றுவோம்.

மேரு மலையை மத்தாக்கி வாசுகிப் பாம்பைக் கயிறாக்கி திருமால் முதலிய தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். அப்போது அமுதம் வரும் முன்னர் ஆலகால விஷம் வெளிப்பட்டது. தேவரைக்காக்க சிவபெருமான் அந்நஞ்சினை உண்டார். அதைக் கண்டத்திற்குச் செல்லாமல் தடுத்த கயல்மீன் போன்ற கண்களை உடைய மீனாட்சியை முருகப்பெருமானே காத்தருள்க.

**5. நான்முகன்**

கடலினை ஆடையாக அணிந்தவர் பூமாதேவி. அவளைப் பெற்றுத் தன் தந்தைக்கு அளித்த தாமரையில் வீற்றிருக்கும் பிரம்ம தேவனே.



பச்சைமலையும் (திருமால்) பொன்மலையும் (பிரமன்) பவளமலையும் (சிவன்) தன் மனத்துள்ளதாகக் கருதி அப்பரஞ்சோதியின் தலைக்கு அறிகுறியாகத் தன் மார்பில் கொண்டவள் மீனாட்சி.

பின்னர் ஒரு முடியைத் தலையில் அணிந்து அரசியாக வீற்றிருக்கும் அபிடேகவல்லியை கயல் போன்ற கண்கள் உடைய மீனாட்சியைக் காத்தருள வேண்டும்.

### 6. தேவேந்திரன்

கற்பக மலரின் தேன் குடித்த வண்டுகளுக்குத் திகட்டும் வண்டுகள் வெறுக்கும் அளவு மிகுந்த மதநீர் பொழியும் ஐராவதத்தையும், வச்சிராயுதத்தையும் உடைய இந்திரனே! நெற்றிக் கண்களில் இருந்து தோன்றி மேருமலையைச் செண்டால் சிதைத்த முருகப் பெருமானுக்கு வேற்படை அளித்தவர் சொக்கநாதர்.

அவரின் சடைமுடியிலுள்ள உள்ள கங்கை பாய்ந்து வளஞ்செய்யும் பூவுலகைக் காக்கும் பொற்கொடியை இந்திரனே காப்பாயாக. மீனாட்சி அம்மையைக் காத்தருள்க.

### 7. திருமகள்

ஆதிசேடன் மேல் பள்ளிகொண்ட கார்மேகம் ஒத்த திருமாலின் மார்பில் கௌத்துவ மணிக்கற்களின் அருகிலுள்ள திருமகளுக்கு வருத்தம் தரும் திருமாலின் துளபமாலையில் பதுங்கும் கொடிபோன்ற திருமகளை வணங்குவோம்.

சிவபெருமானின் முடிகாணாது தோற்றது பிரமனாகிய அன்னப்பறவை. அந்த அன்னப் பறவையைப்போல் தோன்றும் கங்கையைத் தலையில் வைத்திருப்பான் சிவபெருமான்.

இத்தகு சடைமுடியும், கருத்த கழுத்தும் உடைய சிவனுடன் போரிடச் சென்ற மூன்று கொங்கைகளை உடைய அன்னை மீனாட்சியைத் திருமகளே காக்க.

### 8. கலைமகள்

வெள்ளித்தகடு ஒத்த இதழ்களையும் தேன் நிறைந்த பொன்னிறமான கொட்டையையும் உடைய வெண்தாமரை மலரில் வீற்றிருக்கும் கலைமகளே! அன்பின் ஐந்திணை எனத் தொடங்கும் இறையனார் அகப்பொருள் எனும் அமுதம் உண்பவளே! கிளிக்கு மழலை மொழியையும், மயிலுக்குச் சாயலையும், மருண்ட பார்வையை மானுக்கும், அரச அன்னச் சேவலுக்கு நடையையும் கற்றுத் தருபவள் மீனாட்சி அம்மை; அவளைக் கலைமகளே நீ காத்தருள்க.

### 9. துர்க்கை

மூன்று கூரிய முனைகளை உடைய சூலாயுதத்தால் மகிஷனை வதம் செய்தவளே! நின்யானை மத்தகம் போன்ற கொங்கைகளால் உன் துடியிடை மெலிந்து போகும் ஊழித் தீச்சுடர்க் கண்களை உடைய சிங்கத்தை வாகனமாகக் கொண்ட துர்க்கையே!

பெண் குட்டியானை நடையை ஒத்த நடை உடையவள் மீனாட்சி அம்மை பிறைச் சந்திரன் ஒத்த தந்தங்கள் உடைய யானைமுகக் கடவுளைப் பெற்றவர் சொக்கநாதர். அவர் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டவர். அவர் தன் மார்பில் அணிந்த மணி அழுந்த கட்டித்தழுவும் பின்னர் கடம்பவனத்தில் (கூடல் நகரில்) விளையாடும் இளம் மடப்பிடியை மீனாட்சியைத் துர்க்கையே காத்தருள்க.

**10. சப்தமாதர்கள்**

தாருகாவன முனிவர்கள் ஏவிய யானையைக் கொன்று அதனைப் போர்வையாக்கிய **மகேஸ்வரி**, குரங்குகள் குவித்த கற்களால் மன்னர் வளைகுடாவில் அணை கட்டிய **நாராயணி**, கடலின் வயிறு ஒடுங்க வேலினை ஏவிய **கௌமாரி,** கற்பக மலரை சூடிய இந்த **இந்திராணி**, இடியென முழங்கும் சிங்கத்தின் மீது அமர்ந்த **காளி,** எழுத்தாக்கிளலியாகிய வேதத்தில் சிறந்த **பிராமி,** வராகமாகி கொம்பினால் ஏழு உலகங்களையும் பெயர்த்து எடுத்த **வராகி** எனப்படும் ஏழு மாதரையும் மீனாட்சி அம்மையைக் காக்கவேண்டுவோம்.

குடக்கூத்தும், குரவைக்கூத்தும், காளிங்க நர்த்தனமும் ஆடிய துளசிமாலை அணிந்த திருமாலின் தங்கையான மதுரையின் அரசியைச் சப்தமாதர்களே காக்க.

**11. முப்பத்து மூவர்**

பாண்டியரிடம் தோற்ற சேரரும் சோழரும் பிற மன்னர்களும் திறைப் பொருளோடு காத்து நின்றனர். தேவருலக அரசரும் காத்திருந்தனர் எனப் பேசிக்கொண்ட அமுதம் பொழியும் வெண்ணிலவின் மரபுப்பெருமை தனக்கு இல்லாமையால் சூரியன் வெப்பம் மிகக் கொண்டான்.

காவிரி, வைகை, பொருனை (தாமிரபரணி) போன்ற நதிகள் பொங்கிவரும் வான்நதியாகிய கங்கையைவிட வளமாகப் பாய்கின்றன. பொதிகைமலை மேருமலைக்கு ஈடாக எண்ணி வழிபடப்பெறும்.

விநாயகர், முருகன் மேலும் பல தேவர்களைப் பெற்றிருந்தாலும் சித்தர்கள் மீனாட்சி அம்மையை இப்போதும் குமரி (கன்னியாகுமரி) என்றே போற்றினர். தாமரை மலரில் உள்ள நான்முகனுடைய அன்னமும் பூமியின் ஏழுகடலில் வாழும் அன்னங்களும் நட்பாகப் பழகுகின்றன. திருமாலின் கருடனும் முருகனின் மயிலும் ஒரே காட்டில் விளையாடுகின்றன. இந்திரனின் ஐராவதம் மற்ற யானைகளைப் பிடிக்க வெட்டிய குழியில் வீழ்ந்துவிட்டது. பொற்றாமரை பூத்த குளத்தில் வெண்தாமரை வாழ் கலைமகளும் செந்தாமரையில் வாழ் கலைமகளும் ஒன்றாக வாசம் செய்கின்றனர்.

இவ்வாறு தேவருலகு போல் தோன்றும் தென்மதுரையில் மூன்று கொங்கைகளுடன் பிறந்த மீனாட்சி அம்மையைக் காப்பவர்கள் அசுவினி தேவர்

இருவர், வசுக்கள் எண்மர், உருத்திரத் பதினாருவர் சூரியர் பன்னிருவர் என முப்பத்து மூவரும் காப்பாராக.

### 14.6.2. செங்கீரைப்பருவம்

**பருவம் - ஐந்தாம் மாதம்**

குறிப்புகள்

ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான ஏழு பருவத்துள் செங்கீரைப்பருவம் இரண்டாவதாக அமைந்துள்ளது. குழந்தை பிறந்து ஐந்தாம் மாதத்தில் தன் தலையை நிமிர்த்தி முகத்தை இங்கும் அங்கும் அசைந்தாடுவதைச் சிறப்பித்துப் பாடும் பகுதி. (தமிழ் இலக்கணப் பேரகராதி - 16 ப-88)

### 12. மீனாட்சி அம்மையை நீராட்டிப் பாலூட்டுதல்

அம்மையே உனை நீராட்டி மணப்பொடி மேனியெங்கும் பூசி உச்சிக் கொண்டை முடித்து மாலை சூட்டித் தலை ஆபரணங்களைச் சூட்டுவர்.

பின்னர் காதில் குதம்பை, தமனியம் அணிவிப்பர் பாண்டிமாதேவி உனக்குத் தனி திருமுலைப் பாலை ஊட்டுவாள். உன் வாயில் உமிழ்நீரும் பாலும் வடியும். அதனால் பட்டாடை நனையும். சீராட்டி பாராட்டப்பெறும் பசுங்கிளியே கையூன்றி மண்டியிட்டுத் தலை தூக்கி ஆடும் செங்கீரை ஆட்டத்தை ஆடி அருள்வாயாக. தென்னன் மலையத்துவச பாண்டியனுக்கும், வடக்கின் இமவானுக்கும் ஒப்பற்ற ஒரே மகளாக வாழ்பவளே செங்கீரை ஆடி அருள்வாய்.

### 13. தந்தை தாயை மழலைகள் மகிழ்வூட்டும்

உள்ளத்துள் மகிழ்ச்சி பொங்கத் தந்தை வருக என உன்னை அழைக்கும் முன்னே தவழ்ந்து செல்வாய். செவிகள் இனிக்க அமுதமெனத் தாய் மகிழும்படி மழலைமொழி பேசுவாய். மார்பில் உள்ள மணப்பொருள் கலந்த குங்குமச்சேறு உன் உடலெங்கும் ஒட்டிக் கொள்கிறது.

இசை அமைந்து பாமாலை எனும் புகழ் பரவும் பரந்து விரிந்த தோளில் ஏறிப் பிடரியில் ஏறுகின்றாய். முத்துக்கள் போன்ற பற்களால் நிலவைப் போல் புன்னகைக்கும் பசுமையான மயிலே செங்கீரை ஆட்டத்தை ஆடி அருள்வாயாக. தென்னன் மலையத்துவச பாண்டியனுக்கும், வடக்கின் இமவானுக்கும் ஒப்பற்ற ஒரே மகளாக வாழ்பவளே செங்கீரை ஆடி அருள்வாய் என்கிறார் குமரகுருபரர் இதனை,

‘தெண்ணிலா விரிய நின்றாடும் பசுந்தோகை

செங்கீரை ஆடி அருளே

தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒரு செல்லி

செங்கீரை ஆடி அருளே (பா - 13)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

Self-Instructional Material

**14. ஆக்கல், காத்தல், அழித்தல்**

நேமி எனப்படும் சக்கரவாள மலையை இணைக்க எட்டு மலைகளைப் பொருத்திச் சிற்றில் அமைத்து மேருமலையை நடுத் தூணாக்கினாய். சூரியனையும் சந்திரனையும் விளக்குகளாய் வைத்தாய்.

ஊழிவெள்ளத்தால் கழுவித் தூய்மை செய்ய புவனம் (உலகம்) எனும் பாண்டத்தை எடுத்து வைத்தாய். உலகுக்கு உணவூட்டும் நீ உணவு சமைக்க முயல்கிறாய்.

பித்தனான சிவபெருமான் நீ சமைப்பதை அழித்து ஆடுகின்றார். அவர் மேல் சினம் கொள்ளாது அதனைச் சீர் செய்து மறுபடியும் சமைக்கின்றாய்.

இவ்வாறு சிற்றில் செய்து விளையாடும் மீனாட்சி அம்மையே தென்னவன் பாண்டியன், இமவான் மகளே செங்கீரை ஆடுவாயாக.

**15. நீலகண்டர் ஆன சோமசுந்தரர்**

கரிய இருள் போன்ற கழுத்தினை உடைய சோமசுந்தரருக்கு மூன்று கண்கள் உள்ளன. கண்ணொளி தரும் பிறைநிலவு தலையில் உள்ளது. ஈசன் மனத்தின் ஞானக்குளத்தில் அடியார்கள் இன்பக் கடலாக எண்ணி சார்வார்கள்.

இப்பெரிய அண்டத்தில் வித்தின்றித் தோன்றிய அனைத்துயிரும் செழித்தன ஊழிப் பெரு வெள்ளமாய் அருள் வெள்ளம் பாய்கின்றது.

மீனொத்த கண்ணாளே, தென்னவன் பாண்டியன், இமவான் பெற்றெடுத்த மகளே செங்கீரை ஆடியருளே.

**16. திருமகள், பிரமன் கலைமகளும் ஒப்பாகார்**

இசைக்கும் வண்டுகள் தேன் உறிஞ்சும் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள், பிரமனின் நாவில் வீற்றிருக்கும் கலைமகள் பசுமையான மயில் கூட்டம் மேகம் கண்டு ஏங்கும் கரிய இமயமலை ஆகிய இம்மூன்றும் வெறுமையாகும்படி கன்னிமாடத்தில் வளரும் கற்பூரவல்லியே.

நிலவு அமுதமாகிய ஒளியைக் கொட்டுவது போல வெள்ளம் பாய்கிறது. தகட்டினையொத்த வயிற்றை உடைய மீன்கள் மோத தாமரை மலர்கிறது.

அத்தாமரையிலிருந்து தேன் அருவியென பாயும் மதுரையின் மரகதவல்லியே, தென்னவன் இமவான் மகளே செங்கீரை ஆடுக.

**17. மீனாட்சி அம்மையின் கேசாதிபாதம்**

அம்மையே உன் முகமதியில் பற்கள் நிலவு ஒளியை உமிழ்கின்றன. கொண்டையில் சூடிய மணியும் நெற்றிச்சுட்டியும் அசைந்தாடுகின்றன.

போரிடும் கண்கள் எனும் மகர மீன்களும் அவர் போரிடும் காதிலணிந்த மகரக் குழைகளும் ஆடுகின்றன. சிலம்பணிந்த இரு பாதங்களும் அடி எடுத்து வைக்கும்போது கிண்கிணி ஒலிக்கின்றது.

ஆடையோடு கூடிய சிற்றிடை அசைகின்றது. கொப்பும் மறைந்துசரிந்த ஆலிலை போலும் வயிறு அசைகின்றது. அத்தகைய திருவயிற்றில் அண்டத்தின் இயங்கும் இயங்கா பொருட்கள் அனைத்தும் ஆடும் வகையில் செங்கீரை ஆடியருள்வாயாக தென்னவன், இமவான் மகளே செங்கீரை ஆடுக.

முகமதி ஊடுஎழு நகைநிலவு ஆட
முடிச்சூ ழியம்ஆட
முருபுரி வக்கொடி நுதல்இடு சுட்டி
முரிப்பொடு அசைந்துஆட
இகல்விழி மகரமும் அம்மக ரம்பொரும்
இருமக ரமும்ஆட
இடுநூ புரஅடி பெயரக் கிண்கிண்
எனும்கிண் கிணிஆடத்
துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்குல்
துவண்டு துவண்டுஆடத்
தொந்தி சரிந்திட உந்தி கரந்துஒளிர்
சூலுடை யால்அடைமற்று
அகில சராசரம் நிகிலமோடு ஆடிட
ஆடுக செங்கீரை
அவனி தழைந்திட மவுலி புனைந்தவள்
ஆடுக செங்கீரை

**18. தாயான தயாபரி**

தாயே! உனக்குக் கொங்கைகள் மூன்று என்று கூறப்படும் நிலையில் செழித்த மார்பு அசைகின்றது. அன்னையே வருவாய் என அழைப்போரின் அறியாமை கண்டு பொங்கி வழியும் புன்னகை அசைகின்றது.

செழித்த இவ்வுலகை ஈன்றதால் உன் உடல் வெளுத்துக் காணப்படுகின்றது. பசுங்கொடி போன்ற உன் இடையும் வயிறும் தளர்ந்துள்ளன.

விரும்பும் ஈசனை நினைத்திடும் வகையில் மேகலை அசைந்தாடும் மணம் நிறை இதழ் வழி தேன் விழும் பசுங்கொடியே செங்கீரை ஆடுக.

உலகு தழைக்க முடிசூடி ஆளும் மீனாட்சி அம்மையே செங்கீரை ஆடி அருள்க.

**19. அம்மையின் அணிகலன் அழகு**

நல்ல மணம் திகழ அழகுடன் வாரி முடித்த தலையின் உச்சிக் கொண்டை ஆடுகின்றது. பொன் பட்டமும் நெற்றிச் சுட்டியும் கதிரவனின் இளவெயில் போலவும் சந்திர ஒளி போலவும் ஒளிர்கின்றன. நெற்றியில் சிறு சிறு வியர்வைத் துளிகள் அரும்பியுள்ளன. தெய்வீக மணம் கமழும் மேனியிலிருந்து ஒளிரும் மரகதம் போன்ற பச்சை ஒளி எட்டுத் திசையிலும் படர்ந்து வீசுகின்றது.

நீலோற்பவ மலரின் மணம் கமழும் காதுகளில் அணியப்பட்டுள்ள குதம்பை என்னும் காதணி அசைகின்றது. ஒளி நிறை இளநகையுடன் தாமரையாகிய திருமுகம் பொலிவுடன் விளங்குகிறது.

அருள்பொழியும் விழியுடைய மீனாட்சி அம்மையே! கருணை மழை பொழிந்து செங்கீரரை ஆடி அருள்வாயாக. உலகம் தழைக்க முடிசூடி ஆளும் நீ மண்டியிட்டு இட்டுச் செங்கீரை ஆடி அருள்க.

**20. திருமாலின் தங்கை**

மரகத ஒளி விளங்கும் பச்சை மலையே! குழலிசை எழுப்பும் கார்மேக வண்ணனாகிய திருமாலுக்குப் பின் பிறந்த பூங்கொடியே.

பிறப்பால் ஏற்படும் பாசநோயைப் போக்க மாமலையில் தோன்றிய மாமருந்தே அரிசந்தானம் என்னும் கற்பகத்தரு வளரும் மேலுலகத் தேவராலும் உணரமுடியாத அருமறைப் பொருளே.

கருணை ஒளி வீசும் செம்முக மலரில் கயல்மீன் என விளங்கும் வளமிக்க கரும்பே! ஒளியை உமிழும் சந்திர குலத்தில் தோன்றிய இளநிலா போல வளரும் இளமையான மான்குட்டியே.

திருமாலின் தேவியாகிய திருமகளும் கலைமகளும் போற்றிப்புகழும் மலைமகளே தமிழ் வளர் மதுரையில் வாழும் இளமயிலே செங்கீரை ஆடி அருள்வாயாக.

**21. அம்மையின் அருள்**

பாஞ்சசன்யத்தைக் கையிலேந்திய திருமாலின் தங்கையே! ஈசனின் ஒருபாகம் கொண்டவளே காக்கும் தாயே என்று வணங்குவோருக்கு அஞ்சேல் அபயம் அளித்து வரம் தருபவளே.

இரவாகிய யானையை வானவீதியில் ஏவும் மன்மதனின் மீனானது (கொடியில் இருப்பது) குடியிருக்கும் பொன்கொடியே மின்கொடியே தமிழ்வளர் மதுரையில் வாழும் இளமயிலே செங்கீரை ஆடியருள்க.

**14.6.3 தாலப் பருவம்**

**பருவம் - ஏழாம் மாதம்**

பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தில் மூன்றாவதாக வரும் பருவம், பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியாகிய குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாய் நாவினை அசைத்துப் பாடிப் பாராட்டுவது. (தால் - நாவு) (தமிழ் இலக்கணம் பேரகராதி - 16)

**22. தமிழும் தென்றலும் கூடலும் (மதுரை)**

தென்னவன் எனும் பாண்டிய குலம் வளர்க்கும் தமிழோடு பொதிகை மலையில் பிறக்கும் தென்றல் இனிமையாக வீசுகின்றது. தீப்போலக் கருஞ்சிவப்பு நிறத்தில் தளிர்ந்த மாமர நிழலில் சிவந்த கண்களையும் பெரிய வாயினையும் கொண்டு கன்றை ஈன்ற எருமை படுத்திருக்கின்றது.

பசும்புல்லை மேயத் தெரியாத இளங்கன்றை நினைத்த உடனே தாய் எருமையின் மடியிலிருந்து தானாகவே பால் பெருக்கெடுத்துப் பாய்வதால் பால் வண்ணத்தில் பொய்கை விளங்குகின்றது.

அலைகளை உடைய அப்பொய்கையில் பொன்னிறம் தோன்ற பூத்த தாமரையின் மகரந்தப் பொடிகளில் நிலவு ஒளிக்கற்றைகளைப் பொழிவதால் திருப்பாற்கடலில் தோன்றிய இலக்குமியாகிய திருமகள் போலப் பொன்னிறத்துடன் உச்சிக் கொண்டையை உடைய அன்னப்பறவைகள் வலம் வரும் மதுரைக்கு அரசியே! தாலோ தாலேலோ! அருளைக் கருவாகக் கொண்ட அங்கையற்கண்ணியே தாலோ தாலேலோ.

தென்னன் தமிழின் உடன்பிறந்த சிறுகால்
அரும்பத் தீஅரும்பும்
தேமா நிழற்கண் துஞ்சும்இளஞ் செங்கண்
கயவாய்ப் புனிற்றுஎருமை
இன்னம் பசும்புல் கறிக்கல்லா இளங்கன்று
உள்ளி மடித்தலம்நின்று
இழிபால்அருவி உவட்டுஎறிய எறியும்
திரைத்தீம் புனல்பொய்கைப்
பொன்னம் கமலப் பசுந்தோட்டுப் பொன்தாது
ஆடிக் கற்றைநிலாப்
பொழியும் தரங்கம் பொறைஉயிர்த்த பொன்போல்
தொடுதோல் அடிப்பொலன்சூட்டு

அன்னம் பொலியும் தமிழ்மதுரைக்கு அரசே

தாலோ தாலேலோ

அருள்சூல் கொண்ட அங்கயற்கண் அமுதே

தாலோ தாலேலோ



**23. சிற்றில் அமைக்கும் மீனாட்சியம்மை.**

இறுகக் கட்டிய ஆடையின் முந்தானையுடன் கலாபமாகிய அணிகலனும் பெண்களின் இடையை வருத்தும் விளையாட்டாகக் கட்டிய சிற்றிலில் அப்பெண்கள் புகுந்து கொள்வர். அங்குள்ள இருளைப் போக்கும் வகையில் மாணிக்கங்கள் அடுப்பின் சுடராக ஒளிர்கின்றன.

பவளக்கொடி அடுப்புக்கு விறகாகும். இனிமை மிக்க தேனே உலைநீராகப் பயன்படுத்தப்படுகிறது. குடல் போன்ற வடிவிலான நத்தைக் கூட்டில் உடலை நீராக்கிய தேன் ஊற்றப்படுகின்றது. முத்துக்கள் அரிசியாகப் பயன்படுகின்றன.

மருத நிலத்தில் வேலை செய்யும் உழத்தியர் இவ்வாறு சமைக்கும் பண்ணைகள் நிறைந்த மதுரைக்கு அரசியே! தாலோ தாலேலோ!

**24. மதுரை வளம்**

மாலை போன்ற மேகக்கூட்டம் கடல் உப்பை நீக்கி நீரைப் பருகி நீர் நிறைந்த மேகமாக உலவும்.

சினம்கொண்ட வாளை மீன் அம்மேகத்தின் கருப்பம் சிதைய மோதித்தாவும். தெய்வத் தன்மையுடைய கற்பகச் சோலையும் அலையுடைய கங்கையின் கழிமுகப் பகுதியும் நீந்தும். நிலவின் முயலாகிய களங்கத்தைத் துளைக்கும் ஒளியுடைய நட்சத்திரத்திரளும் சிதையும்படி மோதும். ககன வெளியின்புறம் சென்று உச்சியைத் திறக்கும் புறத்தேயுள்ள கடலைக் கலக்கி வலிமையான சுறா மீன்களுடன் விளையாடும்.

இந்தகு வாளை மீன்களை உடைய மருதநில வளமிக்க மாமதுரைக்கு அரசியே! உனக்குத் தாலோ தாலேலோ! அருளைக் கருவாகக் கொண்டுள்ள அங்கயற்கண்ணியே தாலே தாலேலோ என்கிறார். குமரகுருபரர். இதனை,

மூடும் ககன வெளிக்கூட முகடு

திறந்து புறம்கோத்த

முந்நீர் உழக்கிச் சினவாளை மூரிச்

சுறவி னோடும்விளை

யாடும் பழனத் தமிழ்மதுரைக்கு அரசே

தாலோ தாலேலோ

அருள்சூல் கொண்ட அங்கயற்கண் அமுதே

தாலோ தாலேலோ

என்னும் பாடலடிகள் விளக்கும்.

**25. மதுரைவளமும் படைவலிமையும்**

குடம் கொண்டு கொட்டுவதுபோல் மதநீர் ஒழுகும் யானையின் ஓட்டத்தை, மகளிர் தம் கூந்தலை அவிழ்த்து உதறுவதால் வாடிய பூந்துகள்களும் குங்குமமும் கலந்து உருவான செம்மைநிறச் சேறு வழுக்குவதால் தடுக்கும்.

சேறு நிறைந்த இராச வீதியில் அரசனின் தேர்கள் பெருவீதியில் ஒதுங்கின சிறிய தேர்களும் உருண்டு வருகின்றன.

சிங்கம் போன்ற ஆற்றல் வாய்ந்த வீரர்கள் செலுத்தும் குதிரைகளின் வாயிலிருந்து ஒழுகும் நுரைகலந்த எச்சில் வழிந்து ஆறுபோல் ஓடுகிறது. இத்தகு வளமிகு மதுரைக்கு அரசியே தாலே தாலேலோ.

**26. மகளிர் வனப்பும் மருதநில வளமும்**

மலைக்குன்று இரண்டினைச் சுமக்கும் மலர்க்கொடி போன்ற மகளிர் கூந்தலில் இசை ஒலிக்க வண்டுகள் புகுந்து மகரந்தத் தாதுகளை உதிர்க்கும். அம்மகரந்தப் பொடியானது கங்கையைத் தூர்க்கும். இத்தகைய பூஞ்சோலையில் முயலுடைய சந்திரன் மீது குரங்குகள் தாவும். குரங்கின் ஆரவாரத்திற்கு அஞ்சிய கரிய மேகங்கள் நெற்குவியலில் வைக்கோல் போர்க் குன்றின் மேல் ஏறும், கள்ளுண்ட உழவர்கள் அதனை மேகம் என்றுணராமல் எருதுகளுடன் ஏரில் சேர்த்துப் பூட்டி உழுவர். அதனால் இடிக்குரல் முழங்குகின்ற இடமான வயல்கள் நிறைந்த வளமிக்க மாமதுரைக்குச் சொந்தமான அரசியே! அருள் நிறை அங்கயற்கண்ணியே தாலே தாலேலோ.

**27. மதுரை வளம்**

கயல் மீன்களானவை மழைநீரிலும் கழிமுக நீரிலும் நீர்க்கரைப் பகுதியிலும் கரைமோதும் அலை உள்ள இடத்திலும் மடல் விரியும் தாழையின் அருகிலும் மகளிர் ஆடும் இடத்திலும் நெற்பயிர்கள், களத்திலும் உழவர்களின் நெற்களஞ்சியங்களிலும் நீர் நிலைகளிலும் மகிழ்ந்து துள்ளி விளையாடும்.

அம்மீன்களை ஒத்தவர்கள் கணிகையர் எனும் பரத்தையர்கள். கயலாகிய அவர்களின் கண்கள் தேரோடும் இளைஞர் நெஞ்சிலும் செல்வத்திலும் வில்லாற்றலிலும் தோளிலும் ஊடல் தீர்க்கும் முயற்சியில் உதிர்ந்த மாலையிலும் பாயும். இத்தனை சிறப்புமிக்க மதுரையின் செல்ல மகளே! தாலே தாலேலோ அங்கயற்கண்ணியே! தாலே தாலேலோ.

**28. மீனாட்சி அம்மையின் வீரம்**

மீனாட்சி அம்மையுடன் போரிட வந்த பகைவர்களின் வில்கள் முறிந்தன. தேரில் கட்டிய கொடிகள் சிதைந்தன. அம்மை பொழிந்த அம்புமழையில்

மாற்றாரின் உடல்கள் சிதைந்தன. தலைகள் அறுபட்டு விழுந்தன. குருதி ஆற்றில் சிதைந்த உடல்கள் சுழன்றன. யானைக் கூட்டமும் குதிரைக்கூட்டமும் இரத்த வெள்ளத்தில் தூக்கி எறியப்பட்டன. அக்காட்சி யானை மீன்களையும் குதிரை மீன்களையும் அலைகள் துள்ளி அம்மானை ஆடுவது போலிருந்தது.

இவ்வாறு சேனைக்கடலின் நடுவே சிறந்து விளங்குகின்ற வீரத்திருமகளே! மதுரையில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பொற்கொடியே! தாலே தாலேலோ.

**29. உக்கிர குமார பாண்டியன் வீரம்**

தேவேந்திரன் ஐராவதமாகிய தன் யானையின் பிளிறலுக்கு எதிர் முழக்கம் செய்யும் மேகங்களைச் செலுத்திப் போர் செய்தான். அப்போரில் இந்திரனும் அவனையொத்த திசைநாயகத் தேர்களும் வெடிப்புகளில் கவிழ்ந்தார்கள். வச்சிரப்படையுடன் அவர்கள் தோற்றோடுதல் கண்டு முகம் மலரும் அன்னையே

வண்டுகள் மொய்க்கும் கற்பகமாலை சூடிய முடி கெட்டு அழிகிறது. உயர்ந்த மலையும் நிலை குலைந்தது. கடலும் வேற்படையால் வரண்டது

இவ்வாறு தேவருலகில் நடந்த போரில் உக்கிர குமார பாண்டியனுக்கு வெற்றி வாகை சூட்டியவளே! அப்பாண்டியனைப் பெற்ற மயில் அனையளே! மதுரையில் தமிழ் வளர்த்த பொற் கொடியே! தாலே தாலேலோ.

**30. பாண்டியருக்கு நிகர் பாண்டியரே**

காலந்தோறும் தோன்றிய தமிழ்நூல்களைப் பாழாகி அழியாமல் இருக்கவும் பிரம்மன் படைத்த இவ்வுலகு நிலைமாறாமல் இருக்கவும். வாழ்வில் கலிப் பகையாகிய வறுமை தமிழ் ஆளும் பாண்டிய நாட்டைப் பற்றாமல் இருக்கவும் உலக உயிரினங்கள் தீவினை பற்றி பாவக்கடலில் விழாமல் இருக்கவும்

அரசியல் நெறி அறச்செயல்கள் ஆகியன அழியாமல் இருக்கவும் பாண்டியருக்கு இணை சோழர் எனக் கூறாது இருக்கவும் மாமதுரை செலுத்து விளங்கத் தழைத்த கொடியே! மலையத்துவசன் வளர்ந்த பசுங்கிளியே! தாலே தாலேலோ.

**31. மீனாட்சியின் வெற்றியும் வீரமும்**

வாசனைத் தைலம் பூசிய சிறு பெண் பிள்ளையே! நீ கைலை மலை வாழும் தூய ஈசருடன் போரிடுவேன் என்று சீற்றமுடன் எழுந்தாய்.

உன்னுடன் போரிட வந்த பூதகணங்களும் நந்தியும் நிலைதடுமாறினர். அதனால் இடபக்கொடி முறிந்தது. அவ்வாறு அழியாத மீன்கொடி உன்கொடி. பொதிகை மலைத் தென்றலைத் தேராகக் கொண்டவன் மன்மதன். உயிர்களிடத்துக் காதலை ஊற்றெடுக்க வைக்கும் அவனுடைய மீன் கொடியும் அழிந்தது.

ஆயினும் உன் மகரமீன் கொடி அழியாமல் எப்போதும் உயர்ந்திருக்க வெற்றி கொண்ட மீனாட்சியே மலையத்துவசன் மகளே! தாலே தாலேலோ என்று மீனாட்சி அம்மையைப் பலவாறு தாலாட்டி உள்ளார் குமரகுருபரர்.

**14.6.4 சப்பாணிப் பருவம்**

**பருவம் - ஒன்பதாம் மாதம்**

பிள்ளைத்தமிழ் நூலின் பத்துபருவங்களில் ஒன்று சப்பாணிப்பருவம். குழந்தையைக் கைகொட்டி விளையாடுமாறு வேண்டும் பருவம். □சப்பாணி கொட்டி அருளே, கொட்டுக சப்பாணி□ என்பதாக இப்பாடல் முடியும். சக - பாணி - சப்பாணி இரு கைகளையும் இணைத்தல் என்னும் பொருள்.

**32. சிவனே முழுமுதல் கடவுள்**

தாமரை மேல் அமர்ந்த நான்முகனும் அரவணையில் துயிலும் திருமாலும் நள்ளிரவில் திடுக்கிட்டு எழுகின்றனர் அண்டங்கள் நிலைகுலைந்தன ஏழுகடல்கள் கவிழ்ந்தன மேருமலையும் சக்கரவாள மலையும் சுழல்கின்றன. ஊமத்த மலர் அணிந்த சிவபெருமான் வட்டமாக மண்டலமிட்டு ஆடிய சுத்தநித்தம் என்னும் கூத்தை ஆடுவதால் இல்லாதெல்லாம் நிகழ்கின்றன.

கூத்த பெருமானின் ஆடலுக்கு ஏற்ப கனத்த கொங்கைகளை ஒத்த வட்டத்தாளம், கைத்தாள வகைக்கு ஏற்பச் சப்பாணி கொட்டி அருளுக. பழந்தமிழ் தொன்மை நகராம் மதுரையில் வளர்த்த கொடி அனையவளே சப்பாணி கொட்டி அருளுக.

**33. அம்மையின் ஆற்றலும் நாணமும்**

மெல்லிய இடை அசைய தாமரை மொட்டு வடிவான கலசத்தை உடைய தேரில் போரிடச் சென்றாய். அப்போது திரிபுரத்தை எரிக்க மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமான் எதிரிப்பட உன் மூன்று கொங்கைகளில் ஒன்று மறைந்தது. நாணம் மேலிட நீ தலைதாழ்த்தி கடைக்கண்ணால் பார்க்க அமுதம் பெருகியது.

ஓவியமொத்த நீ ஊன்றிய வில்லின் பகுதியைத் தடவுகின்றாய். அவ்வாறு தடவிய உன் கரங்களால் சப்பாணி கொட்டியருள்க.

**34. பெண்கள் விளையாட்டு**

விளையாட்டுபருவப் பெண்களுடன் சேர்ந்து சோலையில் இளந்தளிர்களைப் பறித்துச் சேர்ப்பாய். புழுதியைக் கலங்களில் குழைத்துச் சேறாக்கிச் சிற்றில் அமைத்து மகிழ்வாய்.

மயில்குஞ்சுகள், அன்னக்குஞ்சுகள், புறாவின் குஞ்சுகளையும் கொண்டுவந்து சிற்றில்லில் வளர்க்கிறாய். காந்தள் மலர் போன்ற கைகளால் செந்தாமரை மலர் முகத்தில் செங்கழுநீர்ப் பூப்போன்ற கண்களைப் பொத்தி விளையாடி மகிழ்ந்தாய்.

அழகிய பச்சைக்கிளிகளைக் கையில் எடுத்துக் கொஞ்சியும் பொன்னால் ஆன காய்களால் கழங்கு விளையாடியும் இயற்கையாகவே உன் கைகள் செந்தாமரை மலர் போல் சிவந்தன. அத்தகைய செந்தாமரை ஒத்த கைகளால் சப்பாணி கொட்டுவாயாக.

**35. வானுலகும் மதுரையும்**

வானுலக தேவர்கள் கொண்டு வந்தது இந்திர விமானம். அண்டப்பெருவெளியில் அமைந்துள்ளது துவாத சாந்தவீடு. கடம்பமலர், பூத்த சோலையுடன் மருதவளம் செறிந்தது தமிழ்நாடு.

நெற்றிக் கண்ணுடன் அருள்பொழியும் சுந்தரேச பெருமான் ஆறுகால் பீடத்தில் அமர்ந்திருக்க ஈசனின் இடப்பக்கத் தொடையில் இறைவி செம்மாந்த நிலையில் வீற்றிருக்க பள்ளி கொள்ளும் கட்டில் இத்தகைய இடங்களைத் தொட்டிலாக உடைய அம்மையே.

பண் அமைந்த மழலைமொழி அமுதம் ஒழுக எச்சிலாகிய தேன் வழிகின்றது. பைங்குழவியாகிய நீ பெருவிரல் சுவைத்திடும் வளமிக்க கரங்கள் குளிர்ந்த செந்தாமரை ஒத்தன. அத்தகைய கரங்களால் சப்பாணி கொட்டுக. பழமையான தமிழொடு பிறந்து தொன்மையான மதுரையில் வளர்ந்த கொடியே சப்பாணி கொட்டுக என்கிறார் குமரகுருபரர். இதனை,

“தண்ணளிக் கமலம் சிவப்பூற அம்மை ஒரு
சப்பாணி கொட்டி அருளே
தமிழொடு பிறந்து பழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டி அருளே” (ப-35)

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**36. அம்மையின் குழந்தை முருகன்**

கெண்டை மீன் போன்ற வாள் கண்களை திறந்து அமுதமென அருள் அலை பரப்பிடுவாய். கடலைத் தீயூட்டிய தெய்வக்குழந்தை முருகன். அம்முருகக் குழந்தையை உன் கணைக்காலில் கிடத்தி குளிப்பாட்டி, உச்சிமோந்து, தலைக்கு எண்ணெய் தடவி திருவெண்ணீறு பூசி, கொங்கைப் பாலைச் சங்கில் பீய்ச்சுவாய் அதனை ஊட்டுவாய், குழந்தையின் உடம்பில் மணப்பொடிகளைப் பூசுவாய். மடியில் தூங்கவைத்துப் பிறகு தொட்டிலில் தூங்கவைப்பாய்.

இவ்வாறு குழந்தையைத் தாலாட்டித் தொட்டிலாட்டும் திருக்கரத்தால் மீனாட்சி அம்மையே சப்பாணி கொட்டுக.

சேல்ஆட்டு வாள்கண் கருங்கடல் கடைமடை
திறந்துஅமுதம் ஊற்றுகருணைத்

தெண்திரை கொழித்துஎறிய வெண்திரை நெருப்பூட்டு
தெய்வக் குழந்தையைச்செங்
கோல்ஆட்டு நின்சிறு கணைக்கால் கிடத்திக்
குளிப்பாட்டி உச்சிமுச்சிக்
குஞ்சிக்கு நெய்போற்றி வெண்காப்பும் இட்டுவளர்
கொங்கையில் சங்குவார்க்கும்
பாலாட்டி வாய்இதழ் நெரித்துஊட்டி உடலில்
பசுஞ்சுண்ண மும்திமிர்ந்து
பைம்பொன் குறங்கினில் கண்வளர்த் திச்சிறு
பசுஉமணித் தொட்டில்ஏற்றித்
தாலாட்டி ஆட்டுகைத் தாமரை முகிழ்த்துஅம்மை
சப்பாணி கொட்டிஅருளே
தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டிஅருளே

**37. விண்ணுலகை வெல்லும் மீனாட்சி**

மீனாட்சி அம்மை தேவருலகில் போரிடும்போது வானிலுள்ள இடியும் விண்மீன்களும், சிதறி விழ்ந்தன. வாளினால் மாண்டவர்கள் சொர்க்கம் அடைந்தனர். அவர்கள் பொன்வளை அணிந்த கருங்குவளை விழி அம்பையும் மலையாகிய மார்பகத்தையும் பெற்ற தேவமகளிருடன் இன்பம் துய்த்தனர்.

போரில் தோற்ற தேவருடைய உண்ணப் பருந்துகள் வட்டமிட்டன, பேய்கள் குரவைக் கூத்து ஆடுகின்றன. இந்நிலை கண்டு எண்திசைக் காவலர்கள் நாணமுற்றனர். வளைந்த வில்லில் நெடுங்கணையை வைத்து எய்த மீனாட்சியே! உலகத்தை ஒருகுடைக்கீழ் ஆண்டு காப்பவளே சப்பாணி கொட்டி அருள்வாயே.

**38. சேர சோழ பாண்டியர்**

முன்பு போரில் தோல்வியைத் தழுவிய சேரரும் சோழரும் பின்னர் தேவர்களுடன் நடந்த போரில் மீனாட்சி அம்மையுடன் சேர்ந்து கொண்டனர். எமனின் கரிய எருமையும், இந்திரனின் வெள்ளை யானை ஐராவதமும் தோற்றன. வருணதேவன் செலுத்திய சுறாமீன் சூரியனின் தேரில் மோதியது. மீனாட்சியின் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு செங்கோலாக மாறியது. அது இமையத்தோடு அருகிருந்த எட்டு மலைகளையும் பெயர்த்து எண்திசைகளிலும் நிறுத்தியது. திசை எட்டும் நீயே ஆண்டாய் மீனாட்சியே.

வடகடல் துறையும், தென்குமரிக் கடல்துறையும் உன் ஆட்சிக்கு உட்பட்டன. அவ்விடங்களில் நீராடும் இளம்பெண் யானை போன்றவளே சப்பாணி கொட்டியருள்க.

**39. வானுலக தெய்வங்களை வெல்லுதல்**

மீனாட்சி அம்மையே தேவருலகில் உன் அம்புகள் பூதகணங்கள், காளிகள், நாயை வாகனமாகக் கொண்ட பைரவர் அனைவரையும் ஓடச்செய்தன. நந்திதேவரும் புறமுதுகிட்டார். அவர் தப்பி ஓடும்போது அவர்தளர்ச்சியைக் கண்டு நீ இளநகை புரிந்தாய்.

கைலை மலையில் ஆடல்புரிவதை மறந்து சிவனுடன் போரிட்டாய், நெற்றிப்புருவ வில்லை வளைத்தாய், விழி அம்பை எய்தாய், முப்புரம் எரித்த சிவனையே வென்றாய்.

இவ்வாறு வெற்றிகண்ட தடாதகைப் பிராட்டியே சப்பாணி கொட்டுக. நிலமகளைக் காப்பவளே சப்பாணி கொட்டுக.

**40. அம்மையின் கருணை**

உன் அருள்விழிப் பார்வையில் நனைந்த அடியவர் மகிழ்வர். பிறவிப் பெருங்கடல் வற்றி இன்பமாக வாழ்கின்றனர் உன் குழையணிந்த காதோடு கண்கள்மோத உன்கண்கள் அம்பையும் பெண்மானையும் ஒத்தன. குமிழம்பூ போன்ற மூக்கினை உடையவளே இளமைதவழும் பாவையே.

சோலையில் குரங்குகள் மேகமண்டலத்தில் தாவின. தவழும் இளமதியின் கலைகள் நெகிழ்ந்தன. நிலவமுதமோடு மழையும் பொழியும் இமயமலைக்குரிய பெண்மயிலே சப்பாணி கொட்டியருள்க.

**41. சைவத்திருமுறைகளின் சிறப்பு**

செழுமையான மறைகளின் பிழிவாகக் கருதப்படுபவை தமிழ்பதிகங்கள். அவற்றோடு அன்னைஞானப்பாலும் சேர்ந்து சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தரின் வயிற்றில் நிறைந்துள்ளது. சம்பந்தரோடு முருகனையும் யானைமுகனையும் வளர்த்த செவிலித்தாயே

குடிலோசையினும் இனிய தேன்கலந்த பழச்சுவை போன்ற மழலையில் அமுதமொழி பேசும் பச்சைப் பசுங்கிளியே. சப்பாணி கொட்டி அருள்வாயாக.

### 14.6.5. முத்தப்பருவம்

**பருவம் பதினோராம் மாதம்**

பிள்ளைத் தமிழாகிய சிற்றிலக்கியத்தில் ஐந்தாம் பருவம். குழந்தையைத் தனக்கு முத்தம் தருமாறு தாய் கேட்கும் வண்ணம் பாடல் அமைவது பிற பருவம் போல இதனுள்ளும் பத்து பாடல்கள் வரும். “கனிவாய் முத்தம் தருகவே” போன்ற வாய்பாட்டால் பாடல் முடியும்.

**42. சிவனின் துணையானவள்**

காலத்தை கடந்த கற்பனைக்கு எட்டாத தமிழ்க் கருவூலமாகிய பொற்களஞ்சியத்தில் தொன்மைப் பாக்களைப் பாடிய புலவர்கள் தேடிவைத்த தெய்வமாகிய மாணிக்கச் செல்வமே.

உயிர்ப்பாத்தியில் அறிவுநீர் பாய்ச்சுபவருக்கு அருள் கனியைத் தருகின்ற கற்பகத்தருவே. எழுதிக்காட்ட முடியாத மழலைபேசும் பசுங்கிளியே, அனைத்துயிருக்கும் துணையான பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவனின் துணையானவளே. சூரியன், சந்திரன், நெருப்பு என்னும் முச்சுடரைக் கண்களாகப் பெற்ற சிவனுக்கு விருந்தாகும் முக்கொங்கைகளை உடையவளே முத்தம் தருகவே.

**43. அடியவர்க்கு அருளும் அன்னை**

உள்ளம் உருகி நெகிழ்ந்து பெருகும் அடியவரின் மனதில் பொங்கும் பரமானந்த வெள்ளப் பெருக்கே. எளியோராகிய யாம் பெற்ற பேறே மணம் நிறை கூந்தல் பெற்ற இளம்பிடியே (பெண்யானை)

கொடி இடையும் குங்குமக் குழம்பு தோய்ந்த கொங்கைகளையும் பெற்ற பூங்கொடி போன்றவளே. குழலினும் இனிய மழலை மொழிபவளே.

சிவந்த ஆம்பல் மலர் ஒத்த உன்வாயால் முத்தம் தருகவே முக்கண்ணருக்கு விருந்தாக அமைபவளே முத்தம் தருகவே.

**44. முத்தம் (முத்து) பிறக்கும் இடங்கள்**

வண்டுகள் மொய்க்கும் மாலையுடைய உன் கூந்தலுக்குத் மேகம் தோற்கும், உன் மழலையின் இனிமைக்குக் கரும்பு தோற்கும், திருவடி மலர்களுக்குத் தாமரைமலர்கள் தோற்கும், கழுத்து அழகிற்கு சங்கானது தோற்கும். தோளுக்கு மூங்கில் தோற்கும். கொங்கைக்கு யானைத் தந்தங்கள் தோற்கும்.

உன் எழிலுக்குத் தோற்ற மேகம், கரும்பு, தாமரை சங்கு, பாக்கு, மூங்கில், யானைத் தந்தங்கள் ஆகியன முத்தை அளிப்பன. எனினும் அவை உன் திருவாய் முத்தத்திற்கு ஈடாகாது.

இம்மை மறுமைக்கு இன்பம் தருபவளே முத்தம் தருவாயாக. முதல்வரின் துணையே முத்தம் தருகவே. என்று வேண்டுகிறார் குமரகுருபரர். இதனை,

“எழுது தடந்தோட்கு உடைந்த தடம்

பணையும் பணைமென் முலைக்கு உடைந்த

இணைமா மருப்பும் தரும் முத்துன்

திருமுத்து ஒவ்வா இகபரங்கள்

முழுதும் தருவாய் நின் கனிவாய் முத்தந் தருக முத்தமே

முக்கண் சுடர்க்கு விருந்திடுமும்

முலையாய் முத்தம் தருகவே” (பா - 44, 3, 4)

என்னும் பாடலடிகள் விளக்கும்.



**45. தேவருலக மணியினும் மேலான முத்தம்**

ஐராவதம் மீதிருந்து தேவர் உலகை ஆள்பவன் இந்திரன் அவன் சபையில் இருப்பது கேட்டதெல்லாம் தரும் சிந்தாமணி. குபேரனின் அழகாபுரியில் இருக்கும் சங்கநிதி பதுமநிதி என்னும் இருமணிகள் திருமாலின் திருமார்பில் திகழும் கௌத்துவமணி. இவை எல்லாம் நீ எனக்கு அளிக்க வேண்டாம்.

மூங்கில் முளைத்து எழுந்த முத்தான சிவ பெருமான் முத்தமிட விரும்பிய உன் சிவந்த வாயால் முத்தம் தருகவே.

**46. மண்ணுலக முத்தினும் சிறந்தது**

குமரிக் கடலில் விளையும் முத்தும் பாண்டியர் கொற்கை துறைமுக முத்தும், தாமிரபரணி ஆற்றின் முத்தும், பொதியமலைச் சாரல் அருவி சொரியும் முத்தும் முத்துக்கள் அல்ல.

கொடி இடை கொண்டு சிறு பெண்களுடன் மணல் வீடு கட்டி விளையாடுபவளே அசிற்புகை மறைக்கும் கூந்தல் உடையவளே உன் செங்கனி வாயின் முத்தமே சிறந்தமுத்து அதனைத் தருவாயாக.

**47. உலக இயக்கத்தில் அம்மை**

ஆதிசேடனின் தலையிலுள்ள பூமாதேவியின் கரிய உடை திகழ்ந்தது போல இருளைக் கிழித்தது சூரியன். சூரியனின் தேரை ஏழு குதிரைகள் இழுக்கின்றன. வானத்தில் வானவில்லும் சந்திரனும் ஓட விண்மீன்கள் பொருந்தி நிற்கின்றன. மேருமலையில் வெற்றிக் கொடி போல மேகம் தாங்கியுள்ள மதிலையுடையது மதுரை.

அத்தகைய தெய்வத்தன்மை நிறைந்த மதுரை நகரைச் செழிக்கச் செய்யும் மீனாட்சி அம்மையே பவழம் போன்ற அழகிய வாயால் முத்தம் தருகவே.

**48. பாண்டிய நாட்டு மருதவளம்**

கடலைக் குடிக்கும் மேகம் போல வயிறு நிறைய கள் குடிக்கும் மேகம் போன்ற கரிய உடம்பை உடைய உழவர்கள் பிறைமதி போன்ற அரிவாளுடன் இடம் பெயர்வர்.



மின்னலைப் பழிக்கும் வளையணிந்த உழத்தியர்கள் வரால் மீன்கள் துள்ளுவதைக் கண்டு அஞ்சுவர். அவர்களின் அச்சம் கண்டு விண்மீன்களும் அஞ்சும்.

விண்முட்ட வளர்ந்த கரும்புத் தோட்டத்தில் கற்பகச் சோலைகளிலும் ஐராவதம் கவளம் கவளமாகத் தின்னும். காமதேனு என்னும் தெய்வப்பசு நெல் பயிரை மேயும்.

இத்தகைய மருதவளம் திகழும் மதுரையைக் காப்பவளே முத்தம் தருகவே.

**49. பாண்டியரின் மீன் கொடிச் சிறப்பு**

பாண்டியரின் கடல் போன்ற படைகளைக் கண்ட மாற்றுநாட்டு மன்னர்கள் திறைப்பொருள்களைக் கொணர்ந்து வந்து கொட்டினர் அதனுள் திசைமன்னர் மாலைகளும் இருந்தன.

மன்மதன் கொடியிலுள்ள சுறாமீன் உன் கொடியிலுள்ள மீனுடன் கைலை மலை வரை சென்று உலவுகின்றது. சூரியனின் தேர்சக்கரத்துடன் அம்மையின் ஆணைச்சக்கரமும் சேர்ந்து கடலிலும் நிலத்திலும் செல்கின்றது.

இவ்வாறு எத்திசையிலும் செங்கோல் செலுத்தும் பாண்டியரின் செல்வமகளே மீன்கொடியைப் பெற்ற பெண்கொடியே முத்தம் தருகவே.

சங்கோ லிடுங்கடற் றானைக்கு வெந்நிடு
தராபதிகண் முன்றிறூர்த்த
தமனியக் குப்பையுந் திசைமுதல்வர் தடமுடித்
தாமமுந் தலைம யங்கக்
கொங்கோ லிடுங்கைக் கொடுங்கோ லொடுந்திரி
குறும்பன் கொடிச்சுறவு நின்
கொற்றப் பதாகைக் குழாத்தினொடு மிரசதக்
குன்றினுஞ் சென்று லாவப்
பொங்கோல வேலைப் புறத்தினொ டகத்தினிமிர்
போராழி பரிதி யிரதப்
பொங்காழி மற்றப் பொருப்பாழி யிற்றிரி
புலம்பப் புலம்பு செய்யச்
செங்கோ றிருத்திய முடிச்செழியர் கோமகள்
திருப்பவள முத்த மருளே
சேல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்கொடி
திருப்பவள முத்த மருளே.

**50. குறிஞ்சி, நெய்தல், மருதம்**

முதுமையான பலாமரத்தின் வேர் பிளந்து பெரிய பலாப்பழம் வெளிவருகின்றது. உடைந்த மதுக் குடத்திலிருந்து கள் பெருகி ஓடுதல் போல அப்பலாக்கனியில் இருந்து தேன் பெருகி ஓடிற்று.

விளைந்த நெல்கதிர்கள் சுறாமீன்கள் வேகமாகப் பாய்வதால் நிலத்தில் படிகின்றது.பலாக்கணியில் வழிந்த தேன் கமுகமரத்தைத் தாக்க குலை சரிந்து விழுகின்றது.

அலைநிறைக் கடலின் இருமருங்கிலும் நீர்நிலைகளில் நீர்குடித்த யானையின் பிளிறல் ஒலியோடு மேக முழக்கமும் சேர்ந்து மும்முரசங்கள் முழங்குவது போல் உள்ளது.

முரசுடன் காவல்மிக்க மதுரை மாநகரில் வளர் கிளியே முத்தம் தருகவே.

**51. திருமகள், கலைமகள் அருள் கிட்டும்**

உலக இருளை நீக்க உதித்தெழும் கதிரவன் ஒளிபரப்புகிறது. செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளும், நூறிதழ்கள் கொண்ட வெண்தாமரை மலரில் வீற்றிருக்கும் கலைமகளும் உதவக் கடைக்கண் காட்டிய இளம் பெண் யானை போல்பவளே.

குபேரப் பட்டினத்தின் சங்கநிதி பதுமநிதி ஆகியவற்றை உன் முகத்திலும் கழுத்திலும் தாங்கினாய் நிலவின் கலையை நெற்றில் கொண்டாய். தமிழ்க் கடலில் தோன்றிய திருமகளே முத்தம் தருகவே. பாண்டியரின் குலமணியே முத்தம் தருகவே.

**14.6.6. வருகைப் பருவம்**

**பருவம் பதிமூன்றாம் மாதம்**

பிள்ளைத்தமிழில் ஆறாம் பருவமாகிய வருகைப் பருவம் பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியாகிய குழந்தையைத் தன்னிடம் வருமாறு தாய் முதலியோர் அழைப்பதாகக் பாடும் பருவம் ஆகும். பாடல் தோறும் ஈற்றடியில் வருகவே வருக வருகவே என்று முடிதல் மரபாக அமைந்துள்ளது.

**52. அன்னையின் நடையழகு**

காற்சிலம்பு மென்மையாக ஒலிக்க கிண்கிணியும் ஓசையிட உன் சிறிய அடிகளை எடுத்துவைத்து நடக்கின்றாய். அப்போது காலில் பூசப்பட்ட செம்பஞ்சுக் குழம்பு பூமிக்கு வந்த தேவ அரம்பையரின் கூந்தல் இளம்பிறை அணியிலும், சிவபெருமான் தலையிலணிந்த பிறையிலும் அடையாளமாகப் பதிகின்றது. உன் சிலம்பின் ஒலி கேட்டோ தளர்நடை அழகைக் கண்டோ

தெய்வமகளிர் கூட்டத்தோடு அன்னப்பறவைகளும் பின்தொடரும். உன் தளர்நடையில் சிற்றிடை வருந்துவது அறிந்து மேகலையும் ஒலிக்கும் உன் திருக்கோயிலாக என் மனம் என்னும் தாமரையையும் தமிழ் பொருந்திய கூடலாகிய மதுரையையும் கொண்டவளே.

அழகிய பூங்கொடி போன்ற மீனாட்சி அம்மையே வருக, கற்பகச் சோலையாகிய கடம்பவனத்தில் நிறைந்துள்ள கயற்கண் நாயகியே வருக வருகவே.

**53. அடியவரின் உள்ளக் கோயில்**

திருப்பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து பெறப்பட்ட அவள் திருமகள், இனிய தமிழ் மொழிக்கடலில் மூழ்கி எழுந்தவள் கலைமகள்

வண்டினங்கள் தேனை விரும்பித் தாமரை மலரில் இவர்கள் இருவரும் குடிகொண்டனர். எனவே சிவ மணம் கமழும் மெய்யடியார்களின் மனம் என்னும் தாமரை மலர்க் கோயிலில் நீ புகுந்தாய் மாணிக்க வல்லியே.

பிறைநிலா நெற்றியுடைய இரதியுடன் மன்மதன் கரும்பு வில்லுடன் போர் செய்வது போல வான்முட்ட வளர்ந்து நிற்கும் கரும்புத் தோட்டங்கள் நிறைந்துள்ள நான்மாடக் கடலில் குடிகொண்ட தோகைமயிலே வருக வருகவே

**54. பாண்டிய நாட்டு வளமும் அம்மையின் பேராற்றலும்**

முயல் வடிவக் களங்கத்தைக் கொண்ட பிறைநிலா தவழும் உயரத்துடன் உள்ள பாலின் முட்கள் நிறைந்த குடம் போன்ற கனிகளும் தென்னை மரத்தின் தேங்காய்களும் சிதறும்படி இடிதாக்கி நீர் பருகும் மேகம்.

அம்மேகம் பெய்யும் மழையால் கெட்ட மருதநில சோலைகள் மட்டுமின்றி அண்டச் சுவரை இடித்து ஏனைய கடல் நீரையும் பருகுவது போல் உன் படை கலக்கும் குருதி பரந்து சிவந்த போர்க்களம் போல உன் மீன்கொடியை எட்டு திசையிலும் பறக்க விட்டாய்.

நீ பறக்கவிட்ட கயல் கொடியைப் போல் நீர் நிலைகளில் மீன்கள் பாய்கின்றன. வயல் நிறைந்த தமிழ் காக்கும் பாண்டியர் மகளே வருக வருகவே.

**55. யானைமுகக் கடவுள்**

உன் மணிமாலை அணிந்த கொங்கைகளின் பால் குடித்து கடைவாயில் ஒழுகும் பால் வெள்ளை அருவி போலுள்ளது. தந்தங்களில் கிம்புரிப்பூண் அணியப் பெற்றுள்ளது.

மலையைத் தகர்த்து அதிலுள்ள செந்தூளை நெற்றியில் பூசி ஏழுகடலையும் துதிக்கையால் உறிஞ்சிப் பிறகு பொழியும் மதநீர் கொண்டு வற்றிய கடல்கள் நிரம்புகின்றது.

வானிலுள்ள பிறைநிலா தன்னைத் தாக்கிடும் அங்குசம் என எண்ணித் துதிக்கையால் வானுச்சியைத் தடவுகின்றது. விண்மீன்களை முகபடாம் என எண்ணி மேக ஆடையை இழுத்து நெற்றியில் சுற்றிக் கொள்கிறது.

இத்தகைய செயல்களைச் செய்கின்ற யானைமுகக் கடவுளை ஈன்ற இளம் பெண் யானையே வருக வருகவே என்கிறார் குமரகுருபரர் இதனை



'கடம்பட்ட சிறுக்கண் பெருமங்கொலைய மலஇளங்

களிறுஈன்ற பிடி வருகவே

கற்பக அடவியில் கடம்பாடவிடப் பொலி

காயற்கண் நாயகி வருகவே' (பா-55,4)

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**56. விண்ணும் மண்ணும் சிவந்தன**

தாமரை போன்ற உன் திருவடிகளுக்கு செம்பஞ்சு குழம்பு பூசப்பட்டுள்ளது. சிவபெருமான் சடைமுடியில் உன் பாதச் சுவடுபட அழுந்தும்போது பிறைநிலா வாகிய வெண்ணிலா அக்குழம்பின் செவ்வொலியால் செந்நிலவாகத் தெரிகின்றது.

ஆகாய கங்கையானது செம்பஞ்சுக் குழம்பின் செல்லொளியால் சிவந்து செந்நிறமுள்ள சோனை நதி போல மாறிவிட்டது. பச்சை நிறமுள்ள மரகதக் கொடியே

விண்மீன்கள் நிறைந்த வானத்தில் ஐராவத யானையின் மேல் வீற்றிருக்கும் இந்திராணிக்கு வானளவு பரந்த பாக்குமரங்கள் வெண்சாமரம் வீசுவது போல் தோன்றும். இத்தகைய மலர்கள் பூத்துக்குலுங்கும் மதுரை நகரில் வளர்கின்ற பாண்டியர் மகளே வருக வருகவே.

**57. வையையின் நீர் வளம்**

மாலை அணிந்து குங்குமம் பூசிய கொங்கைகளை உடைய மகளிர் சிறு வீடு கட்டி விளையாடுவர். அவ்வீட்டு முற்றத்தில் இரத்தினக் கற்களைக் குவித்து வைத்தனர். அக்குவியல் சூரியத்தேர் செல்லும் ஆகாய வழியை அடைகிறது.

வழிமாறிய சூரியன் வெள்ளத்தில் மிதக்கும் தோணி போல் தெரிகின்றது. பிறைநிலா சிறு தோணியாகவும் விண்மீன்கள் சிறுமிதப்புகள் போன்றும் தோன்றும் படி வைகை நீர் மிகுந்து ஓடும்.



ஐராவதம் பொழியும் மதநீரும் ஆகாய கங்கையின் வெள்ளமும் சேர்ந்து வையை நீரை எதிர்கொள்கின்றன இவ்வெள்ளம் ஆகாய வெளியையும் கற்பகச் சோலையையும் கடந்து செல்கின்றது. வைகை பாயும் வளநாட்டுக்கு அரசே வருக! வருகவே.

**58. மணப்பந்தலும் மருத நிலமும்**

மகரந்தப் பொடி உடல் முழுதும் நிறைய தேனாற்றில் குடித்து மூழ்கி ஆறுகால் பறவைகளா வண்டுகள் விளையாடும் பிறகு மென்மை மாறாத தாமரை மலர்களின் வாசலாக உள்ள இதழ்களைத் திறக்கும் அங்கு இலக்குமி விரும்பிக் குடி இருப்பாள்.

தாமரை மலராகிய கோயிலை அமைந்திருக்கும் மருதநிலம் எனும் தச்சன் குலைகளுடன் கூடிய பாக்குமரங்களை நட்டு அழகுபடுத்தவும்

பெரிய சோலைப் பந்தலுக்கு மேகமாகிய துகிலை மூடவும் மணிகளைக் கோத்தது போன்ற நெற்கதிர்கள் எங்கும் நிறைக்கவும் பல்வேறு வண்ண நெற்பயிர்கள் பண்ணையாக காட்சி தரும் வயல்கள் நிறைந்த மதுரைக்கு அரசியே வருக மலையத்துவச பாண்டியன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே.

**59. அம்மையின் அழகு நலன்**

உன் கூந்தல் தகரச் சாந்தின் மனமும் அகிற்புகை மணமும் சேர்ந்து திசை யானைகளின் துதிக்கைத் துவாரங்களில் புகும். மகளிர் வெண் சாமரம் வீசும் போது எழும் சிறுகாற்றால் உன் சிற்றிடை தள்ளாடும்.

வண்டுகள் அடையும் தாமரையில் வாழும் கொடிபோன்ற திருமகளுக்கும் கலைவாணிக்கும் மயிலிறகின் அடியை ஒத்த பற்களில் இருந்து நகையாகிய ஒளி வீசுகிறாய். மகர மீன் போன்ற கரிய கண்களையும் கோவைப்பழம் போன்ற சிவந்த வாயினையும் உடைய இளம் மான் கன்றே வருக வருகவே.

**60. மீனாட்சியும் தமிழும்**

தொடுக்கப்படும் தெய்வத் தன்மை பொருந்திய பழம் பாமாலை ஆகிய வேதத்தின் பொருள் ஆனவளே மணம்மிக்க இனிய துறைகள் உள்ள தமிழின் சுவை ஆனவளே

ஆணவம் என்னும் கிழங்கைத் தோண்டி எறிந்த அடியவரின் மனம் என்னும் கோயிலில் ஏற்றப்படும் விளக்கே! வளரும் சிகரங்களைப் பெற்றுள்ள இமயமலையில் விளையாடும் இளைய யானையே

கடலை ஆடையாகக் கொண்ட பூமிக்கு அப்பாற்பட்டு விளங்கும் சிவபெருமான் தன் உள்ளத்தில் அழகு பொங்க எழுதிப் பார்க்கும் உயிர் ஓவியமே

வண்டுகள் மொய்க்கும் மலர்கள் சூடிய கூந்தல் காட்டுக்கு உரிய இளவஞ்சிக் கொடியே வருக வருகவே.

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்

தொடையின் பயனே நறைபழுத்த

துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்

சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்தில் அழகு
ஒழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக்கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

**61. உலகின் மூலப்பொருள்**

தேன் நிறை மண் மலர்களைச் சூடிய கூந்தலை உடைய பெண் யானையே வருகவே முழுமை பெற்ற அறிவின் பெருக்கமே வருகவே! பிறைநிலா சூடிய பரம்பொருளின் மூன்று கண்களுக்கும் விருந்தானவளே வருகவே அயன் என்னும் அழித்தல் காத்தல் ஆக்கல் என்னும் மும்மூர்த்திகளுக்கும் முதல் ஆனவளே வருகவே வித்தின்றி விளைந்த பரமானந்தமே வருகவே.

பழைய வேதங்களின் தோற்றமே வருகவே அருள்கனிந்த கொடியே வருகவே அடியவரின் பிறவித் துன்பம் போக்கும் மருந்தே இளங்குழவியாக மழலை பேசும் இளங்கிளியே வருகவே.

**14.6.7. அம்புலிப் பருவம்**

**பருவம் - 15ஆம் மாதம்**

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் ஏழாம் பருவம் அம்புலிப் பருவம். இது சாம, தான, பேத, தண்டம் என்ற முறைகளில் அம்புலியை குழந்தையோடு விளையாட அழைத்தல் அம்புலிப் பருவம் அம்புலி ஆடவாவே எனும் முடிவிலமைந்த பாடல்கள் அமையப்பெற்றவை.



**62. குறையுடைய சந்திரன்**

அம்புலியே! கற்கண்டாய் இனிக்கும் மழலை பேசும் அன்னை மீனாட்சி நீ சக்திகளுக்கு அப்பாற்பட்ட வடிவம் என கலைகளும் மறை நூல்களும்

குறிப்பதைக் கண்டோ அல்லது நீதான் முதல்வன் என தெரிந்தோ மலையத்துவ பாண்டியனின் குல முதல்வன் என எண்ணியோ ஈசன் சடைமுடியில் உனை சூடினான் என்று கருதியோ

திருப்பாற்கடலில் திருமகளுடன் ஒருங்கே தோன்றினாய் என்றோ அரசியாகிய மீனாட்சி அம்மையால் நீ அம்புலீ ஆடவா என அழைக்கப்படுகிறாய்.

இப்போது உனக்கு கிடைத்தற்கு அரியது பொன்மலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானின் இணையான மாணிக்கவல்லியுடன் அம்புலீ நீ விளையாட வருவாயாக.

**63.** அம்புலியே சாறு பிழிந்து குடித்தபின் எறிந்த சக்கை நீ, கொடிய நஞ்சுடைய இராகு கவ்வித் துப்பிய எச்சில், பதினாறு கலைகளால் நீ களங்கத்தை மறைப்பவன், தேயும் காசநோய் உள்ள உன்னை ஒரு நாள் பார்க்கவும் முடியாது என மக்கள் இகழ்வர். விண்மீன்களும் உன்னைப்போல் பாவம் செய்த அனைவரும் பாவம் தீர்க்கும் தலம் அன்னை மீனாட்சி வீற்றிருக்கும் மதுரையே.

பொங்கிவரும் வெள்ளத்தால் கற்பகச் சோலையையும் அழிக்கும் ஆற்றல் பெற்ற வைகை ஆற்றில் நீராடும் மீனாட்சியாகிய பெண்யானையுடன் நீ அம்புலீ ஆட வருவாயாக.

**64. சாம முறையில் நிலவை அழைத்தல்**

காய், பழம் போன்றவற்றின் கீற்று போல பிறை நிலவாக இருக்கும் போது அம்மையின் ஒளிவீசும் நெற்றியைக் கவர்ந்தாய் கெண்டை விழி மகளிர் தம் திருமணம் நடைபெற உன்னைத் தொழும் போது தொழு எருவையும் சேர்த்து படைப்பர்.

அமுதகலசம் உடைந்து ஊற்றிப் பரவியதால் நீ முழு வெண்மையுடைய நிலவானாய் அம்மையின் முக அழகைக் கவர்ந்தாய் சிவனின் சடை முடியில் கங்கை ஆகிய சக கிழத்தியுடன் நீ இருக்கிறாய் என மறவாதே இதனை மறந்து உன்னை விளையாட அழைப்பது அன்னையின் பெருங்கருணை அல்லவா.

**65. மீனாட்சியே அடைக்கலம்**

நிலவே நீ வானிலேயே இருந்தால் ராகு கேது ஆகியவற்றால் விழுங்கப்பட்டுத் துன்பமடைவாய் சூரிய மண்டல ஒளியில் உன் ஒளி மங்கிவிடும். சிவனின் சடைமுடியில் இருந்தால் அங்குள்ள பாம்புக்கு அஞ்சி தூங்க மாட்டாய் மேலும் பார்வதி தேவியால் வெறுக்கப்படுவாய் எனவே எம் அரசியாகிய மீனாட்சி அன்னையைச் சரண்புகுவாயாக அவ்வாறு வந்தால் அகில உலகங்களையும் நீ பெறுவாய்.

**66. நிலவுக்கு ஒளி தருபவள் அன்னை**

அண்டத்திலுள்ள உலகங்களில் எல்லாம் அன்னையின் புகழ் ஊடுருவி நிறைந்துள்ளது. அப்புகள் ஒளியில் சிறிது அள்ளிக்கொண்டு நீ ஒளிர்கின்றாய். அன்னையின் கடைக்கண் பார்வை பெற்றமையால் நீ குளிர்ந்த ஒளி பெற்றாய்.



நீ குளிர்ச்சி பெற்றதால்தான் பூமியில் பயிர்கள் செழித்து வளர்கின்றன. அதற்கான சக்தியை உனக்கு ஈன்றவள் அன்னையே. உனக்குகென தனியான ஒரியல்பு இல்லை என்பதை மதிக்கடவுளே அறிவாயாக என்கிறார் குமரகுருபரர். இதனை,

எண்ணில்பல புவனப்பெருந் தட்டை ஊடுருவி
இவள்பெரும் புகழ் நெடுநிலா
எங்கணு நிறைந்திடுவது அங்கதனின் மெள்ளநீ
எள்ளளவு மொண்டுகொண்டு
வெண்ணிலவு பொழிவது கிடைத்தனை மடுத்திவள்
விழிக்கடை கொழித்த கருணை
வெள்ளந் திளைத்தாடு பெற்றியால் தண்ணளி
விளைப்பதும் பெற்றனை கொலாம்
மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது உன்னிடத்து அம்மை
வைத்திடுஞ் சத்தியேகாண்
மற்றொரு சுதந்திரம் நினக்கென இலைகலை
மதிக்கடவுள் நீயுமுணர்வாய்
அண்ணலங் களியானை அரசர்கோ மகளுடன்
அம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (பா-66)

எனும் பாடலடிகள் உணர்த்தும்

**67. குறைகளைக் காணாத மீனாட்சியம்மை**



இந்திரனும், ஐராவதமும் முன்பு பெற்ற சாபமும் தமிழ்வளர்த்த கூன்பாண்டியனின் வெப்பு நோயும் வளைந்த முதுகும் மதுரை மாநகரால் தீர்ந்தன. சிவன் ஆட்சி செய்யும் துவாத சாந்தத்தலம் மதுரையம்பதி புகழ்பெற்ற இம் மதுரைக்கு நீ வந்தால் உன் பாவங்கள் விலகும். அடியவர் மனம் உருகி வழிபடும் அன்னை மீனாட்சியுடன் நீ விளையாட வருவாயாக வியாழனுக்கு நீ

செய்த குற்றமும் உன் மாமனார் இட்ட சாபமும் உன்னுடைய நரை, திரை கடன் இவையும் நீங்கப் பெறுவாய்.

**68. யானை உரி போர்த்த பெருமான்**

கொடிய களிற்றைக் கொன்று அதன் தோலை ஆடையென அணிந்தவன் சிவபெருமான். அவர் சடைமுடியில் நீ இருந்து மகளிர் தளிர் விரல்களால் தடவும் போது அவர்களுக்குத் துயர் செய்வாய் செம்பஞ்சு கொண்டு அழுத்தினாலும் துடிப்பாய் சீறடிகளை உன் ஒளியால் சிவந்திட செய்வாய்.

அன்னை மீனாட்சி உன் தவறை யெல்லாம் கருதாது உன்னை விளையாட அழைக்கின்றாள் தூணில் வெளிப்பட்ட நரசிம்மனின் மகனாகிய மன்மதனின் வெண்கொற்றக் குடையான உன்னை அழைக்கின்றாள்.

மன்மதனைப் போன்றே கரும்பு வில், மலரம்பு, மீன்கொடி இவற்றைப் பெற்றுள்ள அன்னையுடன் விளையாட வருகவே.

**69. நிலவின் குறையும் அன்னையின் பெருமையும்**

அமுதம் பொழியும் உன்னை குல முதல்வராக பாண்டியநாடு பெற்றுள்ளது. அப் பாண்டிய நாட்டின் குலக்கொழுந்து மீனாட்சி அம்மையோடு மகிழ்ந்து கலந்திருப்பாயாக உண்ணும் தன்மையுள்ள அமுதக்கலையை இழந்துவிட்டு உன்னைத் தொழும் மகளிர் படைக்கும் புதுக்கூழுக்கு ஏங்குகிறாய்.

இவையெல்லாம் நீங்கி அருள் நிறைந்த அன்னையுடன் விளையாட வருவாய்.

**70.** கார்மேகக் கூந்தலை உடைய அன்னை மீனாட்சி உன்னை விளையாட வருக என அழைத்த போதும் நீ வராமல் இருப்பதற்காக சினம் கொள்ளக் கூடும். அம்மையின் ஒளிமுகம் அழகைக் காண நாணியும் ராகு கேது பாம்புகளுக்கு அஞ்சியும் வராதிருக்கலாம்.

நீ தாமதத்திற்கு அம்மையிடம் சமாதானம் கூறி உன்னைத் தப்ப வைத்திருக்கிறோம் மீண்டும் நீ காலம் தாழ்த்தினால் அன்னையின் சினத்திற்கு ஆளாவாய்.

மதுரையின் மாட மாளிகைகளில் கட்டப்பட்ட கொடிகள் வானுலகம் வரை பறக்கின்றன. அவை நகில் ஏந்திய பூங்கொடி போன்ற வான் மகளிர் கூந்தல் தடவி நெற்றி வியர்வைத் துடைகின்றன. இதுவே தக்க சமயம்.

உன்னை ஏவி அழைக்கும் மதுரை அரசி மீனாட்சியுடன் விளையாட அம்புலியே வருக.

**71. மறைதொழும் அன்னை**

ஏட்டில் எழுதப்படாத வேதத்தின் உச்சியில் இருந்து ஆட்சி செய்பவை அன்னையின் திருவடிகள் உன் இதயத்திலும் இருப்பதாகக் கருதுவர்.

ஐந் தொழில் நாடகத்தை நடத்தும் பெருமான் உன்னையும் கங்கையோடு சேர்த்து தன் சடைமுடியில் வைத்துள்ளார். மீனாட்சி அம்மையின் உள்ளம் மகிழ்ந்தால் அதுவும் உன் பேறாகும்

யாழினை மீட்டி பெண்கள் இசையை எழுப்பும் போது குங்கும மரங்கள் மென்மையான மலர்களைத் தூவுகின்றன. செழித்து வளர்ந்த கோவில் மரங்கள் பொன்முடிப்பு போன்று கொத்தாக மலர்களைப் பொழிகின்றன.

இத்தகு வளமதுரை அரசி மீனாட்சி அம்மையுடன் அம்புலி விளையாட வருகவே.

ஏடகத் தெழுதாத வேதச் சிரத்தரசு
இருக்குமிவள் சீறடிகள் நின்
இதயத் தடத்தும் பொலிந்தவர் திருவுளத்து
எண்ணியன் றேகபடமா
நாடகத்து ஐந்தொழில் நடிக்கும் பிரான் தெய்வ
நதியொடு முடித்தல் பெற்றாய்
நங்கையிவள் திருவுள மகிழ்ச்சிபெறில் இதுபோலொர்
நற்றவப் பேறில்லைகாண்
மாடகக் கடைதிரித்து இன்னரம்பார்த்துகிர்
வடிம்புதை வரும் அந்நலார்
மகரயாழ் மழலைக்கும் அரவங்கள் நுண்டுகில்
வழங்கக் கொழுங்கோங்குதூங்கு
ஆடகப் பொற்கிழி அவிழ்க்கு மதுரைதிருவொடு
அம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே.

### 14.6.8. அம்மானைப் பருவம்

#### பருவம் மூன்றாம் ஆண்டு

பெண்பாற் பிள்ளைத் தமிழினுள் பத்தனுள் எட்டாவது பருவம் அம்மானைப் பருவம் இதனை ஈற்றடி அம்மானை ஆடி அருளே என அமையும். அம்மானை என்பது பெண்கள் விளையாடும் ஒரு வகை விளையாட்டாகும் இது சந்த ஆசிரிய விருத்தத்தில் பாடப்பெறும்

**72. வையை பாயும் பாண்டிய நாடு**

நிறைந்த மதநீர் பெருகி ஒழுகும் யானையின் பெரிய வயிற்றை நிரப்ப உணவை பெரிய கவளங்களாக உருட்டி எரிவது போலவும் கலைமையில் உள்ள அழுத்தத்தைப் பெற கூச்சலிடும் தேவர்க்கு அதை பிரித்தெடுத்து எரிவது போன்றும்.

முத்துப் பதித்த பந்தினை ஒவ்வொன்றாக எறிந்து விளையாடுவது போன்றும் மணம் வீசும் தளிர்க்கை போன்ற தாமரையில் தூங்கி மேலெழும் அன்னப் பறவை கூட்டம் போலவும்

கடுமையான பாறைமேல் செந்நிறப் பூக்களை அலைக்கையால் அழைப்பது போலவும் வெண்மையான அருவிகள் நிறைந்து ஓடிவரும் துறைகளை உடைய வையை ஆற்றுத் தலைவியே. சிவனின் ஒரு பாகமே நீ அம்மானை ஆடுவாயாக.

**73. புராண நிகழ்வும் இயற்கைக் காட்சியும்**

பிறைநிலா தரித்த சிவபெருமான் மேல் மணப்பந்தலில் எறிந்த சோற்றுருண்டையை மொய்க்கும் வண்டுகள் போலவும், வானில் உலவும் நிலவில் மான்குட்டி போலவும் அன்னை மீனாட்சியே நீ அம்மானை ஆடும் போது

படைக்கருவி போல் விளங்கும் உன் கயல் கண்கள் பாய்ந்து எழுகின்றன. கொலை உடையை யானைக் கூட்டம் போன்ற மேகக் கூட்டத்தை முட்டி விளையாடும் யானை குட்டி போன்ற விநாயகர் கடைவாயை அசைத்து நிற்கவும் ஐந்து மலரம்புகளைக் அம்புகளைக் கரும்பு வில்லில் ஏந்தியபடி நிற்கும் அபிடேக வல்லியே அம்மானை ஆடுக.

**74. நிறம் மாறும் அம்மானைக் காய்கள்**

தேனூறும் தாமரை போன்ற சிவந்த கைகளில் இருக்கும் போது அம்மானைக் காய்கள் சிவந்த நிறமுள்ளன. அமுதம் சுரக்கும் இடக்கண் பார்வையால் அக்காய்கள் கருப்பு நிறமாகின்றன.

நடுவிலுள்ள முகமதியின் முத்துப்பல் ஒளியில் அக்காய்கள் வெண்மை நிறமாகின்றன. அம்மானை ஆடும் தரமான முத்து அத்விகம், இராசதம், தாமதம் எனும் மூன்று குணங்களையும் காட்டும்.

அம்மை அப்பராக நீவிர் இருவரும் துவாத சாந்தம் என்னும் அண்டப் பெருவெளியில் எழுந்தருளும் போது யோன நித்திரையிலுள்ள அடியார்கள் உன்னை வணங்குவா் அடியவா் மனம் உருகச் செய்பவளே அம்மானை அடுகவே.

கள் ஊறு கஞ்சக் கரத்தூறு சேயொளி

கலப்பச் சிவப்பூறியும்

கருணைப் பெருக்கூற அமுதூறு பார்வைக்
கடைக்கண் கறுப்பூறியும்
நள் ஊறு மறுவூற் அகற்றுமுக மதியில்வெண்
ணகையூறு நிலவூறியும்
நற்றரள வம்மனையொர் சிற்குணத் தினைமூன்று
நற்குணங் கதுவல் காட்ட
உள் ஊறு களிதுளும் பக்குரவர் இருவீரும்
உற்றிடு துவாத சாந்தத்
தொருபெரு வெளிக்கே விழித்துறங் குந்தொண்டர்
உழுவலன்பு என்புருக நெக்கு
அள் ஊற வுள்ளே கசிந்தூறு பைந்தேறல்
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
அம்மானை யாடியருளே.

**75. அம்மானைக் காய்களின் சிறப்பு:**

காந்தள் மலர் ஒத்த தளிர்க்கரங்களில் மாணிக்கத்தால் ஆன அம்மானைக் காய்க்கு முன்னர் முத்தால் ஆனகாய் செல்கின்றது. முத்துக் காய்கள் பின்னர் பின் மாணிக்கக் காய்கள் செல்லது தன்மையாள் தாமரையைச் சந்திரன் சேர்ந்து செல்லக் கண்டு மனம் புழுங்கிய கதிரவன் பின் தொடர்ந்து செல்வது போல் தோன்றும்.

ஒலிக்கும் அருவி மலையின் முத்து, வைரம் போன்றவற்றை வாரிக்கொண்டு வருகின்றது பின் அலைக்கைகளால் அள்ளி வீசுகிறது. இதைக் கண்ட ஐராவத யானை பிளிறி ஓடுகின்றது.

இத்தகைய அலைகள் நிறைந்த வையை ஆறு பாய்கின்ற மதுரையின் அன்னப் பெடையே அம்மானை ஆடி அருள்வாய்.

**76. விண்ணகரை விஞ்சும் பாண்டியநாடு**

அம்மையே உன் தோழியர் அம்மானைக் காய்களை இடமும் வலமுமாக எறிந்து விளையாடுகின்றனர் அவ்வாறு வீசித் திரும்பி நிமிர்வதற்கு முன்பே ஓராயிரம் அம்மானைக் காய்களை எடுத்து மேலே வீச அலை வரிசை வரிசையாக வானுக்கு செல்கின்றன.

அவை நீ அண்டத்தில் நிலை நிறுத்திய கோள்கள் போலுள்ளன.

வண்டுகள் மலர்களில் மொய்த்து ஆர்த்தெழுந்து பறப்பதால் மகரந்த பொடிகள் எங்கும் நிறைந்து இருள் மறைப்பது போல் தெரிகின்றது. இத்தூசி படலம் போல் உள்ளது. இதனைக் கண்டு போரோ என அளகாபுரி அமராபுரி பட்டினங்கள் அஞ்சும் வண்ணம் செய்யும் மதுரை அரசியே அம்மானை ஆடுக.

**77. ஒப்புயர்வற்ற அன்னை மீனாட்சி**

உன் நெருங்கிய தோழியாகிய திருமகள் உன்னுடன் அம்மானை ஆடும்போது நீ தூக்கிப்போடும் காய்களைப் பிடிக்க இங்கும் அங்கும் ஓடுகிறாள் ஆனால் நீயோ நின்ற இடத்திலிருந்து ஆடுகிறாய். உன் அம்மானை விளையாட்டுத்திறமையைக் கண்டு மகிழ்ந்த ஈசன் சடை முடியை அசைக்க கங்கையின் நுரை பொங்கி எழுந்தது. அதுவும் அம்மானை ஆடுவது போல் தெரிந்தது

மதுரை பொலிவு கண்டு தேவருலக சிற்பி விசுவகர்மன் வியப்படைவான். வெண்ணிறமுள்ள மேடைகளும் முத்தினால் செய்த மாடங்களும் நிலாவென ஒளிவீசும்.

இசையானைகள் அனைத்தும் ஐராவதத்தை ஒத்து காணும்படியான மதுரை மாநகர அரசியே அம்மானை ஆடியருள்க.

**78.உலக அசைவுகள்**

உன்னால் வீசப்படும் முத்துகள் பதித்த அம்மானைக் காய்கள் தாமரை ஒத்த கரங்களின் மனத்தைப் பெற்றன. கூந்தலில் சூடிய மலர்களை மொய்க்கும் வண்டுகள் உன் கண்களாகிய கருவண்டுகளைக் கண்டு மயங்கும்.

மாணிக்கத்தால் ஆன காய்கள் குயிலோசை போன்ற உன் குரலிசை கேட்டு உருகி நீர்த்துளி சிந்தும்.

பவழத்தால் ஆன அம்மானை காய்கள் உன் கைகளின் நிறத்தை கவர்ந்து செல்ல இங்கும் அங்கும் போவதும் வருவதுமாக இருக்கும்.

அத்தனாகிய எம் இறைவன் சிவபெருமான் மனதில் எழுதப்பட்ட உயிர் ஓவியமே அம்மானை ஆடியருள்க

**79. வானவில்லாகும் அம்மானைக் காய்கள்**

விளரிப் பண்ணில் பாடும் வண்டுகள் மொய்த்து முழங்கும் கூந்தலை உடைய கொடி போன்றவளே நீ வீசிய அம்மானைக் காய்கள் வானத்தில் வரிசையாக எழும்பும். அவை வானத்தையே ஆடையாகப் போர்த்திய சிவபெருமானின் மார்பில் முத்துமாலை போல தோன்றும்.

பல வண்ணங்களில் வீசப்படும் அம்மானைக் காய்கள் வானில் தங்கி வானவில் போல் காட்சி தரும் உள்ளம் உருகிக் கசிந்து பேரின்பம் பெற விரும்பும் அடியவர்களிடம் கருணை காட்டும் அருட்கனியும் கனியே அம்மானை

ஆடியருள்வாயாக என்கிறார் குமரகுருபரர். இதனை, 'அளி கனியத் திருவருள் கனியும் கனி

ஆடுக அம்மானையே

அழகு தழைந்த கல்யாண சவுந்தரி

ஆடுக அம்மானையே' (பா 79, 4)

எனும் பாடல் அடிகள் உணர்த்தும்

**80. முழுமுதற்பொருள் சொக்கநாதரே**

அம்மானை விளையாட நீ எடுத்த காய்களில் உன் முத்துப்பல் ஒளி படிந்துள்ளது என்றும் உன் கைகளின் சிவப்பில் அவற்றைக்கண்டு அவை மாணிக்கத்தால் செய்தன என்றும் கூறுவர்.

உன் கருவிழிப் பார்வை பட்டதால் கருப்பாகத் தெரியும். எனவே அவற்றை கரு மணியாள் செய்தன எனக் கூறுவர். இவ்வாறு மனம் போன போக்கில் பிறர் பேசுவன எல்லாம் தம் சமயத்தில் நிறைவுறாத பிற சமயத்தால் மயங்கிப் பேசுவனவாகும்.

தாங்களே முழுமுதற்பொருள் என்று கூறும் தேவர்களுக்கு எல்லாம் தாயாகிய சிவபெருமான் மனைவியே அம்மானை ஆடியருள்க.

**81. தூது செல்லும் பறவைகள்**

மிக்க ஒளி உடைய பச்சை மரகதம், நீலநிறமணி, வெண்மை நிற முத்து என்பவற்றால் அமைந்தன அம்மானைக் காய்கள். அக்காய்களை வான் நோக்கி வீசி மீனாட்சியம்மை அம்மானை ஆடுகிறாள் நெற்றிக்கண்ணை உடைய ஈசனிடம் அம்மை தூது விட்டவை போலத் தெரிகின்றன.

மரகத அணி அம்மை கையிலுள்ள பச்சைக் கிளி போன்றும், நீலமணி கருங்குயிலையும், முத்து அன்னப்பறவை போலவும் காட்சி தருகின்றன.

சேறு நிறைந்த வயலில் பெடையுடன் அரச அன்னம் தூங்கும் மதுரை நகர் அரசியே அம்மானை ஆடியருள்க.

**14.6.9. நீராடல் பருவம்**

**பருவம் ஐந்தாம் ஆண்டு**

பெண்பால் பிள்ளைத் தமிழின் ஒன்பதாம் பருவம் நீராடற்பருவம் பாட்டுடைத் தலைவியும் சிறுமி தோழியர் புடைசூழக் குதூகலம் கொண்டு வாசனை கமழும் நறு நீரில் குளித்தலைப் பாடுவது.

**82. அம்மையின் அழகும் ஆற்றலும்**

அள்ளி வழங்கும் கரங்களில் அணிந்த சங்கு வளையல்களோடு பெருகி மடங்கி எறியப்படும். அலைகளில் சங்குகள் முழங்குகின்றன. மதர்த்த செவ்வரி படர்ந்த கயல் கண்களோடு தடாகத்து கயல்மீன்கள் புரள்கின்றன.

மலர்களின் மகரந்தத்தை உண்டு தம்கூட்டத்தோடு உன்கூந்தலில் மொய்க்கும் கருவண்டு கூட்டத்தோடு மேகக் கூட்டமும் எழுகின்றது அரிதாக வரும் புதிய விருந்தினரை இல்லத்திலுள்ளோர் வரவேற்று தழுவி மகிழ்வது போல்

சிறுகண்களையும் பெரிய துதிக்கையும் உடைய யானைகளோடு வானுலகில் ஐராவதம் என்னும் வெள்ளை யானையுடன் மோதவிடுவாய்.

எட்டுதிசை யானைகளையும் பந்தாடுவது போல தூக்கி எறிந்து விளையாடும் வையையின் பெரிய நீர் துறையில் புது வெள்ளத்தில் மூழ்கி நீராடி அருள்வாய். காளைக் கொடி உடைய சிவபெருமானுக்கு மீன் கொடியை அழித்தவளே நீராடி அருளுக.

**83. நீராடலால் ஏற்படும் மாற்றங்கள்**

சிவந்த கைகளில் அணிந்த வளையணிகள் ஒலி எழுப்பவும் புன்னகைக்கும் பவழ இதழ்கள் வெளுத்துப்போகவும் நீல நிற கருங்குவளை மலர் போன்ற கண்கள் செங்குவளை மலர்போல மாறவும் கருமணல் போன்ற கூந்தல் சரியவும்.

கரைகள்வரை பொங்கி வரும் நீரில் மூழ்கி நீந்தி விளையாடுவது, கங்கை ஆறு சிறிய துளியாகி ஆனந்த பெருங்கடல் ஆகிய சிவபெருமான் சடைமுடியில் அடங்கிக் கிடப்பதற்கு ஒப்பாகும்.

அலைகள் கரை மோதும் வளம் மிகுந்த மருத நில வயல்களில் வேலை செய்யும் இளம் பெண்கள் தங்கள் கொங்கைகளின் பூசிய சந்தன குழம்பை கழுவிவிட வயலின் கருஞ்சேறு செந்நிறமாகி மணம் பரப்பும் வண்ணம் பெருகும் வைகை.

வேகவதி எனப்படும் அந்த வையை ஆற்றின் பொங்கும் புதுப்புனலின் நீராடி அருள்வாய்.

**84. வைகைக்கு ஈடாகா நதிகள்**

இசை போலும் கிளி மொழி பேசும் பாவை உன் மேனியில் அழகிய பச்சை நிறம் விரிவதால் அழகும் குளிர்ச்சியும் மிக சிவந்த பவளக்கொடியும் பச்சை நிறமாக மாறுகிறது. வெண்ணிறமுள்ள முத்துக்களும் மரகதமணி போலப் பச்சை நிறமாகத் தெரியும். குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையில் தங்கியுள்ள வெண்ணிற அன்னப்பறவைகள் மழை மேகம் கண்ட மகிழ்ச்சியில்

தோகை விரித்தாடும் மயில் போலாகும் எல்லாப் பொருளும் உன் அழகிய வடிவமே என மறைகள் கூறும் உண்மைவெளிப்படும்.

மகளிர் பூசிய செம்மைநிற சாந்தும் கரிய கத்தூரிக் குழம்பும் வெண்ணிறக் கற்பூரம் ஒருசேரக் கலந்து ஓடுவது கங்கை, யமுனை, சரஸ்வதி என்றும் மூன்று நதிகளும் கலந்து ஓடுவது போல் தோன்றும். அனைத்து நதிகளும் சேர்ந்து விளையாடுவது போலத் தோன்றும் வையை புதுப்புனலில் நீராடி அருள்வாய். இதனை குமரகுருபரர்,

பண்ணாறு கிளிமொழிப் பாவைநின் றிருமேனி
பாசொளி விரிப்ப வந்தண்
பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்ப்
பருமுத்த மரகதமாய்த்
தண்ணாறு மல்லற் றுறைச்சிறை யனங்களி
தழைக்குங் கலாமஞ்ஞைபாய்ச்
சகலமுந் நின்றிருச் சொருபமென் றோலிடுஞ்
சதுமறைப் பொருள் வெளியிடக்
கண்ணாறு குழலியர் குடக்கொங்கை பொங்குசெங்
களபமுங் கத்தூரியும்
கர்ப்புரமு மொக்கக் கரைத்தோடி வாணியுங்
காளிந்தி யுங்கங்கையாம்
விண்ணாறு மளவளாய் விளையாடு வையைபுது
வெள்ளநீ ராடியருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடியருளே

எனப் பாடுகின்றார்.

**85. பாற்கடலைக் கடைதல்**

மலர்களில் தேன் உண்டு வண்டுகள் அம்மலரிலேயே தங்கும் கூந்தலை உடைய தோழியர் குங்குமக் குழம்பு கலந்த நீரைப் பீய்ச்சி அடிப்பதால் சிறுதுளிகள் எங்கும் பரவுகின்றன. அவை வானம் எங்கும் பரவி மேரு மலையை வில்லாக உடைய சிவபெருமானின் உடையாக உள்ள எட்டுத் திக்கையும் நனைத்துச் செவ்வண்ணம் உடைய அவரோடு மஞ்சள் நீர் விளையாட்டு ஆடுவது போலுள்ளது.

தேங்கிக் கிடக்கும் மலையிலுள்ள மழைவெள்ளத்தில் மலைப்பாம்புகள் வளைந்துச் சுற்றி இழுக்க சினம் கொண்ட யானைகள் சூழலில் சிக்கி இருக்கும் காட்சி மந்தரமலையை மத்தாக்கி வாசுகிப் பாம்பைக் கயிறாக்கி பாற்கடலைக் கடைந்தது போலிருந்தது இத்தகைய வையைப் பெருவெள்ளத்தில் மூழ்கி நீராட்டி மகிழ்வாய்.

**86. மீனாட்சியும் கலைமகளும்**

நீருக்குள் புகுந்து மூழ்கி விளையாடும் நீர்த்துறையில் தமிழ் இலக்கியங்களும் தொன்மையான வேதங்களுக்கும் ஆதியான கலைமகள் என்னும் முன் தோழியுடன் நீ நீராடி மகிழ்கிறாய். அப்போது உன் தோழி என்றெண்ணி நீ அன்னப்பறவையை பிடிக்கின்றாய். உன் சிலம்பின் இசையையும் இள நடையையும் அன்னம் கவர்ந்துகொண்டதால் நீ அதனைப் பிடிப்பது போலத் தோன்றுகிறது.

பெரிய அலைகளுடன் ஓடும் கங்கை நதியை முத்துப் பந்தாடவும் ரத்தினக் கற்களால் அமைந்த கழற்சிக்காய் ஆடவும் பந்தயம் கட்டி அணைப்பது போல வைகை தன் நெடிய அலையாகிய கையால் அழைப்பது போலத் தோன்றும் இத்தகைய தெய்வத்தன்மை வாய்ந்த வகையில் நீராடி அருள்வாய்

**87. மகளிரின் நீர் விளையாட்டு**

தங்கக்குடம் ஒத்த கொங்கைகள் உடைய தோழியரோடு தூய்மையான நீரில் விளையாடும்போது அன்னையே நீ பொன்னிற மணப்பொடியைத் தூவுவாய் அவ்வாறு நீ செய்யும் போது வானம் செந்நிறமாய் காட்சிதரும். உன் கார்மேகக் கூந்தலின் பூக்களில் தேன் குடித்து வண்டுகள் ஒலிக்கும் இக்காட்சி சிவனின் திருமேனியில் உன் கண்களாகிய வண்டுகள் மொய்ப்பது போல் தோன்றும்.

இளைஞரின் காமஇச்சையைத் தூண்டுவது போல பெண்கள் தம் கூந்தலுக்கு அகிற்புகை இடுவர். ஆவைப்பட்டு வாழைக்கணிந்து தேன் எங்கும் பரவும் இத்தனை வளம் நிறைந்த மதுரையின் அரசியே புது நீரில் ஆடி அருள்வாய்.

**88. ஈசன் பிட்டுக்கு மண் சுமந்தான்**

வெள்ளம் பாய்ந்தோடு வையைத் துறையில் இவ்விடம் ஈசன் பிட்டுக்கு மண் சுமந்த இடம் என உன் தோழி கலைமகள் கூறும் போது நீ மனம் உருகினாய். இருவிழிகள் சிவக்க ஆனந்தக் கண்ணீர் பெருக திகைத்தாய் உன் கண்ணீர் பெருக்கால் வையையில் மீண்டும் வெள்ளம் வந்தது என்றால் சிவபெருமானை மீண்டும் மண் சுமக்க வைத்தல் தவறன்றோ?

தேன்மொழி மலர்கள் உடைய கற்பக இளைகளில் உள்ள பூந்தாதுகளில் திளைத்த நான்கு தந்தங்கள் உடைய ஐராவத யானைத் தன் பிடியோடு சேர்ந்து நீர் விளையாடும்.

அவ்வாறு தேனருவி போல் பாயும் சோலைகள் சூழ் நான்மாடக் கூடலில் வரும் வகையில் நீ நீராடி அருள்வாய்.

**89. இமயத்தில் மீன்கொடி**



அலைகளுடன் மிக்க நீர் ஓடி வரும் வையை ஆற்றில் வண்டல் சேர்ந்து மேடாகும். அந்த மண்ணைக் கூடையில் அள்ளிச் சுமந்தவர் ஈசனாகிய சோமசுந்தரக் கடவுள் அம்மை மீனாட்சியின் கொங்கைகளில் பூசப்பட்ட குங்குமக்குழம்பு நீராடும் போது கரைந்து வண்டலாகி மேடு இடும்.

அவ்வாறு மணமிக்க குங்குமக் குழம்பு கரைந்து மேடு இட்டு ஆறு மேடானாற்போல் ஈசன் வந்தி ஒருத்திக்காக பிட்டுக்கு மண் சுமக்க வேண்டும். பாண்டிய மன்னன் எம்பெருமானை அடித்து வேலை வாங்க வேண்டும். ஈசன் மண் சுமந்த இடத்தில் நீ நீராடினால் அவ்விடம் குங்குமக் குழம்பால் மேடிடும் சிவன் மண் சுமப்பதால் கங்கையும் வருந்திச் சடையிலிருந்து நீங்கி விடுவாள்.

இமயமலையில் மீன் கொடி உயர்த்தியவளே புது நீரில் நீராடுவாயாக. பொருளை ஆகிய தாமிரபரணி ஆற்றுக்குத் தலைவனாகிய பாண்டியனின் பொற்பாவையே நீராடுவாயாக.

மறிக்குந் திரைத்தண் புனல்வையை
வண்ட லிடுமண் கூடைகட்டி
வாரிச் சுமந்தோர்க் கம்மைதுணை
மணிப்பொற் குடத்திற் கரைத்தூற்றும்
வெறிக்குங்குமச் சேறெக்கரிடும்
விரைப்பூந் துறைமண் போலொருத்தி
வெண்பிட் டிடவும் அடித்தொருவன்
வேலை கொளவும் வேண்டுமெனக்
குறிக்கும் இடத்திற் றடந்தூநீர்
குடையப் பெறின் அக் கங்கைதிருக்
கோடீ ரத்துக் குடியிருப்புங்
கூடா போலும் பொலன்குவட்டுப்
பொறிக்குஞ் சுறவக் கொடியுயர்த்தாய்
புதுநீ ராடி யருளுகவே
பொருநைத் துறைவன் பொற்பாவாய்
புதுநீ ராடி யருளுகவே.

**90. அன்னை மீனாட்சியின் தெய்வத் தோழியர்**

சொல்லுக்குத் தலைவியாகிய கலைமகளும், தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளும், தொடுத்த மாலையையும் இந்திராணி இட்ட நின் நெற்றித் திலகத்தையும், வில்லுடைய துர்க்கை உன் கொங்கைகளில் எழுதிய குங்குமக் கோலத்தையும் நீ நீராடும்போது வையை வெள்ளம் கொள்ளையிட்டுச் செல்கிறது. வெளிப்பட்ட வடிவழகு உன் இணையர் சிவபெருமானுக்கு விருந்தாக அமைகிறது.

கொடிபோன்ற மனைவி ரதியோடு மீன்கொடி உடைய மன்மதன் கையில் எடுத்த கரும்புவில்லும் இந்திரவில்லும் தோற்று உன்னை வணங்கும் புருவங்களைப் பெற்றுள்ள பொற்கொடியே. இமவான் மகளே புதுநீரில் ஆடி அருள்வாயாக.

**91. திருமகள் போல் மீனாட்சியம்மை**

வெண்ணிற அருவிகள் நிறைந்த இமயமலையில் வளரும் கூந்தலை உடைய இளம் பெண் யானையைப் போன்றும் கொற்கைத் துறைமுகத்தில் இறகுகளை விரித்து நீருள் விளையாடும் அன்னப் பெடை போன்றும்.

அமுதம் கடையும் போது பாற்கடலில் தோன்றிய தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் போன்றும், தெய்வீக கங்கையில் செம்பவழக் கொடி போன்றும் அன்னையே நீ விளங்குகின்றாய்.

வண்டுகள் தேன் சிந்தும் மணம்மிகு மலர்மாலை சூடிய பெண்களின் கூந்தலில் குடியிருந்து கொண்டு அவர்கள் கற்கும் குழலிசையும் கற்று தேவலோகக் கற்பகத்தரு மலர்களின் தேனை உண்ட இளம் பெண் வண்டுகளுடன் கூடிக்கலந்திடும்.

வரியை உடைய அவ்வண்டுகள் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த மதுரையின் அரசியே நீராடுக.

**14.6.10. ஊசல் பருவம்**

**பருவம் ஏழாம் ஆண்டு**

பெண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதிப் பருவம். ஆசிரிய சந்த விருத்தம் பத்துடையதாக ஊசல் ஆடியருளே என்று பாடலின் இறுதியில் அமையும். ஊஞ்சலாடுதல் என்ற பெண்கள் விளையாட்டை மேற்கொள்ள பாட்டுடைத் தலைவியை வேண்டுதல் ஊசல் பருவம் ஆகும்.

**92. அடியார் உள்ளம் அன்னையின் கோயில்**

ஒளிமிகு பவழக்கால் மீது அழகான வைரத்தால் இழைக்கப்பட்ட விட்டத்தைப் பொருத்தி அதன்மேல் குளிர்ந்த நிலவின் ஒளி போல முத்தால் செய்யப்பட்ட கயிற்றில் கட்டி அணிந்து கையால் அள்ளிக் கொள்ள எண்ணும்

சிவந்த பேரொளி பரவிட மாணிக்க மணிகள் பதிக்கப்பட்ட ஊஞ்சலில் ஆடுகின்ற உன் வடிவம் சூரிய மண்டலச் சுடர் போல் உள்ளது.

அமுத சுவை கனிந்த மகிழ்ச்சிப் பெருக்கும் கடல்பருகி கலக்கும் அருட் செல்வ மேன்மை அடைந்தவர்களின் உள்ளத்தாமரை என்னும் பூஞ்சேக்கையே உன் கோயில்

அங்கு பாடல்கள் என்னும் பறவை ஒலிகள் எடக்குடி கொண்டிருக்கும் சுந்தரவல்லியே பொன் ஊஞ்சல் ஆடி அருள்க. புனுகுநெய் அணிந்த சொக்கநாதரின் வடிவழகுக்கு ஏற்ற கொடி அனையளே பொன்னூஞ்சல் ஆடி அருள்க.

**93. உலகின் முழுமுதல் அன்னை**

பொழியும் நிலவொளி என விளங்கும் வெண்மையான முத்துமாலை ஆல விழுதுகள் போல் இளம் ஒளிக்கற்றைகளைப் பரப்புகின்றது. அத்தகைய முத்து ஊஞ்சலில் நீ ஆடுகிறாய்.

அக்காட்சி தாமரைமலர் எனும் இல்லத்தில் பழமறைநாயகி எனப் போற்றப்படும் கலைமகளின் வடிவமே நீதான் என்னும் வண்ணம் இருந்தது. சந்திர மண்டலத்து அமுதமென விளங்கும் அன்னையே.

மாணிக்க மணிகள் பதித்த மாடங்களின் மேல் மழை மேகம் தவழ்ந்து போவது சூரியன் மடியில் அவனுடைய திருமகள் யமுனை விளையாடுவதைப் போலிருக்கும்.

இத்தன்மையை, பொன்மதில்கள் சூழ் மதுரை திருப்பாவையே பொன்னூஞ்சல் ஆடி அருள்வாய்.

**94. மோன நிலையில் ஈசன்**

பசும்பொன் உருக்கி ஊற்றியது போல் ஒளியைப் பொழியும் பொன்னூஞ்சலை நீ உதைத்து விளையாடுகிறாய். உன் தளிர்ப்பாதம் பதிந்த அசோகமரம் தேன்நிறை மலர்களைக் கொட்டுகின்றது.

இக்காட்சி உன் சந்நிதியில் ஈசன் தன் உருவம் மறைத்து இருக்க அச்சமயத்தில் மன்மதன் அவர்மேல் மலரம்புகளைப் பொழிவதுபோல் தோன்றும்.

ஒளிபொழியும் செய்குன்றாகிய மாணிக்க மணிக் குன்றில் இளமதி எழுவது உன் திருமுக ஒளியை விரும்பி எரியும் நெருப்பில் சந்திரன் தவம் செய்வது போல தோன்றும். இப்பொலிவுடைய மதுரை மாநகரின் இளங்கிள்ளையே பொன் ஊஞ்சல் ஆடி அருள்வாய்.

**95. மதுரையின் குறிஞ்சி வளம்**

கங்கையை சடைமுடியில் கொண்ட சிவபெருமான் மனம் அசையும்படி நீ ஆடுகின்ற பொன் ஊஞ்சல் ஆடுகின்றது. பெருமானின் பார்வையில் நின் கடைக்கண்பார்வை நெக்குருகிப் போகிறது.

அப்பார்வை காளை வாகனமாகக் கொண்ட செந்நிறக் கண்களை உடைய சிவபெருமானின் மனமே ஊஞ்சலாகக் கொண்டு நீயாடுவதைப் போல் தோன்றும்.

பூமியைப் பிளந்த வேர்பலாவின் தேன் ஏழ் உலகங்களலும் பாய்ந்தாடும். தேன்பாயும் சோலைசூழ் மதுரை மாநகரின் நாயகியே பொன்னூஞ்சல் ஆடி அருளே.

**96. பூமியைத் தாங்கும் ஆதிசேடன்**

யாப்பு, தளம், சந்தம் எனும் பாடல் இலக்கணம் பொருந்த அம்மையே நீ ஊஞ்சல் ஆட மதுரை சொக்கநாதர் தம் திருமுடியை அசைக்கின்றார். அவர் சடைமுடியிலுள்ள பாம்புகளின் தலைவன் ஆதிசேடன் உலகத்தைத் தாங்கிய பாம்புகளின் தலைவன் ஆதிசேடன் உலகத்தைத் தாங்கிய அவனும் தலை அசைப்பதால் அண்ட சராசரமும் அசைந்தாடுகின்றது. கார் மேகம் போன்ற கூந்தலை உடைய, மணம் மிக்க மலர்கள் சூடிய மகளிர் தம் கூந்தலுக்கு அகிற்புகை வான் மண்டலத்து கதிரவனையே மறைக்கும்.

இவ்வாறு வளம்பொழியும் மதுரை மாநகருக்கு இளம்கிள்ளையே! பொன்னூஞ்சல் ஆடி அருள்க. என்கிறார் குமரகுருபரர் இதனை,

தேர்க்கோல மொடுநின் றிருக்கோல முங்கண்டு
சிந்தனை புழுங்கு கோபத்
தீயவிய மூண்டெழுங் காமா னலங்கான்ற
சிகையென வெழுந்துபொங்குந்
தார்க்கோல வேணியர்த முள்ளமென வேபொற்
றடஞ்சிலையு முருகியோடத்
தண்மதி முடித்ததும் வெள்விடைக் கொண்மணி
தரித்ததும் விருத்தமாகக்
கார்க்கோல நீலக் கருங்களத் தோடொருவர்
செங்களத் தேற்றலமரக்
கட்கணை துரக்குங் கரும்புருவ வில்லொடொரு
கைவிற் குனித்துநின்ற

போர்க்கோல மேதிரு மணக்கோல மானபெண்

பொன்னூச லாடியருளே

புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி

பொன்னூச லாடியருளே.

எனும் பாடலடிகள் உணர்த்தும்

**97. அன்னையின் போர்க்கோலம்**

அன்னையே நீ தேரில் எழுந்தருளியுள்ள அழகோடு உன் திருமேனி பூண்டிருக்கின்ற அழகுக் கோலத்தையும் கண்டு ஈசன் உள்ளத்தில் பொங்கி எழுந்த சினம் அடங்கி காமவேட்கைத் தீயாக எரிகின்றது.

சிவபெருமான் உள்ளம் உருகியது போலவே மேருமலையும் உருகியது. ஈசன் குளிர்ந்த பிறை நிலவை இருப்பதும் ஒளிவீசும் மணியைக் கட்டிய காளை வாகனமும் காதலைத் தூண்டுவதால் போர்க்களத்தில் பொருந்தாவாயின.

கார்மேக மென நீலகண்டனாய் சிவபெருமான் போர்க்குணத்துடன் நிற்கும்போது நெற்றி புருவமாகிய வில்லையும் கண்களாகிய மலரம்புகளையும் கொண்டு நிற்பதோடு அன்னையே நீ வில்லையும் வைத்துக் கொண்டு நிற்கிறாய். அப்போர்க்கோலமே பின்னர் மணக்கோலமாய் ஆனது. அவ்விதம் சொக்கநாதரை மணந்து கொண்ட பெண்ணே ஊஞ்சல் ஆடி அருள்வாயாக.

**98.** உலகளந்த திருமால் குழி விழுந்த கண்களை உடைய ஆண் குரங்கு அதிக பாரமுள்ள பலாப்பழத்தை நீர்க்குடங்களைக் கவிழ்த்து நீந்துவதுபோல் பிடித்துக்கொண்டு தாவும் வயல் மடையிலிருந்து மடியில் இருந்து நீர் வடிவதைப் போல அப்பலாப் பழங்களில் இருந்து தேன் பெருக்கெடுத்து ஓடும் சோலைகளில் கூரிய நகங்களுடன் கரிய விரல்களைக் கொண்டுள்ள மந்திகள் வேகமாகப் பாய்ந்து தாவிக் குதிக்கும். அதனால் மரக்கிளையின் கொம்புக் குத்திப் பிறை நிலவின் வயிறு கிழிந்து அமுதம் அருவி போல் பொழியும், இக்காட்சி திருமால் உலகளந்தபோது அவர் திருவடி வானில் பட்டு கங்கை நதி கிழிந்து பெருகியது போலுள்ளது இத்தகைய வளம் பொருந்திய மதுரைக்குத் தலைவியே பொன்னூஞ்சல் ஆடி அருள்க.

**99. அன்னை மீனாட்சியும் திருமகள் கலைமகளும்**

மலர்க்கொடி போன்ற உன் மெல்லிடை வருந்தும் என் உன் கூந்தலில் மலர்களை மொய்த்த வண்டுகள் எழும்பிப் பறக்கின்றன. பொன்னூஞ்சலை நீ உந்தி ஆடும் போது உன் பாதத்தில் பிறைநிலா தெரிகின்றது. அதனைக் கண்ட திருமகள் அதனை வலம்புரிச் சங்கின் அடையாளமோ என கலைமகளிடம் கேட்க அதனைக் கேட்ட மீனாட்சி அம்மை நாணினாள். கதிர் காற்றுக்கு வருந்திய பெண்கள் தன் கூந்தலில் அகிற்புகை ஊட்டினர் அதனால் மயங்கிய வண்டுகள் ஒன்றையொன்றைத் தழுவி இருக்கும்.

பெரிய வயல்கள் நிறைந்துள்ள மதுரை மாநகரின் தலைவியே பொன் ஊஞ்சல் ஆடி அருள்வாயாக.

**100. அன்னை மீனாட்சியின் ஆற்றல் சிவனின் சிறப்புகள்**

மாணிக்க மணிகள் பதித்த உன் ஊஞ்சலை தேவ மகளிர் ஆட்டும் போது நிலவை அருந்தும் சகோதரப் பறவையாகவும் உன் கூந்தற் காட்டைச் சுற்றிப் பறக்கும் வண்டாகவும், அம்மையே நீ ஏந்தியுள்ள பச்சைக் கிளியாகவும் இருப்பது. தேவ தேவனாகிய ஈசனேயாகும். இது எல்லாம் உயிராகவும் சிவன் விளங்கும் இயல்பினை விளக்கும்.

மின்னலொத்த மெல்லிய சாயல் கொண்ட தேவ மகளிர் மாடத்தில் மகளிர் குளித்ததால் அருவி போல் தண்ணீர் ஓடுகின்றது. அதில் குளித்த வெள்ளை யானை குங்குமச் சேறு படிந்து சிவந்த நிறமாகி விட்டது. பெண் யானை தன்னைக் கண்டு விடும் என்றஞ்சி நாணத்துடன் நிற்கிறது.

இத்தகைய சிறந்த மாடகூடங்கள் நிறைந்த கூடல் நகரின் அரசியே சொக்கநாதருக்கு ஏற்ற கொடி போன்றவளே பொன்னூஞ்சல் ஆடி அருள்வாயாக.

**101. அம்மையின் பாதாதிகேச வருணனை**

திருவடியில் அணிந்த சிலம்பும், கிண்கிணியும் குறை சொல்லி முறையிடுபவை போல சிலம்பின் பரல்கள் ஒலிக்கும் இடையின் மேகலை ஒடிந்து விடும் என அறிவிப்பது போல புலம்பும் பொன் சரிகையுடன் கூடிய பட்டாடையும் இடுப்பில் தவழும்.

உடைதாரம், ஒட்டியாணம் என்னும் அணிகளும் கரத்தில் ஏந்திய பச்சைக்கிளியும் மேன்மைமிக்க முத்துமாலையும் மேலாடையும் திருநானும் அழகு நிறைந்துள்ளன.

நிலவு ஒத்த தன்மையான முகமும் அதில் அரும்பும் புன்னகையும், ஞானக்கடலில் மூழ்கி மகரக்குழை உடைய காதுடன் போர்புரியும் கயலாகிய கண்களையும் உடையவளே! அழகு நிறைந்து பூத்திருக்கும் சுந்தரவல்லியே ஊஞ்சல் ஆடி அருள்வாயாக. புழுகு நெய் பூசிய சொக்கநாதரின் இணையே கொடி போன்றவளே பொன்னூஞ்சல் ஆடி அருள்வாயாக.

இருபதுமு மென்குரற் கிண்கிணியு முறையிட்டு
இரைந்திடு மரிச்சிலம்பும்
இறுமிறு மருங்கென் றிரங்குமே கலையும்பொன்
எழுதும்செம் பட்டு வீக்குந்
திருவிடையு முடைதார மும்மொட் டியாணமுஞ்
செங்கைப் பசுங்கிள்ளையுந்

திருமுலைத் தரளவுத் தரியமும் மங்கலத்

திருநாணு மழகொழுகநின்று

அருள்பொழியு மதிமுகமு முகமதியி னெடுநிலவு

அரும்புகுறு நகையுஞான

ஆனந்த மாக்கடல் குடைந்துகுழை மகரத்தொடு

அமராடு மோடரிக்கண்

பொருகயலும் வடிவழகு பூத்தசுந் தரவல்லி

பொன்னூச லாடியருளே

புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி

பொன்னூச லாடியருளே.

## 14. 7. தன்மதிப்பீட்டு வினா விடைகள்

1. **இரு மதிப்பெண் வினா விடைகள்**

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார்?

2. குமரகுருபரர்

ஆண்பாற் பிள்ளைத் தமிழின் பருவங்கள் எவை?

3. சிற்றில் சிறுபறை, சிறுதேர்

4. பெண்பாற் பிள்ளைத் தமிழின் பருவங்கள் எவை?

அம்மானை நீராடல் ஊசல்

5. குமரகுருபரர் பாடிய நூல்கள் நான்கனைக் குறிக்க.

மீனாட்சியம்மை குறம், காசிக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், சகலகலாவல்லி மாலை

6. காப்புப் பருவத்தில் குறிக்கப்பெறும்கடவுளர் யாவர்?

திருமால், சிவபெருமான், பிரமன், இந்திரன், விநாயகன், முருகன், கலைமகள், திருமகள், சத்த மாதர், துர்க்கை, சத்த மாதர்

7. பைந்தமிழ் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டல் - யார்?

திருமால்

8. மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வு யார்? இமவான் மகள் யார்?

மீனாட்சியம்மை

9. சத்த மாதர் யாவர்?

பிராமி, நாராயணி, மாகேசுவரி, இந்திராணி, வராகி, கௌமாரி, காளி

10. வந்தியிட்ட பிட்டுக்கு மண் சுமந்தவர் யார்?

சிவபெருமான்

11. குடக்கூத்தும் குரவைக் கூத்தும் ஆடியவர் யார்?

கண்ணபெருமான்

12. குமரகுருபரர் அன்னையின் சிற்றில் விளையாட்டு எனக் கூறுவது எதனை?

அண்டங்களைப் படைத்து அளித்தல்

13. பொதிகை மலையில் தமிழோடு பிறந்தது எது?

தென்றல்

14. உழவர்கள் எருதுகளுடன் எவற்றைப் பூட்டி உழுதனர்?

மேகங்கள்

15. சப்பாணிப் பருவம் என்றால் என்ன?

குழந்தை இரு கைகளையும் சேர்த்துக் கொட்டுதல்

16. சாம, பேத, தான, தண்டம் எனும் நான்கு நிலைகளில் பாடப்பெறும் பிள்ளைத் தமிழ் பருவம் எது?

அம்புலிப் பருவம்

17. தேவர்களைப் போரில்வென்ற மீனாட்சியம்மையின் மகன் யார்?

உக்கிர குமார பாண்டியன் ஆகிய முருகவேள்

18. சுத்த நித்தம் எனும் நடனம் ஆடியவர் யார்?

சிவபெருமான்

19. மீனாட்சியின் இயற்பெயர் யாது?

தடாதகைப் பிராட்டி

20. முத்துப் பிறக்கும் இடங்கள் எவை?

மேகம், சங்கு, கரும்பு பாக்கு, கடல், யானை மருப்பு, மூங்கில், தாமரை

21. அவனி தழைந்திட மவுலி புனைந்தவள் யார்?

மீனாட்சியம்மை

22. மீன்கொடியைக் கொண்ட இருவர் யார்?

    மீனாட்சியம்மையும் மன்மதனும்

23. களிறு ஈன்றபிடி, அடியவர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கு, சிவபெருமான் உள்ளத்தின் அழகோவியம் எனப் பாராட்டப்பெறுபவள் யார்?

    மீனாட்சியம்மை

24. நிலவு சிவந்து தோன்றியது ஏன்?

    செம்பஞ்சுக்குழம்புடைய அம்மையின் திருவடி சிவபெருமானின் திருமுடியில் பட்டதால்

25. சூரியன்வழியை அடைத்தது எது?

    இரத்தினக் குவியல்

26. இராகு துப்பிய எச்சில் எது?

    நிலவு

27. பெண்டிர் திருமணம் நடைபெற நிலவுக்குப் படைப்பது எது?

    தொழு எரு

28. மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது எது?

    மீனாட்சியம்மை நிலவுக்கு ஈந்த சக்தி

29. நிலவு அம்மையுடன் வந்தால் எவை நீங்கப்பெறும்?

    குரு பகவானுக்குச் செய்த பிழை, மாமனார் தட்சன் இட்ட சாபம்

30. முக்குணங்கள் எவை?

    இராசதம், தாமசம்,சத்துவம்

31. குமரகுருபரர் எந்நதியில் அம்மையை நீராட அழைக்கின்றார்?

    வையை

## குறுவினா

32. மீனாட்சியம்மையைக் காக்குமாறு திருமாலிடம் குமரகுருபரர் வேண்டியமையை எழுதுக.

    காப்புப் பருவத்தில் திருமால் என்னும் தலைப்பில் அமைந்தவை

33. மீனாட்சியம்மையைக் காத்திடச் சிவபெருமானிடம் குமரகுருபரர் எவ்வாறு வேண்டுகின்றார்?

காப்புப் பருவத்தில் சிவபெருமான் என்னும் தலைப்பில் அமைந்தவை

34. மீனாட்சியின் மழலைத் திருத்தோற்றத்தைச் செங்கீரைப் பருவத்தின்வழி எழுதுக.

செங்கீரைப் பருவத்தின் முதல் இரு பாடல்கள் (12, 13)

35. மீனாட்சியம்மையைக் கேசாதி பாதமாகக் குமரகுருபரர் கூறுவதை எழுதுக.

செங்கீரைப் பருவத்தில் ஆறாம் பாட்டின் கருத்து (தொடரெண் 17)

36. அம்மையின் அணிகலன்கள் குறித்தெழுதுக.

செங்கீரைப் பருவத்தில் எட்டாம் பாட்டின் கருத்து (தொடரெண் 19)

37. வாளை மீனின் செயலைத் தாலப் பருவத்தின் வழி விளக்குக.

தாலாட்டுப் பருவத்தில் மூன்றாம் பாட்டின் கருத்து (தொடரெண் 24)

38. சேய் முருகனை மீனாட்சியம்மை சீராட்டிய திறத்தை எழுதுக.

சப்பாணிப் பருவத்தின் ஐந்தாம் பாட்டின் கருத்து (தொடரெண் 360

39. முத்துப் பிறக்கும் இடங்களாகக் குமரகுருபரர் கூறுவனவற்றை எழுதுக.

முத்தப்பருவத்தில் மூன்றாம்பாட்டின் கருத்து (தொடரெண் 44)

40. தொடுக்கும்கடவுள் என்று தொடங்கும் வருகைப் பருவப் பாடற் கருத்தை எழுதுக.

வருகைப் பருவத்தின் ஒன்பதாம்பாட்டின் கருத்து (தொடரெண் 60)

41. நிலவு மீனாட்சியம்மைக்கு ஒப்பாகாத திறத்தை எழுதுக.

அம்புலிப் பருவத்தின் முதலிரு பாட்டின் கருத்து (தொடரெண் 62, 63)

42. அம்மானைக் காய்கள் நிறம்மாறிய தன்மையை விளக்குக.

அம்மானைப் பருவத்தின் மூன்றாம் பாட்டின் கருத்து (தொடரெண்74)

43. அம்மையை வையையில் நீராடுமாறு குமரகுருபரர் கூறியது ஏன்?

நீராடற்பருவத்தின் எட்டாம் பாட்டின் கருத்து (தொடரெண் 89)

44. அம்மையின் போர்க்கோலத்தை விளாக்குக.

ஊசற் பருவத்தின் ஆறாம் பாட்டின்பொருள் (தொடரெண்97)

**பெருவினா**

45. குமர குருபரர் தெய்வங்கள் பலவற்றை வேண்டிப் பாடிய காப்புப் பருவச் செய்திகளை எழுதுக.

    காப்புப் பருவத்தின் செய்திகள்

46. மீனாட்சியம்மை செங்கீரை ஆடிய சிறப்பை விளக்குக.

    செங்கீரைப் பருவத்தின் செய்திகள்

47. குமரகுருபரர் மீனாட்சியம்மையை எவ்வாறு தாலாட்டுகின்றார்?

    தாலாட்டுப் பருவத்தின் செய்திகள்

48. முத்தம் வேண்டி மீனாட்சியம்மையைக் குமரகுருபரர் போற்றியமையை விளக்குக.

    முத்தப் பருவத்தின் செய்திகள்

49. சப்பாணிப் பருவத்தில் அன்னையின் திருக்கரங்களைக் குமரகுருபரர் போற்றுவதை விளக்குக.

    சப்பாணிப் பருவத்தின் செய்திகள்

50. மீனாட்சியைத் தளர்நடையிட வருகைபுரிய வேண்டும் கவிச்சிறப்பினை விளக்குக.

    வருகைப் பருவச் செய்திகள்

51. மீனாட்சியுடன் விளையாட நிலவை நான்கு நிலைகளில் அழைத்த பாங்கினைக் கட்டுரைக்க.

    அம்புலிப் பருவத்தின் செய்திகள்

52. மீனாட்சியம்மையின் அருளாற்றலை அம்மானைப் பருவம் வழி விளக்குக.

    அம்மானைப் பருவத்தின் செய்திகள்

53. நீராடற் பருவத்தில் மீனாட்சியைக் குமர குருபரர் எங்ஙனம் போற்றுகின்றார்?

    நீராடற் பருவத்தின் செய்திகள்

54. இறைவி ஊசலாடும் சிறப்பை விளக்கியுரைக்க

    ஊசற் பருவத்தின் செய்திகள்

**அழகப்பா பல்கலைக்கழகம்**

**தொலை நிலைக் கல்வி இயக்ககம்**

**இளங்கலை இலக்கியம் (பி.லிட்.) தமிழ்**

**மாதிரி வினாத்தாள்**

**சிற்றிலக்கியம் 10714**

குறிப்புகள்

நேரம்: மூன்று மணி
மதிப்பெண்: 75

**பகுதி அ :**

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடையளிக்க. (10x2=20)

1. இறைவன் பொருட்கு உரையறிவித்தவர் யார்?
2. பாடல் தொடங்கும் மங்கலச் சொற்கள் எவை?
3. நந்திக்கலம்பகம் குறித்த பழமொழியைக் குறிப்பிடுக.
4. கற்பகம் அடைந்தவை எவை?
5. இறைவனுக்குக் கண்ணூறு படும் என்றஞ்சியவர் யார்? எதனைப் பாடினார்?
6. கண்ணன் வீட்டு முற்றம் சேறு ஆனது ஏன்?
7. மகளிர் கூந்தலில் மலருடன் எதனைச் செருகினர்?
8. மூவருலாவில் பாட்டுடைத் தலைவர் யாவர்?
9. அரிவையாள் ஏறிய நிலாமுற்றம் எதனால் ஆனது?
10. நிலவு அம்மையுடன் விளையாட வந்தால் எவை நீங்கப்பெறும்?

**பகுதி ஆ:**

பின்வருவனவற்றிற்கு ஒரு பக்க அளவில் விடைதருக. (5x5=25)

11. அ. கணபதியின் திருத்தோற்றத்தைக் கல்லாடம்வழி விளக்குக.
(அல்லது)

ஆ. வையை நதியைக் கல்லாடர் எவ்வாறு வருணிக்கின்றார்?

12. அ. புயவகுப்பில் அமைந்த நந்திக் கலம்பகப் பாடற் கருத்தை எழுதுக.
(அல்லது)

ஆ. கார்காலத்தால் தலைவி வருந்தியமையை நந்திக் கலம்பகம்வழி விவரிக்க.

13. அ. கண்ணன் ஆய்ப்பாடியில் செய்த குறும்புகளைச் சீதக்கடல் என்ற பாசுரத்தின்வழி விளக்குக.

(அல்லது)

ஆ. கண்ணனின் சிறப்புக்கு நிலவு ஒவ்வாத தன்மையைப் பெரியாழ்வார் வழி எழுதுக.

14. அ. சோழப்படைகள் கலிங்கப் போருக்கு எழுந்தமை குறித்து எழுதுக.
(அல்லது)

ஆ. குலோத்துங்கனின் தில்லைத் திருப்பணிகள் குறித்து விளக்குக

15. அ. சோழனைக் கண்ட பெதும்பையின் மன நிலையை எழுதுக.
(அல்லது)

ஆ. மீனாட்சியம்மையைக் கேசாதி பாதமாகக் குமரகுருபரர் செங்கீரைப் பருவத்தில் போற்றுகின்றார்?

### பகுதி இ:

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க. (3x10=30)

16. வேலன் வணக்கம் என்ற பொருளில் கல்லாடர் கூறியமையை விளக்குக.
17. யசோதை கண்ணனைத் தாலாட்டியமையை மாணிக்கம் கட்டி என்று தொடங்கும் பாசுரம்வழிக் கட்டுரைக்க.
18. பேய்கள் கூழட்டு உண்டமை குறித்துக் கட்டுரை வரைக.
19. மங்கைப்பருவத்தாளின் எழிலையும் குலோத்துங்கன் பால் அவள் தூது விடுத்தமையையும் விளக்கியுரைக்க .
20. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் காணும் கற்பனையை அம்மானைப் பருவம் வழி விளக்குக.